# தி/பள்ளிக்குடியிருப்பு

## வரலாற்றுப் பார்வை



ஆறுமுகம் செல்வநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/பள்ளிக்குடியிருப்பு

# வரலாறுப் பார்வை

"வரலாற்று சமூகவியல் பண்பாட்டியலுடனான
பன்முக தரிசனம்"

**திரு. ஆறுமுகம் செல்வநாயகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | தி/பள்ளிக்குடியிருப்பு - வரலாற்றுப் பார்வை |
| நூல் விடயம் | : | வரலாறு, ஆய்வு |
| நூலாசிரியர் | : | ஆறுமுகம் செல்வநாயகம் |
| பதிப்புரிமை | : | செ. பிரசாந் |
| விலாசம் | : | தி/பள்ளிக்குடியிருப்பு, தோப்பூர்.<br>+94 26 2224905, +94775420138 |
| பக்கங்கள் | : | XX + 300 |
| தாளின் வகை | : | 70 கிராம் பாங்க் |
| விலை | : | ரூபா. 700.00 |
| முதற்பதிப்பு | : | 2021 |
| வெளியீடு | : | அக்ஷறா வெளியீடு |
| அச்சகம் | : | ஷஹானா கிறாபிக்ஸ், திருகோணமலை<br>+94776310531, +94771815140 |

## Bibliography

| | | |
|---|---|---|
| Title | : | T/Pallikudiyiruppu - Varalarru Paarvai |
| Subject | : | Historical, Research |
| Author | : | Arumugam Selvanayagam |
| Copy Right | : | S. Prasanth |
| Address | : | Pallikudiyiruppu, Thopur<br>+94 26 2224905, +94775420138 |
| Pages | : | XX + 300 |
| Paper Type | : | 70 GSM Bank |
| Price | : | LKR. 700.00 |
| 1st Edition | : | 2021 |
| Publication | : | Akshara Publication |
| Printers | : | Shahana Graphics, Trincomalee<br>+94776310531, +94771815140 |
| ISBN | : | 978-955-42810-2-8 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



கிராமத்தின் கல்விக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் அர்ப்பணித்த

எனது பெற்றார்

அமரர்களான

ஆறுமுகம், தங்கப்பிள்ளை ஆகியோருக்கு சமர்ப்பணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

எமது பள்ளிக்குடியிருப்பின் வரலாற்றுப் பார்வையில் - சமூகவியல் பண்பாட்டம்சங்கள் எதிர்காலத்தவர்களுக்கம், ஏனையோர்க்கும் தெரியப்-படுத்தலும், எமது சிறப்பான பண்பாட்டம்சங்கள் மறைந்து போகாது பாதுகாத்தலுக்குமாக நீண்டகால எண்ணம் நிறைவேறியுள்ளது.

அனைத்து மக்களையும் சமமாக மதித்து ஏற்றத்தாழ்வின்றி மனித நேயமுடனான எமது பண்பாட்டம்சங்கள், கிராமத்தின் தோற்ற வரலாறு, வாழ்வோரின் விவசாய, கல்வி, கலை கலாசார, பண்பாட்டியல், விளையாட்டுத்துறை, ஆலயங்களின் தோற்ற வரலாறு, வழிபாட்டம்சங்கள், நிர்வாக முறைகள், புவியியல் நிலைகள், சுகாதார, வைத்தியத்துறை, போன்ற விடயங்களின் வரலாற்றியலோடு இன்று வரையான நிகழ்வுகளை இங்கு குறிப்பிடுவதில் மகிழ்வடைகின்றேன்.

**இந்நூலில் வெளியிடப்படும் ஒவ்வொரு விடயத்திற்கும் வரலாற்று ரீதியானதும் தக்க ஆதார பூர்வமானதும் - வாழ்நாளில் கண்டும், பார்த்தும் உடனிருந்து அனுபவித்த விடயங்களுமே இங்கு இடம்பெறுகிறது. ஒவ்வொரு தலைப்புகளுக்கும் அடிக்குறிப்பிடப்பட்டுள்ளது. இவையே தக்க சான்றுப்படுத்தலாக அமையும். அத்துடன் உசாத்துணை நூல்களும் இடப்பட்டுள்ளது. அனைத்து வரலாற்று நூல்களும் மிகத் தெளிவான அறிவை இந்நூல் வெளிவர உறுதுணை புரிந்தவை. இக்கிராமத்தில் வாழ்ந்த மூத்தோர் வாயிலாக அறிந்தவையுடன் - அவ்விடயங்களை நடைமுறையிலும் அனுபவித்த அனுபவ - பட்டறிவூடாகவே வெளிக்கொணரப்படுகின்றது.**

இந்நூலாக்கத்திற்கான தேடல்கள் பல காலமாக இடம்பெற்றது. 1985களிலிருந்து இவ் எண்ணம் உருவாகி தொடர்ச்சியான பல தடங்கல்கள் - யுத்தம், தற்போது கொவிட் - 19 முதலான காரணிகளால் தாமதமாகியது.

பலரது உதவி பெறப்பட்டது. சிலர் மிகவும் ஆர்வமாக உதவினர். ஊரின் மூத்தவர்கள், கல்வியியலாளர்கள், இளையோர் என பலரும் உதவினர். மேலும் குறிப்பாக அதிபர்களின் விபரங்களைப் பெறுவதற்காக முயற்சித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளை திரு. க. துரைரெட்ணசிங்கம் அவர்கள், திரு. சி. தண்டாயுதபாணி அவர்கள், திரு. க. தவராசா அவர்கள், திரு.திருமதி. சுகிர்தா ஜெகதீசன் குரூஸ் அவர்களும் - புவியியல் நிலை பற்றிய பூரண விளக்கத்துடனான தகவல்களைப் பெறுவதற்கு திரு. க. பரமேஸ்வரன் அவர்களும், வரலாற்று ஆவணங்களோடு விவசாய சம்மேளனம், அபிவிருத்திகள் பத்தினி அம்மன் காவியம் சம்பந்தமாக திரு. பொ. கோபாலபிள்ளை அவர்களும், கண்ணகி காவியம் முதலான கலைத்துறையில் சங்கீதம் சம்பந்தமான பல விடயங்களை திருமதி. வசந்தி நிர்மலன் அவர்களும் பாடசாலைத் தகவல்களை அதிபர்கள், ஆசிரியர்களும் வழங்கினர்.

அணிந்துரையை நண்பர் கலைமாறன் செ. லோகராசா ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் அவர்களும், வாழ்த்துச் செய்திகளை கலைமகள் இந்துக் கல்லூரி அதிபர் திரு. க. பாக்கியராசா, சட்டத்தரணி திரு. க. தவராசா, மேனாள் பேராசிரியர் திரு. பாலசுகுமார் அவர்களும், நூலாசிரியர் அறிமுகக்குறிப்பை கலாபூசனம், இலக்கிய வித்தகர் - கவிஞர் திரு. க. ஜெகநாதன் (காசியப்பித்தன்) அவர்களும் மிகவும் ஆர்வத்துடன் வழங்கினர். மிகமுக்கிய நூல் ஆவணங்களை தந்துதவிய திருகோணமலை பொது நூலகத்தினர், மட்டக்களப்பு பொது நூலகத்தினருக்கும் உளமார்ந்த நன்றிகள். பெயர் குறிப்பிட விருப்பம். அதிலும் விடுபடக்கூடாது என்பதற்காக உதவிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இப்புத்தகத்தின் திருத்தத்தை மிகச் செம்மையாக பார்த்துதவிய திருமதி. கமலராணி செல்வநாயகம் அவர்களுக்கும் இந்நூலை பதிப்பதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்ற எனது மகன் செல்வநாகயம் பிரசாந், திருமதி. நிருஷா பிரசாந் அவர்களுக்கும், அக்ஷறா வெளியீட்டாளர்கள் திரு. திருமதி. மேனகாந்த் பிரியதர்ஷினி அவர்களுக்கும் நன்றியை தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

**ஆறுமுகம் செல்வநாகயம்.**

B.A, M.Ed, T.Trd (Agri), PGDE, PGDEM,
Mgt.Trd: NIEPA-NCERT New Delhi,
Birminham University, London
SLPS-I, SLEAS
PGDE Coordinator & Lecturer
NIE - Trincomalee Center



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

பள்ளிக்குடியிருப்பின் பற்றாளர் திருவாளர் ஆறுமுகம் செல்வநாயகம் சீர் பெற்ற திருகோணமலையின் கொட்டியாபுரப்பற்றுப் பிரிவிலுள்ள பழம் பெரும் பதியாம் பள்ளிக்குடியிருப்பில் பிறந்து வளர்ந்து கல்வி பயின்று தொழில் புரிந்தவர். இவர் பிறந்த மண்ணின் பற்றாளர், கல்வியியலாளர். இது மட்டுமல்லாமல் பல வரலாற்றுத் தேடல்களையும் மேற்கொண்ட வரலாற்று ஆசிரியராக இந் நூலாசிரியர் விளங்குகின்றார் எனக் கூறிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

"தேடல் உள்ள உயிர்களுக்கு தினமும் பசியிருக்கும்
தேடல் என்பது உள்ளவரை வாழ்வில் ருசியிருக்கும்" என்ற வரிகளுக்கேற்ப இளம் பராயத்திலிருந்தே தான் பிறந்த மண்ணுக்கும், அம் மக்களுக்கும், மற்றவர்களுக்கும் தன்னால் முடிந்தவரை வாழும் காலத்திலே பயனுள்ள செயலைச் செய்ய வேண்டுமென்ற வெறித்தனம் கொண்டவர். இவர் இதற்கு முன்னர் கல்விப்புலம் சார்ந்த இரு நூல்களை வெளியீடு செய்துள்ளார். முதலாவது நூல் வெளியீடாக 'பாடசாலைத் தலைமைத்துவம்' எனும் நூலும் அதனைத் தொடர்ந்து மற்றொரு நூலாக 'கற்பித்தல் நுட்பங்கள்' எனும் நூலும் வெளிவந்தன.

தான் ஒரு கல்விப்புலம் சார்ந்தவன் மட்டுமல்ல தனதூரின் பழமை, முதுமை சிறப்புக்களையும் இவை பற்றிய அறிவினையும், தெளிவினையும் சமகாலத்தில் உள்ளவர்களும் எதிர்காலச் சந்ததியினரும் ஏனைய மக்களும் அறிய வேண்டும் என்ற அவாவில் பழம் பெரும் பதியாம் 'பள்ளிக்குடியிருப்பின் வரலாறு' என்ற தலைப்பில் மூன்றாவது வெளியீடாக இவ் வரலாற்று நூலை வெளியீடு செய்வது பாராட்ட வேண்டியதாகும்.

பள்ளிக்குடியிருப்பு என்பதில் பள்ளி என்பதன் பொருள்களாக மருதநிலத்தூர், கல்வி பயிலும் இடம், கோயில், சிற்றூர், நகரம், கல்லூரி, வன்னியன் எனப் பல பெயர்களைக் கொண்டிருப்பதாகவும், பள்ளிக்குடியிருப்பு மருத நிலத்தில் அமைந்திருப்பதும், பள்ளி என்னும் சொல்லுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபெயர்களில் பெரும்பாலான பெயர்கள் இதற்குப் பொருத்தமாக அமைவதாலும், 'பள்ளிக்குடியிருப்பு' என்பது காரணப் பெயராக அமைந்தது என நூலாசிரியர் முதற்பக்கம் 2ம் பந்தியில் குறிப்பிட்டுள்ளார்.

வரலாறு என்பது நம் கண்முன்னே காட்சியாக விரிகின்ற சுவடுகள் - தடயங்கள், எச்சங்கள் - விழுமியங்கள் போன்றவை. வரலாற்றுச் சுவடுகளை உள்வாங்காமல் நிகழ்காலத்தைப் புரிந்து கொள்வது என்பது கடினமானது. ஒரு சமூகம் தனது வேர்களைத் தொட்டுணரும் பேரனுபவத்தை வரலாற்றில் இருந்தே பெற்றுக் கொள்ள முடியும்.

நேற்று - இன்று - நாளை என்ற இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் இவற்றின் நேற்றைய வாழ்வின் சுவடுகள் இன்றைய வரலாறு. இன்றைய வாழ்வின் தடயங்கள் நாளைய வரலாறு. நாளைய வாழ்வின் எச்சங்கள் வரும் தலைமுறையின் வரலாறாக வரும்.

"பள்ளிக்குடியிருப்பு பல் துலங்கு மருதநிலம்
வான் பொய்ப்பினும் தான் பொய்யாமாவலிபாயும் நிலம்
ஏருழவும் எருதுகளும் எருமைகளும் நிறைந்த நிலம்
செந்நெல்லும் சேர்ந்துள்ள பயிர்களும் திரண்ட நிலம்"

எத்தனை வளம் நிறைந்த நிலம் என்பதும், செல்வம் கொழிக்கும் செழித்த நிலம் இப்பாடல் மூலம் விளக்கப்படுகின்றது. மேலும், இந்நிலத்தில் வாழும் மக்களை

"தேனினுமினிய செந்தமிழர் வாழும் நிலம்
சித்தி விநாயகனின் திருஷ்டியில் அமைந்த நிலம்"

எனக் கூறுவதில் இம்மண்ணின். மக்களின் இருப்பியல் வாழ்வியல் - பண்பாட்டியல், இயங்கியல் போன்ற முறைமைகளை மிகத் துல்லியமாக இதன் மூலம் அறிய முடிகிறது. இம் மக்களின் தொன்மை குளக்கோட்டனுடனும் கோணேசர் ஆலயத்துடனும் தொடர்புபட்டது.

திருகோணமலை மாவட்டம் பண்டைய காலத்தில் நான்கு வன்னிமைகளின் ஆட்சிக்குட்பட்டிருந்ததென்றும்.

அவையாவன.....

1) திருகோணமலைப்பற்று 2) கொட்டியாபுரப்பற்று 3) கட்டுக்குளப்பற்று 4) தம்பலகமப்பற்று போன்றவையாகும். குளக்கோட்டு மகாராசா திருப்பணிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திலும் கொட்டியாபுரப்பற்று என்னும் பெயர் வழக்கில் இருந்ததை கி.பி 14ம் நூற்றாண்டைச் சேர்ந்த கவிராஜவரோதயரின் கோணேசர் கல்வெட்டுச் சாசனத்தின் மூலமும் அறியமுடிகிறது. (குளக்கோட்டன் காலம் கி.மு 2560 - 2500).

கொட்டியாபுரப்பற்றிலுள்ள பள்ளிக்குடியிருப்பும் மிகவும் பழமையான வரலாற்றை உடையதென்பதையும், மிக நீண்ட காலமாக மக்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கேற்ற வரலாற்று ஆதாரங்களையும் கொண்டுள்ளது. இக்கிராமத்தின் தோற்றம் வாழ்வியல் முறைமைகள், சமூக, பொருளாதார, தொழில் முறைகள் பண்பாட்டியல், சமய வழிபாட்டு அம்சங்கள், கல்வி, கலாசாரம் போன்றவை மூலம் அறியக்கிடக்கின்றது எனக் குறிப்பிடுகின்றன.

பள்ளிக்குடியிருப்பில் வாழும் மக்கள் மட்டக்களப்பு பகுதியிலிருந்து வரவில்லையென்றும், குளக்கோட்ட மன்னனால் கோணேசர் கோயிலுக்கு நெல் அனுப்புவதற்காகவும், கோயில் திருப்பணிக்காகவும் கொண்டு வரப்பட்டவர்கள் என்பதும் திருக்கோணேஸ்வரம் கல்வெட்டு பக்கம் 251லும், குளக்கோட்டன் தரிசனம் எனும் பகுதியில் பக்கம் 623லும் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளதாக நூலாசிரியர் இந்நூலில் எடுத்துக்காட்டியுள்ளார்.

தி/மூ/பள்ளிக்குடியிருப்பு கலைமகள் இந்துக்கல்லூரியின் பாடசாலைக் கீதத்தில் மூதூரின் மூதறிஞர் இலக்கியக்கலாநிதி வ.அ.இராசரெட்ணம் (ஓய்வுநிலை அதிபர்) அவர்கள் இயற்றிய பாடசாலைக் கீதத்தில் இங்கு வாழும் மக்கள் காராளர் எனவும், அவர்கள் வேளாளர் என்பதாகவும் மூன்றாவது பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

'மகாவலித் தாயின் வளம் பெறும் வயலும்
வான் பயிர் செழித்திடவும்
காவினில் எருமை கருத்துடன் மேய்த்து
காத்திடும் காராளர்
மேவிடும் எம்மூர் மேதினில் மீது
வியப்புற வாழியவே
வாழிய வாழியவே வாழிய வாழியவே

எனக் குறிப்பிடப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்குடியிருப்பின் வரலாற்று நூலில் நூலாசிரியர் பின்வரும் தலைப்புக்களில் இதனை நகர்த்திச் செல்வதை அவதானிக்க முடிகின்றது.

- பள்ளிக்குடியிருப்பின் வரலாறு
- புவியியல் நோக்கு
- பொருளியல் பார்வை - விவசாயம், நீர்ப்பாசன முகாமைத்துவம்
- கால்நடை, விலங்கு வேளாண்மை
- பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- கல்வி வரலாறு
- கலை கலாசாரத்துறை
- விளையாட்டுத் துறை
- வைத்தியத்துறை
- போக்குவரத்துத் துறை
- கொம்பு விளையாட்டு
- பள்ளிக்குடியிருப்பின் ஆலயங்கள்
- போராட்ட கால கிராமிய நிலை
- எதிர்கால அபிவிருத்திக்காக

போன்ற தலைப்புக்களில் பள்ளிக்குடியிருப்பின் வரலாறு என்ற நூலை பல வரலாற்றுச் சான்றாதாரங்கள், கல்வெட்டுக்கள், கண்டு எடுக்கப்பட்ட நாணயங்கள், முதியோரின் வாய்மொழி மூலமாக கேட்டு அறிந்த விடயத்தோடு பல வரலாற்று நூல்களையும் தேடிப்படித்து - ஆய்ந்து இந்நூல் வெளிக்கொணர்ந்துள்ளார். இதனைப்படிக்கும் இப்பிரதேச மக்களுக்கு இதன் தொன்மை, உண்மை, வரலாறு போன்றவற்றை நூலாசிரியர் வலுவாக இட்டும், தொட்டுச் சென்றுள்ளார். இந்நூல் எதிர்காலத்தில் ஒரு வரலாற்று ஆவணமாகப் பேணப்படும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலாசிரியர் திரு. ஆறுமுகம் செல்வநாயகம் பலரும் நன்கு அறிந்த தெரிந்த பேர் புகழ் மிக்கவர். கல்வியயலாளர் வரலாற்றாசிரியர் மட்டுமல்லாமல் கல்விப்புலத்திலே 1976ம் ஆண்டு முதல் தனது 21 வயதிலே ஆசிரியப் பணியேற்று ஆசிரியராக ஒன்பது வருடங்களும், அதிபராக 27 வருடங்களும், உதவி, பிரதிக்கல்விப் பணிப்பாளராக 3 வருடங்களும் மூதூர், திருகோணமலை பிரதேசங்களில் துன்பியல் நிறைந்த அசாதாரண காலப்பகுதியில் பொறுப்புணர்வோடும் - அர்ப்பணிப்போடும், தியாக சிந்தனையுடனும் கடமைதனைப் புரிந்தவர்.

மூதூர், திருகோணமலை கல்வி வலயங்களிலும் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்திலும் உதவி பிரதிக்கல்விப்பணிப்பாளராகத் (திட்டமிடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமைத்துவம்) கடமையாற்றியவர். இதற்கு மேலாக வடக்கு - கிழக்கு மாகாண அதிபர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சி வளவாளராகவும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டப்படிப்பின் திருகோணமலை மாவட்ட இணைப்பாளராகவும், விரிவுரையாளராகவும் செயற்பட்டவர். இவர் இலங்கை அதிபர் சேவை வகுப்பு I (SLPS I) இலங்கைக் கல்வி நிர்வாக சேவை (SLEAS) பதவி நிலையைச் சேர்ந்தவருவமாவார்.

இவரது முப்பத்தோராவது வயதில் தன் ஊரிலுள்ள பாடசாலையான தி/மூ/பள்ளிக்குடியிருப்பு அ.த.க.பாடசாலை ஆரம்பப்பிரிவு (1 - 5 வரை) பாடசாலையை 1987ம் ஆண்டு தரம் II (6 - 11 வரை) இடைநிலைப் பாடசாலையாகவும், 1992ம் ஆண்டு தரம் சி (11 -13 வரை) உயர்தரப் பாடசாலையாகவும் தரமுயர்த்தி அதற்கு தி/மூ/பள்ளிக்குடியிருப்பு கலைமகள் இந்துக்கல்லூரி எனப் பெயர்வரக்காரணமானவர். இவர் இக்கல்லூரியில் அதிபராகவிருந்த 1985 – 1998 வரையுள்ள 13 வருட காலத்தில் ஆசிரியராகவும், அதிபராகவும் கற்பித்தல் அதிபர் நிர்வாகம், முகாமைத்துவம் போன்றவற்றை திறம்பட நடாத்தி முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு சென்றவர்.

நாட்டில் வன்முறைகளும், அசாதாரண சூழ்நிலைகளும் மலிந்திருந்த வேளையிலும் அர்ப்பணிப்போடு சேவையாற்றி பல மாணவர்கள் உயர்கல்வி கற்பதற்கும், இன்று நூற்றுக்கு மேற்பட்டோர் இப்பிரதேசத்தில் பொறுப்பு வாய்ந்த அரச பணியில் பதவி வகுப்பதற்கும் இவரும், இவரது சகோதரர் அமரர் திரு. ஆ.குணராஜரெட்ணம் கிழக்கு மாகாண மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளரின் உதவியோடு பல சேவைகளை இப்பகுதிக்குச் செய்ததோடு அயலிலுள்ள மூன்று கிராமங்களில் ஆரம்பப்பிரிவு பாடசாலைகளை உருவாக்கி அதில் கற்ற மாணவர்கள் கலைமகள் இந்துக்கல்லூரியில் உயர்கல்வி கற்பதற்கு வழி செய்தவர்கள்.

இந்நூலாசிரியரின் "தி/பள்ளிக்குடியிருப்பு - வரலாற்றுப் பார்வை" எனும் நூல் மிகவும் பயனுள்ள நூலாக எதிர்காலச்சந்ததிக்கு அமையும் என்பது எனது அசைக்கமுடியாத நம்பிக்கையாகும். இந்நூலை அனைவரும் வாங்கிப் படித்து பயன்பெற வேண்டுமென வாழ்த்துகிறேன். மேலும் கல்வி வரலாறு சார்ந்த எழுத்துப்பணி தொடர இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**கலைமாறன். செல்லத்துரை லோகராஜா,**
ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
முன்னம்போடிவெட்டை, பாலத்தடிச் சேனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தி/மூ/கலைமகள் இந்துக்கல்லூரி, அதிபர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

என்றும் என் மதிப்பிற்குரிய பேராசான் உயர் திரு. ஆ. செல்வநாயகம் **'பள்ளிக்குடியிருப்பு வரலாறுப்பார்வை'** என்னும் ஆவணக்கையிருப்பு நூலிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். 'இலக்கியம் காலத்தின் கண்ணாடி' என்பார்கள் வரலாற்றாசிரியர்கள். அதாவது ஒரு சமூகத்தினரின் வாழ்க்கை முறைகள் பண்பாட்டுப் பாரம்பரியங்கள். கலை, அரசியல், வழிபாட்டு முறைகள், கல்வி, மருத்துவம், விளையாட்டு என்று பல்துறை அம்சங்களையும் எடுத்துக்காட்டுவது அக்காலத்தில் எழுந்த இலக்கியங்கள் மூலமாகும்.

கோணேசர் கல்வெட்டு குறிப்பிடும் பழம்பெரும் பதிகளில் பள்ளிக்குடியிருப்பும் ஒன்றாகும். இங்கு செந்நெற் கதிரோடு செங்காந்தள் மலரும் கூத்தாடும். சலசலக்கும் நீரோடைகள் அங்கே துள்ளி வீழும் வெள்ளி மீன்கள் அதை அள்ளத் துடிக்கும், நாரைக்கூட்டம், சுற்றிவர பசுமை போர்த்த வெளி என்று எங்கள் ஊரின் எழில் கொஞ்சும் பேரழகை சொல்வதென்றால் வார்த்தைகள் போதாது. தங்க உழவர்கள் அதிகம் வாழும் தங்கத் தரணியிலே விவசாயம் என்ற வகையில் நாற்று நடுதலே எங்களது பிரதான தொழிலாகும்.

இன்றைய காலகட்டத்தில் ஒரு கிராமத்தின் வரலாற்றை அடையாளச் சின்னங்களை நூலாக்கம் செய்வதென்பது இலேசான காரியமல்ல. அவ்வாறிருந்தும் இரவு பகலாக மாத வருடங்களாக. எமது பள்ளிக்குடியிருப்பு கிராமம் பற்றிய தரவுகள் தகவல்களைத் தேடித் தேடி அலைந்து கோர்த்தெடுத்து நூலுருவாக்கம் செய்திருக்கின்றார் எமது திரு.ஆ.செல்வநாயகம் அவர்கள். ஒரு புத்தகத்தை உருவாக்கும் போது எதிர்நோக்கும் துயரங்கள் என்பது தாயின் பிரசவ வேதனைக்கு ஒப்பாகும் என்பதை நானறிவேன்.

'பள்ளிக்குடியிருப்பின் வரலாறு' நூலுருப் பெறுவதற்கு எழுத்தாளர் திரு.ஆ.செல்வநாயகம் அவர்கள் ஆய்வு ரீதியான கண்ணோட்டத்தில் பல இலக்கியச் சான்றுகளை மேற்கோள் காட்டி நிரூபணம் செய்திருப்பது இந்த புத்தகத்தின் தனிச் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றது. ஒரு சமுதாயத்திலே ஒருவர் வாழ்வாங்கு வாழ்ந்திருக்கின்றார் என்பதை அவரால் இலக்கிய உலகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுச் சென்ற எச்சங்களாகவும், மிச்சங்களாகவும் இருக்கும். அவர்களால் எழுத்துருவாக்கம் பெற்ற நல்ல புத்தகங்களே என்றால் அது மிகையாகாது.

பலநூறு வருடங்களுக்கு முற்பட்ட எமது பள்ளிக்குடியிருப்பு கிராமத்தின் பழம்பெரும் வரலாற்றியல், பண்பாட்டியலை, வாழ்வியலை, சமயச்சடங்கினை, வீரவிளையாட்டுக்களை, மருத்துவவியலை, அரசியலை இலக்கியச் சான்றுகளுடன் எடுத்துக்காட்டி எழுத்து ஆவணப்படுத்தியிருப்பது இக்காலத்திலும் எதிர்காலத்திலும் எமது பழம்பதி பற்றிய தேடலில் ஈடுபடுபவர்களுக்கு மிக இலகுவாக அமையும் என்பது எனது அசைக்க முடியாத உண்மையாகும். இந்த இடத்தில் எழுத்து ஆதாரம் ஒன்றைச் சான்றுபடுத்த விரும்புகின்றேன். அந்த வகையில் எழுத்தாளர் வ.அ.இராசரெத்தினம் ஐயாவின் ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிக்கின்றது' என்னும் படைப்பினூடாக பழம்பெரும் கிராமமமான ஆலங்கேணி கிராமத்தை அப்படியே கண்முன் நிறுத்துகின்றார்.

எழுத்தாளர் ஆ.செல்வநாயகம் அவர்கள் 'பள்ளிக்குடியிருப்பின் வரலாறு' என்னும் எழுத்தாவண நூலுக்கு முன்பு கல்வி உலகிற்கு காத்திரமான சில புத்தகங்களை உருவாக்கியுள்ளார். அவை இன்றைய அதிபர், ஆசிரியர்களால் வகுப்பறை கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் போதும் முகாமைத்துவச் செயற்பாடுகளின் போதும் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றன. இதே போன்று அவருடைய வரலாற்று நூலின் ஊடாக எமது எதிர்கால சந்ததியினர் மரபுவழி நின்ற எமது கிராமத்து முன்னோர்களின் வாழ்வியலை விளங்கிக் கொள்வார்கள் என்பது எனது கருத்தாகும். உதாரணமாக இந்த வரலாற்று ஏட்டிலே துறை ரீதியான அளப்பெரிய சேவைகளை வழங்கிய அர்ப்பணிப்புக்களைச் செய்த பெரியோர்கள், கல்விமான்கள், கலைஞர்கள் பற்றிய தகவல்களை நாளைய இளந்தலைமுறையினரும் அறிந்து அகமகிழ்ந்து பின்பற்றுவார்கள் என்பதில் ஐயமில்லை. சிறப்பான வரலாற்று ஆவணக் கையிருப்பை இன்றைய இளைஞர் சமுதாயத்திடம் கையளித்த மதிப்பிற்குரிய பேராசான் திரு.ஆ.செல்வநாயகம் அவர்கள் நீண்ட ஆயுளோடும், சிறந்த தேகபலத்துடனும் வாழ வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**திரு. க.பாக்கியராஜா**
அதிபர்
தி/மூ/கலைமகள் இந்துக்கல்லூரி,
பள்ளிக்குடியிருப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

அண்மைக் காலமாக எமது திருகோணமலை மாவட்டத்தில் கற்றவர்கள், கற்றவர்களிலும் ஆய்வு கரிசனை உள்ளவர்கள் தமது ஊரின் வரலாறு பற்றியும், பண்பாடு பற்றியும் அரசியல் நிலைப்பாடு உட்பட்டவை பற்றி ஆய்ந்து அதனை முறையாக ஆவணப்படுத்தி அடுத்த தலைமுறையும் அறிந்து கொள்ளும் விதமாக நூலாக்கி வெளியிட்டு வருகின்றமையை நாம் காண்கின்றோம். இது வரவேற்கத்தக்கதும் பாராட்டத்தக்கதுமான ஒரு முயற்சியாகும்.

இந்த வரிசையில் எமது மண்ணின் ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆறுமுகம் செல்வநாயகம் அவர்கள் தன்னூர் பற்றிய ஆர்வத்தில், தன்னூர் மக்கள் பற்றிய பெருமைகளை, தன்னூர் மக்களது கலை கலாசார பண்பாட்டினையும் மற்றும் இன்றைய அவர்களது ஈடுபாடு பற்றி ஆய்ந்து பகுத்து தொகுத்து "தி/பள்ளிக்குடியிலுருப்பு - வரலாற்றுப் பார்வை" எனும் நூலாக ஆக்கி எமக்களித்திருக்கின்றார்.

முறையான ஆவணச் சான்றுகள் இன்று கிடைக்கின்ற ஆவணங்களைக் கொண்டு அறிந்த மூத்தோரின் வாய்க் கதைகளைக் கேட்டு அதன் உண்மைத் தன்மை, போலித் தன்மை, புனைவுத்தன்மைகளை ஆய்வு நோக்கில் பகுத்தாய்ந்து இந்நூலை ஆக்கியுள்ளமை அதன் உள்ளடக்கத்தைப் பார்க்கும்போது தெரிகின்றது.

பள்ளிக்குடியிருப்பு எனும் தொன்மைமிகு கிராமத்தைப் பற்றி தன் எண்ணத்தில் கருவாக்கி அந்த கருவினை வளர்ப்பதற்கு தன்னாலான தன் அறிவின்பால் பட்ட அத்தனை முயற்சிகளையும் எடுத்து இந்த நூலை சுகப்பிரசவமாக எமக்கு இந்நூலாசிரியர் ஆறுமுகம் செல்வநாயகம் அவர்கள் அறியத்தந்துள்ளார்.

இந்நூலைத் தரிசிப்பவர்கள் இந்நூலாசிரியரின் பிரசவ வேதனையை உணருங்கள் ஏன் என்றால் ஆக்கிய நூல் ஒன்றை அக்குவேறு ஆணிவேறு என்று பிய்த்து கடித்துக் குதறி விமர்சிப்பது இலகு. ஆனால் இந்நூலை ஆக்கியோரது உழைப்பு இதற்காக அவரது தேடல் யாவற்றையும் கருத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு இந்நூலை தரிசியுங்கள். அதற்காக இது விமர்சனத்துக்கு அப்பாற்பட்டது என்ற சான்று வழங்கவில்லை.

பள்ளிக்குடியிருப்பின் ஒரு மகன் என்ற வகையில் காய்தல் உவத்தல் இன்றி இப்படி ஒரு நூலை எழுதிய நூலாசிரியரைப் பாராட்டவோ, வாழ்த்தவோ எனக்கு எவ்வித தகுதியுமில்லை! ஆனாலும் எம்மால் முடியாத ஒன்றை தான் முன்னின்று முடித்து எம்மூரைப் பெருமைப்படுத்தியதற்காக நூலாசிரியரை போற்றி பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றேன்.

இது போன்ற பல ஆய்வு நூல்களை இந்நூலாசிரியரிடமிருந்து எதிர்பார்க்கின்றேன்.

சட்டத்தரணி கந்தையா தவராசா

பள்ளிக்குடியிருப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

### பள்ளிக்குடியிருப்பு வரலாற்றுப் பண்பாட்டியல் ஒரு அறிமுகக் குறிப்பு

வரலாறும் பண்பாடும் ஒரு சமூகத்தில் வழி வழி வந்த நினைவுகளும் பதிவுகளும், கல்வெட்டுக்களும்,கலைகளும் இலக்கியமும், சடங்குகளும் என ஒரு நீண்ட செல் நெறி சார்ந்து நோக்கப் படுகின்றன. அந்த வகையில் பண்டைத் தமிழ் கிராமமான பள்ளிக்குடியிருப்பு பற்றி என் நண்பர் கல்வியாளர் திரு.ஆ.செல்வநாயகம் அவர்கள் "பள்ளிக்குடியிருப்பு ஒரு வரலாற்றுப் பண்பாட்டியல் பார்வை" எனும் நூலை ஆக்கியுள்ளார். தோழமை மிக்க உணர்வும் நட்பும் கொண்ட பள்ளிக்குடியிருப்பு மக்களின் வாழ்வும் வரலாறும் பண்பாடும் இங்கு நூலுருப் பெறுவது மிகுந்த மகிழ்ச்சியை தருகிறது. சேனையூருக்கும் பள்ளிக்குடியிருப்புக்கும் பண்டைக் காலம் தொட்டே ஒரு ஆத்மார்த்தமான தொடர்பு காலம் காலமாக பேணப் படுகின்றமை வரலாறு முழுவதும் பரவிக் கிடக்கிறது.

பிரம்பு வெளி வயலும் மாவலிக் கிளையின் வளமுமதனோடு இணைய குளக்கோட்டன் காலம் முதல் இந்த தொடர்பின் நீட்சியை காண முடியும். செல்வநாயகம் ஒரு மிகப் பெரும் பணியை செய்து முடித்துள்ளார் வரலாறு என்பது மக்கள் வாழ்வியலுக்கூடாக பார்க்கப் பட வேண்டும் என்ற அண்மைக்கால கோட்பாடுகளுக்கு ஏற்ப இந்த நூல் அமைந்துள்ளமை சிறப்பாகும்.ஈழத் தமிழர்கள் பன்னெடுங் கால வரலாறு உடையவர்கள் என்பது இந்த நூலின் மூலம் மேலும் உறுதிப் படுத்தப் படுவது இங்கு குறிப்பிடத் தக்கது.

என் வாழ்த்துரையாக பள்ளிக்குடியிருப்பு பற்றிய ஒரு வரலாற்றுக் குறிப்பை என் பார்வையில் இங்கு பதிவிடுவதோடு ஒரு கவிதையையும் பள்ளிக்குடியிருப்பு மக்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.

கொட்டியாரப் பற்றில் தனித் தமிழ் கிராமமாய் தன் சுய அடையாளங்களுடன் பண்டைப் பண்பாட்டையும் வரலாற்றையும் தன்னகத்தே கொண்ட இயற்கையின் அரவணைப்பில் தாலாட்டும் குளிர் தென்றல் வருட வயல் நிலங்கள் சூழ ஒற்றுமைக்கு பேர் போன கிராமமாய் உயர்ந்த பண்புகள் நிறைந்த மக்கள் வாழும் தமிழ் ஊர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூரிலிருந்து இரண்டு வழிகளில் நாம் இந்த அழகிய ஊரை சென்றடையலாம் ஒன்று கட்டைபறிச்சான் வழியாக செல்கிறது மற்றயது மட்டக்களப்பு வீதி வழியாக தோப்பூர் தாண்டிச் செல்வது.

பள்ளிக்குடியிருப்பு என எப்படி பெயர் பெற்றிருக்கலாம் என்பதற்கு சில விளக்கங்கள் இங்குள்ள பெரியவர்கள் மூலம் அறிய முடிந்த தகவல்கள் .

பள்ளக்குடியிருப்பு என்பது பள்ளிக் குடியிருப்பாக மாறியிருக்கலாம் என்று பார்க்கும் போது பிரம்பு வெளி எனும் வயல் பகுதியும் ஆரம்பகால பிரதான குடியிருப்பாக அமைந்திருந்தது .உண்மையில் பிரம்பு வெளி எனும் வளம் நிறை வயல் நிலம் மாவலியாற்றின் கிளை நதியொன்றின் வாய்க்கால் வழி நீர் பாய்ந்து செழிப்பையும் செழுமையயையும் இக் கிராமத்திற்கு வளங்குகின்றமை குறிப்பிடத் தக்கது.

பள்ளிச்சி குடியிருப்பு என்பது பள்ளிக்குடியிருப்பு என திரிபு பட்டிருக்கலாம் எனும் இன்னொரு கருத்தும் நிலவுகிறது.

வரலாற்று நகர்வில் மற்றொரு கருத்தும் பள்ளிக்குடியிருப்பின் பழமையயை சொல்லி நிற்கிறது ஈழத் துறை எனும் இலங்கைத் துறை முகத்துவாரத்தில் இறங்கிய எல்லாளன் பள்ளிக்குடியிருப்பில் தன் படைகளை தங்க வைத்து சென்றதால் படைக் குடியிருப்பு பள்ளிக்குடியிருப்பாக மாறியிருக்கலாம் என்பதும் இங்கு கவனத்தில் கொள்ளத் தக்கது.

குளக்கோட்டு மன்னன் கோணேசர் கோயில் அமைக்கும் திருப்பணிகளை செய்த பின்னர் சிந்து நாட்டிலிருந்து அழைத்து வரப் பட்ட மக்களில் ஒரு பகுதியினரை குடியேற்றி இங்குள்ள விவசாய நிலங்களை விளைவித்து கோணேசர் கோயில் திருப்பணியில் பங்கு கொள்ள பணித்தான் என கோணேசர் கல்வெட்டு கூறுகின்றமை இங்கு மனம் கொள்ளத் தக்கது.

பள்ளிக்குடியிருப்பு சமூக ஒழுங்கில் குடி முறை பிரதானப் படுகிறது ஏழு வகையான குடிகளின் வழி வந்தவர்களின் வம்சா வழியினரே இன்றைய பள்ளிக்குடியிருப்பார் என்பதை அறிய முடிகிறது .மட்டக்களப்பு மான்மியம் இந்த குடி முறைகள் பற்றி தெளிவாகப் பேசுவது இங்கு கவனம் பெறுகிறது.

இங்குள்ள பழமை வாய்ந்த பிள்ளையார் கோயில் பற்றி பேசும் போது உமண குடி,படையாண்ட குடி ஆகியவற்றின் முக்கியத்துவம் சொல்லப் படுகிறது. படையாண்ட குடி மட்டக்களப்பில் பிரபலாமான குடியாகும் சமூக மானிடவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுகள் மூலம் மட்டக்களப்புக்கான தொடர்புகளை குடிமுறைகளின் விரிவான விளக்கங்களை பெற முடியும்.

ஒவ்வொரு ஊருக்கும் ஒரு சிறப்பிருக்கும் அந்த வகையில் கொட்டியாரத்தில் வேறு எங்கும் இல்லாத கலாசார மரபாக விளங்கும் கொம்பு விளையாட்டு தொடர்ச்சியாக நடை பெற்று வருகிறது.கண்ணகி வழிபாட்டுடன் தொடர்பு பட்ட இந்த மரபு மட்டக்களப்பில் பல கிராமங்களில் வளக்கில் உள்ளது.கண்ணகி வழிபாடு இரண்டாயிரம் வருச பழமையானது அந்த மரபின் நீட்சியாகவே கொம்பு விளையாட்டு பார்க்கப் படுகிறது. இடப் பெயர்வு யுத்த சூழ் நிலைகளால் தடைப் பட்டிருந்த கொம்பு விளையாட்டு அண்மைய ஆண்டுகளில் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.கொம்பு விளையாட்டில் முக்கிய நிகழ்வான கொம்பு வாழ்த்து ஒரு அரங்க நிகழ்வின் பண்பை வெளிப்படுத்துவதும் அண்மைய கிராமங்களின் ஒத்துழைப்பும் இந்த கலாசார மரபின் தொடர்ச்சியயை வலியுறுத்தி நிற்கிறது.

காடும் காடு சார்ந்தும் வயலும் வயல் சார்ந்தும் என மருதம் முல்லை என இரு நிலக் பொருளாதார முகம் கொண்டதான வாழ்வியல் முறைகளுக்கு சொந்தக் காரர்களாக காலம் காலமாக சுய சார்பு பொருளாதார முறைமையில் நம்பிக்கை கொண்டவர்களாக இம் மக்கள் வாழ்கின்றனர்.

கிராமத்தின் மேட்டு நில விவசாயத்துக்கு துணையாக இருக்கும் குளங்கள் குறிப்பாக மரவட்டைக்குளம், கீராண்ட குளம், சின்னக்குளம், இத்திக்குளம் ஆகியவற்றை சூழ உள்ள பழங்கால சின்னங்கள் இக் கிராமத்தின் புராதன வரலாற்றின் எச்சங்களாக உள்ளன.

2006 வன் முறையில் முழு கிராமமே இடம் பெயர்ந்து மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் அகதிகளாக எல்லாவற்றையும் இழந்த இம் மக்கள் மீண்டும் குடியேறி தங்கள் வாழ்வை தகவமைத்துக் கொண்டு எதிர்காலக் கனவுகளுடன் சமூக ஒற்றுமையுடன் வாழ்வை எதிர் கொள்ளும் மக்களாய் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பள்ளிக்குடியிருப்பென்னும்*
*பழம் பதி*

*எல்லாளன் என்ற*
*வல்லாளன் வந்த வழி*
*படை வீடு கண்டதனால்*
*பள்ளிக் குடியிருப்பானதுவே*

*கண்ணகிக்கு கால் நாட்டி*
*கவி சொல்லிப் பாடுகின்ற*
*கொம்பு முறி விளையாட்டை*
*கொண்டாடும் பெருவூர்*

*பிரம்பு வெளியென்னும்*
*பெரு நெல்லுக் களஞ்சியத்தை*
*வரமாகக் கொண்ட*
*உரம் மிக்க தமிழ் ஊர்*

*தேனோடு பாலும்*
*திகட்டாத செந்நெல்லும்*
*மானோடி விளையாடும்*
*மகிழ் நிலமாய் தான் விரியும்*

*குளமும் வயலும்*
*நிலமுமாய் நீளும்*
*தமிழாய் வாழும்*
*தனித்துவ ஊர் இது*

பேராசிரியர். பாலசுகுமார்
மேனாள் பீடாதிபதி
கலை கலாசார பீடம் கிழக்குப் பல்கலைக்கழகம்
முன்னாள் நுண்கலைத் துறைத் தலைவர்
சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிலையத்தின் இணைப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பார்வையில்....


தலைப்பு ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... .. i

என்னுரை . ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... .iv

அணிந்துரை . ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... .vi

வாழத்துரைகள் .. ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... .xi

01. தி/பள்ளிக்குடியிருப்பு - வரலாறுப் பார்வை ... ... ... ... ... ... ... ... ... .01

02. தி/பள்ளிக்குடியிருப்பின் புவியியல் நோக்கு ... ... ... ... ... ... ... ... ... .21

03. பொருளியல் பார்வை ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... 27

- விவசாயம் .. ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... 27
- கொடும்பாவிப் பாடல், பொலிப்பாடல், நாட்டார் பாடல்கள் .. ... ... ... 38
- விவசாய - நீர்ப்பாசன முகாமைத்துவம் ... ... ... ... ... ... ... ... ... 42
- விலங்கு வேளாண்மை ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... 50
- பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் ... ... ... ... ... ... ... ... ... ... ... ... 56

04. கல்வியியல் வரலாறு ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... 59

- தி/மூ/கலைமகள் இந்துக்கல்லூரி .. ... ... ... ... ... ... ... ... ... ... 59
  - » ஆரம்ப வரலாறு.. ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... 59
  - » அதிபர்களாக கடமையாற்றியோர் ... ... ... ... ... ... ... ... ... 60
  - » 1986 பின் பாடசாலையின் தர உயர்வுகள். ... ... ... ... ... ... .71
  - » பாடசாலையின் 1985 - 2020 வரையான அபிவிருத்திகள்... ... 80
  - » எகெட் நிறுவனத்தின் பங்களிப்பு .. ... ... ... ... ... ... ... ... 90
  - » பாடசாலை நிகழ்வுகளின் நிழற்படங்கள் . ... ... ... ... ... ... 93
- தி/மூ/ஸ்ரீ கணேசா வித்தியாலயம் - தங்கபுரம்.. ... ... ... ... ... ... 141
- தி/மூ/ சின்னக்குளம் அ.த.க வித்தியாலயம் . ... ... ... ... ... ...144

05. கலைத்துறை.. ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...147

06. விளையாட்டுத்துறை ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...158

07. வைத்தியத்துறை. ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...170

08. போக்குவரத்து ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...174

09. கொம்பு விளையாட்டு ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...177

- கொம்பு விளையாட்டின் தொன்மை.. ... ... ... ... ... ... ... ... ... ...178
- ஆரம்பித்தமைக்கான வரலாறுகள் .. ... ... ... ... ... ... ... ... ... ...179
- வழிபாட்டின் முக்கியத்துவம்.. ... ... ... ... ... ... ... ... ... ... ... ...179
- பள்ளிக்குடியிருப்பின் கொம்பு விளையாட்டு... ... ... ... ... ... ... 181




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கொம்பு விளையாட்டுப் பாடல்கள் ... ... ... ... ... ... ... ... ... ... ...195
  - » கல்வி அமைச்சின் வெளியீடு ... ... ... ... ... ... ... ... ... ... ...195
  - » வழமையாக பாடப்படுபவை. ... ... ... ... ... ... ... ... ... ... ...196
  - » கிழக்குப் பல்கலைக்கழக அரங்க நிகழ்வில் பாடப்பட்டவை ... ...197

10. தி/பள்ளிக்குடியிருப்பின் ஆலயங்கள் ... ... ... ... ... ... ... ... ... ..203
- ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் - பள்ளிக்குடியிருப்பு... ... ... ... ... ..205
- மோராண்டகுள - பிள்ளையார் ஆலயம் .. ... ... ... ... ... ... ... ...221
- மோராண்டகுள - பத்தினி அம்மன் ஆலயம் . ... ... ... ... ... ... ..224
  - மோராண்டகுள பத்தினியம்மன் காவியம் ... ... ... ... ... ... ..226
- சிறினிவாசபுரம் - கற்பக விநாயகர் ஆலயம் ... ... ... ... ... ... ..232
- தங்கபுரம் - பள்ளிக்குடியிருப்பு நாகதம்பிரான் ஆலயம் ... ... ... ..234
- தங்கபுரம் - தங்க விநாயகர் ஆலயம். ... ... ... ... ... ... ... ... ..237
- சின்னக்குளம் - ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம். ... ... ... ... ... ... ..240
- இத்திக்குளம் - வர்ணகுல விநாயகர் ஆலயம் ... ... ... ... ... ... ..243
- சின்னக்குளம் - ஆஞ்சனேயர் கோயில் ... ... ... ... ... ... ... ... ..244
- சின்னக்குளம் - பேச்சியம்மன் கோயில் ... ... ... ... ... ... ... ... ..244
- சின்னக்குளம் - மாரியம்மன் கோயில். ... ... ... ... ... ... ... ... ..245
- சிறினிவாசபுரம் - கும்பத்து அம்மன் கோயில் ... ... ... ... ... ... ..246
  - மாரியம்மன் பாடல்கள் ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ..247
- கீராண்டகுள - கருமாரி அம்மனின் வரலாறு. ... ... ... ... ... ... ..249
  - கன்னகி காவியம் - பள்ளிக்குடியிருப்பு .. ... ... ... ... ... ... ...251

11. எமது கிராமத்துடன் தொடர்புடைய ஏனைய ஆலயங்கள் ... ... ... ... 255
12. போராட்ட காலத்தில் கிராமத்தின் நிலை ... ... ... ... ... ... ... ... .. 258
13. நினைவு கூரப்படவேண்டியவர்கள் ... ... ... ... ... ... ... ... ... ... ..265
14. எதிர்கால அபிவிருத்திக்கான
    - செயற்திட்டங்கள் தயாரித்தல்/திட்டமிடல் ... ... ... ... ... ... ... ..277
15. எமது கிராமத்தின் எதிர்காலத்தில் நிறைவேற்ற வேண்டிய தேவைகள் 282
16. பசுமைக் கிராமம் - *Green Village* ... ... ... ... ... ... ... ... ... .. 287
17. பள்ளிக்குடியிருப்பு கிராமத்தின் அரச ஊழியர்கள் ... ... ... ... ... ..290
18. பள்ளிக்குடியிருப்பு கிராம உத்தியோகத்தர் பிரிவின் குடும்ப விபரம் .. ..296
19. பள்ளிக்குடியிருப்பு கிராம உத்தியோகத்தர் பிரிவின் வாக்காளர் விபரம்..297
20. உசாத்துணை நூல்கள்.. ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ..298
21 ஆசிரியரின் ஏனைய நூல்கள் ... ... ... ... ... ... ... ... ... ... ... ..300




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**– 1 –**

## தி/பள்ளிக்குடியிருப்பின் – வரலாறுப் பார்வை

*பள்ளிக்குடியிருப்பு பல்துலங்கு மருதநிலம்*
*வான் பொய்ப்பினும் தான் பொய்யா மாவலிபாயும் நிலம்*
*ஏருழவும் எருதுகளும் எருமைகளும் நிறைந்த நிலம்*
*செந்நெல்லும் சேர்ந்துள்ள பயிர்களும் திரண்ட நிலம்*
*பால்பொழியும் பட்டிகளுள்ள நிலம்*
*பாட்டாளிகளின் கூட்டாளியான நிலம்*
*தேனினுமினிய செந்தமிழர் வாழும் நிலம்*
*சித்தி விநாயகனின் திருகூஷ்டியில் அமைந்த நிலம்'*

இக்கவி வரிகளுடாக எமது இருப்பியல், பண்பியல், வாழ்வியல் முறைமைகளை மிக துல்லியமாக அறிய முடிகின்றது.

பள்ளிக்குடியிருப்பு என்பதில் "பள்ளி" என்பது மருதநிலத்தூர், இடம், கல்விபயிலும்இடம், கோயில், சிற்றூர், கல்லூரி, நகரம், வன்னியன் எனப் பலபொருளுடையது. பள்ளிக்குடியிருப்புமருதநிலத்தில்அமைந்திருப்பதனாலும், பள்ளி எனும் சொல்லுக்கான மறு பெயர்களில் பெரும்பாலானவைகள் பொருத்தமாக அமைவதால் பள்ளிக்குடியிருப்பு என்பது காரணப்பெயராக அமைந்தது.

வரலாற்றில் பள்ளிக்குடியிருப்பின் பழமையான - இதமான இடங்களும் அவற்றில் எம்மவர் அனுபவித்த சுகங்களையும் மறந்துவிட முடியாதன அந்த வகையில் ஊரைச்சூழ தென், மேற்கு, வடபுறமாக மகாவலி நீர் அல்லைக்குளமூடாக வளங்கொழிக்கும் மருதநிலமெங்கள் ஊர். தெற்கே கூடாளி வயல் ஓடை, ஆத்திமணப்போட்டா நீர்த்தேக்கம், மணதண்டை எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயல் வெளியூடான நீரோடையுடன் பொன்னயர் ஓடை, கொட்டுமதகு, ஆறு என நாம் குழித்து விளையாடி மகிழும் இடங்கள் மறக்கமுடியாதவை. கூடாளி, மண் தண்டை எனம் பகுதிகளில் மகாவலி நீர் தெளிந்ததாக, மணல்பரப்பில் சிறு அரிகற்களில் பழிங்குபோல் தெளிந்த நீரோடைகளில் நாம் குழித்து மகிழ்ந்த காலம், மந்தண்டை எனும் இவ்விடம் சித்திவிநாயகர் அருகில் இருப்பதால் கந்தசட்டி விரதமிருப்போர் தினமும் நீராடும் சிற்றாறாக ஓடையாக குளிரான - நீர்வீழ்ச்சிகளில் குளிப்பது போன்ற உணர்வுள்ள இடம். மகாவலி கிளை ஆற்று ஓரத்து மதுர மரத்தின் மீது ஏறி ஆற்றில் பாய்ந்து குழிக்கும் எம்மிளைஞர், இளையோர் மகிழ்ந்திருந்த பொற்காலம் இவற்றிடையே நெற்செய்கையுடன் பசுமாட்டு, எருமை மாட்டுப் பட்டிகளின் பால் - தயிர் என பல்வழும் கொழிக்குமிடமாக திகழ்ந்தது.

கிழக்குப் பக்கமாக மானாவாரி எனும் கீராண்ட குள, மரவட்டை குள, இத்திக்குள, சின்னக்குள, நரியந்தைக்குள நீர்த்தேக்கங்கள் அங்கே தாமரை, ஒலு, நீராம்பல், அல்லிப்பூக்களும் - குளத்திலே தாறா, நீர்க்காகம், கொக்கு, வக்கா, கீச்சான், புள் வாத்து முதலான பறவைகளின் பிரசன்னம் அவை எழுப்பும் ஒலிகள் - எருமை மாடுகள் குளத்திலே நீர்மூழ்கிகளாக நீந்தி நீண்ட நேரம் உறைந்திருக்கும் நிலைகள் எல்லாம் பார்ப்பதற்கு இனிமையாகவிழுங்கும். குளத்து கட்டுகளில் இருக்கும் அம்மன், பிள்ளையார் சிறு கோயில்கள் வழிபாட்டிடமாகவும் - இக்குளத்து நீர் பாயும் வேளாண்மைகள் மிகவும் செழிப்பான விளைவைத் தருபவையாய் அமையும். அத்துடன் இப்பகுதியில் ஏனைய பயிர்களும் சிறப்பான விளைவுகளைத் தரும்.

பல்வளம் கொளிக்கும் பள்ளிக்குடியிருப்பின் நடுவே சித்திவிநாயகரின் திருஷ்தியில் சிறப்பாக வாழுமிடமே எங்கள் பள்ளிக்குடியிருப்பு.

***"வரலாறு என்பது நம் கண்முன் காட்சியாக விரிகின்ற சுவடுகள். வரலாற்றுச் சுவடுகளை உள்வாங்காமல் நிகழ்காலத்தைப் புரிந்துகொள்வது கடினமாகிறது. ஒரு சமூகம் தன் வேர்களை தொட்டுணரும் பேரனுபவத்தை வரலாற்றில் இருந்தே பெற முடியும்"*** என்பதற்கு ஏற்ப எமது கிராமத்தின் தோற்றம், முற்கால வாழ்வியல் முறைமைகள் - பண்பாட்டியல், சமய வழிபாட்டம்சங்கள், கல்வி, கலாசாரம், சமூக பொருளாதார - தொழில் முறைமைகள், முதலானவை பற்றிய அறிவு சமகாலத்தவர்களும், எதிர்காலத்தவர்களும் ஏனையோர்களும் அறிவதற்கு இவ் ஆக்கம் அவசியமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நாட்டின் வெளிநாட்டார் ஆட்சியின் முன்பு அல்லது போத்துக்கேயர் இலங்கைக்கு வருகை தந்த போது கண்டி, கோட்டை போன்றன சிங்கள இராச்சியங்களாகவும், யாழ்ப்பாணம் தமிழ் இராச்சியமாகவும் இருந்தது. வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் உள்ளடங்கிய வன்னி என்றழைக்கப்படும் பிரதேசமும் திருகோணமலை, மட்டக்களப்பிலிருந்த வன்னிப் பிரிவுகளும் வன்னியர் என்றழைக்கப்படும் தமிழ் குறுநில மன்னர்களாலும் ஆளப்பட்டுக் கொண்டிருந்தது.

திருகோணமலை மாவட்டமானது பண்டைய காலத்தில் நான்கு வன்னிமைகளின் ஆட்சிக்குட்பட்டிருந்தன.

அவை...

1. திருகோணமலைப்பற்று
2. கொட்டியாபுரப்பற்று
3. கட்டுக்குளப்பற்று
4. தம்பலகாமப்பற்று

இவற்றுள் திருகோணமலைப்பற்று வன்னிபங்கள் சில காலம் யாழ்ப்பாண அரசின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்தது. அதே போல் கொட்டியாபுரப்பற்று சுதந்திரமாகவும் சில காலங்களில் யாழ்ப்பாண இராச்சியத்தின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்தமையை வரலாறுகள் மூலம் அறிய முடிகின்றது.[2]

எமது கொட்டியாபுரப்பற்று பிரதேசமானது வடக்கே கொட்டியாரக்குடாவையும், கிழக்கே வங்காள விரிகுடா கடலையும், தெற்கே வெருகல் கங்கையையும், மேற்கே மகாவலி கங்கையையும் எல்லையாகக் கொண்டது.

குளக்கோட்டு மகாராசா திருப்பணிக்காலத்திலும் கொட்டியாபுரப்பற்று என்னும் பெயர் உபயோகத்தில் இருந்ததை கி.பி. 14ம் நூற்றாண்டைச் சேர்ந்த கவிராஜ வரோதயரின் கோணேசர் கல்வெட்டு சாசனத்தின் மூலம் அறிய முடிகிறது. (குளக்கோட்டன் காலம் கி. மு. 2560 - 2500 வரை)

காலத்திற்கு காலம் கொட்டியாபுரப்பற்று வன்னிபங்கள் சுதந்திர அரசர்களாகவும் வடக்கேயும், கிழக்கேயும் ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்கள், அநுராதபுரம், பொலநறுவை, கண்டி மற்றும் தென்னிலங்கையை ஆட்சி புரிந்த சிங்கள, தமிழ் மன்னர்கள் முதலானோரின் அதிகாரத்திற்குட்பட்ட சிற்றரசர்களாகவும் இருந்ததாக வரலாறு கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டியாபுரப்பற்று வன்னிபங்கள் பற்றி கோணேசர் கல்வெட்டு, மட்டக்களப்பு மான்மியம், திருக்கோணாச்சல வைபவம், ஸ்ரீ சித்திர வேலாயுதர் காதல் மற்றும் இலங்கையில் காலூன்றிய போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் முதலானோரின் ஆட்சிக்கால குறிப்புகள், கிழக்கிலங்கை பூர்வீக வரலாறு மற்றும் இலங்கைத் தமிழர் தேச வழமைகளும் சமூக வழமைகளும் முதலான நூல்கள் வாயிலாக பல வரலாற்றுச் சான்றுகளை அறியமுடிகின்றது.

கொட்டியாபுரப்பற்றில் அமைந்துள்ள எமது பள்ளிக்குடியிருப்பு கிராமமும் மிகவும் பழமையான வரலாற்றை உடையதென்பதையும் மிக நீண்ட காலமாக இம்மக்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கான பின்வரும் வரலாற்று ஆதாரங்களூடாக அறியமுடிகின்றது.

**இப்பிரதேசத்தில் மிக நீண்ட காலமாக மக்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கான சான்றாக பின்வரும் வரலாற்று ஆதாரங்களைக் காணலாம்...**

- தங்கபுரத்தின் அருகாமையிலுள்ள கோணங்குடியிருப்பு எனுமிடத்தில் காணப்படும் சிவப்பு, கறுப்பு நிறத்திலான மட்பாண்ட ஓட்டுத்துண்டங்கள், மணிகள், உருண்டை உருவங்கள் என்பன தமிழ்நாடு அரிக்கன் மேடு எனுமிடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ள பெருங்கற்காலத்திற்குரியது (கி.மு 1000 - கி.மு 250) இவை ஒரே பண்பாடுடைய மக்கள் கூட்டத்தினரே இவ்விரு நாடுகளிலும் வாழ்ந்தார்கள் என்பதைக் காட்டுகிறது.[3]

- அத்துடன் சித்தி விநாயகர் ஆலயத்தின் தெற்கு வாசலின் இருமருங்கும் காணப்படும் சந்திரவட்டக்கல் போன்ற வரவேற்பு வளைவையுடைய இக்கல்லில் காணப்படும் சிவன், உமை உருவங்கள் இந்துப் பண்பாடுடையவை. பழமையானவை.

- கீராண்டகுள, ஐயநார்குள வயல்வேலைகளின் போது கண்டெடுக்கப்பட்ட செம்பு நாணயங்கள் என்பனவும் நீண்ட கால பழைமையானவை என அறிய முடிகின்றது.

- கட்டைப்பறிச்சானுக்கும் - பள்ளிக்குடியிருப்புக்கும் இடையில் உள்ள "கஜக்கொடி மலையில் பிராமிக் கல்வெட்டுள்ளது. இவை கி.மு 2ம் நூற்றாண்டுக்குரியது என பேராசிரியர் க. இந்திரபாலா அவர்கள் கூறியுள்ளார்.[4]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பள்ளிக்குடியிருப்பின் தென்பகுதியில் உள்ள ஆத்திமணப்போட்டா என அழைக்கப்படும் தோட்டத்தில் கருங்கல்லாலான இரு அடி அகலமான 5 நீளமான கற்தூண்கள் காணப்படுகின்றன. இக்கற்தூண்களின் ஓரத்தில் பட்டிகளும், நீர் வடிவதற்கான துவாரங்களும் காணப்படுகின்றன. இவை மன்னராட்சிக்காலத்தில் குறுநில மன்னர்களின் ஆட்சிக்காலத்தின் வாழ்விடமாகவும், வழிபாட்டிடமாகவும் இருக்கலாம் என ஊகிக்க முடிகின்றது. பிற்காலத்தில் இவ்விடத்தில் திண்ணைப் பள்ளிகள் இயங்கியதாக மூத்தோர் வாயிலாக அறியமுடிகிறது. அத்துடன் 200 ஆண்டுகள் பழமையான மாமரமும் அதன் அடியில் மேற்படி கற்தூண்களையும் காணலாம்.
- இத்திக்குளத்தில் கற்சுனை எனும் இடத்தில் கருங்கற்களாலான உரல் உலக்கை என்பன காணப்படுகின்றன. இவைகள் கற்காலத்தில் - நீண்ட காலத்திற்கு முன் இங்கு மக்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கான சான்றாகும்.
- பள்ளிக்குடியிருப்பு சித்திவிநாயகர் ஆலய மூலஸ்தானத்தின் வாயிலில் உள்ள கற்தூண் - அதன் மேற்பகுதியிலுள்ள கற்தூண் - (கதவு நிலை மாதிரியான பகுதி) 1 அடி X 1.5 அடி அகலமானதும் 6 அடி உயரமானதுமான கருங்கற்தூண்கள் காணப்படுகின்றது. மூலஸ்தானத்திற்கு அடுத்த அர்த்த மண்டபத்திலும் இதே மாதிரியான கருங்கற் தூண்கள் காணப்படுகின்றன. இவற்றின் கதவு நிலை மாதிரியாக கருங்கற்களால் பொழியப்பட்டு - அதனுள் இரும்பு வளையம் வைக்கப்பட்டு பொருத்தப்பட்டுள்ளது.
- அண்மையில் இவ்வாலயத்தில் புதிதாக மூலஸ்தானம் உட்பட கோயில் அமைப்பதற்காக உடைக்கப்பட்ட போது மேற்படி கற்தூ ண்கள் காணப்பட்டன. அத்துடன் அதன் சுவர்கள் சுமார் 2 அடி அகலமாகவும், செங்கல் சுண்ணாம்பினால் கட்டப்பட்டது. ஆனால் பல நூற்றாண்டுகள் பழைமையான இச்சுவரை இடிக்க முடியாதிருந்தது. இவை சுண்ணாம்புடன் தேன் மற்றும் மூலிகைச் சாறுகள் கலந்து கட்டப்பட்டிருக்கலாம் என முற்காலத்தில் வாழ்ந்த பெரியவர்கள் மூலம் அறியப்பட்டவைகள் - உண்மை என்பதை அக்கட்டடத்தை உடைக்க முடியாத உறுதித்தன்மை புலப்படுத்துகின்றது.
- கற்தூண்களில் காணப்படும் பொருத்துக்கள் அதற்குள் பயன்படுத்தியிருக்கும் இரும்பாலான வளையங்களில் காணப்படும் நுட்பங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தவர்களிடம் காணப்பட்ட பொறியியல் நுட்பங்களுடனான அறிவை மெச்ச முடிகின்றது.

- இவ்வாறான கற்தூண்களும் அரைவட்ட வளைவுவடிவினாலான சந்திரவட்டக்கற்கள் போன்றவையும் பொலநறுவைக்கால கி.மு. 161 - 137 ஆண்டுகளுக்குரியவை என கூறப்படுகின்றது. அத்துடன் பொலநறுவையை தலைநகராகக் கொண்டு 52 ஆண்டுகள் சிறப்பாக ஆட்சிபுரிந்த சோழ மன்னர்கள் (தமிழ் மன்னர்கள்) ஆட்சிக்காலத்தில் 10ம் நூற்றாண்டிற்கு (கி.பி 993 - 1070) உரிய 14 இந்துக் கோயில்கள் காணப்படுகிறது. அங்கும் எமது இவ் ஆலயத்தில் காணப்படும் கற்-தூண்கள் சந்திரவட்ட வளைவான கற்களும் காணப்படுகின்றன.

எனவே நாட்டை ஆட்சிபுரிந்த சோழ மன்னர்கள் காலத்திற்குரியவைகள் இங்கு காணப்படும் கற்தூண் சிற்பங்கள் ஒத்த தன்மையன பொலநறுவையில் இன்றும் இந்துக் கோயில்களும் சிற்பங்களும் காணப்படுகின்றன. இலங்கையின் வரலாற்று நூல்களில் இவை மிகத் தெளிவாக கூறப்படுகின்றன. இவை உலகப் பாரம்பரியத் திட்டத்தில் பதியப்பட்டுள்ளது. (இவை 11.10.2020 வசந்தம் தொலைக்காட்சி அலைவரிசியில் நம் நாட்டின் பாரம்பரியம் எனும் நிகழ்வில் ஒளிபரப்பானவை)

- குளக்கோட்ட மன்னன் திருக்கோணேசர் ஆலய திருப்பணியைத் தொடர்ந்து எமது பள்ளிக்குடியிருப்பு விநாயகர் ஆலயத்தில் திருப்பணியையும் செய்து முடித்தார்[5] எனக் கூறப்படுகின்றது.

இவ்வாறான சான்றாதாரங்கள் அனைத்தும் சுமார் கி.மு. 5000 - 2000 ஆண்டுகள் இடைப்பட்ட காலமாக கருதப்படும் பெருங்கற்கால சின்னாங்கள் பள்ளிக்குடியிருப்பில் பல இடங்களில் அமைந்துள்ளமையை காணலாம்.

திராவிடப்பண்பாட்டுடன் தொடர்புடைய இப்பெருங்கற்கால சின்னாங்கள் பள்ளிக்குடியிருப்பில் காணப்படுகின்றமை இம்மக்களின் மிகவும் நீண்ட காலம் இங்கு வாழ்ந்த வரலாற்றாதாரங்களை மிகவம் துல்லியமாக அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• திருகோணமலையின் ஒல்லாந்து ஆளுநர் J.F. Vansenden அவர்கள் கொட்டியாபுரப் பகுதியின் சுற்றுப் பயணம் செய்த அறிக்கையில் (15.05.1786 - 21.06.06.1786) ஞாயிற்றுக் கிழமை பள்ளிக்குடியிருப்புக்கு சென்றதாகவும் அங்கு சிந்தி நாட்டாரையும், கரையார் சாதியினரையும் கண்டதாகவும் - அவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டதைக் கண்டு அவர்கள் உரையாடியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். "அங்கு 4 மாடுகளை இணைத்து நீர்பரந்துள்ள வயலில் ஓட்டிக் கொண்டிருந்தனர். பின்னர் பலகையால் மட்டப்படுத்தினார்கள். இவர்கள் சிறந்த உழைப்பாளிகள்" எனக் குறிப்பிட்டுள்ளார். அவர்களுடன் கலந்துரையாடியுள்ளார். இங்கிருந்து சின்னத்தோப்பு (பாலத்தோப்பூர்), பெரிய தோப்புக்கும் (தோப்பூர்) சென்றுள்ளார். இப்பயணத்தின் போது பள்ளிக்குடியிருப்பை - ஒமணகிரி எனவும் அவரது பயணக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.[6]



தங்கபுரம் - கோணாங்குடியிருப்பு எனும் இடத்தில் காணப்படும் கறுப்பு, சிவப்பு நிறங்களிலான மட்பாண்ட உருவப்பொருட்கள்.



ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய தெற்கு வாசலில் இருமருங்கும் அமையப் பெற்றிருந்த வளைவிலான சந்திரவட்டக்கல் போன்ற அமைப்புடையது. இவற்றில் சிவன் உமை உருவங்களும் இந்து சமய அடையாளங்களும் பொறியப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






கீராண்டகும், ஐயனார் குள பிரதேசத்தில் வயல் வேலைகளில் ஈடுபடும்போது கண்டெடுக்கப்பட்ட நாணயங்கள்.



கட்டைப்பறிச்சானுக்கும் - பள்ளிக்குடியிருப்புக்கும் இடையிலுள்ள கஜக்கொடி மலையின் பிராமிக் கல்வெட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் கற்பக்கிரகத்தில் - மூலஸ்தான வாசலில் கருங்கற்களாலான நிலை - (1) இரு பக்கத்திலுமுள்ள 1.5 X 2 அடி 6 அடி உயரமான கற்தூண். (2) இரு கற்துணின் மேல் பகுதியில் வைக்கப்பட்ட 1.5 அடி அகலமான 5 அடி நீளமான கருங்கல்லில் பொழியப்பட்ட கற்றூண்.

A - இப்பகுதியில் 8 அங்குலம் அளவிலான 4 அங்குல விட்டமான குழியில் இரும்பு வளையங்கள் வைக்கப்பட்டுள்ளது. இவை இரண்டையம் பொருத்துவதற்கானது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இத்திக்குளத்தில் கற்சுனை என்ற இடத்தில் காணப்படும் கருங்கல்லினாலான உரல்.



சிவலிங்க வடிவானது சிவலிங்க வழிபாடு இடம்பெற்றதாகவும் ஊகிக்க முடிகின்றது.



ஆத்திமனபோட்டா எனும் இடத்தில் காணப்பட்ட 2 அடி x 6 அடி அளவிலாள ஓரங்கள் பட்டிகளுடைய சிற்பமான நீர் வடிந்தோடக்கூடிய கருங்கற்கள்.



200 ஆண்டுகள் பழமையான மாமரம் திண்ணைப்பள்ளி நடைபெற்ற இடம்.

படத்தில் - திரு. பொ. கோபாலபிள்ளை இவ்விடத்தினுடைய பரம்பரை உரிமையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பழமையான வரலாற்றுச் சான்றாதரங்களுடன் விளங்கும் தி/பள்ளிக்குடியிருப்பின் மக்களது வரலாறு – குளக்கோட்டனுடனும் – கோணேசர் ஆலயத்துடனும் தொடர்புடையது.**

கோணேசர் கோயில் வரலாறுகளில் மனுராசா எனும் மன்னன் இலங்கையை ஆண்ட காலத்தில் (கி.மு. 1300) கோணேசர் கோயில் கட்டப்பட்டது என்றும் பின்னர் போர்த்துக்கீச தளபதி கி.பி. 1624ல் "கொன்ஸ்ரான் ரைன்டீசா" கோணேசர் கோயிலை இடித்தான் எனவும் கூறப்படுகின்றது.[6]

மேலும் குளக்கோட்ட மன்னன் கோயில் திருப்பணிகளை நிறைவேற்றிய பின் அக்கோயில்களைப் பராமரிப்பதற்காக 2700 அவணம் நெல்விதைப்புத் தரையை உண்டாக்கியதையும், அவற்றிற்கு நீர் பாய்ச்சுவதற்காக அல்லைக்குளம், வெண்டரசன்குளம், கந்தளாய்க்குளம் என்பவற்றைக் கட்டுவித்ததையும் விளைநிலங்களில் குடியிருத்துவதற்காக மருங்கூர், காரைக்கால், திருநெல்வேலி, மதுரை, காஞ்சிபுரம் முதலிய இடங்களில் இருந்து குடிமக்களை அழைத்து வந்து குடியமர்த்தி அவர்களுக்கு மானியங்களை வழங்கியதையும், கொட்டியாபுரப்பற்று, கட்டுக்குளப்பற்று, தம்பலகாமப்பற்று என்பவைகளிற் குடியமர்த்தப்பட்ட குடி மக்களின் கடமைகளும் உரிமைகளும் எவையென்பன போன்ற விடயங்களை கோணேசர் கல்வெட்டுக் கூறுகின்றது.[7]

அத்துடன் இவர்களைப் பராமரிப்பதற்காக வன்னிமைகளையும் கொண்டு வந்து கட்டுக்குளப்பற்று, கொட்டியாபுரப்பற்று, தம்பலகாமப்பற்று எனும் இடங்களில் குடியேற்றினார் என்றும் கோணேசர் கோயிலுக்கு செய்ய வேண்யடி தொண்டுகள், தொழும்புகள் பற்றியும் குறிப்பிடுகையில் - தானத்தார் வரிப்பத்தார் என்பவர்களை அழைத்துவந்து கோணேசர் கோயிலின் நிர்வாக வழிபாட்டு முறைமைகள் சீராக நடைபெற உதவினார்.

(தானத்தார் - இவர்கள் அன்றாடம் கோயில் வரவு - செலவுகளைக் கவனித்தல் வேண்டும். வரிப்பத்தார் - இவர்கள் பட்டாடை கொய்தல், கூட்டல், பத்திரங்களைப் பராமரித்தல். மெழுகுதல் முதலிய பணிகளைச் செய்தல்.)

அடுத்து, ஆலயத்தில் நடைபெற வேண்டிய நித்திய, நைமித்திய கிரியைகள் சிறப்பாக நடைபெறுவதற்கு வேண்டிய நிவந்தங்களையும் ஒதுக்கீடு செய்து அதற்கான விதிமுறைகளையும் வகுத்துக்கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்காக வயல்களை வழங்கியதுடன் அவ்வயல்களுக்கு நீர் கிடைப்பதற்கு அல்லைக்குளம், வெண்டரசன் குளம், கந்தளாயக்குளம் ஆகியவற்றை கட்டிக்கொடுத்து குளங்களிலிருந்து நீர்ப்பாசன வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டது.

**"இந்தியாவிலிருந்து குளக்கோட்டனால் கொண்டுவரப்பட்ட தனியுண்ணாப் பூபால வன்னியன் ஆட்சியின் கீழ் விவசாயம் செய்த சிந்து நாட்டவர்கள் கோணேஸ்வரர் ஆலயத்திற்கு நெல் அனுப்பினர். இவர்கள் ஈச்சிலம்பற்றை, பள்ளிக்குடியிருப்பு, மல்லிகைத்தீவு, கங்குவேலி, திருமங்கலாய், இலங்கைத்துறை, கிளிவெட்டி, சம்பூர், மூதூர் போன்ற இடங்களில் குடியமர்த்தப்பட்டு வெருகல் பகுதியையும் பரிபாலனம் செய்தனர்."[8]**

குளக்கோட்டனின் திருப்பணிகளில் கோணேசர் கோயிலுக்கு நெல் அனுப்புவதற்காக அல்லைக்குளத்தைக் கட்டுவித்து நீர்ப்பாசன கால்வாய்களையும் அமைத்தார்.

இதில் அல்லைக்குளத்து நீர் பாய்ச்சப்படும் பெரும் பகுதி பள்ளிக்குடியிருப்பை சூழவுள்ள பிரம்புவெளி வயல்களாகும். இவ்வயலில் விளையும் ஒவ்வொரு வேளாண்மையும் பிரம்பின் அளவு தடிப்பாக இருப்பதால் (செழிப்பாக விளைவது) பிரம்புவெளி என்ற காரணப்பெயர் வரலாயிற்று. அல்லைக்குள நீர்ப்பாசனத்திற்குட்பட்டவை பிரம்புவெளி கிழக்கு, பிரம்புவெளி மேற்கு, ஒலுக்குளி, சந்தனவெட்டை எனும் பள்ளிக்குடியிருப்பின் எல்லைக்குட்பட்ட வயல்நிலங்களாகும். எனவே பள்ளிக்குடியிருப்பு கோணேசருக்கு நெல் அனுப்பும் ஊர்களில் ஒன்றாகும்.

கோணேசர் ஆலயத்திற்கு கொட்டியபுரப்பற்றிலிருந்து நெல் வழங்குவது போன்று பின்வருபவற்றை அனுப்பியதான வரலாறுமுள்ளது.

- மல்லிகைப் பூவை அனுப்பிய இடம் - மல்லிகைத்தீவு
- பசுநெய் (ஆ+நெய்) அனுப்பிய இடம் - ஆநெய்தீவு
- சந்தனக்கட்டைகள் அனுப்பிய இடம் - கட்டைப்பறிச்சான்
- சேனைப் பொருட்களாகிய வாழைப்பழம், வெற்றிலை அனுப்பிய இடம் - சேனையூர் என்றும்
- கொட்டியாரபுரப்பற்றில் உற்பத்தியான பொருட்களை சம்பூரணமாக சேர்த்து கடல்மார்க்கமாக மீகாமன் ஊடாக அனுப்பிய இடம் - சம்பூர் எனவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணேஸ்வரத்துடன் தொடர்புடைய காரணப்பெயர்களாகவே இவை அமைந்துள்ளன.[9]

## கொட்டியார துறைமுகங்கள்

வரலாற்று காலம் தொட்டு இலங்கையின் புகழ்பெற்ற துறைமுகங்களான **கொட்டியாரத்துறை, இலங்கைத்துறை** எனபனவும் முக்கியத்துவம் பெறுகின்றது. விஜயனுக்கு அடுத்த மன்னன் பண்டுவாசு தேவன். பின்னர் அவனது இராணிபத்தகச்சனா ஆகியோர் வந்திறங்கிய கொட்டியாரத்துறையும், திருமங்களாய் மன்னன் சிங்கபூதரன், எல்லாளன் மன்னன் ஆகியோர் வந்திறங்கிய இலங்கைத்துறை என்பவை இன்றளவும் முக்கியத்துவம் குன்றாதவையாகவே காணப்படுகின்றது.




தென்னிந்தியாவிலிருந்து அம்மன் சிலைகளுடன் ***ஏழு குடிமக்கள்*** வந்து இலங்கைத்துறையில் இறங்கியதாகவும் இவர்களுக்கான ஏழு குளங்களும் உள்ளதாகக் கூறப்படுகின்றது. இக்குளங்களை இன்றும் காணலாம். ஈச்சிலம்பற்று செண்பகநாச்சியம்மன் சிலை உள்ளிட்ட 07 அம்மன் சிலைகள், இலங்கைத்துறை, சம்பூர் பத்திரகாளியம்மன், நீலாப்பளை பத்தினியம்மன், கட்டைப்பறிச்சான் அம்மச்சியம்மன் சிலை, கடற்கரைச்சேனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டத்துக்கான சிலை, பன்குளம் எல்லைக்காளியம்மன் சிலை, தம்பிலுவில் கண்ணகையம்மன் சிலை என்பனவும் இத்துறைமுகத்தினூடாக வந்ததாக கூறப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட குடியினர் அல்லது குடிமரபுகள் கொட்டியாரப்பற்று பிரதேசத்தில் சம்பூர் (12 குடிகள்) பள்ளிக்குடியிருப்பு (10 குடிகள்) ஈச்சிலம்பற்று, கிளிவெட்டி, கங்குவேலி, மல்லிகைத்தீவு முதலான கிராமங்களில் காணப்படுகின்றனர்.

**பள்ளிக்குடியிருப்பின் 10 குடிகளும்**

1. வெள்ளைக்குடி
2. ஆசாரி குடி
3. ஏகநாதி நாயனார் குடி
4. மாலயன் குடி
5. ஆழவந்தார் குடி
6. வில்வராசன் குடி
7. படைத்தார்கிளை குடி
8. தோப்புச்சிக் கிளை குடி
9. உடமணஹரி குடி
10. குடியிருப்புக் குடி

குளக்கோட்டன் ஆட்சியில் நிர்வாகத்திற்காக நியமிக்கப்பட்ட வன்னியன் மார்கள் அப்பிரதேச கிராமங்களில் அமர்த்தப்பட்ட குடிகளில் (திருப்பணிக்கான தானத்தார் - 30 குடியினரும், வரிப்பத்தார் 21 குடிகளையும் இந்தியாவிலிருந்து கொண்டுவந்தார்கள்) இக்குடிகளில் முதற்குடியினர் தலைமை அடப்பன் எனவும் ஏனைய குடியினரின் தலைவர் அடப்பன் எனவும் அழைப்பர். இம்முறை கங்காணம், வண்ணக்கர் என்ற பெயர்களும் இடத்திற்கு இடம் வேறுபாடுகள் உள்ளன.

எமது பள்ளிக்குடியிருப்பில் நியமிக்கப்பட்டிருந்த இவ் அடப்பன் மார்கள் கிராமத் தலைவர்களாக ஆரம்ப காலங்களில் இருந்திருக்கிறார்கள். கிராமத்தின் முக்கியமான நிகழ்வுகளுக்கு தலைமை அடப்பன்மாருக்கு வெற்றிலை வைக்க வேண்டும். திருமணம், பூப்பு நீராட்டுவிழா, வீடு கட்டுதல், கிராமசபை அங்கத்தவர் தெரிவு முதலான விடயங்களுக்கும் அனுமதி பெறவேண்டும். அனுமதி பெற்றுவிட்டால் இந்நிகழ்வுகளில் ஏற்படும் அனைத்துக்கும் வகை கூறுவதோடு சிறப்பாக நிறைவேற்ற அனைவரும் செயற்படுவர். இம்முறைகள் சுமார் 1975களின் பின் மிகக் குறைந்து செல்வதை அவதானிக்க முடிகின்றது.

நவீன உலகில் மக்கள் பெருக்கமும் அனைவருக்கும் சம உரிமை - ஜனநாயக முறைமைகள் பேணப்படுவதும், போராட்டங்களாலும் மேற்படி பாரம்பரியங்கள் குறைவடைந்தாலும் பல மரபுகளும் சம்பிரதாயங்களும் பேணப்படுவது பழமைக்கு சிறப்பம்சங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் தோப்பூர் பகுதியில் குடியிருந்த மக்கள் பள்ளிக்குடியிருப்புக்கு வந்தார்கள் என்பதில் எதுவித உண்மையும் இல்லை என்பதை உணரலாம்.

**பள்ளிக்குடியிருப்புக்கு உமணகிரி எனும் பெயர் இருந்ததாக சில சான்றுகள் உள்ளமையை அறிய முடிகின்றது.**

1. "திருகோணமலை மாவட்டத்திருத்தலங்கள்" எனும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வெளியீடு செய்த புத்தகத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"திருகோணேஸ்வரத்திற்குத் திருப்பணி செய்த குளக்கோட்ட மன்னன் கந்தளாய் குளத்தைக் கட்டி நீர்ப்பாய்ச்சி இரண்டாயிரத்து எழுநூறு அவணம் நெல் விதைக்கும் விதைப்புத் தரையைக் கொட்டியாபுரப்பற்றில் உண்டாக்கினான். அந்த நிலத்தில் விவசாயம் செய்யச் சிந்து நாட்டிலிருந்து மக்களைக் கொண்டு வந்து குடியேற்றினான். விவசாயத்தையே தொழிலாகக் கொண்ட சிந்து நாட்டவர்கள் தம்பலகாமம் தொடக்கம் வெருகல் வரையும் குடியமர்த்தப்பட்டார்கள். இந்தியாவிலிருந்து குளக்கோட்டு மன்னனால் அழைத்துவரப்பட்ட தனியுண்ணாப் பூபாலவன்னியனின் ஆளுமையின் கீழ் சிந்து நாட்டவர்கள் விவசாயம் செய்து கோணேஸ்வரத்திற்கு நெல் முதலிய திரவியங்களை அனுப்பிவந்தார்கள். வெருகல் சித்திர வேலாயுதசுவாமி கோவிலை நிருவகிக்கும் பொறுப்பும் சிந்து நாட்டவர்களிடம் விடப்பட்டது. ஈச்சிலம்பத்தை, மல்லிகைத்தீவு, ஆநெய்தீவு, ***பள்ளிக்குடியிருப்பு (உமணகிரி)*** கங்குவேலி, திருமங்கலாய், இலங்கைத்துறை, கிளிவெட்டி, சம்பூர், மூதூர் முதலிய இடங்களில் பல ஆலயங்களையமைத்த சிந்து நாட்டவர்கள், வெருகலம்பதியையும் பரிபாலனம் செய்து வந்தார்கள். அந்தப் பரம்பரையினரே இன்றும் பரிபாலனம் செய்து வருகின்றார்கள்."[10] என இந்நூலிலே பள்ளிக்குடியிருப்புக்கு உமணகிரி எனும் பெயரும் உள்ளமையையும், அத்துடன் 21.06.1786இல் சின்னத்தோப்பு (பாலத்தோப்பூர்), பெரிய தோப்பு (தோப்பூர்) சென்று அங்கிருந்து *Oemenagere* க்கு சென்றதாகவும் (பள்ளிக்குடியிருப்புக்கு) *Oemenagere* இல் இருந்து (பள்ளிக்குடியிருப்பில் இருந்து ஓமனகிரியில் இருந்து இலங்கைத்துறைக்கு சென்றதாகவும் குறிப்பிட்டுள்ளார்.[11] அப்போதைய பெயர் ஒமணகிரி என அழைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அழைக்கப்பட்டதற்கு இங்கு "ஒமணஹரி" என்றொரு குடி இருப்பது ஒரு காரணம் என ஊகிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலையின் ஒல்லாந்த ஆளுனரின் *J.F. Van Senden* அவர்களின் மாவட்ட சுற்றுப்பயண அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

***குளக்கோட்ட மன்னனால் கோணேசர் கோயிலுக்கு நெல் அனுப்புவதற்காகவும் கோயில் திருப்பணிக்காக கொண்டுவரப்பட்டவர்கள் என்பதும் திருக்கோணஸ்வரம் - கோணேசர் கல்வெட்டு பக்-251 இலும் குளக்கோட்டன் தரிசனம் எனும் பகுதியில் பக் - 623 இலும் மிகத் தெளிவாக கூறப்பட்டுள்ளது.***

தென்னிந்தியாவிலிருந்து அம்மன் சிலைகளுடன் ஏழு குடிமக்களுடன் இலங்கைத்துறை முகத்துவாரம் ஊடாக வந்து குடியேறியவர்கள். இக்குடிகளில் நிர்வாக முறைக்காக வன்னிமைகளுடன் அடப்பன்மார்களும் - குடித்தலைவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறான அடப்பன்முறை எமது பள்ளிக்குடியிருப்பிலும் சிறப்பாக இருந்தது.

அத்துடன் எம்.ஏ.சமது (ஓய்வுநிலை அதிபர் - மூதூர்) அவர்களால் எழுதப்பட்ட கொட்டியாபுரப்பற்று வரலாறு எனும் நூலில் "குளக்கோட்டன் மன்னனால் கோயில் பணிபுரிய வேண்டி இந்தியாவின் சிந்து நாட்டிலிருந்து குடியேற்றப்பட்ட வேளாள இனத்தவரின் பரம்பரையினரான இக்கிராமத்து மக்கள் தங்களுக்கான சமய கலாச்சாரப் பாரம்பரியங்களை இன்று வரையும் பேணிக்கடைப்பித்து வருவது சிறப்பம்சமாக திகழ்கிறது. இங்கு வாழும் மக்கள் நூறுவீதம் இந்துக்கள்"[12] எனவும் கூறியுள்ளனர்.

**கலைமகள் இந்துக் கல்லூரியின் பாடசாலைக் கீதத்தில்.**

சீர்பெறு......
மகாவலித் தாயின் வளம்பெறு வயலும்
வான் பயிர் செழித்திடவும்
காவினில் எருமை கருத்துடன் மேய்த்து
காத்திடும் காராளர்
மேவிடும் எம்மூர் மேதினில் மீது
வியப்புற வாழியவே
வாழிய வாழியவே வாழிய வாழியவே...[13]

மூதூரின் முதுபெரும் அறிஞர் இலக்கிய கலாநிதி வ.அ. இராசரெட்ணம் ஓய்வுநிலை அதிபர் அவர்களினால் இயற்றப்பெற்ற பாடசாலைக் கீதத்தில் இங்கு வாழும் மக்கள் காராளர் எனக் குறிப்பிட்டுள்ளார். ***காராளர்*** என்பது ***வேளாளர்*** என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேலும் பள்ளிக்குடியிருப்பின் வழமைகளாக...**

கொம்பு விளையாட்டு - காரைதீவு, பழுகாமம், சித்தாண்டி முதலான இடங்களில் நடைபெறுகின்றது.

**குலவிருது** - மாடுகளுக்கு குறி சுடுதல், குலவிருது, மேழிசுளி கமலமலர் என்பவைகள் கிழக்கிலங்கையின் - காரைத்தீவு, கிரான், வந்தாறுமூலை, சித்தாண்டி போன்ற கிராமங்களில் காணலாம்.

எமதூர் தி/பள்ளிக்குடியிருப்பிலும் மாடுகளுக்கு குறிசுடும்போது குலவிருதான மேழிசுளி - கமலமலர் சுடப்படுகின்றது. இக்கிராமங்களில் வாழும் மக்கள் வேளாளர்கள். இங்கு வாழும் மக்கள் யார் என்பதை இதன்மூலம் உணரலாம்.

**பள்ளிக்குடியிருப்பு பற்றிய மேலும் பல ஆதார ஆவணங்கள், வாய்மொழியுடனான செவிவழியான பல தகவல்கள் உள்ளன. மேற்கூறப்பட்டவைகள் அனைத்தும் நூல்கள் வாயிலான எழுத்தாதாரங்கள் உள்ளவை ஆய்வு முறைமையின் படி அனைத்தும் அடிக்குறிப்பாக இடப்பட்டுள்ளது.**

பள்ளிக்குடியிருப்பு தோப்பூரில் இருந்து 0.5 கிலோமீற்றர் தூரத்திலுள்ள பழம்பெரும் சைவக்கிராமமாகும். ஊரின் தொடக்கத்தில் கிழக்காக **ஐயனார் கோயிலும் (சிவனின் ஒரு அவதாரமே ஐயனார் சிவ வழிபாட்டிலேயே முதல் தொடக்கமாக உள்ளது)**, வடக்காக கொம்பு விளையாட்டு - கொம்புச்சந்தி, மோராண்டார்குள பிள்ளையார், பத்தினியம்மன் கோயில்களும், மேற்காக பிள்ளையார், நாயன்மார்திடல்/வதனமார்திடலும் ஊரின் நடுவே, சோழர் காலத்திற்கு முன் நிர்மாணிக்கப்பட்ட சித்திவிநாயகர் ஆலயமும், திரௌபதையம்மன் வழிபாட்டிடமும் என - ஊரை சுற்றிவர காவல் தெய்வங்களும் அமைந்த பழம்பெரும் கிராமமாக அமைந்துள்ளது.

1957 இன் பெரு வெள்ளப்பெருக்கின் போது பள்ளிக்குடியிருப்பு மக்கள் உயரமான இடத்தில் தஞ்சமடைந்த ஊர் சிறினிவாசபுரம் உருவானது. சிறினிவாசபுரம் எனும் பெயர் அப்போது கொட்டியாபுரப்பற்றின் - மூதூரின் DROவின் (தற்போது இப்பதவி D.S. என்றுள்ளது) பெயர் வைக்கப்பட்டது. இக்கிராமம் உருவாக உதவியாக இருந்தவர்கள் திரு. இராமப்பிள்ளை (இராமக்குட்டியர்), ச. ஆறுமுகம், செல்வராசா, சி. கந்தையா விதானையாளர் - முன்னோடிகளாக இருந்த சிலரின் முயற்சியால் குடியேற்ற கிராமமாக உருவானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970களின் பின்னர் மூடிய பொருளாதாரக் கொள்கையுடைய ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் தங்கபுரம், இத்திக்குளம், சின்னக்குளம் கிராமங்கள் சேனைப் பயிர்ச்செய்கைக்காக உருவாகியவைகள். இக்காலத்திற்கு முன்னரும் சில குடும்பங்கள் மரவட்டைக்குளம், கீராண்டகுள மேற்பகுதியில் குடியமர்ந்து தமது சேனைச் செய்கைகளையும் கால்நடை வளர்ப்பையும் மேற்கொண்டிருந்தனர்.

பள்ளிக்குடியிருப்பு கிராமத்தவர்களே சிறினிவாசபுரம், தங்கபுரம், இத்திக்குளம், சின்னக்குளம், மரவட்டைக்குளம் போன்ற பகுதிகளில் குடியிருப்பவர்கள். இவர்கள் அனைவரும் பள்ளிக்குடியிருப்பாளர்களே.

ஒவ்வொரு கிராமத்திற்கும் உரிய கி.மு. சங்கம் முதலான தனித்தனியான சங்கங்கள் உள்ளன. அவை கிராமங்களின் அபிவிருத்தியிலும் வளர்ச்சியிலும் அக்கறையுடன் செயல்படுகின்றர்.

சித்திவிநாயகர் ஆலயத்தின் திருவிழாக்கள் 10ஐயும் 10 குடியினரும் தமது திருவிழாக்களை சிறப்பாக செயற்படுத்துகின்றர். அதேபோல ஏனைய கொம்பு விளையாட்டு, ஆலயதினம் திதிகள், நாகதம்பிரான் பொங்கல் விழாக்கள், விளையாட்டு கழகங்கள், பாடசாலைகள் அனைத்தும் ஒற்றுமையாக ஒரே ஊர் என்ற நிலைப்பாட்டில் செயற்படுவதும் எதிர்காலத்திலும் அவ்வாறே செயற்படுவர்.

மூதூர் பகுதியில் மிகவும் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டான கிராமமாக செயற்படுகின்றனர்.

பல விடயங்களில் காலம் காலமாக கடைப்பிடிக்கப்படும் விடயங்கள்...

மரணம் ஒன்று நிகழ்ந்தால் - அன்று கோயில் விழாக்களோ, தனியார் விழா நிகழ்வுகள், அரிவி வெட்டுதல், வயல் விதைப்பு நடவடிக்கைகள், வீடு கட்டுதல் முதலான எந்த செயற்பாட்டிலும் யாரும் ஈடுபட மாட்டார்கள். அனைவருக்கும் துக்க தினமாக கடைப்பிடிப்பர்.

வீடு வேய்தல் - ஓலை வீடுகள் இருந்த காலத்தில் அந்த வழியால் செல்பவர்கள் அங்கு சென்று உதவி செய்வார்கள்.

பொதுவானதோ - தனியானதோ - நிகழ்வுகளில் அனைவரும் ஒருவருக்கொருவர் கை கொடுத்துதவும் பழக்கம் இக்கிராமிய வரலாற்றில் முக்கியம் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு கட்டுவதற்கு கம்புதடி வெட்டச்செல்வது, சல்லி ஏற்றச் செல்வது (கல்வீடு கட்டுவதற்கு சுண்ணாம்புக்காக) அதைச்சுடுவது முதலான நிகழ்வுகளில் எல்லோரும் பங்கு கொள்வார்கள். 1960 - 1970களின் முன் கூடுதலானோர் இருப்பின் அவற்றை குறைப்பதற்காக ஒவ்வொரு குடியிலிருந்தும் ஒருவர் இருவருக்கு மட்டும் அழைப்பு என மட்டுப்படுத்தி - உரிய நிகழ்வுகள் நடைபெறும்.

திருமண வீடுகளில், பூப்பு நீராட்டு விழா முதலான விழாக்களிலும் மா இடித்தல், பலகாரம் சுடுதல் போன்றனவும் இவ்வாறே அனைவரும் கை கொடுத்துதவும் பழக்கம் இன்றளவும் நடைமுறையில் உள்ளது. மரண வீடுகளில் இடம்பெறும் பெரும்பாலான வேலைகளில் அனைவரும் ஒத்துழைப்பது 31ம் நாள் வரையும் பலர் மரண வீட்டில் இரவு நேரங்களை கழிப்பதும், வைகுந்த அம்மானைப் பாடல் பாடுவதும் உணவு வழங்குவதும் நடைமுறையில் உள்ளது.

ஒரே மயானத்திலேயே காலமானவர்களின் உடலங்கள் தகனம் - அடக்கம் செய்யும் நிகழ்வு இடம்பெறும் மயானத்தை விட்டு வெளியேறும்போது பிரதான வீதிக்கு வந்ததும் எல்லோரும் அமர்ந்து இருந்து பின் எழுந்து செல்ல வேண்டும். இவை இப்பவும் நடைமுறையில் உள்ளது. முன்னர் இவ்வாறு அமர்ந்திருக்கும்போது முக்கிய அறிவிப்புகள் விடுக்கப்படும். தற்போது இவ் அறிவித்தல்முறை இல்லை அல்லது மிகக்குறைவு). தற்போது தொடர்பாடலுக்கு பல சாதனங்கள் உள்ளமையால் இம்முறை தளர்ந்துள்ளது.

**இக்கிராமத்தின் தொன்மைசார் வரலாற்றியலோடு வாழ்பவர்கள் யார்? இவர்களது பாரம்பரிய ஒற்றுமையான வாழ்வியல் - பண்பாட்டியல் முறைமைகளை ஆதாரபூர்வமாக அறிய முடிகின்றமை பள்ளிக்குடியிருப்பின் வரலாற்றுப் பார்வையின் முக்கிய அம்சங்களாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்குறிப்பு:

1 - திரு. மா. சிவலிங்கம் அவர்களின் 31ம் நாள் நினைவு மலர் (கல்வெட்டு) (2008), ஆ.கனகரெட்ணம், பக் - 1.
2 - தென்திருமலை தேசம் (2008), அ. சதீஸ்குமார், பக் - 136.
3 - கொட்டியாபுரப்பற்று முதுசங்கள் (2016) - பக் - 30.
4 - மேலது பக் - 34
5 - இராவண தேசம் (2017), சி. நவரெத்திணம், பக் - 37
6 - காலணித்துவ திருகோணமலை (2010), கனகசபாபதி சரவணபவன் - பக் - 79 - 81
7 - திருக்கோணேஸ்வரம் - குளக்கோட்டன் திருப்பணிகள் - 623
8 - திருக்கோணேஸ்வரம் - கோணேசர் கல்வெட்டு - பக் - 251
9 - இராவண தேசம் - சி. நவரெத்திணம், பக் - 38
10 - திருகோணமலை மாவட்ட திருத்தலங்கள் - இந்து கலாச்சார திணைக்கள வெளியீடு - பக் - 288
11 - காலணித்துவ திருகோணமலை (2010) , கனக சபாபதி சரவணபவன் - பக் 79 - 81
12 - கொட்டியாபுரப்பற்று வரலாறு (2003) , எம்.ஏ. சமது - பக் - 304
13 - கலைமகள் இந்துக்கல்லூரி - பாடசாலை கீதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உ -

# தி/பள்ளிக்குடியிருப்பின் புவியியல் நோக்கு

புவியியல் எனும் போது தரைத்தோற்றம், மண்வளம், காலநிலை, சனத்தொகை, பொருளாதாரம், புள்ளிவிபரவியல், கலாசாரம் என்பவற்றை உள்ளடக்கியதாகும்.

திருகோணமலைப் பிரதேசமானது குளக்கோட்டன் ஆட்சியில் நான்கு வன்னிமைகளின் ஆட்சிக்குட்பட்டிருந்தது.

1. கொட்டியாபுரப்பற்று
2. தம்பலகாமப்பற்று
3. கட்டுக்குளப்பற்று
4. திருகோணமலைப்பற்று

இதில் கொட்டியாபுரப்பற்றின் எல்லைகளாக

வடக்கே - கொட்டியாரக்குடாவும்

கிழக்கே - வங்காளவிரிகுடா கடலும்

தெற்கே - வெருகல் கங்கையும்

மேற்கே - மகாவலி கங்கையையும் கொண்டுள்ளது.

குளக்கோட்டு மகாராசா திருப்பணிக்காலத்தில் கொட்டியாபுரப்பற்று எனும் பெயரானது உபயோகத்தில் இருந்ததை கி.பி. 14ம் நூற்றாண்டையுடைய கவிராஜ வரோதயரின் கோணேசர் கல்வெட்டுச் சாசனத்தின் மூலம் (குளக்கோட்டன் காலம் கி.மு. 2560 - கி.மு. 2500 வரை) அறியமுடிகின்றது.


கொட்டியாபுரப்பற்று - தற்போதைய - ஈச்சிலம்பற்று, வெருகல், சேருவில, மூதூர் எனும் மூன்று பிரதேச செயலகப்பிரிவை உள்ளடக்கியது.

திருகோணமலை மாவட்டத்தில் காணப்படும் 11 பிரதேச செயலகப் பிரிவுகளில் மூதூரும் ஒன்றாகும். குறித்த பிரதேச செயலக வட எல்லையாக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்குடியிருப்பு கிராம அமைவிடம்




கிராம உத்தியோகத்தர் பிரிவு வரைபடம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டியாரக் குடாவும் மேற்கு எல்லையாக கிண்ணியா பிரதேச செயலக பிரிவும் கிழக்கு எல்லையாக இந்து சமுத்திரமும், தெற்கில் சேருவிலை பிரதேச செயலகமும் அமைந்து காணப்படுகின்றது. மூதூர் பிரதேச செயலகம் 195 சதுர கிலோமீட்டர் கொண்டதாகவும், இந்த பிரதேச செயலகப்பிரிவில் 42 கிராம அலுவலகப் பிரிவுகளும் மொத்தக் கிராமங்கள் 106 உள்ளன. இங்கு மொத்த சனத்தொகை 2017ம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 69,580 ஆகும். மாவட்டத்தில் மூதூர் பிரதேசம் மக்கள் அடர்த்தி அதிகம் கொண்ட செயலகப்பிரிவுகளில் ஒன்றாகும். மக்கள் அடர்த்தி சதுர கிலோமீட்டருக்கு 289 பேராக உள்ளது.

மூதூர் பிரதேச செயலகப் பிரிவில் பள்ளிக்குடியிருப்பு கிராமப் பிரிவும் ஒன்றாகும். இது புவியியல் ரீதியாக முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்றது. இதன் எல்லைகளாக வடக்கே கணேசபுரக் கிராமம், மேற்கே மகாவலியாற்றின் கிளை ஆறும், கிழக்கே பாட்டாளிபுரக் கிராமமும், தெற்கே தோப்பூர் பகுதியையும் எல்லையாகக் கொண்டு இமைந்துள்ளது. பௌதிக நிலைமைகள் என்னும் போது தரைத்தோற்றம், மண், காலநிலை, போன்றவற்றினைப் பிரதானமாகக் கொள்ளலாம். அயன வலயமாகக் காணப்படுவது மட்டுமல்லாது இலங்கையின் உலர்வலயப் பிரதேசமாகவும், அமைந்துள்ளதால் இங்கு அயன வலயத்திற்கான செல்வாக்கினையே அவதானிக்க முடிகிறது. இவ்வாறு காலநிலையில் சிறந்த பௌதிகத் தன்மைக்கான வெளிக்காட்டல்களைக் கொண்டுள்ளது.

தரைத்தோற்றமானது ஆற்றுச் சமவெளிப் பிரதேசமாக காணப்படுகின்றது. குறித்த பகுதி கடல்மட்டத்திலிருந்து, ஏறக்குறைய 13.5 மீற்றர் உயரம் வரை வேறுபடுகின்றது. இப் பிரதேசத்தின் வருடாந்த வெப்பநிலை 32.5 பாகை செல்சியஸ் ஆகக் காணப்படுகின்றது. உயர்ந்த வெப்பநிலையாக 37 பாகை செல்சியஸ், பங்குனி மாதம் தொடக்கம் சித்திரை மாதம் வரைக்கும், மிகக்குறைந்த வெப்பநிலையாக 28 பாகை செல்சியஸ் கார்த்திகை மாதம் தொடக்கம் தை மாதம் வரைக்கும் காணப்படும். குளிர் மாதங்களில் 25° C விட குறைவாகவும் காணப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டத்தின் வருடாந்த மழைவீழ்ச்சியை குறித்த பிரதேசமும் பெறுகின்றது. இது 765 மில்லி மீற்றர் தொடக்கம் 2086 மில்லி மீற்றர் வரை கிடைக்கின்றது. ஆனால் செப்டெம்பர் தொடக்கம் ஜனவரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதங்களில் மழைவீழ்ச்சி அதிகமாக உள்ளது. மழைவீழ்ச்சியின் பெரும்பகுதி வடகீழ் பருவக்காற்றின் மூலம் கிடைக்கின்றது. அத்துடன் சூறாவளி உகைப்பு காலநிலை போன்றவற்றினாலும் மழை கிடைக்கப் பெறுகின்றது.

பள்ளிக்குடியிருப்பு திருகோணமலை நகரத்திலிருந்து தரைவழியாக 38.5 கிலோமீற்றர் தூரத்தில், அமைந்துள்ளது. கிராமத்தினைச் சூழவும் மருத நில சூழல் கொண்ட வயல் வெளிகளாக காட்சி தருகின்றது. செய்கைக் காலங்களில் பச்சை வயல் கிராமத்திற்கு மிகுந்த இரம்மியமான சூழலாக அழகைத் தருகின்றது. அல்லை விஸ்தீரண திட்டத்தின் கீழ் மாகாவலி நதியின் சிறு கிளை நதியினை திசைதிருப்பி தங்கள் விவசாய நடவடிக்கைக்கான நீர் வளத்தினைப் பெற்றுக்கொள்கின்றனர்.

அத்துடன் கீராண்டகுளம், மரவெட்டைக்குளம், இத்திக்குளம், நரியந்தைக்குளம் போன்ற குளங்களில் மழைகாலங்களில் சேகரிக்கப்படும். நீரினைப்பயன்படுத்தி பெரும் போகச் செய்கைகளிலும் தோட்டச் செய்கைகளிலும் ஈடுபடுகின்றனர். பிரம்புவெளிப்பகுதி இவர்களின் பொருளாதார நடவடிக்கைகளுக்கான முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக காணப்படுகின்றது. குறித்த நிலப்பகுதி இங்கு வாழும் மக்களின் பொருளாதாரத்தை மட்டுமல்ல அயல் கிராமங்களாகிய கட்டைபறிச்சான், சேனையூர் மக்களின் ஜீவனோபாய பகுதிகளாயும் பொருளாதாரப் பகுதியாகவும் பள்ளிக்குடியிருப்பு கிராமம் புவியியல் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இங்குள்ள மக்கள் மிகுந்த உழைப்பு மிக்கவர்களாக உள்ளனர். முப்பது வருட கால யுத்தத்தில் பாதிக்கப்பட்டிருந்த போதிலும் மீள்குடியேற்றங்களின் பிற்பாடு அரச உதவிகள் கிடைக்கப்பெறாது இருந்த காலங்களிலும் தங்களின் பொருளாதாரத்தினை நலிவடையாது பாதுகாத்திட இங்குள்ள புவியில் சூழல் பெரிதும் பங்காற்றுகின்றது.

பசு, எருமை, ஆடு என்பன வருமான மூலங்களாக வளர்க்கப்படுகின்றன. இந்த நடவடிக்கைகளுக்கு இங்கு காணப்படும். புவியியல் சார்ந்த சாதகமான தன்மைகள் வாய்ப்பளிக்கின்றன.

இங்கு வாழும் மக்களின் தொழிலாக முதன் நிலைத் தொழிலாக, விவசாயம், விலங்கு வேளாண்மை நடவடிக்கைகளும் காணப்படுகின்றது. ஆனால் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் கிராமப் பிரிவில் காணப்படும் குடிசனப் பரம்பல் அடிப்படையில் பார்க்கும் போது அதிக அரச தொழில் புரிபவர்களாகவும், கல்வியறிவில் மேம்பட்டவர்களாகவும் கிராம மக்கள் உள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் கலாச்சாரப் பண்பாடுகளைப் பார்க்கும் போது ஒற்றுமைத் தன்மை கொண்டவர்களாகவும், சிறந்த விருந்தோம்பல் பண்பு கொண்டவர்களாகவும், மக்கள் கூட்டமாக வாழும் சைவத்தமிழ் மரபு கொண்டவர்களாக பள்ளிக்குடியிருப்பு கிராம மக்கள் விளங்குகின்றார்கள். மரபு வழிக்கலைகள், கிராமிய வழிபாட்டு முறைகள், பாரம்பரியமான விளையாட்டு முறைகள் என்பன இங்கு பின்பற்றுகிறார்கள். இங்குள்ள மக்கள் சூழல் நேயமிக்கவர்களாகவும் உள்ளார்கள்.

பள்ளிக்குடியிருப்பு கிராமத்தின் புவியியல் பின்னணி என்று பார்க்கும் போது இக்கிராமம் வடஅகலக் கோடுகள், 8° 25.36" - 8° 26.36" வரைக்கும் நெடுங்கோடுகள், 81° 19.16" - 81° 25.15" வரைக்கும் இடைப்பட்ட பகுதியில் 10.01 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டு அமைந்துள்ளது. இதில் விவசாய நடவடிக்கைகளுக்காக 1275 ஏக்கர் நிலம் பயன்படுத்தப்படுகின்றது. இக் கிராமப்பிரிவில் தங்கபுரம், சின்னக்குளம், இத்திக்குளம், சிறினிவாசபுரம் போன்றதரைவழித் தொடர்பிலான கிராமங்கள் இணைந்ததே பள்ளிக்குடியிருப்பு கிராமப்பிரிவாகும்.

இங்கு வாழும் மக்களின் பொருளாதாரத்தின் தன்மைகளை மேம்படுத்துவதில் இப் பிரதேசத்தின் மண்வளம் பங்காற்றுகின்றது. பிரம்புவெளி என்பது பள்ளிக்குடியிருப்பின் முக்கிய பொருளாதார நிலப்பயன்பாட்டு இடமாகும். களி செறிந்த வண்டல் மண் கொண்ட பகுதியாக கிராமத்தினைச் சூழ பரந்து காணப்படுகின்றது. இங்குள்ள மண் வகையானது இரண்டு பகுதியாக பங்களிப்புச் செய்கின்றது. வண்டல் மண் செறிந்த பகுதிகளில் செறிவான வேளாண்மைச் செய்கையை மேற்கொள்கின்றனர். இங்குள்ள நிலங்களில் அதிக விளைச்சல் காணப்படுகின்றது. ஒரு ஏக்கருக்கான உச்ச விளைச்சலாக 130 புசல்களாக (35 - 50 Bags பைகளாக) இருக்கின்றது. பிரம்புவெளிப் பகுதியில் மொத்தமாக 425 ஏக்கர் செய்கை பண்ணப்படுகின்றது.

பெரும்போகச் செய்கை அல்லது குளத்துப்பாச்சலில் 850 ஏக்கர் நிலம் செய்கைக்குட்படுத்தப் படுகின்றது. இங்கும் கணிசமான விளைச்சல் கிடைக்கின்றது. குறிப்பாக கிரான்டகுளத்தில் 195 ஏக்கரும் மரவன்வெட்டைக்குளத்தில் 165 ஏக்கரும் இத்திக்குளத்தில் 65 ஏக்கரும் நெற் செய்கைக்கு உட்படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை மாவட்டத்தின் மொத்த நெல் உற்பத்தியில் 21500 ஹெக்டேயர் நிலம் நெற் செய்கைக்கு உட்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 144171 மெற்றிக் தொன் நெல் விளைவிக்கப்படுகின்றது. இந்த விளைச்சலுக்கு மூதூர் பகுதியில் அதிகமான பங்கினை பள்ளிக்குடியிருப்பின் நிலப் பயன்பாடும் பங்காற்றுகின்றது.

பள்ளிக்குடியிருப்பு பகுதியில் ஆண்டுக்கான சராசரி நெல் உற்பத்தியாக 3558.75 மெற்றிக் தொன் பெறப்படுகின்றது.

அத்துடன் பள்ளிக்குடியிருப்பு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குள் காணப்படும். சின்னக்குளம், இத்திக்குளம், தங்கபுரம் போன்ற கிராமங்களில் காணப்படும் மண் வளமானது உப உணவுப் பயிரிச் செய்கைக்கான தன்மை கொண்ட செங்கபில நிற மண் பரந்து காணப்படுகின்றது. இதனால் இங்குள்ள மக்கள் போகச் செய்கைக்கு இடைப்பட்ட காலங்களில் செறிவான உப உணவுப் பயிர்ச் செய்கையினை மேற் கொள்கின்றனர். குறிப்பாக சோளம், மரவள்ளி, நிலக்கடலை, மிளகாய் போன்ற பயிர்களை செய்கை பண்ணுகின்றனர். இதனால் தங்களது உணவுத் தேவைகளை தாங்களே உற்பத்தி செய்வது மட்டுமல்லாது வேறுபகுதிகளுக்கு தங்களின் உற்பத்தியினை வழங்கக் கூடியவர்களாகவும் காணப்படுகின்றார்கள். இங்குள்ள வளத்தினை கொண்டு தற்சார்பு முறையிலான பொருளாதார வலிமைமிக்க மக்களாகவும் வளர்ந்து வருகின்றனர்.

எதிர்காலத்தில் மேலும் நவீன விஞ்ஞான முறையுடனான விவசாயமும் - வீட்டுத் தோட்டங்களும் செய்கை பண்ணப்பட வேண்டும். சேனைப் பயிர்ச்செய்கையோடு பல்லாண்டுப் பயிர்களும் - தோடை, எலுமிச்சை, முருங்கை முதலான பல பயன்மிக்க பயிர்செய்கைக்காக ஊக்குவிக்கப்பட வேண்டும். இவற்றை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில் பேட்டைகளும் அமைக்கப்பெற்று தொழில்வாய்ப்பும், சுய பொருளாதார மேம்பாடும் ஏற்படுத்தப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– ३ –

# பொருளியல் பார்வை

## – விவசாயம் –

விவசாயம் என்பது பயிர்ச்செய்கையும் விலங்கு வளர்ப்புமாகும். இங்கு பயிர்ச்செய்கையில் நெல் பிரதானமாகவும் ஏனைய மேட்டு நில பயிர் வகைகளாக தானியப் பயிர்களும், கிழங்கு வகை, மரக்கறிப் பயிர்கள் முதலானவற்றைக் குறிக்கும்.

பரம்பரையான பழம்பெரும் விவசாயக் கிராமமான பள்ளிக்குடியிருப்பின் முற்கால விவசாய செய்கை முறைகள், இன்றைய நவீன முறைவரை ஏற்பட்ட மாற்றங்கள், சில சம்பிரதாயங்கள் மரபுகள் பற்றிய வரலாற்றை புதிய தலைமுறையருக்கும் எதிர்காலத்தோர்க்கும் ஏனையோருக்கும் விளக்கமளிப்பதே நோக்காகும்.

இங்குள்ள மக்களின் பரம்பரைத் தொழிலான விவசாயத்தை மகாவலி கங்கையின் நீர்வளங்கள் கிராமத்தைச் சூழவுள்ள பிரம்புவெளி வயல்நிலங்கள் செய்கை பண்ணப்படுகின்றது. பிரம்புவெளி என்பது பிரம்பின் அளவு ஒவ்வொரு வேளாண்மையும் செழிப்பாக வளர்வதால் "பிரம்புவெளி" என்ற காரணப்பெயரானது. மகாவலி கங்கை அல்லைக்குளமூடாக இவ் வயல்வெளிகளுக்கு நீர்பாசனம் நடைபெறுகிறது. இதனூடாகவே ஓலுக்குளி, சந்தணவெட்டை எனும் வயல்வெளிகளுக்கும் நீர்ப்பாசனம் நடைபெறுகின்றது.

தி/பள்ளிக்குடியிருப்பின் தெற்கு, மேற்கு, வடக்கு பகுதிகளில் பிரம்புவெளி - கிழக்குப் பிரதேசம் மானாவாரி நெற்செய்கை நீர்பாசன வயல்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீராண்டகுளம், மரவட்டைக்குளம், இத்திக்குளம், சின்னக்குளம், நரியத்தைக் குளம் போன்ற குளங்களில் மழைகாலத்தில் நீர் தேக்கி வைக்கப்பட்டு நெற்செய்கை இடம்பெறுகின்றது. மாரிகால போகத்தில் கூடுதலான வயல்களும் சிறுபோகத்தில் குறைந்தளவான அரைவாசியான வயல்கள் செய்கை பண்ணப்படுகின்றது. சிறப்பான விளைச்சலையும் பெறுகின்றனர்.

மழையை நம்பி நெற்செய்கை பண்ணப்படும் பிரதேசமாக கீராண்டகுள மேற்சேன மரவட்டைக்குள மேற்சேனை, இத்திக்குள, சின்னக்குள, தங்கபுரப் பகுதிகளில் பல ஏக்கர்கள் செய்கை பண்ணப்படுகின்றது.

ஊரின் நாலாபுறமும் நெற்செய்கையே கிராம ஆரம்பகாலம் முதல் செய்கை பண்ணப்பட்டு மக்கள் வளமுடன் வாழ்கின்றனர்.

சேனைப் பயிர்ச்செய்கையிலும் ஈடுபட்டுவந்தமைக்கான வரலாறுகள் உள்ளன. சிறினிவாசபுரத்தில் 1950 களின் பின்பும் மரவட்டைக்குள மேற்பகுதிகளிலும் இடம்பெற்றிருக்கிறது.

1970களின் பின்பே சேனைப் பயிர்ச்செய்கை வேகமாக இடம்பெற்றது. இக்காலத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமாராகவிருந்த வேளையில் என்.எம். பெரேரா நிதியமைச்சராக இருந்த வேளை உள்நாட்டு உற்பத்திகளைப் பெருக்குவதற்காக வெளிநாட்டு உணவுப் பொருட்கள் இறக்குமதியை நிறுத்தி மூடிய பொருளாதாரக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. இதனால் சோளம், மரவள்ளி மற்றும் சிறுதானியப் பயிர்களும் உற்பத்தியில் ஈடுபட்டனர். விவசாய விரிவாக்க கமநல சேவை நிலையங்களும் செயற்பட்டது.

இக்காலத்திலேயே தங்கபுரம், இத்திக்குளம், சின்னக்குளம் முதலான இடங்களில் சேனைப் பயிர்ச்செய்கையும் ஆரம்பிக்கப்பட்டு தொடரந்து இக்கிராமங்களும் உருவாயின.

விவசாய - நெற்செய்கை முறைகளில் காலமாற்றங்களின் பிரதிபலிப்பு-களையும் அறிய முடியும். எம்மூரவர்களுக்கு பூமால வெட்டு, பெரியவெளி, மதவன்பட்டி, இறையாத்துவெளி, சக்கர வெட்டை, மல்லிகைத்தீவு, ஒட்டு நீலாப்பனை முதலான இடங்களிலும் வேளாண்மை செய்கையில் ஈடுபட்ட போடிமார்கள் இருந்தார்கள். வதனப் போடியார் திரு. கதிர்காமத்தம்பி, சி.தம்பாப்பிள்ளை, ச. ஆறுமுகம், க.தம்பிப்பிள்ளை, ப. கணபதிப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அரிச்சந்திரர்), ப. முத்துக்குமார் போன்ற பலர் கூடுதலான வயல்களைச் செய்பவர்கள்.

**இவ்வயல்கள் மாடுகள் மூலமே பண்படுத்தல் இடம்பெறும். நீர்ப்பாசன வயல்களில் சேற்றுநிலங்களில் விவசாயம் – நெற்செய்கை பண்ணப்படும் பழைய முறைகளை குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும் என்பதால்...**

- முதலாவது **பெருமிதி அடிப்பு** இடம்பெறும். இரு மாடுகள் பிணைக்கப்படும் - 3 சோடிகள் ஒரு தொடுவை என்றும் இவ்வாறு 3, 4, 5 தொடுவை மாடுகளை பயன்படுத்தி வயலடிக்கப்படும்.
- இரண்டாவது **இரட்டிப்பு** - முதலாவது அடிப்பின் நிலம் இளகி இருக்கும். அதே போல மாடுகள் மூலம் அடிக்கப்படும். தொடர்ந்து வரம்புகள் கட்டப்படும்.
- மூன்றாவது **உழக்குதல்** - மாடுகளால் உழக்கப்படும். தொடர்ந்து பலகைப் புணையலால் பலகையடிக்கப்படும். (சமப்படுத்தல் - மட்டப்படுத்தல்)
- விதைப்பு - நீர் வடிவதற்காக அழைபோட்டு காலாவி - விதைப்பு இடம்பெறும்.
- விதைத்து 4-5ம் நாளின் 1வது விடப்படும் தண்ணீரை **கங்களவு** கட்டுதல் எனப்படும்.


இவ்வேலைகளை போடிமாருடன் **வாரக்காரர்கள்** என இருப்பார்கள். இவர்களே இவ்வேலைகளை செய்வார்கள். இவர்களுக்கு அருவி வெட்டி சூடடித்ததும் நெல்லே கூலியாக வழங்கப்படும். (கூடுதலாக சுமார் 5 ஏக்கருக்கு மேல் செய்வோர் இவ்வாறு செய்வர்)

இங்கு பாவிக்கப்படும் உபகரணங்கள் - மண்வெட்டி, மாடடிக்கும் கேட்டி, பலகைக்கேட்டி, பலகை, விதைப்பதற்கு குட்டான்.

அப்போது விதைக்கப்படும் நெல்லுகளாக, சீனட்டி, பனங்களி பொன்னி, கறுப்பு சீனட்டி, பறவகல எச்போர் (H4) மூன்றரை மாதங்கள் தொடக்கம் ஐந்து மாத காலமுடைய நெல்லினங்கள். நீர் பாய்ச்சி, களை பிடுங்கி பராமரிப்பர், 1960களுக்கு முன்பு உரம், களைநாசினி, பூச்சிநாசினிகள் மிகவும் குறைவு. நெல்மூட்டுப் பூச்சிக்கு சாமிக்கு நேர்த்தி வைத்து தீர்த்தம் தெளிப்பர். பின்னர் படிப்படியாக நவீன விவசாய முறைமை வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வயல் உழுதல்



மாட்டினால் சேற்றுவயல் பண்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரிவி வெட்டுதல் - சூடடித்தல்

வேளாண்மை விளைந்ததும் வேளாண்மை வெட்டுவதற்கு சுமார் 20 அல்லது 25 பேர்கள் கொண்ட வேளாண்மை வெட்டும் பாட்டியினர் வெட்டுவர். இதற்கு ஒரு தலைவர் இருப்பார். இவர் இவ்வேலைகளில் தேர்ச்சி பெற்றவராக சிறப்பாக செய்யக்கூடியவராக இருப்பார். இங்கு தலைமைத்துவம் சிறப்பாக இருக்கும். தலைவர் முன்மாதிரியாக செயற்படுவார். நேரத்திற்கு சமூகமளித்தல், தான் தொடக்கி வைத்தல், அனைவரையும் உற்சாகப்படுத்தி ஊக்கப்படுத்தி, கட்டுப்படுத்தி வேலைகளை சிறப்பாக நிறைவேற்றும் தலைவராக அந்த குழுவில் (பாட்டியினர்) இருப்பர்.



அரிவி வெட்டுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சூடு வைப்பதற்கு கட்டுத் தூக்குதல்



மாட்டினால் சூடு மிதித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொலி தூத்துதல்



இன்றைய அறுவடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயல் அறுவடையின் போது கிராமத்தின் குடியானவர்களுக்கு கட்டு கொடுப்பதைவழக்கமாககொள்ளப்பட்டது. கட்டாடி, பாபர், பறயன், துறைக்காறன், கண்ணுவாப்பு துறை மூதூருக்கு போகும்போது வள்ளம் அல்லது பாதையால் ஆற்றைக் கடக்க உதவுபவர்கள். நீண்ட காலமாக இம்முறை நிலவியது. சுமார் 1975ன் பின் படிப்படியாக குறைவடந்தது தற்போது இல்லை.

அரிவி வெட்டும்போது அரிவிவெட்டுப் பாடல் பாடுவார்கள் - ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிராது" என்பதற்கு ஒப்பாக அமையும். இவர்களுக்கு கூலியாக கட்டு வளங்கப்பட்டது உதாரணமாக 100 கட்டு கட்டினால் 10 கட்டுகூலி (இது படிப்படியாக காசுக்கு மாறப்பட்டது)

*அரிவி வெட்டிப்போடுவது **உப்பட்டி** என்றும் பல உட்பட்டிகள் சேர்த்து **மாவக்கை** என்றும் 8 மாவக்கை **1 கட்டாக** கட்டப்படும். பின்னர் இக்கட்டுகளை எல்லாம் எடுத்து வயலிலுள்ள திடலில் களம் செருக்கி சூடு வைக்கப்படும். அவ்விடம் **சூட்டுக்களம்** என அழைக்கப்படும்.*

பின்னர் நாள் பார்த்து சூடடிப்பு இடம்பெறும். சூட்டுக்களம் வைக்கோல் புரியால் சுற்றிவர கட்டி வேப்பம் கொத்துக்கள் இப்புரியில் சொருகப்படும். சூடப்புக்கு முதல் வேலையாக சூட்டின் மேல் தேங்காய் உடைக்கப்படும். பின்னர் சூட்டில் கதிர்கள் பிடுங்கி சூட்டுக்களத்தின் உட்பகுதியில் வேலைக்காரன் கம்பு, போலத்து முதலான உபகரணங்ளை வைத்து, மடை வைத்து, கற்பூரம் கொழுத்தி வணங்கிய பின்பே ஆரம்பமாகும். இதுவும் மாட்டினாலேயே அடிப்பர். சூட்டிலிருந்து கதிர்கள் களத்தில் **நிறுத்தப்படும்**. அதன்மேல் பெரும்பாலும் 2 அல்லது 3 தொடுவை மாடுகள் வளைக்கப்படும். மேற்பகுதி அடிபட்டதும் வேலைக்காரன் கம்பால் வேலையாள்கள் மூலம் **பறித்தல்** இடம்பெறும் பின் மாடு வளைக்கப்படும். மாடு வளைக்கும்போது பொலிப்பாடல்கள் பாடி மாடுவளைப்பார்கள். இவ்வேளயில் மாடு சாணி போடும் இதை **போல்** என்பர். இதை உடனே **மிரிஞ்சான்** (வைகோலால்) பிடித்து வெளியே போட வேண்டும். மாடு வளைத்து முடிந்ததும். வேலையாளால் மிரிஞ்சானை (வைக்கோலை) வாட்டுவார்கள். இது மாட்டின் சாப்பாட்டிற்கு **கூழைக்கத்தை** என்றும் ஓலை வீடு வேய்வதற்கு **வீட்டுக்கத்தை** என பிறிம்பாக கட்டப்படும். சூடு அடித்து முடிந்ததும் மிரிஞ்சான் எல்லாம் வாட்டியதும் களத்தின் நடுவில் பொலியை வட்டமாக பரவலாக குவித்து அதைச் சுற்றி புரியால் காவலுக்காக சுற்றிவளைத்து போடப்படும். மறுநாள் பிற்பகல் காற்று எழுந்ததும் **பொலி** தூற்றப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டால் சூடடிக்கும் முறை பின்னர் உழவு இயந்திரத்தால் அதன் சில்லுகளினால் அடிக்கப்பட்டது. இதனால் மாடுகளின் வேலை முடிவுக்கு படிப்படியாக மாறியது.

இச்சூடடிப்பு வேளையில் களத்திலேயே பெரும்பாலும் சமையலும் இடம்பெறும். காலையில் அப்பம், தொதல் முதலான சாப்பாடுகளை களத்திற்கு வைப்பார்கள் (கொடுப்பார்கள்). இவற்றுக்கெல்லாம் நெல் வழங்கப்படும்.

சுமார் 5 ஏக்கர் வயல் எனில் 10 நாட்கள் சூடப்புக்காக காலம் செலவிடப்படும்.

நெல்லையும் பெரும்பாலும் வீடுகளில் **கொட்டில்** வைப்பார்கள். வீட்டில் ஒரு அறையில் ஓரங்களில் வரிச்சிக் கம்பினால் 6 அங்குல இடைவெளியில் நெருக்கமாக கட்டி அதனிடையே வைக்கோல் சொருகி நெல் வெளியேறாதமாதிரி அமைக்கப்பட்டு அதனுள் நெல்சேமித்து வைக்கப்படும். தேவைக்கு நெல் எடுக்கப்படும். வீடுகளில் எப்போதும் நெல் இருக்கும் வேறு பல தேவைகள் அப்போது இருக்கவில்லை. தன்னிறைவுப் பொருளாதாரத்துடன் இக்கிராம மக்கள் வாழ்ந்தார்கள்.

## வாழ்வியல் முறை.

அக்கால விவசாய நடவடிக்கைகளும், மக்களின் வாழ்வாதார நடவடிக்கைகளையும் நோக்கும்போது வாழ்வு தன்னிறைவுப் பொருளாதார முறைமை மாட்டுப்பட்டி - பால், தயிர், நெய், நெல், அரிசி, தானியங்கள் நிறைவாகக் காணப்பட்டன. சிலவேளைகளில் மழைவீழ்ச்சியின் குறைவு வரட்சி காரணமாக மாறான நிலமைகளும் ஏற்பட்டிருக்கின்றது.

***கோயில் திருவிழாக்கள், சிறுதெய்வ வழிபாடுகள் - குறிப்பாக வன்னித்தம்பிரான், நாயன்மார் மடை, அம்மன் குளிர்த்தி, கரையல் கொடுத்தல், ஐயனார் வேள்வி, கொம்பு விளையாட்டு போன்ற வழிபாட்டு நிகழ்வுகளிலும் மகிழ்வாக பக்திபூர்வமாக ஈடுபட்டுள்ளனர்.***

வெருகல், மகாவலி கங்கைத் தீர்த்தக்கரை, பக்திப்படங்களுக்கு கூடார வண்டில்களில் சென்ற காட்சிகள் இரம்மியமானது.

இன்று விவசாய நடவடிக்கைகளில் மனித வலு மிகக் குறைவாகவே பயன்படுத்தப்படுகின்றது. வயல் வேலைகளுக்கு மாடுகள் பயன்படுத்தப்படுவதில்லை. அரிவி வெட்டுதல் நிகழ்வுகளும் மிகக் குறுகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தில் நடைபெறும். உதாரணமாக 5 ஏக்கர் அருவி வெட்டி சூடடடிப்புக்கு 10 நாட்கள் தேவைப்பட்டது. 5 ஏக்கருக்கும் 10 மணி நேரம் போதுமானது. நேரம் மிக குறைவாக பயன்படுவது சிறப்பானது.

அறுவடை செய்யப்பட்ட நெல் பெரும்பாலும் பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கே விற்பனை செய்ய வேண்டும். உத்தரவாத விலையும் இருந்தது. தற்போது நெல் விற்பனை செய்வதும் மிக இலகு வியாபாரிகள் லொறிகளுடன் வயல்களுக்கே வந்து உடன் பணம் செலுத்தி பெற்றுக்கொள்வர். சிலர் நெல்லை காயவைத்து சேமித்து கூடுதலான விலைக்கும் விற்பர். கால மாற்றம் மக்கள் தேவைகள் அதிகரிப்பு அனைத்தும் நவீனத்துவத்தை நோக்கியதாக மாற்றமடைந்துள்ளது. **மாற்றமொன்றே மாறாதது**. மேலும் பல மாற்றங்கள் ஏற்படலாம்.

**சூடடிப்பு நிகழும்பொது பாவிக்கப்பட்ட சொற்களும் விளக்கமும்.**

» அரிவி வெட்டுதல் - வேளாண்மை வெட்டுதல் - முற்றிய கதிர்களை அறுவடை செய்தல்.

» சூடு - நெற்கதிர்கள் உப்பட்டி, மாவக்கை, கட்டு இவற்றினால் வைக்கப்படுவது சூடு (சுமார் 100 கட்டு - 1 சூடு) - இடத்திற்கு ஏற்ப வேறுபடும்.

» வேலைக்காரன் கம்பு - சூடடிக்கும்போது மிரிஞ்சான் வைக்கோல் - பொலியை வேறாக்க உதவுவது.

» புரி - வைக்கோலால் கயிறு மாதிரி செய்யப்படுவது.

» மாட்டால் சூடடிக்கும் போது
  - பிணையல் - இரு மாடுகள் சோடியாக கட்டப்படுவது.
  - தொடுவை - 3 பிணையல்கள்.

» தாக்கத்தி - அரிவி வெட்டப்பயன்படும் கத்தி.

» வைக்கோலை - மிரிஞ்சான்.

» நெல் - பொலி.

» நெல் அள்ளும் பாத்திரம் - பெருவாயன்/குட்டான்

» களம் - சூடு வைத்து சூடடிக்கும் இடம்.

» அவுரி - பொலி தூற்றுவதற்கான முக்காலி உயரம்.

» போலத்து - களம் கூட்டுவது (பன்னை குளைகளால் கட்டப்படுவது)

» பொலி தூற்றும்போது பின்பக்கம் செல்வது - கள்ளன் பதக்கடை

» வைரமான நெல்லை - நல்ல பொலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

» நெல் அளக்கப் பாவிப்பது - நாளி -

| | | |
|---|---|---|
| 20 நாளி | - | 1 சாக்கு |
| 6 சாக்கு | - | 1 அவணம் |
| 9 நாளி | - | 1 புசல் |
| 3 புசல் | - | 1 மூடை |

» கொட்டு என்பது வீட்டில் ஒரு அறையில் நெல் சேமிப்பதற்காக வைக்கோலால் வரிச்சுக்கம்புகளால் கட்டி நெல்வெளியே போகாமால் பாதுகபாப்பாக வைப்பது.

புதிய தலைமுறையினருக்கும் இனிவரும் தலைமுறையினருக்கும் விவசாய செயற்பாட்டில் நடைமுறையிலிருந்த பொருட்களின் பெயர்கள் - சொற்கள் முதலானவற்றை அறிந்து கொள்வதற்காக குறிப்பிடப்படுகின்றது.

### *விவசாய நடவடிக்கைகளில்*

***நெல்லின் விலை***

| | |
|---|---|
| 1940இற்கு முன்னர் | 1 சாக்கு நெல் - 2/- ரூபாய் |
| 1975க்கு முன்னர் | 1 சாக்கு நெல் - 20/- ரூபாய் |
| | 1 மூடை நெல் - 27/- - 30/- ரூபாய் |

***நாள் கூலி***

| | |
|---|---|
| 1945க்கு முன்னர் | பெரியவர்களுக்கு 50 சதம் |
| | சிறியவர்களுக்கு (10 - 12 வயது) 25 சதம் |
| 1975க்கு முன்னர் | பெரியவர்களுக்கு 5/- ரூபாய் |
| | சிறியவர்களுக்கு (10 - 12 வயது) 4/- ரூபாய் |

***வயற்காணி***

1968 - 70 களில் 1 ஏக்கர் குளத்து நீர் பாயும் காணி 500/- ரூபாய்

(தகவல்: திரு. க. நாகராசா அவர்கள் 2 பவுன் காப்பு 3000/- ரூபாய்க்கு விற்று 6 ஏக்கர் கணன்காட்டு வயல் வாங்கியதாகக் கூறினார். அப்பொழுது ஒரு பவுண் 1500/- ரூபாய்)

☛ 1872 இல் இலங்கையில் ரூபா சதம் அறிமுகப்படுத்தப்பட்டது.[1]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடும் பாவிப் பாடல்

*கோடை மழை பெய்யாதோ*
*கொடும்பாவி சாவாதோ*
*நல்ல மழை பெய்யாதோ*
*நாடு செழிக்காதோ*
*கெழட்டுப் புளியை எல்லாம்*
*கெட்டு விட்டுத் தளைக்குதாம்*
*கண்டுப் புளியை எல்லாம்*
*கால் மாறிக் காய்க்குதாம்*

*ஆற்றமறித்து நானும்*
*அழகுசம்பா நெல் விதைத்தேன்*
*ஆறு வற்ற வற்ற என்*
*அழகு சம்பா வாடுதடி*
*குளத்தை மறித்து நான்*
*குருவிச் சம்பா நெல் விதைத்தேன்*
*குளமும் வற்ற வற்ற என்*
*குருவிச் சம்பா சாவுதடி...*

மழையின்றி வேளாண்மைகள் வாடுகின்ற நாட்களில் வைக்கோலால் மனித உருவமாகக் கட்டி அதன் வயிற்றுப் பகுதியில் மண் சட்டியில் நெருப்பை பற்ற வைத்து ஊர் வீதிகளில் இழுக்கும்பொது இவ்வாறான கொடும்பாவிப்பாடல் பாடி இழுப்பர். சமூக நீதிக்கு புறம்பான அநியாயங்கள் நடைபெறுவதால் தான் மழை பெய்யவில்லை நல்லாட்சி நடைபெற்றால் நல்ல மழை பெய்யும் எனும் கருத்துப்பட ஒப்பாரியில் கூறியே சந்திகளில் ஒப்பாரி வைத்து இக்கொடும்பாவியைச் சுற்றி வட்டமாக மாரடித்து ஓலமிடுவர்.

கொடும்பாவி மூன்று நாட்கள் இழுத்து ஓரிரு நாட்களில் மழை பெய்யும். இவ்வாறு நடைபெற்றுள்ளது.

தற்காலத்தில் இவை நடைமுறையில் இல்லை. வானிலை அறிக்கையை அவதானிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிப்பாடல்

முந்தி விநாயகரே முக்கணனார் தன்மகனே
கந்தருக்கு முன்பிறந்த கணபதியே முன்னடவா
ஓகோகோ, ஓகோகோ...

வேப்பையடி பிள்ளையாரே
விக்கினரே முன்னடவா ஓகோகோ, ஓகோகோ...
சாந்தால் தரை மெழுகி
சந்தனத்தால் கோலமிட்டு ஓகோகோ, ஓகோகோ...
வட்டக் களம் செருக்கி
வாரியுள்ள சூடேற்றி ஓகோகோ, ஓகோகோ...
போல் போட பொலிவளர ஓகோகோ, ஓகோகோ...
ஆடி அசைந்து நட என் செல்லரசி கண்டே
தள்ளாடி மெல்ல நட ஓகோகோ, ஓகோகோ...
வரம்போ தலையணையாம்
வாய்க்காலோ பஞ்சு மெத்தை ஓகோகோ, ஓகோகோ...
புல்லோ தலையணையாம்
புற்பாயாம் உனக்கு பஞ்சு மெத்தை ஓகோகோ, ஓகோகோ...
ஓடி நடவும் ஐயா பொலியரசே - உன்
உறுதியுள்ள காலாலே ஓகோகோ, ஓகோகோ...
தொட்டிலுமோ பொன்னால - உனக்கு
தொடுகயிறோ முத்தால ஓகோகோ, ஓகோகோ...
பொன்னவரி மேலிருந்து - கந்தர்
பொலியழகும் பார்ப்பாராம் ஓகோகோ, ஓகோகோ...
சாய்ந்து சரிந்து நட - தள்ளாடி மெல்ல நட
இந்த நடை நடந்தா என் செல்லரசி கண்டே
நாளை இன்னேரம் செல்லுமடா... ஓகோகோ, ஓகோகோ...
வெள்ளி விளக்கு எரிய என் பொலிமாதாவே தாயே
விளையாடி வா பொலிமாதாவே... ஓகோகோ, ஓகோகோ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டினால் (வாரிக்காலன்) சூடடிக்கும் போது சூட்டிலிருந்து களத்தினுள் நிறுத்தப்பட்ட நெற்கதிர்களின் மேல் மாடுகளினால் சூடடிக்கும்பொது மாடுகளை ஓசையுடன் கொரக்காட்டி (பாடி) மாடுவளைக்கும் போது பாடப்படும் பாடல். இப்பாடல்களை மிகவும் ஓசை நயத்துடன் பாடுவார்கள். அதற்கேற்ப மாடுகளும் இசைந்து நடக்கும். இரவு நிலாக்காலங்களில் பெரும் பாலும் இடம்பெறும் ஒருவகை பக்திபூர்வமான மகிழ்வான செயற்பாடாகவும் அமையும்.

**எமதூரில் பாடப்பட்ட நாட்டார் பாடல்களில் சில.**

## நாட்டார் பாடல்

*வெற்றிலையை கைபிடித்து*
*வெறும் பிளைகை வாயில் இட்டு*
*சுண்ணாம்பு தேடி மச்சான்*
*சுற்றி வரப் போறீங்க*

*ஓடையில போற தண்ணீர்*
*தும்பு விழும் தூசி விழும்*
*வீட்டுக்கு வாங்க மச்சான்*
*நல்ல தண்ணி நான் தாறன்*

*காவல் குடிசையிலே நான்*
*கண்ணுறங்கும் வேளையிலே என்*
*கண்ணான மச்சி வந்து*
*கால் ஊன்ற கனவு கண்டேன்*

*கல்லால வீடு கட்டி கதவு போட்டாயானால்*
*மோட்டால் ஏறிவந்து உன் முகத்தழகை நான் பார்ப்பேன்*

*வாழைப் பழமே என் வலது கை சக்கரையே*
*ஏலம் கராம்பெ உன்னை என்ன சொல்லி கூப்பிட*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கட்டிக்கறந்த நாகு கனுவடியில் நின்ற நாகு*
*தட்டிச் சொறிந்த நாகு இப்ப தலை கிழப்பி பார்க்கிதில்ல*

*ஏற்றால வேளாமை இளம் குடலை காய்ப்பருவம்*
*மாட்டால் அழிந்த தென்று மன்னரிடம் சொல்லிடுங்க.*

முற்காலத்தில் விவசாயிகள் ஓய்வு காலங்களிலும் நிலாக்காலங்களிலும் நாட்டார் பாடல்களை ஓசை நயத்துடன் பாடும் பலர் இருந்தனர். குறிப்பாக திரு.சி. கோணாமலை (வட்டவிதானுடன் உதவியாளராக செயற்பாட்டவர்) சிறப்பாக நாட்டார் பாடலையும், மாடு கொரக்காட்டும் பாடல்களைப் பாடுவது அனைவரையும் மகிழ்விப்பதாய் அமைந்திருந்தது.

☛ இப்பாடல்களை எல்லாம் மனனம் செய்து பாடிக்காட்டி - தந்துதவியவர் திரு. பொ. கோபாலபிள்ளை, முன்னாள் விவசாய சம்மேளனத் தலைவர் அவர்கள்.



புதிதாக புணரமைக்கப்பட்ட கீராண்ட குளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாய – நீர்ப்பாசன முகாமைத்துவம்

குளக்கோட்டன் ஆட்சிக்காலத்தில் கந்தளாய்க்குளம், அல்லைக்குளம் என்பன கட்டப்பட்டதாகவும் 1812ம் ஆண்டில் அல்லைக்குளத்திலிருந்து பள்ளிக்குடியிருப்பு வயல்வெளிகளுக்கு நீர்ப்பாசனத்திட்டம் மேலும் விரிவுபடுத்தல் இடம்பெற்றதாக அறிய முடிகின்றது.[2]

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் மரவட்டைக்குளம் கட்டப்பட்டது. 1945களில் கீராண்டகுளம் கட்டப்பட்டுள்ளது. குளம் இருக்கும் பகுதி ச.ஆறுமுகம், ப.பணபதிப்பிள்ளை, சி. தம்பாப்பிள்ளை, தம்பிப்பிள்ளை, பத்தக்குட்டி, செட்டிலார் க. மாரிமுத்து முதலானோரது காணிகளாகும். இரு குளங்களிலும் இருந்து இன்று 381 ஏக்கர் காணிகள் நெற்செய்கை பண்ணப்படுகின்றது.

முழுமையான விவசாய நடவடிக்கைகளைக் கொண்ட இக்கிராமத்தின் விவசாய நிர்வாக முறைமையின் கீழ் பணிபுரிந்தவர்களையும் அவர்களது சேவைக்காலத்தில் விவசாய நடவடிக்கைகளில் ஏற்பட்ட மாற்றங்களையும் ஆய்வுக்குட்படுத்திய போது கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி...

### வட்டவிதானாகக் கடமையாற்றியோர்.

1. திரு. சின்னத்தம்பி - பள்ளிக்குடியிருப்பு (சுமார் 1875)
2. திரு. கோணாமலை - பள்ளிக்குடியிருப்பு (சுமார் 1900)
3. திரு. காளியப்பு - பள்ளிக்குடியிருப்பு (சுமார் 1915)
   இவர்கள் 1940 களின் முன்பு கடமையாற்றியவர்களாக கணிக்கப்படுகின்றனர்.
4. திரு. ச. ஆறுமுகம் - 1940 - 1960களின் கடமையாற்றியதோடு கொட்டியாபுரப்பற்றுக்கான தலைமை வட்டவிதானாக சேவையாற்றிய- உள்ளார். இப்பதவி போட்டித் தேர்வு மூலம் இடம்பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்ட விதானக கடமையாற்றிய காலத்தில் கொட்டியாபுரப்பற்று DROவுடன் (DS) இணைந்து விவசாயப் பகுதிக்கு பாரிய சேவையாற்றியதாக அறிய முடிகின்றது. ஈச்சிலம்பற்று, கிளிவெட்டி, மல்லிகைத்தீவு, சம்பூர், சேனையூர் மக்கள் அனைவரும் பள்ளிக்குடியிருப்புக்கு வந்து தமது நீர்ப்பாசன வட்டவிதான் தேவைகளைப் பெற்றுச் சென்றதை இன்றும் நினைவுகூருவர். பல அபிவிருத்தித் திட்டங்களை செய்துள்ளார்.

- 1942 இல் அல்லைக்குள நீர்ப்பாசனத்திட்டத்தில் - "கொட்டு மதகு காடி" நீரைத் தேக்கி வைக்கும் அணைக்கட்டு "கல்-கொங்கிறீட்" கட்டாக அமைக்கப்பட்டது. இதனால் பிரம்புவெளி மேற்கு, வடக்குப் பகுதி நீர்ப்பாசனம் கிடைக்கப்பெற்றது.
- 1960 இல் இதே போன்ற அணைக்கட்டு "ஆத்திமரப்போட்டாவும்" கட்டப்பட்டது. இதனால் பிரம்புவெளி தென்கிழக்குப் பகுதி நீர்ப்பாசனம் கிடைக்கப்பெற்றது.

பிரம்புவெளியின் வட்டவிதானாகக் கடமையாற்றியோர்..

ச. ஆறுமுகம் - பள்ளிக்குடியிருப்பு, சரவணமுத்து - சேனையூர், சி.தம்பாப்பிள்ளை - பள்ளிக்குடியிருப்பு, கு.கனகசிங்கம் - சேனையூர், இ. நல்லதம்பி - பள்ளிக்குடியிருப்பு, செ. காளிராசா - கட்டைப்பறிச்சான், கு.கனசிங்கம் - சேனையூர், ஆ.துரைநாயகம் - பள்ளிக்குடியிருப்பு (1971-1993 வரை), த.சிதம்பரப்பிள்ளை - பள்ளிக்குடியிருப்பு (பிரம்புவெளி கிழக்கு - மானாவாரி), திரு.பொ.கோபாலப்பிள்ளை - பள்ளிக்குடியிருப்பு (1993-2019), 2020ல் இருந்து ஆ.நேசதுரை - பள்ளிக்குடியிருப்பு. (தலைவர் - விவசாய சம்மேளனம்)

மானாவாரி பகுதிகளான கிராண்ட குளம், மரவட்டைக்குளத்துக் காணிகளுக்கான வட்டசேவையாளர்களாக...

கோ. கதிர்காமத்தம்பி, கோ. காளிராசா, கோணாமலை, சு. வைரமுத்து, சி. தெய்வேந்திரம், ஆகியோர் கடமையாற்றினர். ப. தெய்வநாயகம், பொ. முத்துலிங்கம் ஆகியோர் கடமையில் உள்ளனர்.

1993 இல் வட்டவிதானகவும் அப்போது அமைக்கப்பட்ட ***கலைவாணி விவசாய சம்மேளனத்தின்*** தலைவர் பொ. கோபாலபிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவுசெய்யப்பட்டார். செயலாளர் - வ. தில்லையம்பலம், பொருளாளர் - த. அருளானந்தம் தெரிவுசெய்யப்பட்டு சேவை ஆற்றினர். பின்னர் அடுத்த பொதுக்கூட்டத்தில் பொ. கோபாலப்பிள்ளை - தலைவர், க. விபுலானந்தம் - செயலாளர், சி. விஜயராசா - பொருளாளர் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

1965 இற்குப் பின்னர் அல்லைக்குள நீர்ப்பாசனத் திட்டத்தினூடான நீர்வழுங்கல் மிகக் குறைவாக இருந்ததால் பெரும்பாதிப்பு ஏற்பட்டது.

அல்லைக்குளம் வளியிலான மகாவலி நீர்ப்பாசனத்திட்டம் படிப்படியாக நீர் பற்றாக்குறை ஏற்பட்டதனால் வேளாண்மைச் செய்கையில் நட்டம் ஏற்படத் தொடங்கியது.

இதனால் மாற்று வழிகள் தேடலாயினர். மகாவலி வடிகால், ஆற்றை மறித்து வாய்க்கால்கள் அமைத்து நீரை பெற பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

எமது கிராம விதானையாராக இருந்த திரு. சி. கந்தையா அவர்களின் வேண்டுதலில் 1977 இல் பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அரசியல் அதிகாரியாகவும் இருந்த ஜனாப் ஏ.எல். அப்துல் மஜீத் அவர்களின்னால் பிரம்புவெளி வாய்க்கால் பெரியபாலத்திலிருந்து தோப்பூர் - பாலத்தோப்பூர்க்கு இடையில் வீதி ஓரமாக வைத்தியசாலை மறுபக்கமாக வெட்டப்பட்டது. மலைப்பாங்கான உயரமான இடத்தினூடாக என்பதால் வாய்க்கால் நிறைவேறவில்லை.

## தற்காலிக அணை


பின்னர் ஆறு தடவைகள் விவசாயிகளின் பூரண ஒத்துழைப்புடன் சிரமாதானத்தினடிப்படையில் ஆறு மறிக்கப்பட்டு நீர்ப்பாசனம் செய்யப்பட்டது. ஏழாவது தடவை த.ஈ.வி.பு உதவியுடன் சிரமதானம் மூலம் பாரிய அணை அமைக்கப்பட்டது.

## நிரந்தர அணைக்கட்டு – நியாப்

சிரமதானம் மூலம் அமைக்கப்பட்ட தற்காலிக அணைமூலம் நீர்பாசனம் வெற்றியளித்ததைத் தொடர்ந்து நியாப் நிறுவனமூடாக இவ் அணைக்கட்டு பாரிய நீர்ப்பாசனத்திட்டம் 2002 இல் ஆரம்பிக்கப்பட்டு ஒவ்வொரு கட்டமாக முடிக்கப்பட்டு 2009 இல் பூரணமாக நிறைவுற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிரமதானம் மூலம் விவசாயிகளினால் பாலத்தடியில் நீரைத் தேக்கியும்,
புதிதாக கால்வாயும் வெட்டப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தற்போது இரு போகங்களும் எவ்வித நீர்த்தட்டுப்பாடும் இல்லாத நிலையில் வீணாக கடலில் கலக்கும் இந் நீர் பயன்படுத்தப்படுகின்றது. சிறந்த விளைச்சளைத் தருவதோடு ஊரும் பசுமையாக செழிப்பாக அழகாக காட்சியளிக்கிறது. மகிழ்வான விவசாயப் பொருளாதாரத்தில் வாழும் சூழல் ஏற்பட்டுள்ளது.

## பிரம்புவெளி வீதி

அணைக்கட்டு அமைக்கப்பட்டுள்ள ஆற்றின் ஓரமாகவும், நீர்ப்பாசன வாய்க்கால் ஓரமாகவும் தோப்பூர் பாலைத்தோப்பூர் பிரதான வீதியில் வைத்தியசாலைக்கு பக்கமாக 1.5 கிலோமீற்றர் நீளமான விதி அமைக்கப்பட்டுள்ளது. இது விவசாயிகளுக்கும், பொது போக்குவரத்துக்குமான வீதியாக உள்ளது. மிகப் பயன்மிக்க இவ்வீதியின் இரு மருங்கும் வயல் வெளியூடாக செய்கையில் மிகவும் இரம்மியமான மருதநில மகிழ்வைத்தரும். இவ்வீதி மேலும் விருத்தியடைய வேண்டும். இதற்காக ஜெய்க்கா (JAICA) நிறுவனத்தினூடாக வீதியமைப்பதற்கு ஏற்பாடாகியுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியாப் நிறுவனத்தின் ஏனைய சேவைகள்

பல்நோக்கு கட்டடம், கிராமத்தின் உள்வீதிகள், குழாய்நீர் விநியோகத் திட்டங்கள், ஆற்றின் வடிகால் திருத்தங்கள், சில கல்வெட்டுகள் என்பனவும் செய்யப்பட்டன. நியாப் நிறுவன சேவைகள் மிகவும் பயன்பாடுள்ளவையாக அமைந்தமை மகிழ்வுக்குரியது.

**2019 இல் இறையாந்துவெளி வீதி, ஒலுக்குளி வடிகால் துப்பரவு, கல்வெட்டு என்பவற்றுக்கு திரு. இரா. சம்பந்தன் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களால் 30 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் முடிவடைந்துள்ளன.**

**இறையாந்து வெளி ஆற்றுக்கான பாலம் அமைப்பதற்கான சிபார்சும் செய்யப்பட்டு நடைபெற ஏதுவாய் உள்ளது.**

கீராண்டகுளம், மரவட்டைக்குளத்திற்கு மகாவலி நீரைக் கொண்டு வருவதற்கு முயற்சிக்கப்பட்டது. நீர்ப்பாசன பெறியியலாளர்கள் பல ஆய்வில் ஈடுபட்டனர். அல்லைக்குளத்தில் 4 அடிக்கு நீர் உயர்த்தப்பட வேண்டியிருக்கிறது. நீரை உயர்த்தும்போது பல குடியிருப்பு பகுதிகள் தாழக்கூடிய நிலை இருந்தது. அதனால் இம்முயற்சி முடியாமல் போனது. தொடர்ந்தும் அல்லைக்குளத்திற்கு அல்லாமல் மேல் வாய்க்கால் மூலமாக நீரைக் கொண்டுவர முயற்சிக்கப்படுகிறது. எதிர்காலத்தில் செயற்படுத்த முயற்சிக்க வேண்டும்.

***தலைவராக திரு. பொ. கோபாலபிள்ளை அவர்கள் முழுநேர சேவகராக செயற்பட்டமையும்*** - தமது இருபத்தேழு ஆண்டு கால சேவையில் 16 நீர்ப்பாசன பணிப்பாளர்கள் - பொறியியலாளர்களையும், 12 மாவட்ட கமநல சேவை ஆணையாளர்களையும், பல தொழிநுட்ப உத்தியோகத்தர்களையும் கட்டணடதாகவும் - கல்லாறு தலைமை அலுவலக ஊழியர்களுடன் நல்ல தொடர்பு பேணப்பட்டதால் பல வேலைத்திட்டங்களை மேற்கொள்ள உதவியதாகவும் அவரது பேட்டியில் குறிப்பிட்டார். அவரது சிங்களம் கதைக்கும் ஆற்றலும் நுண்மதியறிவும் இவருக்கு துணையாயிருந்ததை அறியமுடிகின்றது. நீண்டகால விவசாய சம்மேளனத்தின் பணிக்காக பாராட்டாமல் இருக்க முடியாது. பலர் பாராட்டுவதையும் அறிவோம்.

26.02.2020 ஆம் திகதி பொதுக்கூட்டத்தின் பின் கலைவாணி விவசாய சம்மேளனத்தின் தலைவர் - திரு. ஆ. நேசதுரை அவர்கள், செயலாளர் - யோ. வசந்தன், பொருளாளர் - சீதாராமன் கடமைகளைத் தொடங்கியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானாவாரி சிறு நீர்ப்பாசனத் திட்டங்களில் பின்வரும் குளங்களின் நீர்ப்பாசனம் ஊடாக வேளாண்மை செய்கை பண்ணப்படுகிறது.

1. மரவட்டைக் குளம் - 185 ஏக்கர்
2. கீராண்டகுளம் - 196 ஏக்கர்
3. இத்திக்குளம் - 62 ஏக்கர்

மழை காலங்களில் நீர் தேக்கி வைக்கப்பட்டு மாரிப்போக வேளாண்மை செய்கை பண்ணப்படும். அறுவடை முடிந்த பின் இரண்டாவது தடவையாக கோடைப்போக வேளாண்மை இதில் 60% - 70% வயல்கள் செய்யப்படுகின்றன.

நரியந்தைக்குளத்தில் அயல்கிராமத்தவர்களான சேனையூர், கட்டைப்பறிச்சானைச் சேர்ந்ததோரது வயல்களும் உள்ளன.

மரவட்டைக்குள, கீராண்டகுள நீர் பாயும் கொட்டனாவெளி எனப்படும் பகுதியிலும் சேனையூர் - கட்டைப்பறிச்சானைச் சேர்ந்தவர்களும் வேளாண்மை செய்கின்னர்.

மழையை நம்பி செய்கை பண்ணப்படும் வெளிகளாக மரவட்டைக்குள மேற்சேனை - 25 ஏக்கர், கிராண்டகுள மேற்சேனை - 30 ஏக்கரும் செய்கை பண்ணப்படுகின்றர்.

இவை 1968களின் பின்னர் காடு வெட்டி களணிகளாக்கப் பட்டவை. 1985களின் பின்னர் யுத்த காலத்தில் பயிர்ச்செய்கை இல்லாமல் 2010 இன் பின்னர் மீண்டும் செய்யப்படுகின்றது. சிறந்த விளைவும் கிடைக்கின்றது.

மேற்படி மானாவாரி நீர்ப்பான பகுதிக்கு தனியான விவசாய சம்மேளனம் 2010 இல் ஆரம்பிக்கப்பட்டது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கஜமுகன் விவசாய சம்மேளனம்**

2010ல் ஆரம்பிக்கப்பட்டது. தலைவர் - த. சுதாகரன், செயலாளர் - யோ. சிவாகரன், பொருளாளர் - மா. யோகேஸ்வரன் ஆகியோர் ஏனைய நிர்வாகக்குழுவினருடன் செயற்பட்டனர்.

2015ல் விவசாய சம்மேளனத்தின் தலைவராக வி. நிர்மலன், செயலாளராக ச. முதல்வன், பொருளாளராக மா. யோகேஸ்வரன் ஆகியோருடன் நிர்வாகசபை உறுப்பினர்களும் இயங்கினர்.

2019ல் புதிதாக சம்மேளனம் தெரிவுசெய்யப்பட்டபோது தலைவர் - வி.அன்பழகன், செயலாளர் - ச. முதல்வன், பொருளாளர் - த. சுதாகரன் போன்றோருடன் நிர்வாக சபை உறுப்பினர்களுடன் இயங்கி வருகின்றது.

குளங்களின் அபிவிருத்தி, நீர்ப்பாசன கால்வாய்களின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை இச்சம்மேளனத்தின் ஊடாக செய்து வருகின்றனர். அத்தோடு விவசாய சம்மேளனத்திற்கான உர விநியோகம் முதலான கடமைகளையும் செயற்படுத்தி வருகின்றனர்.

***நவீன விவசாய முறைமைகளோடு மேட்டுநில பயிர்கள், பயன்தரும் பல்லாண்டுப் பயிர்களான தோடை, தேசி, முருங்கை போன்றவற்றுடன் வீதி ஓரங்களில் நிழல் மரங்களை நடும் செயற்த்திட்டத்தை ஏற்படுத்த வேண்டும். அத்துடன் எமது மண் விற்பனை செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும். மேட்டு நிலங்களும் தேவை அவை சமப்படுத்தப்பட்டு பயன்படுத்தலாம். மண் விற்பதால் எமது இயற்கை வளம் அழிக்கப்படுகிறது. எமது வீதியும் பாளாகிவிடும். தயவுகூர்ந்து இதில் கவனம் செலுத்துங்கள்.***

அடிக்குறிப்பு:

1. காலணித்துவ இலங்கை - க. சரவணபவன் - பக்கம் 230
2. காலணித்துவ இலங்கை - க. சரவணபவன் - பக்கம் 225
3. தகவல்: திரு. பொ. கோபாலபிள்ளை தலைவர் கலைவாணி விவசாய சம்மேளனம் (27 வருட சேவை)
4. தகவல்: திரு. த. சுதாகரன் - பொருளாளர், கஜமுகன் விவசாய சம்மேளனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலங்கு வேளாண்மை

விவசாயம் என்பது பயிர்ச்செய்கையும் - விலங்கு வளர்ப்பையும் உள்ளடக்கியது. விலங்கு வேளாண்மை அல்லது விலங்கு வளர்ப்பு எனும்போது எருமை மாடுகள், பசு மாடுகள், ஆடுகள், பன்றி, முயல் முதலானவற்றோடு கோழி, தாரா முதலான பறவை வளர்ப்புகள் இணைந்ததே (விவசாயமாகும்) விலங்கு வேளாண்மையாகும்.

மாடு வளர்ப்பில் இங்கு பலர் ஈடுபட்டனர். விவசாய நடவடிக்கையில் ஈடுபட்ட போடிமார்கள் எல்லோருமே பெரும்பாலும் மாட்டுப்பட்டிகளையும் வைத்திருந்தனர்.

எருமை மாடுகள் - கடா மாடுகள் (ஆண் மாடுகள்), பசு மாடுகள் இவற்றின் ஆண் - காளைகள் எனப்படும் இவை எருத்து மாடுகள். இவை உழவுக்கும் - வண்டிகளில் நெல் ஏற்றுவதற்காகவும், போக்குவரத்திற்கும் பயன்பட்டது.

கடா மாடுகள் உழவுக்கும் - சேற்றுவயல் பண்படுத்தலுக்கும் பயன்படுவது விவசாய நடவடிக்கைக்கு பெரிதும் உதவியவை. எருதுகளும் நாட்டுக்கலப்பையால் உழவும் பயன்படுத்தப்படும்.

எருமை மாடுகளும், பசு மாடுகளும் - பால், தயிர், நெய் தேவைகளை நிறைவு செய்தன. முன்னைய காலத்தில் சுமார் 1975களுக்கு முன்னர் இங்கு பால், தயிர்கள் விற்பனை செய்வதில்லை. இலவசமாகவே வழங்குவர். இதனால் அனைவருக்கும் பால் தயிர்களை பெறக்கூடியதாயிருந்தது பாராட்டுதற்குரிய நல்ல பண்பான செயற்பாடாகும்.

மூதூர் பிரதேசத்திலுள்ள பெரும்பாலான வயல்வெளிகளுக்கு வயல் விதைப்பு வரையான பண்படுத்தல் வேலைகளுக்கு இவ்வூர் மாடுகளும் பயன்படுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடுகள் வேலை செய்வதற்கான கூலியாக வழங்கப்படும் நெல்லை - விசக்களை என அழைப்பர். இது 1 ஏக்கருக்கு 3 சாக்கு நெல் கொடுக்கப்படும். (20 நாளி - 1 சாக்கு) (2 புசல்) 1 சாக்கு என்பது இன்றைய 46Kg ஆகும்.


1970களுக்கு முன் பெரிய மாட்டுப்பட்டி வைத்திருந்தவர்களாக செட்டியார், பத்தக்குட்டி, வதனப்போடியர் - கதிர்காமத்தம்பி, க. மாரிமுந்து, சி. தம்பாபிள்ளை, க. தம்பிப்பிள்ளை, சி. இராசையா, ச. ஆறுமுகம், ஆ.கனகரெட்ணம், கணபதிப்பிள்ளை (அரிசந்திரர்), க. பரராசசிங்கம், மு.நல்லதம்பி, வைரமுத்து, நல்லதம்பி, மா. சிவலிங்கம் முதலானோர். தற்போது பலரிடம் உள்ளன.

மாட்டுப்பட்டி வைத்திருப்பவர்களின் வரலாற்றிலிருந்து சிலவற்றை நோக்கினால்...

- பின்னேரங்களில் கன்று கட்டுதல் அல்லது கன்றுகளை காலையில் அடைக்க செல்தல் மாலை 4 - 5 மணிக்கிடையில் (கரப்பந்தாட்டத்திற்காக) பந்து விளையாடுவதற்காக பட்டியிலிருந்து விரைவாக ஓடிவருதல்.
- காலையில் பால் கறந்ததும் விரைவாக பாடசாலைக்கு ஓடிச்செல்தல்.
- தூர இட பட்டிகளில் காலையில் பால் கறக்கும்போது பட்டியில் பால் காய்ச்சிக் குடித்தல்.
- பட்டிக்கு பால் வாங்க வருபவர்களுக்கு இலவசமாக பால் வழங்குதல்.
- வேலைக்கு - வயல் அடிப்பதற்கு, சூடடிப்பதற்கு கிடாமாடுகளை கொடுத்தல். என பல செயல்கள் இம்மாட்டுப்பட்டி வைத்திருப்பவர்களால் இடம்பெறுவது.
- மாடு வைத்திருப்பவர்கள் தங்கள் மாடுகளுக்கு குறிசுடுவர். இக்குறிகள் தமது பிள்ளைகளின் பெயருக்காகவும் இருக்கும். சில பெயர்களுக்கு மாடுகள் நன்றாக வரும் என்ற எண்ணமும் உண்டு.
- குறிசுடுதலில் தமது குலவிருதையும், பின்கால் துடைப் பகுதியில் இடுவர். வயிற்றுப்பகுதியில் பெயரின் முதல் எழுத்து அல்லது சுருக்க எழுத்தைக் குறிப்பர்.
- பின் காலின் மேல் பகுதியில் - தட்டத்தில் ஊரின் பெயரின் முதல் எழுத்தைச் சுடுவர். ***இங்கு குலவிருதாக "மேழிசுளி - கமலமலர் - காரானருக்கு" எனும் குலவிருது பாடலுக்கு அமைவான குறியை இடுவர்.' இக்குலக்குறி கிழக்கிழங்கையில் சித்தாண்டி, கிரான், வந்தாறுமூலை, காரைதீவு, பழுகாமம் முதலான வேளாளர் வாழும் இடங்களிலும் இடப்படுகின்றது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பள்ளிக்குடியிருப்பு (ப)


கிரான் (கி)

- பசு மாடுகளை பொறுத்தவரை - பால், நெய் பெறுவதோடு காளை மாடுகள் எருதுகள் வயல் உழுவதற்கும், வண்டில் ஓட்டுவதற்கும் பயன்படும். பிரதான போக்குவரத்தும், நெல் முதலான பொதிகளை ஏற்றி இறக்குவதும் வண்டில்களே. 1980 இற்கு முன்னர் கூடுதலான போக்குவரத்து ஏற்றல் - இறக்கல் பணிகளுக்காக வண்டில் மாடுகளே பயன்படுத்தப்பட்டன.

மாட்டுப் பட்டி வைத்திருப்பவர்கள் தமது மாடுகளுக்கு பெயர் வைத்திருப்பர். பெயர் கூறி அழைத்த பெயருடைய மாடு கூப்பிடும் இடத்திற்கு ஓடிவரும். உதாரணமாக சில பெயர்கள் : செல்லம், பாலி, பூமாலை, ஆரிச்சி, குடுவை தேனீ என பல பெயர்களை சில மாடுகளுக்கு வைத்திருப்பர். கூடுதலான மாடுகளை வைத்திருப்பவர்கள் தங்கள் மாட்டின் தலைமை மாட்டிற்க சிறப்பை கட்டி விடுவர். இது மாடு நடமாடும்போது சத்தம் கேட்கும். இச்சத்தம் கேட்கும் திசைக்குச் சென்றால் அங்கு எல்லா மாடுகளையும் காணலாம். (இது Bell போன்றது).

கிட்டி என்பது கடா மாடுகளுக்கு நலம் போடுவது. இக்கிட்டிகளை வைத்து விதையை நசுக்குவர், உடைப்பர். பின் மாடுகள் நன்றாக தெளியும். உடம்பு பெருத்து நன்றாக வயல் வேலைகளில் ஈடுபடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாடுகள் - செல்வமாக கருதப்பட்டது. இவை செல்வமானதுதான். திருமணங்களின்போது சீதனமாக வயல்காணியும், மாடுகளுமே கொடுப்பது இங்கு வழக்கமானது. உதாரணமாக: 5 எருமையும் கன்றும் - 5 பசுவும் கன்றும், 10 பிணையல் கடா மாடு, வண்டில் மாடு என இயலுமைக்கேற்ப கொடுக்கப்படும்.
- திருமணம் முடித்த புதுத்தம்பதியர் உறவினர் வீடுகளுக்கு செய்லும்போது திருமணப்பரிசாக ஒரு நாகு மாடு கொடுப்பார்கள். (இளம் பெண் மாடு)
- பால் காச்சுகின்ற வீடுகளில் - காலையில் தயிர் இலவசமாக கொடுப்பார்கள்.
- பால் கறக்கும்போது பட்டிச்குச் சென்றால் இலவசமாக பால் கொடுப்பார்கள்.
- 1965 களின் முன் பால் பட்டிகளில் - பால் முட்டிகளில் கறந்து இரு பெரு முட்டிகளை காவு தடியில் போட்டே வீடுகளுக்கு கொண்டு வருவார்கள் பின்னர் பால் தகரங்களில் எடுத்துச் செல்லப்படும்.
- பெரிய பாற்சட்டிகளில் பால் காய்ச்சியதும் தயிராகி உறைந்ததும் மேற்பகுதி ***ஆடை*** என்றும் தயிருக்கும் - ஆடைக்கும் இடைப்பகுதியை ***வேது*** என்றும் அழைப்பது. இது மிகவும் சுவையானது.

ஆடை வேதுகளை கடைந்து நெய் உருக்கியதும் நெய்யின் அடியில் கடுகு என்ற பகுதி ஒன்றிருக்கும். அதுவும் குறுநெல் சோறும் (நெல் குற்றும்பொது இடிபட்ட அரிசி - மிகச்சிறியது) சுடச்சுட காலை உணவாக இருக்கும் இவை மிகவும் சுவையூறும் நினைவுகள்.

அதிகாலை உணவாக தயிரும் சோறும் சாப்பிடுவது. இரவில் இளம் உறைத்தயிருடன் சாப்பிடுவது மறக்க முடியாத சுவைகள்.

எமது கிராமத்தின் ஆடு வளர்ப்புக்கு ஆட்டுக்கார கனகம்மா என்றொருவர் இருந்தார். நூற்றுக்கணக்கான ஆடுகளை வளர்ப்பவர். ஆட்டு பண்ணையும் அமைத்த (மாடி வீடு மாதிரி) திரு.மா.சிவலிங்கம் போன்ற ஒரு சிலரே முதல் இருந்தனர். தற்போது பண்ணை அமைத்து நவீன முறையில் ஆடு வளர்ப்பும், செம்மறி ஆடு வளர்ப்பும் உள்ளன.

வேளாண்மை - விவசாய செயற்பாட்டிற்கும் உதவும் கால்நடை வளர்ப்பானது இக்கிராமத்தின் செல்வமாகும். தொழில் வாய்ப்பும், தொழிலும், மகிழ்வான போசாக்கான உணவுக்கும் கால்நடை வளர்ப்பு இன்றும் முக்கியம் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழவுக்கும் உழவர்களுக்கும் உதவும் மாட்டுப் பண்ணையில் பட்டிப் பொங்கல் மிகவும் பக்தி பூர்வமான வழிபாடாக நடைபெறும். அத்துடன் வன்னித்தம்பிரான் நாயன்மார் மடை - வேள்வி என்பனவும் இடம்பெறும்.





பட்டிப்பொங்கலும், மாட்டிற்கு விபூதி சந்தனத்துடன்
பலகாரமும் கட்டப்படுகிறது.

குழு மாடு பிடிக்கும் நிகழ்வும் இங்கு இடம்பெற்றது. குழுமாடு என்பது காட்டில் வளரும் மாடுகள். யாருக்கும் சொந்தம் இல்லாதது. இவை பட்டிமாடுகளுடன் இணையாது. இவை வேகமான - விரளக்கூடியது. இவற்றை மடக்கி - பிடிப்பது என்பது மிகவும் கஸ்டமானது. இக்குழு மாடுகள் நீருக்காக வெளிவரும்போது பிடிக்க வேண்டும். இவற்றை பிடிக்கும் வல்லவர்களாக திரு. சி. வேலாயுதம், திரு. க. பரராசசிங்கம், திரு. வே. மாரிமுத்து என்பவர்கள் இருந்தார்கள். ஒரு வகை காளைகளை மடக்கும் ஜல்லிக்கட்டு போன்றது.

2009ம் ஆண்டிலிருந்து பாற்பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. கால்நடை வளர்ப்போர் சங்கத்தினூடாக பல ஊக்குவிப்பு சலுகைகள் மானிய, கடன் அடிப்படைகள் வழங்கப்படுகிறது. தினமும் சராசரியாக 475 லீற்றர் பால் இப்பாற்பண்ணையூடாக விநியோகிக்கப்படுகின்றது.

சங்க உறுப்பினர்களாக 40 பேர் உளர். இவர்களில், தலைவர் - திரு. செ. ரவிக்குமார், செயலாளர் - திரு. கி. கணேசலிங்கம், பொருளாளர் - திரு. நா. மகேந்திரன் ஆகியோர் செயற்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயம் என்பது பயிர்ச்செய்கையும் கால்நடை வளர்ப்பும் என வரைவிலக்கணப்படுத்தப் படுகிறது. எனவே இம் மக்களின் பரம்பரைத் தொழிலாக நெல், வேளாண்மையும் ஏனைய பயிர்ச்செய்கையுடன் கால்நடை வளர்ப்பு மிகவும் இன்றியமையாததாக இருந்துள்ளது.

**ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் திருகோணமலையிலிருந்து ஒல்லாந்த ஆளுனர் 21.05.1789ல் பள்ளிக்குடியிருப்பு - ஒமனகிரிக்கு விஜயம் செய்த வேளை சேற்று வயலில் மாடுகளால் வயலடித்தும் - அவற்றினால் பலகையில் மட்டப்படுத்தியும் வேலை செய்துகொண்டிருந்தமையைக் கண்டு அவர்களுடன் கலந்துரையாடி அவர்கள் உழைப்பைப் பாராட்டியும் ஆலோசனையையும் வழங்கியுள்ளார்.**[2]

வளமாக மகிழ்வாக தன்னிறைவான வாழ்வு முறைமையுடன் முற்காலத்தில் வாழ்ந்தமையை அறியமுடிகிறது. அவை தொடராக இற்றைவரை உள்ளமை பெருமைக்குரியதே. இவை இக்கிராமிய பொருளாதாரத்தில் முக்கியம் பெறுகிறது.

மேலும் நவீன விஞ்ஞான முறைமைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

மாட்டு நோய்களிலிருந்து பாதுகாத்தல், தடுப்பூசிகள் அடித்தல், நவீன இனப்பெருக்க முறையூடாக நல்லின மாடுகளை பெற்று பயன்பெறுதல்.

கூடிய பால் தரும் பசுக்களை வளர்க்க நடவடிக்கை எடுத்தல்.

எருமையினங்களில் மூறா இனம் (கேப்பை மாடுகள்) வளர்த்தல்.

பாற்பண்ணை ஊடான சிறுகைத்தொழில் பேட்டைகளை உருவாக்குதல். இதற்கான மேச்சல் நிலங்களையும் சட்ட ரீதியாக பெறுதல்.

முதலான விடயங்களிலும் கால்நடை அபிவிருத்திச் சங்கங்கள் தொடர்ந்தும் ஈடுபடுவது எதிர்கால அபிவிருத்திக்கு சிறந்தது.

**அடிக்குறிப்பு:**

1. வெருகல் கும்பாபிஷேக சிறப்பு மலர். திரு. கோணமலை. பக் - 30
2. காலனித்துவ திரகோணமலை - 2010 கனகசபாபதி சரவணபவன். பக் - 79



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்

மக்களின் பொருளாதார நடவடிக்கைகளில் இச்சங்கம் விவசாய உற்பத்திக்கான கடன்திட்டம், மானியங்கள், விநியோகம், உத்தரவாத விலைக்கு நெல் கொள்வனவு செய்தல் முதலான செயற்பாடுகளில் இயங்கி வந்தது.

பள்ளிக்குடியிருப்பு பலநோக்கு கூட்டுறவுசங்கம் 1960களில் இருந்து சிறப்பாக இயங்கி வருகின்றது. மூதூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ப.நோ.கூட்டுறவுச்சங்கம் எனும் பெயரில் இயங்கி இங்கு இச்சங்கத்திற்கான கிளைகளும் அமைக்கப்பட்டிருந்தன. ஆரம்பத்தில் ப. முத்துக்குமார் என்பவர் தலைவராக கடமையாற்றியுள்ளார். பின்னர் திரு.சி.தம்பாப்பிள்ளை அவர்கள் தலைவராக கடமையாற்றினார்.

மூதூர் ப.நோ.கூ. சங்கத்தின் - பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக ப.கணபதிப்பிள்ளை, க. புஸ்பராசா, ஆ. குணராசரெட்ணம் ஆகியோர் கடமையாற்றினர்.

### சங்கத்தின் செயற்பாடுகள்

- அரசாங்கத்தால் வழங்கப்படும் கூப்பனுக்கு அரிசி வழங்குதல். இது கிராமத்தில் உள்ள அனைவருக்கும் கிடைக்கும். இதற்கான கூப்பன்கள் கிராம சேவகர் ஊடாக வழங்கப்பட்டிருக்கும்.
- விவசாய விளைபொருளான நெல் கொள்வனவு செய்யப்படும். உத்தரவாத விலையில் கொள்வனவு இடம்பெறுவதால் அனைத்து விவசாயிகளும் இச்சங்கத்திற்கே விநியோகிப்பர்.
- விவசாயக்கடன் வழங்கப்படும். அத்தோடு அரச நிவாரணம், மானியம் என்பனவும் இச்சங்கங்கள் ஊடாகவே வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அண்மைக்காலங்களில் - யுத்த பாதிப்புகள், வெள்ள - சுனாமி அனர்த்தங்கள் முதலானவற்றிற்கும் நிவாரணங்கள் சங்கமூடாகவே வழங்கப்பட்டது.
- சமுர்த்தி முத்திரைக்கான பொருள் விநியோகமும் இவர்களுடாகவே இடம்பெற்றது.

## முகாமையாளர்கள்

1. திரு. கணபதிப்பிள்ளை (புதத்தார்) - அரிசி விநியோக முகாமையாளர்.
2. திரு. சு. வைரமுத்து - நெல் கொள்வனவு முகாமையாளர்
3. திரு. க. நாகராசா அவர்கள் 1963ல் இருந்து அரிசி விநியோகம்/நெல் கொள்வனவு முகாமைளராகப் பணியாற்றினார்
4. திரு. க. மயில்வாகனம் - 1974
5. திரு. தி. மாணிக்கராசா - 1980
6. திரு. ஆ. நேசதுரை - 1982

ஆகியோர் இச்சங்கத்தின் முகாமையாளர்களாக பணியாற்றியுள்ளனர்.

1970 இல் தோப்பூர் ப.நோ.கூ. சங்கம் அமைக்கப்பட்டபோது அதில் எழுதுவினைஞராக திரு. ஆ. குணராஜரெட்ணம் அவர்கள் பணிபுரிந்தார்.

மூதூரில் இருந்து தோப்பூருக்கான தனியான பொது முகாமையாளர் உட்பட பணிப்பாளர் சபை அமைந்த போது அதன் உறுப்பினர்களாக திரு. ஆ. குணராசரெட்ணம் அவர்களும் பின்னர் திரு. பொ. இரத்தினசிங்கம் அவர்களும் தற்போது திருமதி அம்மணிப்பிள்ளை நேசதுரை அவர்கள் அங்கம் வகிக்கின்றார்.

தி/பள்ளிக்குடியிருப்பு ப.நோ.கூ. சங்கத்திற்கான கட்டடம் ஒன்றும் அமைக்கப்பட்டது. யுத்தகால பாதிப்புக்குட்பட்டதால் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

பல்நோக்கு கூட்டுறவு சங்கம் மக்களது பொருளாதார நடவடிக்கைகளில் பாரிய பங்கு வகித்தது. விவசாயிகளுக்கான உற்பத்தி கடன் திட்டம், உத்தரவாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலையில் நெல் கொள்வனவு, அரசின் மானியத்திட்டங்களை செயற்படுத்தல், நிவாரணங்கள் முதலானவை மக்களின் வாழ்வாதாரங்களுடன் தொடர்புடைய பொருளாதார நடவடிக்கைகளாகும். ஆனால் தற்காலத்தில் செயற்பாடுகள் குறைவடைந்துள்ளன.



யுத்தகாலத்தின் போது பாதிக்கப்பட்ட
பல்நோக்கு கூட்டுறவு சங்க கட்டிடம்

அடிக்குறிப்பு

தகவல் 1. திரு. க. நாகராசா - ப.நோ.கூ சங்க முகாமையாளர்
2. திரு. ஆ. நேசதுரை - ப.நோ.கூ சங்க முகாமையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– 4 –

# கல்வியியல் வரலாறு

## தி/மூ/கலைமகள் இந்துக்கல்லூரி

பள்ளி என்றாலே பள்ளிக்கூடம், கல்லூரி, ஊர், மருதநிலத்தூர், அறச்சாலை என பல்பொருளுடையது. தமது கிராமத்தின் பெயருக்கும் கல்விக்கும் நெருங்கிய தொடர்பானது பெருமைக்கும் மகிழ்வுக்கும் உரியது.

இலங்கை கல்வி வரலாற்றில் குருகெதற - குருவீடு எனும் திண்ணைப் பள்ளிகளும் பிரிவேனாக்களும், சமய நிறுவனங்களும், கல்வி வழங்கும் நிறுவனங்களாயிருந்து வெளிநாட்டார் ஆட்சியின் பின்பே பாடசாலை முறைமைக்குள் வந்துள்ளமை வரலாறாகும்.

எமது பாடசாலையின் கல்வி வரலாறு பற்றி பல தேடல்களை மேற்கொண்ட போதும் பாடசாலையில் பழைய ஆவணங்கள் பெரும்பாலானவை இல்லை. 1957ம் அண்டு பெருவெள்ளம், முப்பது ஆண்டு கால யுத்தத்தின் போது பல தடவைகள் பாடசாலை பாதிக்கப்பட்டிருப்பதால் இருந்த ஆவணங்களையும் இழக்க நேர்ந்துள்ளது. இங்கு வாழ்ந்த மூத்தோரின் வாயிலாகவும் - ஆய்வுத் தேடலின் போதும் கிடைக்கப்பெற்ற நூலாவணங்களுடாக கிடைத்தவைகள் மூலமாக வரலாறு தொகுக்கப்பட்டுள்ளது.

சமகாலத்தில் வாழ்ந்த மூத்தவரான திரு. க. மாரிமுத்து (1906), திரு. சி.கந்தையா (1916) இவர்களிடமும் மேலும் பலரிடமும் நேர்காணல் மூலம் அறிந்த விடயங்களாக - தாம் தற்போது இருக்கும் இடத்தில் கற்றதாக கூறினர். அவ்வாறெனின் 1900இற்கு முன்பே பாடசாலை அமைந்திருக்க வேண்டும்.

***நூல் ஆவணங்களின் படி 1927 ஆம் ஆண்டில் மூடப்பட்ட பள்ளிக்குடியிருப்பு வெஸ்லியன் மிசன் பாடசாலை அரசினால் பொறுப்பேற்கப்பட்டது.*** அப்போது மாவட்டத்தில் 52 பாடசாலைகளில் 47 பாடசாலைகளே இயங்கின.[1] இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெஸ்லியன் மிசன் பாடசாலை - 1875 காலங்களில் ஆரம்பித்திருக்கலாம் என அறிய முடிகின்றது.

தி/பள்ளிக்குடியிருப்பு அ.த.க. பாடசாலை எனும் பெயருடன் இயங்கிய இப்பாடசாலையில் பல அதிபர்கள், ஆசிரியர்கள் கடமையாற்றியுள்ளனர். அவர்களின் விபரங்கள் இங்கு குறிப்பிடப்படுகின்றது. கடமையாற்றிய அனைத்து அதிபர்களின் விபரங்களும் உள்ளன. அவர்களது கால பாடசாலை நிலைகளை அப்போது கற்றவர்களிடமும் மூத்தோர்களிடமும் அறிய முடிந்தது. ஆசிரியர்களது விபரங்களில் ஆரம்ப காலங்களில் கடமையாற்றியவர்கள் மட்டும் குறிப்பிடப்படுகின்றனர்.

## அதிபராகக் கடமையாற்றியவர்களின் விபரங்கள்

கிடைக்கப்பெற்ற ஆய்வுத்தகவல்களின் படி பின்வருவோர் தலைமை ஆசிரியர்களாக/அதிபர்களாக கடமையாற்றியுள்ளனர்.[2]

| | | |
|---|---|---|
| 1. | திரு. அப்புக்குட்டி கணபதிப்பிள்ளை | 1927 - 1941 |
| 2. | திரு. தம்பர் காசிநாதர் | 1942 - 1945 |
| 3. | திரு. கே. அருளப்பு ரோச் டீ வாஸ் | 1946 - 1951 |
| 4. | திரு. செபஸ்தியான் பாய்வா | 1952 - 1959 |
| 5. | திரு. ச. முத்துக்குமார் | 1960 |
| 6. | திரு. மரியான் இம்மானுவேல் குரூஸ் | 1960 - 1968 |
| 7. | திரு. வே. கிருஷ்ணபிள்ளை | 1968 - 1970 |
| 8. | திரு. மிக்கேல் குரூஸ் | 1970 - 06.10.1971 |
| 9. | திரு. ஆ. கனகரெட்ணம் | 1971 - 1975 |
| 10. | திரு. க. இராசதுரை | 01.03.1975 - 15.02.1985 |
| 11. | திரு. இரா கோணாமலை | 15.02.1985 - 1986 |
| 12. | திரு. ஆ. செல்வநாயகம் | 1986 - 31.01.1998 |
| 13. | திரு. த. துரைநாயகம் | 01.02.1998 - 24.04.2006 |
| 14. | திரு. பொ. இரத்தின சிங்கம் | 25.04.2006 - 31.11.2007 |
| 15. | திரு. வி. பாக்கியராசா | 01.12.2007 - 10.10.2008 |
| 16. | திரு. பா. தேவராசா | 11.10.2008 - 30.04.2012 |
| 17. | திரு. க. அம்பிகை பாலன் | 02.05.2012 - 03.09.2013 |
| 18. | திரு. க. பாக்கியராசா | 04.09.2013 - 13.11.2013 |
| 19. | திரு. நா. கிட்ணதாஸ் | 13.11.2013 - 07.08.2018 |
| 20. | திரு. க. பாக்கியராசா | 08.08.2018 - இன்றுவரை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. அ. கணபதிப்பிள்ளை
1927 - 1941



திரு. த. காசிநாதர்
1942 - 1945



திரு. கே.அ. ரோச் டீ வாஸ்
1946 - 1951



திரு. செபஸ்தியான் பாய்வா
1952 - 1959



திரு. ச. முத்துக்குமார்
1960



திரு. ம. இம்மானுவேல் குரூஸ்
1960 - 1968



திரு. வே. கிருஷ்ணபிள்ளை
1968 - 1970



திரு. மிக்கேல் குரூஸ்
1970 - 1971



திரு. ஆ. கனகரெட்ணம்
1971 - 1975



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


திரு. க. இராசதுரை
1975 - 1985


திரு. இரா. கோணாமலை
1985


திரு. ஆ. செல்வநாயகம்
1986 - 1998


திரு. த. துரைநாயகம்
1998 - 2006


திரு. பொ. இரத்தினசிங்கம்
2006 - 2007


திரு. வி. பாக்கியராசா
2007 - 2008


திரு. பா. தேவராசா
2008 - 2012


திரு. க. அம்பிகைபாகன்
2012 - 2013


திரு. நா. கிட்ணதாஸ்
2013 - 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. க. பாக்கியராசா
08.08.2018 - இன்றுவரை

## திரு. அ. கணபதிப்பிள்ளை (1927 - 1941)



1927ல் தலைமை ஆசியரியராக (அதிபராக) இருந்த திரு. அ. கணபதிப்பிள்ளை அவர்களின் காலத்தில் கற்றவர்கள் பலருடன் கலந்துரையாடப்பட்ட போது பல தகவல்கள் கிடைக்கப்பெற்றன.

பன்னிரண்டு வருடங்களாக இவர் கடமை-யாற்றியுள்ளார். அப்போதைய கற்றல் கற்பித்தல் முறைகள். வரவு, ஒழுக்கம் முதலான பல விடயங்கள் வியக்கத்தக்கவையாக இருந்திருக்கின்றது.

பாடத்திட்டங்கள் மிகவும் உயர்நிலையில் இருந்திருக்கிறது. உண்மையில் பழைய 5ம் தரம் தற்போதய க.பொ.த. (சா/த) அளவுக்கு உயர்வானது என பலர் கூறுவர். நிகண்டு - தமிழ் இலக்கண நூல். பழைய இதிகாச புராணங்கள் முதலானவற்றை பாடமாக்க வேண்டும்.

அதிபரின் கடமைகள் அக்காலத்தில் கிராமத்தில் தோம்புதராகவும் (பதிவாளர்) கிராமத்தின் முக்கிய விடயங்களை நடாத்துபவராகவும் - பல முரண்பாடுகளை தீர்த்து வைக்கும் சமாதான நீதவானாகவும் கடமையாற்றியுள்ளனர். திரு. அ. கணபதிப்பிள்ளை தலைமை ஆசிரியரின் கல்வி - சமய சமூகப் பணிகளைப் பற்றி அப்போது கல்வி கற்ற திருமதி. ஆ.தங்கப்பிள்ளை, திருமதி. க. பொன்னம்மா, திரு. மு. பொன்னுத்துரை முதலான பெரியோரின் வாயிலாக அவரது சிறப்பான பணியை அறிய முடிந்தது. அவரது மனைவியும் இங்கு ஆசிரியராக கடமையாற்றியுள்ளார். இவர்கள் மூதூரைச் சேர்ந்தவர்கள். இங்குள்ள மக்களுடன் மிகவும் நெருக்கமான உறவைப் பேணி சேவையாற்றியதை அறிய முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது உறவினர்கள் இன்னும் மூதூரிலும், திருமலையிலும் வாழ்கின்றனர். மகள் செந்தில் - மகன் தங்கராசா (பொலிஸ்) பத்மநாதன் (சுகாதார பரிசோதகர் - PHI), திருமதி. ராஜினி கணேசபிள்ளை - கூட்டுறவு உதவி ஆணையாளர் (ஓய்வு), இவர்களிடத்திலிருந்துதான் தகவலுக்கு நிழற்படப் பிரதிகளைப் பெறக்கூடியதாக இருந்தது. இவ்வுறவினர்கள் இன்றும் பள்ளிக்குடியிருப்பு மக்களுடன் உறவாக இருப்பதை அவதானித்தால் அதிபரும் அவரது மனைவியும் எவ்வளவு உறவாக வாழ்ந்திருப்பார்கள் என்பதை அறியமுடிகின்றது.

***வெஸ்லியன் மிசனிலிருந்து அரசாங்க பாடசாலையாக பொறுப்பேற்ற முதலாவது அதிபராகவும் கருதமுடிகின்றது.*** கிராமத்தின் அக்காலத்திற்கு ஏற்ற நிலையில் கல்வியை மேம்படுத்த அயராது உழைத்திருக்கின்றார். தம்பதிகளாக இங்கு தங்கியிருந்து பணியாற்றியமை நன்றியுணர்வுடன், அக்கால மாணவர் பார்த்தமையை அறியமுடிகின்றது.



## திரு. தம்பர் காசிநாதர். (1942 - 1945)

திருகோணமலையை பிறப்பிடமாகக் கொண்ட திரு.த. காசிநாதர் அவர்கள் தலைமை ஆசிரியராகவும் அவரது மனைவி இரத்தினபூபதி அவர்கள் ஆசிரியராகவும் இருவரும் இப்பாடசாலையியல் கடமை புரிந்தனர். அப்போது பாடாசாலையில் பெயர் தி/பள்ளிக்குடியிருப்பு அ.த.க. பாடசாலை. தரம் 1- 5 வரை வகுப்புகள் காணப்பட்டதாகவும் அப்போது கற்ற மாணர்களான க. நாகராசா, மா. கனகசிங்கம், க. சித்திரவேல், மு. பூபாலப்பிள்ளை, ஆ.கோணலிங்கம், ஆ.நாகேந்திரம், சு. கனகரெட்ணம், த. விசுவலிங்கம், க.சிவராசா, சி.காளிராசா போன்ற சம காலத்தவர் கற்றதாக திரு. க. நாகராசா (ஓய்வுநிலை ப.நோ.கூ. சங்க முகாமையாளர்) ஊடாக அறிய முடிந்தது.

அக்காலத்தில் கற்றல் - கற்பித்தல் மிகவும் சிறப்பாக இருந்ததாகவும், பாடசாலைக்கு சமூகமளிக்காதோருக்கு மிகவும் கூடுதலான தண்டனை கிடைப்பதாகவும் கூறினார். அக்காலத்தில் பாடசாலை சிறப்பாக இயங்கியதாகவும் தலைமை ஆசிரியர், ஆசிரியை இருவரும் பாடசாலை ஆசிரியர் விடுதியில் தங்கியிருந்தே கடமையாற்றினர். எமதூர் மக்களோடு மிகவும் அன்னியோன்னியமாக செயற்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்திலேயே கா. சிவபாலன் அவர்கள் பிறந்ததாகவும் அறிய முடிகின்றது. திரு. கா. சிவபாலன் அவர்கள் சட்டத்தரணியாக திருமலையில் கடமையாற்றியதோடு தமிழ் அரசுக் கட்சியின் முக்கிய பேச்சாளராக பல பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டதோடு இவர் திருகோணமலை பிரஜைகள் குழு முதலான சமூக சேவையில் ஈடுபட்டவர். இவர் தனது ஊர் பள்ளிக்குடியிருப்பு என சமூக வலைத்தளத்தில் ஒருமுறை பதிவிட்டிருந்தார். இவர் தற்போது டென்மார்க்கில் வாழ்கின்றார். இவர் ஊடாகவே திரு. காசிநாதர் அவரது மனைவி இரத்தினபூபதி ஆசிரியை அவர்களின் புகைப்படங்ளைப் பெற்றுக்கொண்டேன்.

இவர்களின் அர்ப்பணிப்பான சேவையூடாக இக்கிராம மக்கள் பல வழிகளில் முன்னேறினர். இவர்களுக்கு கிராம மக்கள் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.



## திரு. கே. அருளப்பு ரோச் டீ வாஸ் (1945 - 1951)

மூதூரைப் பிறப்பிடமாக கொண்ட திரு.கே.அருளப்பு ரோச் டீ வாஸ் அவர்கள் தலைமை ஆசிரியராக கடமையாற்றியுள்ளார். பாடசாலைச் சமூகத்துடன் இணைந்த பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்காக அயராது உழைத்துள்ளார்.

இவர் தமிழ் அரசுக் கட்சியின் உப தலைவராகவும் இருந்தவர். சமூக அக்கறையுடன் செயற்பட்டவர். டாக்டர் அன்ரனி அவர்களது தந்தையார். இவர்கள் எமதூருடன் நெருக்கமான உறவைப் பிற்காலத்திலும் பேணிவந்துள்ளார்.



## திரு. செபஸ்தியான் அன்ரனி பாய்வா (1952 - 1959)

மூதூரைச் சேர்ந்த செ.அ. பாய்வா அவர்கள் தமது குடும்பத்தாருடன் பாடசாலை ஆசிரியர் விடுதியிலும் தங்கியிருந்து கல்விச் சேவை புரிந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்திலேயே மாணவர்கள் தொகையும் அதிகரித்திருக்கிறது (40 - 50 வரை). இக்காலத்தில் கற்ற மாணவர்கள் ப.கணேஷமூர்த்தி, ஆ.குணராசரெட்ணம், க. வாலாம்பிகை, த. பங்கயம், த. கமலாதேவி, மா.பரமேஸ்வரி, க. சண்முகராசா, க. ஜீவரெண்டம், பொ.இரத்தினசிங்கம், த.சிதம்பரப்பிள்ளை, இ.சிவஞானம், ஆ.தங்கரெட்ணம், ச.கன்னிகா பரமேஸ்வரி, க. மயில்வாகனம், ஆ.துரைநாயகம், சு. சிவலிங்கம், வே. காளிராசா முதலான பலர் கல்வி கற்றனர். 7ம், 8ம் தரம் வரை வகுப்புகள் இங்கு இருந்ததை அறியமுடிகின்றது.

இக்காலத்தில்தான் தொடர்கல்விக்காக மட்/வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம், தோப்பூர், யாழ்ப்பாணம், மூதூர், திருகோணமலை, மட்டக்களப்பு முதலான வெளியிடங்களுக்கு சென்று சிலர் கல்வியைத் தொடர ஊக்கப்பட்டுத்தப்பட்டுள்ளனர்.

அதிபர் அவர்களின் புதல்வர்கள் திரு. சந்திரன் AI, திரு. பாய்வா, திரு.ஜெயராஜ் G.S., திருமதி சுகிர்தா ஜெகதீசன் (அதிபர்) முதலானோர் இக்கிராம மக்களுடன் பழைய நட்பைப் பேணி வருவதைப் பார்க்கும்போது அக்காலத்தில் கிராம மக்களுடன் மிகவும் நெருக்கமான அன்பான உறவை பேணி வந்துள்ளமையைக் காணலாம். கிராமத்தவர்களுடன் இணைத்து அவர்கள் உயர்வுக்காய் பணியாற்றிய இவர்களை என்றென்றும் மறக்க முடியாது.



### திரு. சரவணமுத்து முத்துக்குமார் (1960)

யாழ்ப்பாணம் மானிப்பாயை பூர்வீகமாகக் கொண்ட இவர் 13.10.1913ம் ஆண்டு மன்னார் விடத்தல் தீவில் பிறந்தவர். 1960ம் ஆண்டில் சில காலம் இப்பாடசாலையின் தலைமை ஆசிரியராக கடமையாற்றியுள்ளார். திரு. க. துரைரெட்ணசிங்கம் அவர்கள் ஆசிரியராக பணியாற்றிய காலத்தில் இவர் கடமையாற்றியதாக அறிய முடிகின்றது.

சமூகத்தினருடன் இணைந்து பாடசாலை வளர்ச்சிக்கு உதவியுள்ளார். இவரிடம் பல சிறந்த இயல்புகள் உள்ளதாகவும் குறிப்பாக ஆசிரியருக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையையும் கௌரவத்தையும் பேணி பாதுகாத்து கடமையாற்றிய கல்வியியலாளராகவும், கிராமத்தின் வளர்ச்சிக்கும் உதவியதாகவும் பல நற்பண்புள்ளவராக தமது கடமையை நிறைவு செய்தார் என அறிய முடிகின்றது.

## திரு. மரியான் இம்மானுவேல் குரூஸ் (1960 - 1968)



மூதூரைச் சேர்ந்த ம. இ. குரூஸ் அவர்கள் இப்பாடசாலையில் தலைமை ஆசிரியராக கடமையாற்றிய காலம் மாணவர் தொகை படிப்படியாக உயர்ந்த காலமாகும். சுமார் 68 மாணவர்கள் வரை கற்றார்கள். இக்காலத்தில் பல சிறந்த ஆசிரியர்களும் கற்பித்த காலம்.

| | | |
|---|---|---|
| திரு. பூ. சபாரெட்ணம் | - | மட்/பாண்டிருப்பு |
| திரு. க. இராசதுரை | - | மட்/பாண்டிருப்பு |
| திரு. வ.அ. இராசரெண்டம் | - | மூதூர் |
| திரு. க. துரைரெட்ணசிங்கம் | - | சேனையூர் |
| திருமதி. மேரி கந்தையா | - | பள்ளிக்குடியிருப்பு |
| செல்வி. நல்லம்மா | - | மட்/கல்லாறு |
| செல்வி. பொன்னம்மா | - | திருக்கோணமலை |

போன்ற பல ஆசிரியர்கள் பணியாற்றியுள்ளனர்.

இக்காலத்திற்குள் கற்றவர்கள் பலர் அவர்களில்...

நா. மகேஸ்வரன், க. புஸ்பராசா, க. தியாகராசா, பொ. கோபாலபிள்ளை, பொ. சரஸ்வதி, மு. தெய்வநாயகி, த. நவமணிதேவி, மு. பரமேஸ்வரி, ப.நவலோகம், ப. தங்கமணி, பொ. ஞானகி, பொ. முத்துலிங்கம், த.சிவப்பிரகாசம், கு.கணேசன், க. குணசேகரம், க. சரஸ்வதி, செ. சரஸ்வதி, செ.சண்முகம், க. தவராசா, வி. பொன்னம்பலம், ஆ. செல்வநாயகம், த.தெய்வானை, ச. சிவபாலன், க. சங்குபதி போன்ற இன்னும் பலர் கற்றனர்.

வாணிவிழாக்கள், விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றல் முதலானவை சிறப்பாக இயங்கியது. இக்காலத்தில் தான் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் க. தவராசா (1963) அவர்கள் சித்தியடைந்த காலப்பகுதியாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்கல்விக்குபாடசாலைத்தரம்இல்லாததாலும்தரம்உயர்த்துவதற்கான மாணவர் தொகை போதாததாலும் பல மாணவர்கள் தோப்பூர் மகா வித்தியாலயத்தில் கற்கச் சென்றனர். ஒரு சிலர் வெளி மாவட்டங்களுக்கும் சென்றனர்.

வெளி மாவட்ட ஆசிரியர்கள் ஆசிரியர்விடுதியிலும் - வீடுகளிலும் தங்கியிருந்து கற்பித்தனர். படிப்படியாக கிராமத்தின் கல்வி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டகாலம். ம.இ.குரூஜ் அதிபர் அவர்களுக்கும் ஆசிரியர் விடுதியில் தங்கியிருந்து கல்விச் சேவை செய்தனர். இவரது பிள்ளைகளும் இக்கிராம மக்களுடன் இன்று இணைபிரியா நட்புடனிருக்கிறார்கள். குறிப்பாக ஜெகதீஸன் குரூஸ் ADE (Eng) அவர்கள் தி/பள்ளிக்குடியிருப்பு என்றால் மறக்க முடியாத நினைவுகளைக் கூறுபவராக இருப்பதைக் காணலாம்.



## திரு. வே. கிருஷ்ணபிள்ளை

## 1968 - 1970

கொழும்பைப் பிறப்பிடமாகவும் கோட்டக் கல்லாறை வாழ்விடமாகவும், மூதூரை வதிவிடமாகவும் இருந்து - ஆங்கில ஆசிரியராக, தலைமை ஆசிரியராக இங்கு 1968-1970 களில் சிறப்பாக கடமையாற்றியவர் பாடசாலைச் சமூகத்துடன் இணைந்து பல நற்பணிகளை ஆற்றியவர். கலைமதி விளையாட்டுக் கழகம் என பெயர் வைத்த காலத்தில் இவரும் அதற்கு ஆலோசகராக இருந்தார் என அறிய முடிகின்றது.

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நேர்த்தியாக நடைபெற உதவியாக செயற்பட்டமையை அறிய முடிகின்றது.



## திரு. மிக்கேல் குரூஸ்

1971ம் ஆண்டில் தலைமை ஆசிரியராக கடமையாற்றினார். மூதூரைச் சேர்ந்தவர். மாணவர்களின் கல்வி உயர்வில் மிகவும் அக்கறையுடையவராக திகழ்ந்ததாகவும் அறிய முடிகின்றது. கணித பாடத்தைப் போதிப்பதில் மிகவும் சிறந்து விளங்கினார். என இவரிடம் கற்ற பல மாணவர்கள் மூலமாக அறியமுடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. ஆ. கனகரெட்ணம் - 1971 - 1975



இக்கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட முதல் ஆசிரியராவார். 1971ம் ஆண்டிலிருந்து 1975ம் வரை ஆசிரியராக அதிபராக கடமையாற்றினார். அப்போது ஆசிரியர்களாக திருமதி மேரி கந்தையா, திரு. ஆ. குணராஜரெட்ணம் ஆகியோர் கடமையாற்றினர்.

பாடசாலைக் காணி வயல் நிலமாக (ஒரு ஏக்கர்) மாரிகாலத்தில் நெற்செய்கை பண்ணப்படும் இடமாக இருந்தது அவற்றை மக்களது சிரமதான உதவியுடன் வரவைகளை - திருத்தி உள்ளக விளையாட்டு மைதானமாக திருத்தியமைக்கப்பட்டது. தரம் 5 வகுப்புகள் உள்ளதால் அவர்களுக்கான இல்ல விளையாட்டுப்போட்டிகள் இங்கு நடைபெற ஏற்பாடாகியது.

அப்போதிருந்த 80 அடி X 20 அடி சீற் போடப்பட்டிருந்த கட்டடத்தின் ஒரு பகுதிக்கு மேடை சிரமதானத்தின் அடிப்படையிலேயே அமைக்கப்பட்டது. இம்மேடை பாடசாலை வாணி விழாக்கள் - கலை நிகழ்வுகள் நடாத்தப் பயன்பட்டது. அத்துடன் திருகோணமலை கோணேஸ் - பரமேஸ் இசைக்குழுவினரின் இசைக்கச்சேரி நிகழ்வுகள் இம்மேடையில் இக்காலத்தில் இடம்பெற்றது. அத்துடன் கலைநிகழ்வுகளில் நாடகங்கள், பேச்சுக்கள் கவிதையரங்குகள் முதலான பல கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மிக நேர்த்தியாக இடம்பெற்றது. மாணவர்கள் தொகையும் கூடிக்கொண்டிருந்தது. தேவாரங்கள் பண்ணோடு இசையோடு பாடிக்காட்டி கற்பிக்கும் திறனுள்ளவராக திகழ்ந்தார்.

பொது மக்களுடன் இணைந்து கலைமதி விளையாட்டுக் கழகத்தின், இசைக்குழுவின் இயக்குனராகவும், கி.மு. சங்கம், ப.நோ.கூட்டுறவு சங்கங்கள், ஆலயங்கள், சமய நடவடிக்கைகள், பொது விடயங்கள், தமிழ் இனப் பற்றாளராய் பல கிராம முன்னேற்ற விடயங்களில் இக்காலத்திலும் ஈடுபட்டுழைத்தவர்.

முடிவில் 6ம் தரம் வைத்து உயரத்த முடியாத நிலை கணித / விஞ்ஞான ஆசிரியர் தட்டுப்பாடு, மாணவர் தொகை போதாமை பௌதீக வளப் பற்றாக்குறைகள் முதலான காரணங்களால் 6ம் தர மாணவர்களை சேனையூர் மகா வித்தியாலயத்திற்குசெல்ல வழிகாட்டினார். தொடர்ந்து அதிபர் பதவியை விட்டு - ஆசிரியராக சேனையூர் மகா வித்தியாலயத்திற்கு சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் பல மாணவர்கள் உருவானார்கள். பட்டதாரிகளாகவும் இன்று அதிபர்களாக, கோட்டக்கல்விப் பணிப்பாளர்களாக கடமையாற்றுகின்றர். ஓய்வும் பெற்றுள்ளனர்.

கிராமத்தின் கல்வியில் விழிப்புணர்வு ஏற்பட்ட காலம் எனலாம். ஆசிரியராக சேனையூர் ம.வி. இருந்து ஓய்வுக்கு முதல் ஒரு வருடம் (55 ஆவது வயதில்) தனது மாணவன் அதிபராக இருக்கும் போது கலைமகள் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக நேரமுகாமைத்துவம், கற்பித்தல் முறைமைகள், ஆசிரியத்துவம் பேணல் முதலான விடயங்களில் முன்மாதிரியாக இருந்து சிறப்பாக கடமையாற்றி ஓய்வு பெற்றார்.



## திரு. க. இராச துரை

மட்/பாண்டிருப்பைப் பிறப்பிடமாக கொண்டவர். ஆசிரியராக முதல் நியமனம் பெற்று இங்கு கடமையாற்றியவர். உதவி ஆரியராக இருக்கும் போது அக்கால இளைஞர்களுடன் இணைந்து விளையாட்டுப் போட்டிகள் கலை நிகழ்வுகளை நடாத்தியவர்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் கந்தையா - தவராஜா அவர்களை (1963) சித்தியடையச் செய்தவர். கலை ஆர்வமுள்ள இவர் "பூம்புகார்" எனும் கையெழுத்துச் சஞ்சிகையை இராசையா - சிவஞானம் மாணவனின் கையெழுத்து மூலம் உருவாக்கிவெளியிட்டவர். ஆசிரியராயிருந்த காலத்தில் மாணவர்கள் தங்கிநின்று கற்கும் வசதிகளையும் ஏற்படுத்தியவர். திரு. சு. சிவலிங்கம், வே. காளிராசா, இ. சிவஞானம், க. புஸ்பராசா, பொ. முத்துலிங்கம், நா. மகேஸ்வரன், முதலான பல மாணவர்கள் இரவில் தங்கி நின்று கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தி கற்றலுக்கு உதவியவர். பல நாடகங்கள் பழக்கி மேடை ஏற்றியவர்.

அதிபராக 1975 - 1985 வரை கடமையாற்றினார். தொடர்ந்தும் தமது பணியை சிறப்பாக பணியாற்றினார். புதிய கல்வித்திட்டம் உருவாகிய காலம் தரம் 1 - 5 வரை மட்டும் வகுப்புகள் உள்ள பாடசாலையானது. முதல் 6, 8ம் வகுப்பறையில் இருந்து ஆசிரியர் பற்றாக்குறைகள் காரணமாக தொண்டராசிரியர்களை நியமித்து பாடசாலைப் பணிகளை நிறைவு செய்தார். செ. சரஸ்வதி, செ. புஸ்பராணி ஆகியோர் இக்காலத்தில் தொண்டராசிரியர்களாக கடமையாற்றினர். இவரது காலத்தில் திரு. க. கனகசிங்கம், திரு. மு. மாணிக்கன் முதலான ஆசிரியர்கள் சிறப்பாக கடமையாற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. இரா. கோணாமலை



12.13.1985ல் திரு. க. இராசதுரை அவர்கள் இடமாற்றம் பெற்றதும். திரு. ஆ. செல்வநாயகம் அவர்களிடம் ஒப்படைத்துச் செல்ல தொடர்ந்து திரு. இரா. கோணாமலை அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். சிறந்த நிர்வாகத்திறனும் ஆங்கிலம் கற்பிப்பதிலும் ஆர்வமாக செயற்பட்டவர். ஆறாம் தரம் வைப்பதற்கான முயற்சிகள் மிக வேகமாக இடம்பெற்ற காலம். இவரும் முயற்சியில் ஈடுபட்டார். போராட்ட காலங்களின்போது போக்குவரத்து தடங்கல் காரணமாக் தி/மூ/கட்டைப்பறிச்சான் விபுலானந்தா வித்தியாலயத்திற்கு தற்காலிக இணைப்பில் சென்று பின்னர் நிரந்தர இடமாற்றத்தைப் பெற்றுக்கொண்டார்.

**1985/86 இருந்து 1998 வரை அதிபராக திரு. ஆ. செல்வநாயகம் அவர்கள் கடமை ஏற்றார்.**

1986 - 2020 வரையான செயற்பாடுகள்.

அபிவிருத்திகள் ஆண்டு ரீதியாக குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காலத்தில் பல அதிபர்கள். ஆசிரியர்கள் சிறப்பாக பணியாற்றினர். பாடசாலைச் சமூகமும் பாரிய பங்களிப்பை செய்ததனால் துரித அபிவிருத்தியடைந்துள்ளது. இன்று மனித வள விருத்தியுடைய கிராமமாக திகழ்கின்றது.

- பாடசாலை ஆரம்பித்த காலம் தொடக்கம் 1986 வரை தரம் III பாடசாலையாக ஆரம்பப்பிரிவு மட்டும் இயங்கியது.
- 1986.01.01 இல் இருந்து தரம் II பாடசாலை. தரம் 1 - தரம் 11 (க.பொ.த. (சா/த)) வரை.
- 1992 இல் தரம் 1C தரமாக உயர்த்தப்பட்டது. தரம் 1 - தரம் 13 (க.பொ.த. (உ/த)) (கலை, வர்த்தகப் பிரிவுகள்) வரை.
- 1995இல் கலைமகள் இந்துக் கல்லூரி என பெயர் மாற்றப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருமதி. சிவம்மா கணபதிப்பிள்ளை

1929 - 1941 காலப்பகுதியில் கடமையாற்றியவர். திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமை ஆசிரியரின் மனைவி. ஆசிரியர் விடுதியில் தங்கியிருந்து இக்கிராம பிள்ளைகளின் கல்விக்காக உதவியவர். சமூகத்துடன் இணைந்து சமூக சேவையும் செய்துள்ளார்.

திரு.அ.கணபதிப்பிள்ளை அவர்கள் இக்கிராமத்திற்கு ஆற்றிய பெரும் சேவைக்கு உறுதுணையாக இருந்து பெண்கள் கல்விக்கு ஊக்கமளித்தவர்.



## திரு. முத்துக்குமார் - கனகசபை

**1934 - 1937**

திரு. முத்துக்குமார் - கனகசபை அவர்கள் 28.12.1908ம் ஆண்டு பள்ளிக்குடியிருப்பில் பிறந்துள்ளார். இவர் தமது கல்வியை அக்காலத்தில் இங்கிருந்து வெஸ்லியன் மிசன் இயங்கிய பாடசாலையில் கற்று தொடர்ந்து திருகோணமலையில் கற்றதாக அறியமுடிகின்றது. ஆசிரியராக 17.07.1929ல் முதல்நியமனம் பெற்றார். 1934 - 1937ம் ஆண்டு காலங்களில் தி/பள்ளிக்குடியிருப்பு அ.த.க. பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றியுள்ளார். இக்கிராமத்தினுடைய முதல் ஆசிரியராக கடமையாற்றியதாக அறியமுடிகின்றது. இவர் மன்னம்பிட்டி, தோப்பூர், சம்மாந்துறை, வாழைச்சேனை முதலான பாடசாலைகளிலும் ஆசிரியராக கடமையாற்றியுள்ளார்.

இவரது சகோதரர்களாக மு. கனகம்மா, மு. ஆரியத்தம்பி ஆகியோர் இங்கு வாழ்ந்தவர்கள். இவர் ஈச்சிலம்பற்றிலே திருமணம் முடித்து அங்கேயே வாழ்ந்திருக்கிறார்.

அவரது மகன் திரு. க. ஆனந்தன் அவர்களிடம் மேற்படி விபரங்களைப் பெற்றுக்கொண்டோம். இவரது பிள்ளைகள் திரு. க. சிவபாலன் மிருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ப்புத்துறை வைத்திய உதவியாளராக கடமையாற்றியவர். க.சாரதா, க.சரஸ்வதி, க. ரோகினி முதலானோர் வாழ்கின்றனர். இவர்கள் ஈச்சிலம்பற்றிலும், மட்டக்களப்பு, திருகோணமலையில் வாழ்கின்றனர். எமது கிராமத்தின் முதல் ஆசிரியரை பெருமையுடன் தெரியப்படுத்துவதில் மகிழ்வடைகிறேன்.

## திருமதி. இரத்தினபூபதி காசிநாதர்



1941 - 1947களில் திரு. காசிநாதர் அவர்கள் அதிபராகவும் அவரது மனைவி திருமதி. இரத்தினபூபதி அவர்கள் ஆசிரியையாகவும் கடமை புரிந்தனர். இவர்கள் திருகோணமலையில் இருந்து இங்குவந்து கடமைபுரிந்தனர். பாடசாலையின் ஆசிரியர் விடுதியிலேயே தங்கியிருந்து கடமையாற்றினர். கல்வி அபிவிருத்திக்காக இருவரும் இணைந்து செயற்பட்டனர். கிராம மக்களும் மாணவர்களும் மிகவும் ஒத்துழைப்பாக செயற்பட்டனர். இவரது மகன் சட்டத்தரணி திரு. கா. சிவபாலன் அவர்கள் இங்கு தி/பள்ளிக்குடியிருப்பிலேயே பிறந்தவர். திருகோணமலை மாவட்ட பிரஜைகள் குழுத்தலைவராக இருந்து சட்டத்தரணி சிவபாலன் அவர்கள் பள்ளிக்குடியிருப்பு எனது ஊர் என பெருமையாக கூறுவார். தற்போது இவர் டென்மார்க்கில் வாழ்கிறார். இவரிடமிருந்தே அவரது பெற்றோரின் விபரங்களும் புகைப்படங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டது.

## திரு. சின்னத்தம்பி - தம்பியப்பா
## திருமதி. தம்பிராசா - அன்னநேசம்

மட்/ஆரையம்பதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் 1953 - 1957ம் ஆண்டுகளில் இங்கு கடமையாற்றியுள்ளனர். திரு.திருமதி. கந்தையா அவர்களுடனிருந்தே கடமைக்கு சமூகமளித்துள்ளனர்.

கிராம மக்களுடனிருந்து கல்வி வளர்ச்சிக்காக அரும்பணியாற்றியுள்ளனர். இன்றும் கிராமத்தினருடன் தொடர்புகளில் உள்ளனர். இங்குள்ளவர்களை மிகவும் நேசிப்பவர்களாக மிகவம் அரும்பணியாற்றியமை அறியமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருமதி. பொன்னம்மா கோபாலபிள்ளை

**01.02.1957 - 06.01.1963**

திருகோணமலை உப்புவெளியைப் பிறப்பிடமாக கொண்டவர். இப்பாடசாலைக்கு முதல் நியமனம் பெற்று வந்து திரு. சி.கந்தையா அவர்களின் வீட்டில் தங்கியிருந்து கடமையாற்றினார். மிகவும் கண்டிப்பான ஆசிரியராக இருந்தார்.அனைவரும் பயந்து கல்வி கற்றவர். மாணவர் உயர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்தவர். இன்றும் பள்ளிக்குடியிருப்பு மக்களுடன் நல்லுறவைப் பேணி வருகின்றார்.



## செல்வி. ந. நல்லம்மா

மட்/கல்லாறைப் பிறப்பிடமாக கொண்ட இவர் தனது முதல் நியமனத்தை எமது பாடசாலையில் தொடங்கினார். திரு. ச. ஆறுமுகம் அவர்களின் வீட்டில் இருந்து கடமைக்குச் சென்றார். மிகவும் அன்புள்ளம் கொண்டவராகவும் உதவும் மனப்பாங்குடனும் மாணவர் கல்விக்காக அயராது உழைத்தவர். சிறந்த ஆசிரியத்துவமுடையவராக மாணவர்களின் உயர்வுக்காக சிறப்பாக கடமையாற்றியவர். தொடர்ந்தும் பள்ளிக்குடியிருப்பு மக்களுடன் தொடர்புடையவராக கல்விக்காக உதவும் மனப்பாங்குடன் செயற்பட்டு வந்தவர். இன்றும் ஊர் மக்கள் நன்றியுணர்வுடன் உள்ளனர்.



## திரு. ஞானமுத்து

மூதூரைச் சேர்ந்த திரு. ஞானமுத்து அவர்கள் 1962-1963 காலத்தில் ஆசிரியராக கடமையாற்றியுள்ளார். மிகச்சிறந்த கற்பித்தல் நுட்பங்களை பயன்படுத்தக்கூடியவர். சித்திரம் வரைவதிலும் கற்பிப்பதிலும் ஆற்றலுள்ளவர்.

ஒருமுறை இரண்டாம் தரம் நாம் கற்கும்போது அப்போதைய சிறுவர் மேசை வாங்கு ஒன்று கால் விரலில் விழ நகம் வெடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தம் வெளியேறியது. அப்போது இவ் ஆசிரியர் தனது வேட்டியின் ஓரத்தில் கிழித்தெடுத்து அம்மாணவரின் விரல் அடிப்பகுதியில் இறுக்கமான கட்டைப் போட்டு பாரிய இரத்தோட்டத்தை தடை செய்தார். முதலுதவி செய்வதில் மிகவும் மனித நேயம் மிக்கவராக இருந்தமையை உணர முடிந்தது.

மூதூர் பகுதியில் பல பாடசாலைகளில் சிறப்பாக செயற்பட்டுள்ளமையை அறியமுடிகின்றது. சேனையூர் மத்திய கல்லூரியின் முதல் அதிபர், புனித அந்தோனியார் மகா வித்தியாலய அதிபராகவும் மற்றும் பல பாடசாலைகளில் சேவையாற்றியுள்ளார்.

அக்காலத்தில் ஆசிரியர்களுக்கான விசேட சேவைத் தரத்தையும் பெற்றிருந்தார். மூதூர் பிரதேசத்தில் சிறந்த கல்வியாளராக திகழ்ந்தமையை அறியமுடிந்தது.



## திருமதி. சின்னமணி மேரி கந்தையா

1959 - 1978 வரை இப்பாடசாலையின் ஆசிரியையாக கடமையாற்றியுள்ளார். ஆரம்பக் கல்விக்கு சிறப்பாக பணியாற்றியதுடன் கிராமத்தின் - பெண்கள் தலைமைத்துவம் தாங்கியவராக சகல சமூக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டவர். முன்மாதிரியாக செயற்பட்டு கிராம வளர்ச்சிக்காகவும் கல்வியில் உயர்வடைவதற்காகவும் பாடுபட்டவர். அதிபர்கள் இல்லாத பல சந்தர்ப்பங்களில் பாடசாலையைப் பொறுப்பேற்று நடாத்தியவர். வெளியூர் ஆசிரியர்களை ஆதரித்து கடமை புரிய வழிசமைத்தவர்.

பல வறுமைக் கோட்டின் கீழ் இருந்தவர்களுக்கு உதவியவர். தனது கணவரின் நற்சேவைக்கு உறுதுணையாயிருந்து பணியாற்றியவர்.



## திரு. வ.அ. இராசரெட்ணம்

மூதூரைச் சேர்ந்த திரு. வ.அ. இராசரெண்டம் அவர்கள் 1960 - 1965ம் ஆண்டு காலப்பகுதியில் இப்பாடசாலியல் கற்பித்தவர். ஆங்கிலம் - தமிழ் பாடங்களைப் போதித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலத்தையும் மாணவர்கள் கற்க வேண்டுமென்ற அவாவில் பல சொற்களுக்கான எழுத்துக்களை மனனம் செய்யச் செய்தார்.

மாணவர்களை விவசாய நடவடிக்கையில் ஈடுபடச் செய்வதற்காக அப்போதைய அரசாங்கத்திட்டமான களை பிடுங்குதலுக்காக மாணவர்களை வயலுக்கு அழைத்துச் செல்லும் பொறுப்பை ஏற்றிருந்தார்.

ஒரு நாள் இப்பணிக்காக பள்ளிக்குடியிருப்புக்கும் - தோப்பூருக்கும் இடையிலுள்ள தொத்துவயல் எனும் வயலில் களை பிடுங்குவதற்காக மாணவர்களை அழைத்துச்சென்றார். களை பிடுங்கிக் கொண்டிருந்த போது 7ம் தரத்தில் கற்றுக்கொண்டிருந்த பாடசாலையின் மாணவ தலைவன் செல்வன் சு. சிவலிங்கம் என்பவர் பாம்புக் கடிக்கு இலக்கானார். அங்கிருந்த பொறுப்பாசிரியர் திரு. வ.அ. இராசரெட்ணம் அவர்கள் தமது வேட்டியைக்கிழித்து அம்மாணவனின் காலிலே விசம் மேலேறாத வகையில் இறுகக் கட்டி காப்பாற்ற முனைந்தார்.

இச்சம்பவத்தின் போது உடனிருந்தவன் எனும் வகையில் தாங்க முடியாத வேதனையடைந்தோம். அவரது வகுப்பு மாணவரான வே. காளிராசா அவர்களுடன் இணைந்து வீட்டுக்கு கொண்டு வந்து சேர்ந்தோம். சில மணித்தியாலத்தில் அவர் உயிரிழந்தார்.

தாய் நாகம்மாவுக்கு ஒரே ஒரு மகன் ஊரே பெரும் கவலையில் ஆழ்ந்த சோகக் காட்சி இன்றும் நினைவில்.

இலங்கையின் முதுபெரும் எழுத்தாளரான இலக்கிய கலாநிதி, தமிழ் ஒளி முதலான சாகித்திய மண்டல பரிசில்களையும் பெற்ற இவர் இங்கு கற்பிக்கும் காலத்தில் எமது கிராமத்தில் ஏற்பட்ட வயல்களின் விளைச்சல் இன்மையால் கோயில் ஐயருக்கான வரி செலுத்த முடியாமையால் ஏற்பட்ட சம்பவத்தை கருவாகக் கொண்டு "அபிஷேகம்" எனும் சிறுகதையை எழுதியுள்ளார். இதில் "பிடி வண்ணக்கர் சாவியை" எனும் பதம் குறிப்பிடத்தக்கது. இக்கதையில் கிராமத்தில் வரலாற்றுத்தத்துவம் புதைந்துள்ளமையை ஆழமாக வாசிக்கையில் அறிய முடியும். (இக்கதையை 2000 ஆண்டு கும்பாபிசேக மலரில் பதிப்பித்துள்ளேன்)

1990ல் எமது பாடசாலைக்கான பாடசாலைக் கீதத்தை அவரே எழுதித்தந்துள்ளார். அதிலும் எமது கிராமத்தின் வரலாற்றியலை இயம்புவதைக் காணலாம். ஆங்கிலத்தை சிறப்பாக போதித்ததோடு கிராமத்தின் உயர்ச்சிக்காக உழைத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. பூபாலபிள்ளை சபாரெத்தினம்
## 1958 - 1964



மட்டக்களப்பு பாண்டிருப்பைச் சேர்ந்த திரு. சபாரெட்ணம் அவர்கள் ஆசிரிய பயிற்சியின் பின் கண்டி. இரத்தினபுரி பாடசாலைகளிலும் கற்பித்து தி/நல்லூர் அ.த.க. வித்தியாலயத்தின் தலைமை ஆசிரியராகவும். தி/பள்ளிக்குடியிருப்பு அ.த.க. பாடசாலையின் உதவி ஆசிரியராகவும், கடமையாற்றினார். பின்னர் பாண்டிருப்பில் உதவி அதிபராக, அதிபராக கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ளார்.

1958 - 1964ம் ஆண்டு காலத்தில் கற்பித்தார். சிறந்த புலமையாளர். கிராம மக்களுடன் நல்ல நட்பைப் பெணி இணைத்து செயற்பட்டார். பாடசாலைத் தோட்டம், கலை நிகழ்வுகளிலும், கற்றல் கற்பித்தல் நிகழ்வுகளிலும் சிறப்பாக செயற்பட்டார்.

## திரு. க. துரைரெட்ணசிங்கம்



01.03.1965 - 1968 சேனையூரைச் சேர்ந்த திரு. க. துரைரெட்ண சிங்கம் அவர்கள் இங்கு சிறப்பாக பணியாற்றினார்.

வேட்டியும் நெசனலும் அணிந்து அழகான இளைஞராக இருந்தார். சாரணர் இயக்கம் ஆரம்பிக்கவும், கோயிலுக்கு வேட்டி அணிந்து செல்லல் முதலான விடயங்களில் கூடுதலான கவனம் செலுத்தினார். சமய பாடம் கற்பிக்கையில் தேவாரங்களை பண்ணுடன் பாடிக் கற்பித்தார். கரும்-பலகையில் மிகவும் அழகாக நேர்ந்தியாக எழுதிக்கற்பிப்பதோடு அதனை மாணவர்களில் எழுத்திலும் கவனம் செலுத்தினார். 6ம், 7ம் தரங்களை தொடர்ந்து வைப்பதற்காகவும் அப்போதய இவ் உயர் வகுப்புக்களுக்கும் சகல பாடங்களையும் கற்பிக்கும் ஆற்றலுள்ளவராகவும் திகழ்ந்தார்.

சக ஆசிரியர்கள், தலைமை ஆசிரியருடனும் ஊர் மக்களுடனும் நல்லுறவை பேணி வந்தார். அனைவரும் சின்ன ஐயா என்று அன்பாக அழைப்பர். இப்பொழுதும் அனைத்து மாணவர்களின் பெயர்களையும் ஞாபகமாக வைத்திருந்து பேர் சொல்லி அழைப்பார். அவர்கள் அகமகிழ்வதை அறிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை சேனையூரைச் சேர்ந்த கு. கனகசிங்கம் (வட்டவிதான்) அவர்கள் திரு.க.துரைரெட்ணசிங்கம் அவர்களை சந்திக்க வந்த வேளை பாடசாலை வாயிலில் மேற்பகுதியில் இரு கட்டைகளிலும் முற்கம்பி கட்டப்பட்டிருந்தது. அவர் அவ்வாயிலைக் கடக்கும்பொது மேலிருந்த கம்பி அவரின் நெற்றியில் ஆழமாக கிழித்துவிட அதிக இரத்தம் வெளியானது. உடனே ஆசிரியரவர்கள் முதலுதவிக்காக உடன் தனது வேட்டியின் கரைப்பதியை கிழித்து நெற்றியிலே கட்டுப்போட்டு வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றார். உடன் உதவும் முதலுதவி மனப்பான்மை ஆசிரியர்களுக்கு அவசியம் என்பதை அந்த வகுப்பிலிருந்து அனுபவித்த உணர்வு இன்றும் நினைவுகளில்....

மாணவர்களின் கல்வி உயர்ச்சிக்கான அடிப்படைத் திட்டங்களை வகுத்திருந்தார். சேனையூர் மகா வித்தியாலய்ததில் நடைபெற்ற விளையாட்டப் போட்டிக்கு எமது வகுப்பு மாணவர்களை அழைத்துச் சென்று தமது வீட்டில் தங்கியிருந்து மறுநாளே மீண்டு வந்தோம். விருந்தோம்பல் உபசரிப்புகளும் சிறப்பாக இருந்தது.

பாராளுமன்ற உறுப்பினரான பின்பும் எமது கல்லூரிக்கு பல உதவிகள் செய்துள்ளார். போட்டோ கொப்பி மெசின், கதிரைகள், விளைாட்டு மைதனா பெவிலியன், மைதான திருத்தம் மதில் முதலான அபிவிருத்திக்கு உதவியதோடு வீட்டுத் திட்டங்கள் வீதிகள், அபிவிருத்தி என கிராமத்திற்கும் பல உதவிகள் வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.



## திருமதி. கமலராணி செல்வநாயகம்

1986 - 1996

1986ல் கலைமகள் வித்தியாலயத்திற்கு தரம் ஆறு வகுப்பை ஆரம்பிப்பதற்கு கணித/விஞ்ஞான ஆசிரியர் இன்றி நீண்ட காலமாக முடியாதிருந்தது. பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியரான இவரின் சம்மதக்கடிதம் கல்வித் திணைக்களத்திற்கு சமர்ப்பித்த பின்பே 6ம் தரம் வைப்பதற்கான அனுமதி கிடைக்கப்பெற்று பாடசாலை தரம் II க்கு உயர்வு பெற்றது. இதனால் கல்வியைத் தொடர முடியாமல் இருந்தவர்கள், இடைவிலகியிருந்த மாணவர்கள், க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடையாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தவர்கள் அனைவரையும் பாடசாலையில் இணைத்து சிறந்த பெறுபேறு கிடைக்க வாய்ப்பேற்பட்டது. விஞ்ஞான பாடத்தில் 82.5% சித்தியும் கிடைத்தது.

க.பொ.த (உ/த) விஞ்ஞானப் பிரிவுக்கு மாணவர்களை திருமலை இந்துக் கல்லூரிக்கு அனுப்பி அவர்கள் சித்தியடைந்து பயிற்றப்பட்ட பட்டதாரிகளாகி இன்று சிறந்த கணித, விஞ்ஞான ஆசிரியர்களாக திகழ்கின்றனர்.

பாடசாலையின் நிகழ்வுகள் அனைத்தையும் சிறப்பாக செய்ததுடன் அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தும் (SLPS-I) தொடர்ந்து விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றினார்.

வாணிவிழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் முதலானவற்றை பெற்றார், உயர்தர மாணவர்களைக் கொண்டும் சிறப்பாக செயற்படுத்தி மாணவர் நலனோம்பலுடன் ஒழுக்கக் கட்டுப்பாட்டிலும் மிகக் கவனமாக நெறிப்படுத்தினார்.

## செல்வி. சின்னக்கிளி செல்வராசா



1987ல் இப்பாடசாலைக்கு நியமிக்கப்பட்டவர். பயிற்றப்பட்ட மனைப்பொருளியல் ஆசிரியர். போராட்ட காலத்திலும் சேனையூரிலிருந்து தினமும் சமூகமளிப்பார். பிரதி அதிபராகவும் நீண்டகாலம் கடமையாற்றினார். சிறந்த நிர்வாக திறன் கொண்டவர். ஏனைய ஆசிரியர்களையும் இணைத்து செயற்பட்டார். பல நாட்களில் ஏனைய ஆசிரியர்களுடன் 4Km நடையாக வந்து கற்பித்தார்கள். பாடசாலை விடுகை நேரத்தில் எமது உயர்தர மாணவர்கள் இவர்களை ஏற்றிச் செல்வார்கள்.

பாடசாலையில் நிர்வாக விடயங்களில் மிகக் கவனமாக செயற்பட்டார். அனைத்து இணைக்கலைத்திட்ட செயற்பாட்டு விழாக்களிலும் சிறப்பாக செயற்பட்டவர். இப்பாடசாலையின் வளர்ச்சியில் இவரது பங்கும் பயன்மிக்கதாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலையின் 1985 தொடக்கம் 2020 வரை

***12.02.1985ல் க. இராசதுரை அதிபர் அவர்கள் திரு. ஆ. செல்வநாயகம் அவர்களிடம் பாடசாலையை ஒப்படைத்து தொடர்ந்து திரு. இரா. கோணமலை அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டு சில காலத்தின் பின் தி/விபுலானந்தா வித்தியாலயத்திற்கு இணைப்பில் சென்று நிரந்தர இடமாற்றம் பெற்றார்.***

1985 தொடக்கம் 2020 முடிவு வரை பல்வேறு மாற்றங்களும் - துரித அபிவிருத்திகளும் இடம்பெற்றுள்ளன. இக்கால அபிவிருத்திகளை பல அதிபர்கள் ஆசிரியர்களினதும் பாடசாலைச் சமூகத்தினரின் பாரிய பங்களிப்புடன் இடம்பெற்றுள்ளன.

ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் பெரும்பாலும் ஆண்டு ரீதியாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வவ்காலங்களில் கடமையாற்றியவர்களின் அர்ப்பணிப்புகள் பாடசாலைச் சமூகத்தின் ஒத்துழைப்புகள் அளப்பரியன.

போராட்ட காலம் உயிர் அச்சுறுத்தலான காலத்திலும் இக்கிராமத்தின் கல்வி அபிவிருத்திக்கு உதவியவர்களை மறக்க முடியாது.

- துரித கல்வி அபிவிருத்தியில் பாடசாலை
- பௌதீக வளங்களும் அபிவிருத்தியும்
- 1985ன் பின் பௌதீக வளத்தில் பாரிய மாற்றங்கள்
- பாடசாலை அபிவிருத்தியில் எகெட் (EHED) நிறுவனத்தின் பங்களிப்பு
- பாடசலையின் தர உயர்வுகளும் பெயர் மாற்றங்களும்.
- 1945 - 1985 கால கல்வி நிலை.

முதலான சிறு தலைப்புகளில் 1985 ஐ தொடர்ந்து ஏற்பட்ட முன்னேற்றகரமான செயற்பாடுகளைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துரித கல்வி அபிவிருத்தியில் பாடசாலை

1986இல் தரம் II பாடசாலையாகவும், 1992இல் தரம் 1C பாடசாலையாகவும் தர உயர்வு பெற்று தி/கலைமகள் இந்துக்கல்லூரியாவதற்கான கால துரித கல்விச் செயற்பாடுகளும் தொடர்ந்து இற்றைவரை பல கல்வி - கலைத்திட்ட அபிவிருத்திகள் ஏற்பட்டுள்ளன. அவைகளில் குறிப்பாக...

**1986இல் ஆறாம் தரம் (6) ஆரம்பிப்பதற்கு** பாடசாலை அபிவிருத்திச்சங்கம், கிராமோதய சபையின் முயற்சியினால் மாவட்ட கல்வித் திணைக்களத்தால் அனுமதி வழங்கப்பட்டது. உடனடியாக தரம் 6ஐ ஆரம்பித்தோம். ஒரு மாதத்தின் பின் விஞ்ஞான, கணித ஆசிரியர் நியமிக்க முடியாதிருப்பதாகவும் ஒரு மைல் தூரத்தில் தோப்பூரில் மகா வித்தியாலயம் உள்ளதாலும், சேனையூர் மகா வித்தியாலயத்திலும் கற்கலாம் என காரணம் காட்டி வழங்கப்பட்ட அனுமதியை இரத்துச் செய்து கடிதம் அனுப்பியிருந்தார்கள். பெரும் கவலை அடைந்தோம்.

பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியரான மு. கமலராணி ஆசிரியரின் சம்மதக் கடிதம் பெற்று மாவட்டக் கல்வித் திணைக்களத்திற்கு கொடுத்தும் - மூதூர்க் கல்விக் கோட்டத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆ. குணராசரெட்ணம் அவர்களின் சிபார்சினாலும் முயற்சியினாலும் மீண்டும் ஆறாம் தரத்தை தொடர்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது. இவ் அனுமதி 8ம் தரத்தோடு நில்லாது **தரம் II பாடசாலையாக க.பொ.த (சா/த) வரை தரமுயர்த்த அனுமதியும் பெறப்பட்டது.**

1985இல் சில காலம் தனி ஒரு ஆசிரியர் பாடசாலையாகவும் இருந்தது. 1986, 87ஆம் ஆண்டில் தொண்டராசிரியர்களை இணைத்துக்கொண்டோம். செ. சரஸ்வதி, செ. புஸ்பராணி, ந. அம்மணிப்பிள்ளை, க. செங்கமலவல்லி, பொ. குமாரலிங்கம், சி. அமுதா போன்ற பலர் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் மிகவும் வினைத்திறனாக இடம்பெற்றது. பாடசாலைச் செயற்பாடுகள் அனைத்தும் மிகச்சிறப்பான விளைதிறனைப் பெறக்கூடியதாக அமைந்ததால் பல கிராமத்து மாணவர்கள் இங்கு வீடுகளில் தங்கியிருந்து கற்றனர். குறிப்பாக ஈச்சிலம்பற்று, இலங்கைத்துறை-முகத்துவாரம், மாவடிச்சேனை, பூநகர், கிளிவெட்டி, கங்குவேலி, பட்டித்திடல், பாலத்தடிச்சேனை, பாரதிபுரம், மல்லிகைத்தீவு, மணற்சேனை, கட்டைப்பறிச்சான், சம்பூர் முதலான கிராமங்களிலிருந்தும் மாணவர்கள் கற்றனர். இவர்கள் அக்கால பாடசாலை முகாமைத்துவ முறைமையையும் - செயற்பாட்டையும் நினைவுகூருவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்ட காலத்தில் மூதூர் மேற்கின் பல கிராமங்கள் இடம்பெயர்ந்து தி/பள்ளிக்குடியிருப்பில் அகதிமுகாமில் தங்கியிருந்தனர். அவ்வேளையிலும் அங்கிருந்து வந்த மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் தொடர்வதற்கு அனைவரையும் பாடசாலையில் சேர்த்து கற்பிக்கப்பட்டது.

ஆசிரியர்கள தட்டுப்பாடான வேளைகளில் EHED (எகெட்) நிறுவனம் பிற்பகல் வேளையிலும், சனி, ஞாயிறு தினங்களில் மேலதிக வகுப்புகளை நடாத்த உதவினர்.

1987இல் கட்டைப்பறிச்சானிலிருந்து சின்னக்கிளி ஆசிரியை, ஜீவரதி, விமலா, தயாநிதி, வனஜா ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

1988இல் திரு. த. துரைநாயகம் பட்டதாரி ஆசிரியராக நியமிக்கப்பட்டார். சமூகக்கல்வி, உயர்தர புவியியல் பாடங்களை சிறப்பாக போதித்ததோடு பிரதி அதிபராகவும் விளையாட்டு மைதானம், மரநடுகை பரீட்சைகள் முதலான விடயங்களில் அர்ப்பணிப்பாக செயற்பட்டார்.

1990, 1991ஆம் ஆண்டுகளில் க.பொ.த (சா/த) தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகளை திரு. K. முருகுப்பிள்ளை - (அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர்) (கணிதம்), திரு மகாலிங்கம் (ISA விஞ்ஞானம்), திரு. அசோக் (சேவியர்) (கணிதம்), திரு. க. திருச்செல்வம் (பொறியியலாளர்) (கணிதம்), திரு. மா. அருமைநாயகம் (கணிதம்), திரு. மா. சுந்தரராஜன் (அதிபர்) (கணிதம், ஆங்கிலம்), சைவப்புலவர். செ. விபுணசேகரம் (அதிபர், உ.க.ப) - (தமிழ், சமயம்), திரு. சி. மதியழகன் (தமிழ், சமயம்) ஆகியோர் எமது வேண்டுகோளுக்கமைவாக எதுவித கொடுப்பனவுமின்றி மிகப்பெரும் சேவையை நல்கியவர்கள்.

எமது கிராம ஆசிரியர்களான திரு. ஆ. கனகரெட்ணம் அவர்கள் க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) தமிழ் பாடம் போதிப்பதில் ஆர்வமாக செயற்பட்டார்.

திரு. ஆ. குணராஜரெட்ணம் - கணிதம், த. சிதம்பரப்பிள்ளை - தமிழ், பொ.இரத்தினசிங்கம் - தமிழ், திரு. க. தயானந்தராசா க.பொ.த (உ/த) பொருளியல் பாடங்களையும் சிறப்பாக போதித்தனர்.

பாடசாலை ஆசிரியர்களாக 1990 இல் நியமனம் பெற்றவர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. இங்கு கடமையாற்றிய ஆசிரியர்கள் அனைவரும் மிகவும் அர்ப்பணிப்புடன் கடமையாற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனையூர், கட்டைப்பறிச்சான பகுதியிலிருந்து போராட்ட - வெடி காலத்தில் போக்குவரத்தும் மிகவும் கஸ்டமான நிலையில் அச்சத்திற்கு மத்தியில் தினமும் கடமைக்கு சமூகமளிப்பர்.

செல்வி. சின்னக்கிளி செல்வராசா அவர்கள் மனைப்பொருளியல் ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் மிகச் சிறப்பாக கடமையாற்றியவர்.

க. பழனிவேல் - தமிழ் பாட ஆசிரியர், க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) தமிழ்பாடத்தை சிறப்பாக போதித்தார். நாங்கள் அனைவரும் பழணி அண்ணன், பழணி சேர் என்றே அழைப்போம். அவரது சிறப்பம்சங்களை அனைவரும் அறிவர்.

செல்வி. ந. தயாநிதி (திருமதி த. பாக்கியராசா) தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 1995ல் மூதூர் கோட்டக்கல்விப் பிரிவில் (மூதூர், கிண்ணியா இணைந்திருந்த காலத்தில்) 1ம் இடத்தில் சித்தியடையச் செய்ததோடு, அதிகமானவர்கள் கூடுதலான புள்ளிகளையும் பெறச் செய்தவர்.

செல்வி. சி. மீனா (திருமதி. மீ. அம்பிகைபாகன்) ஆசிரியை அவர்கள் ஆரம்பத்திலிருந்து கணித பாட ஆசிரியையாக சிறப்பாக பணியாற்றி க.பொ.த (சா/த) பரீட்சையில் 82.2% சித்தி பெறச்செய்தார்.

செல்வி. செ. கமலாம்பிகை - க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) சமயம், இந்து நாகரிக பாடங்களைப் போதித்து சிறந்த பெறுபேறு A, B, C தர சித்திகள் கிடைக்கப் பாடுபட்டவர். தமிழ்தினப் போட்டியில் நடனத்தில் 2ம் கிடைக்க மாணவர்களைப் பயிற்றுவித்தவர்.

செல்வி. மு. ஜீவரதி, நா. வனஜா, க. விமலா ஆசிரியர்கள் கணித, விஞ்ஞான பாடங்களை மிகவும் அர்ப்பணிப்பாக நடையாகவும் வந்து பணியாற்றினர். ஆரம்பக் கல்வி ஆசிரியர்களான திருமதி. செ. சரஸ்வதி, ம. புஸ்பராணி, க.செங்கமவல்லி, ந. அம்மணிப்பிள்ளை ஆகியோரும் சிறப்பாக கடமையாற்றினர். செல்வி. சி. அமுதா - சமூகக்கல்வி, உடற்கல்விப் பாடங்களுடன் உடற்பயிற்சி கண்காட்சிப் போட்டியில் (Drill Display) முதன்மை நிலை அடைந்தது. வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு. சற்குணராஜா அவர்கள் பாராட்டுச் சான்றிதழை வழங்கி கௌரவித்தார். செ. முல்லைமலர் - விஞ்ஞான பாடத்துடன் தமிழ்தின நடனப் போட்டியில் இரண்டாம் இடம் பெற மாணவர்களைப் பயிற்றுவித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த (உ/த)த்திற்கான பட்டதாரி ஆசிரியர்கள் தேவையின் திரு. க.சச்சிதானந்தம் பட்டதாரி ஆசிரியர் நியமிக்கப்பட்டு க.பொ.த (உ/த) இந்து நாகரிகம் முதலான பாடங்களை போதித்ததோடு, மாணவர்களுக்கு விளையாட்டு ஒழுங்கம், விவசாயம் சுற்றுலா மற்றும் பாடசாலை அபிவிருத்திப் பணிகளுக்கு பாரிய உறுதுணையான ஒத்துழைப்பை வழங்கினார்.

திருமதி. புஸ்பா சச்சிதானந்தம் சித்திர ஆசிரியர் - ஆரம்பக்கல்வி, திரு. பொ. குமாரலிங்கம் - ஆரம்பக் கல்வி, சமயம், திருமதி. பாக்கியலட்சுமி குமாரலிங்கம் - கணிதம், திரு. ந. நற்குணம் - பட்டதாரி ஆசிரியர் (அரசியல் விஞ்ஞானம்), திரு. சுந்தரமூர்த்தி - பட்டதாரி ஆசிரியர், செல்வி. செ. முல்லைமலர் - விஞ்ஞான ஆசிரியர் ஆகியோரும் சிறப்பாக செயற்பட்டனர். இவ் ஆசிரியர்கள் கல்வி அபிவிருத்தியுடன் - விளையாட்டு, கலைத்துறைகளிலும் - பொதுவாக கலைத்திட்ட அமுலாக்கத்தில் மிகச் சிறந்த பங்களிப்பை நல்கினர்.

ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு சேவை காரணமாக...

***1991 இல் க.பொ.த (சா/த) பரீட்சையில் மிகச் சிறந்த பெறுபேற்றை குறிப்பாக கணிதம்*** 82.2 %, ***விஞ்ஞானம்*** 82.2 %, ***சித்திவீதம்*** 79% ***அதேபோல் 1995இல் க.பொ.த (உ/த) பரீட்சையிலும்*** 91.5 % ***சித்தியடைந்ததோடு 11 பேர் பல்கலைக்கழக தகமை பெற்றனர்.***[3]

- பாடசாலை ஆரம்பித்த காலத்திலிருந்து தரம் III பாடசாலையாகவிருந்து 1987 இல் தரம் II பாடசாலையாகவும்,
- 1992 இல் தரம் 1C பாடசாலையாகவும் தரமுயர்த்தப்படும் வரை பலர் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர்.
- 1995ல் பாடசாலைப் பெயர் கலைமகள் இந்துக்கல்லூரி என மாற்றப்பட்டது.

பெற்றார், பழைய மாணவர்கள், கோட்டக்கல்வி மாவட்ட கல்விப் பணிப்பாளர்கள் - குறிப்பாக இக்கிராமத்தைச் சேர்ந்த கல்விப் பணிப்பாளர் திரு.ஆ.குணராஜரெட்ணம் அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் தொடர்ந்தும் பாடசாலை பல சாதனைகளை படைத்து வருவது பாராட்டிற்குரியது.

## பாடசாலையின் பௌதீக வளங்களும் அபிவிருத்தியும்

பௌதீக வளங்களானது - கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டிற்கு மிகவும் அவசியமானது. இவற்றில் நிலம் - காணிகள், கட்டடங்கள், விளையாட்டு மைதானம், ஆராதனை மண்டபங்கள், ஆய்வுகூடங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம், தளபாடங்கள், கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டு உபகரணங்கள் முதலானவைகள் இடம்பெறும்.

இப்பாடசாலையின் ஆரம்பத்தில் இருந்து பௌதீக வளங்களில் ஏற்பட்ட வளர்ச்சியை அறிகையில்...

- 1927ஆம் ஆண்டு வெஸ்லியன் மிஷனிடமிருந்து அரசு பாடசாலை பொறுப்பேற்றுள்ளது.
- 1932ஆம் ஆண்டு இலங்கை அரசாட்சி "கெசட்" பத்திரிகையின் படி புளியடிவெட்டை அல்லது பள்ளிவளவு - வெஸ்லியன் மிஷன் திருகோணமலை (உரித்தாளியின் பெயர்) எனும் பெயரில் 2 ஏக்கர் 2 றூட் 2 பேர்ச் - காணி என குறிப்பிடப்படுகின்றது.[2]
- 1967களில் 2 ஏக்கரில் 1 ஏக்கர் வயல்/பயிர் செய்வதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. (ARR - வருடாந்த விபரத்திரட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.)
- ஒரு ஓலைக் கட்டடம் இதில் 598 சதுர அடி ஆசிரியர் விடுதி, 200 சதுர அடி பாடசாலைக் கட்டடம் வகுப்பறையாக இருந்தது.
- 1962 இல் 80 அடி X 20 அடி சீற் போடப்பட்ட கட்டடம். இதில் 200 சதுர அடி காரியாலயமாக பாவிக்கப்பட்டது.
- 1968 இல் 60 அடி X 20 அடி அளவிலான பாடசாலைக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டது.
- ஆசிரியர் விடுதியுடன் சேர்ந்த கட்டடமே ஆரம்ப கட்டடம். இதன் கூரை ஓலையாலும், கட்டடம் செங்கல் களிமண்ணால் கட்டப்பட்டு, சுண்ணாம்பால் பூசப்பட்ட கட்டடம்.
- வெளியூர் அதிபர், ஆசிரியர்கள் தங்கள் குடும்பத்தினருடன் இங்கு தங்கியிருந்து சேவை செய்தமையை அறிய முடிகின்றது.
- 1957இல் பெரு வெள்ளத்தில் இக்கட்டடம் பாதிக்கப்பட்டதாகவும் அறிக்கைகள் மூலம் அறிய முடிகின்றது. அவை பின்னர் அழிந்துவிட்டது. 1985இல் உடைந்திருந்த கட்டடப்பகுதி அகற்றப்பட்டது.
- ஒரு ஏக்கரில் நெல்வயல் மானாவாரி செய்கைப் பண்ணப்பட்டுள்ளது. ஏனைய நிலங்களும் மரக்கறி தோட்டச் செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாடசாலை வளவிலுள்ள கிணறு உப்புநீர். குடிநீருக்கு சிறினிவாசபுரத்திலுள்ள நல்ல தண்ணிக் கிணற்றிலிருந்து எடுத்துவர வேண்டும். மாணவர்களே நீரைச் சுமந்து வரவேண்டியிருந்தது.
- 1971-72களில் வயல் காணியின் வரம்புகள் அழிக்கப்பட்டு விளையாட்டு மைதானமாக்கப்பட்டது.[4] (திரு. ஆ. கனகரெட்ணம் அவர்கள் அதிபராக கடமையாற்றிய வேளை)

## 1985இன் பின்னர் பௌதீக வளத்தில் பாரிய மாற்றங்கள்

முதலாவதாக 16 அடி X 100 அடி அளவில் ஓலைக் கொட்டில் கட்டப்பட்டது. மிகவும் அழகாகவும் சுவாத்தியமானதாகவும் இருந்தது.

மாணவர் தொகை 1985 இல் 125 இல் இருந்து படிப்படியாக உயர்ந்து சென்றது. வகுப்புகளும் 1987 இல் தரம் II பாடசாலையானதும் தேவைகள் அதிகரித்தன.



1986ல் கட்டப்பட்ட தற்காலிக ஓலைக் கொட்டில்.

1987இல் பாடசாலை வளவில் செய்யப்பட்ட மரக்கறிப் பயிர்களைப் பார்வையிட்ட மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. க. நடராஜா அவர்கள் மாணவர்கள் தூர இடத்தில் இருந்து நீர் கொண்டு வருவதை அறிந்து குழாய் நீர் விநியோகத்திற்கு உதவினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரமதானம் மூலமும் எகெட் (EHED) நிறுவனத்தின் உதவியுடனும் பாடசாலைக்கு அருகாமையிலுள்ள வயல் வெளியில் திரு. சி. தம்பாப்பிள்ளை அவர்களின் காணியில் (தற்போதைய திருமதி. ஜெயராணி தியாகராசாவின் காணியில்) கிணறு அமைத்து அங்கேயே தண்ணீர் தாங்கியையும் அமைத்து அங்கிருந்து குழாய் மூலம் பாடசாலைக்கு நீர் விநியோகம் செய்யப்பட்டது.



- ஊர் முழுவதும் உப்பு நீரானதால் வயல் ஓரங்களில் சிரமதான மூலமும் நிறுவன உதவியுடன் ஆறு கிணறுகள் அமைகக்கப்பட்டு குடிநீர்ப்பிரச்சினையும் தீர்க்கப்பட்டது.
- 1987இல் 100' X 20' அளவிலான வகுப்பறைக் கட்டடம் அமைக்கப்பட்டது.
- 1991இல் 100' X 20' அளவிலான மேலும் ஒரு வகுப்பறைக் கட்டடம் அமைக்கப்பட்டது.
- 1992இல் 100' X 20' அளவிலான மேலும் ஒரு வகுப்பறைக் கட்டடம் அமைக்கப்பட்டது.
- 1995இல் 50' X 20' அளவிலான விஞ்ஞான கூடம் அமைக்கப்பட்டது.
- 1996இல் 120' X 40' அளவிலான ஆராதனை மண்டபம் அமைக்கப்பட்டது.
- 1996இல் பாடசாலைக்கான மின் இணைப்பு ஏற்படுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1990ல் 100 அடி x 20 அடி கட்டத்தின் முன்னால்
வகுப்பு மாணவர்களும் ஆசிரியர்களும்

- 1987இல் பாடசாலையின் கிழக்குப் பக்கமாக இருந்த குடியிருப்புக்காணிகள் பாடசாலைக்காக வாங்கப்பட்டது.

1. பொன்னையா சரவணமுத்து
2. ஆரியத்தம்பி மனுராசலிங்கம்
3. வைரமுத்து வெற்றிவேல்
4. சின்னையா மணிராசா
5. பத்தினியன் நவலோகம்
6. பத்தினியன் தங்கமணி
7. செல்வராசா ஜெயகுமார்

**சுமார் 6 - 10 பேர்ச் காணிகள் தலா 2000.00 ரூபா வீதம் பாடசாலைக்கு கொள்வனவு செய்யப்பட்டது. எதிர்காலத்தில் நமது கிராமப்பிள்ளைகள் இங்கேயே உயர்கல்வி கற்க வேண்டுமென்ற நோக்கில் இக்காணிக்காரர்கள் தாமாக மனமுவந்து அன்பளிப்புணர்வோடு வழங்கியமை பாராட்டிற்குரியது. அவர்களின் அந்த நோக்கம் இன்று நிறைவடைந்துள்ளது.**

1990இல் விளையாட்டு மைதானம் வாங்கப்பட்டு, திறப்புவிழாவும் செய்யப்பட்டது. கம்பி - வேலி அடைக்கப்பட்டு பல விளையாட்டுப்போட்டிகளும் சிறப்பாக நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1998ல் கு. இராணி - ஆராதனை மண்டப ஓரமுமான சிறிய பரப்பு ஒரு பேர்ச் 1000.00 ரூபாய்க்கு வாங்கப்பட்டது.
- 1998ல் ஒரு கணினித் தொகுதி - திரு. க. தணிகாசலம் - அன்பளிப்பு
- மைதானம் புனரமைப்புக்காக அரச ஊழியர்களின் பங்களிப்பு
- 2000ம் ஆண்டு விளையாட்டு மைதான காணியின் மீதிப் பணம் கொடுக்கப்பட்டது. - பெற்றார் பங்களிப்பு.
- 2012 இல் 25' X 100' அளவிலான மாடிக்கட்டடம், வகுப்பறைகள், நூலகம், விஞ்ஞானகூடம் உள்ளடக்கியவை மாகாண கல்வித் திணைக்களத்தினால் நிர்மாணிக்கப்பட்டது.

***தொடர்ந்தும் வடக்கு பகுதியிலுள்ள காணிகளும் கொள்வனவு செய்யப்பட்டது.***

- 2013ல் நா. கிட்ணதாஸ் 10 பேர்ச் காணி - 120,000/- ஒரு இலட்சத்து இருபதாயிரம்.
- தருமரெட்ணம் - யோகரெட்ணம் 20 பேர்ச் - 400,000/- நான்கு இலட்சம் ரூபா.
- 2013 இல் - அலுவலகம் உட்பட வகுப்பறைக் கட்டடம் 50' X 40' மாடிக்கட்டடம். ஆசிரியர் விடுதி - வகுப்பறை (100' X 20') கட்டட (ஆரம்பப்பிரிவு) திருத்த வேலைகள் செய்யப்பட்டது. (USAID)
- 2013 இல் மலசலகூடங்கள் - மாகாண கல்வித் திணைக்களமூடாக USAID மூலம் நிர்மாணிக்கப்பட்டது.
- 2013 இல் மதிவதனன் - துஷ்யந்தன் அவர்களால் ஒலிபெருக்கித் தொகுதி அன்பளிப்புச் செய்யப்பட்டது.
- 2016 இல தொழில்நுட்ப கட்டடம் (80' X 35' மாடிக்கட்டடம்). ஆரம்பக் கல்வி கற்றல் வள நிலையம் NSBS செயற்திட்டத்தின் ஊடாக நிர்மாணிக்கப்பட்டது.

## தளபாடங்கள்

- 1987இல் 725 மாணவர்களுக்கான மேசை, கதிரைகள் மாவட்டக் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டது. திருகோணமலையிலிருந்து இயந்திரப் படகுகள் மூலமே இவற்றை கொண்டுவர வேண்டும். இதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெற்றியில் இருந்து பாடசாலை வரை திரு.வ.வெற்றிவேல் அவர்களுடன் வண்டில் மாட்டுக் காரர்கள் பேருதவி புரிந்தனர்.

- அனைத்துத் தளபாடங்களுக்கும் PKV (**P**allikudiyiurppu **K**alaimahal **V**idyalayam) (1 - 725 என்றும் தொடர் இலக்கங்களும் இடப்பட்டு 5S முறையில் சிறப்பாக பராமரிக்கப்பட்டது.
- தேவையான அலுமாரிகளும் மாவட்டக் கல்வித் திணைக்களத்தால் வழங்கப்பட்டது. அத்துடன் றோனியோ மெசின் - 02, தட்டச்சுகள் - 02ம் முறைசாராக் கல்வி தையல் பயிற்சிக்காக 04 தையல் மெசின்களும் வழங்கப்பட்டன.
- நூல்நிலையத்திற்கான கண்ணாடி அலுமாரிகள் கிராமோதய சபைத்தலைவர் திரு. மா. சிவலிங்கம் அவர்களால் வழங்கப்பட்டது.
- 1990ல் விஞ்ஞானகூடத்திற்கான உபகரணங்களும், இராசாயனப் பொருட்களும் வழங்கப்பட்டு கொண்டுவரும் போது கட்டைப்பறிச்சான் இராணுவத்தினரால் தடைசெய்யப்பட்டு பின்னர் அவற்றை பல நாட்கள் அலைந்து மீளப்பெற்று கற்றலுக்காகப் பயன்படுத்தப்பட்டது.
- மற்றும் விளையாட்டு உபகரணங்கள், கற்றல் - கற்பித்தலுக்கான உபபரணங்களும் கல்வித் திணைக்களம், சமூகத்தினரிடம் பெறப்பட்டு பூரண கலைத்திட்ட செயற்பாடுகளை நிறைவு செய்ய மேற்படி பௌதீக வளங்கள் பேருதவியாக இருந்ததோடு சிறந்த பெறுபேறுகளுக்கும் வாய்ப்பாய் அமைந்தன.
- ***2019இல் திரு. இரா. சம்பந்தன் (பா.உ) அவர்களால் பாண்ட் (Band) வாத்திய கருவிகள் - சிரேஷ்ட மாணவர்களுக்கும், சிறுவர்களுக்கும் வழங்கப்பட்டது. இம்மாணவர்களுக்கான பாண்ட் வாத்தியக்குழுவிற்கான சீருடையும் வழங்கப்பட்டது. இதற்காக ஐந்து இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்தமை நன்றிகூறப்பட வேண்டியதாகும்.***

## கல்விக்கு எகெட் நிறுவனத்தின் பங்களிப்பு

1985ஆம் ஆண்டிலிருந்தான காலகட்டத்தில் எமது கிராமத்தின் கல்வி, சமூக, பொருளாதார தேவைகள் பல அத்தியாவசியமாக நிறைவு செய்ய வேண்டியதாய் காணப்பட்டது. எமது கோரிக்கைகளை அறிக்கையாக சமர்ப்பித்தும் நேரடியாக பல சந்திப்புகளை ஏற்படுத்தியதன் ஊடாக எமது தேவைகளை நிறைவு செய்ய எகெட் நிறுவனத்தினர் முன்வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்குடியிருப்பு கிராமங்களோடு, நல்லூர், பாட்டாளிபுரம், வீரமாநகர் முதலான கிராமங்களும் இணைக்கப்பட்டு ஒரு வட்டாரமாக தொடர்பாளரை நியமித்தனர். இதற்கு திரு. ஆ. செல்வநாயகம் தெரிவுசெய்யப்பட்டார். தொடர்ந்து நிர்வாகத்தை இலகுபடுத்த சிறினிவாசபுரம் திரு. த. துரைநாயகம், தங்கபுரம் த.வேலானந்தம், நல்லூர் - பாட்டாளி புரம் க. கனகசிங்கம் இவர்களை நியமித்து வேலைகளை ஆரம்பித்தோம்.

1985ஆம் ஆண்டு பாலர் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

1. தி/பள்ளிக்குடியிருப்பு
2. சிறினிவாசபுரம்
3. தங்கபுரம்
4. பாட்டாளிபுரம்
5. நல்லூர்

பாலர் பாடசாலைகளை அமைப்பதற்கும் எகெட் நிறுவன உதவி கிடைத்தது. கட்டடப் பொருட்களை மட்டும் தந்து பொதுமக்களின் பங்களிப்புடன் இக்கட்டடம் அமைக்க வழி செய்தனர்.

ஆரம்பத்தில் ஓலைக் கொட்டில் அமைத்து பாய்கள், படங்குகள் வழங்கப்பட்டன. இவை தொடர்ந்து கல், சீமெந்து, கல் கட்டடங்களாக அமைக்கப்பட்டு இன்றுவரை சிறப்பாக இயங்கிவருகின்றன.

நல்லூரில் இருந்து சேனைப்பயிர்ச் செய்கைக்காக பாட்டாளிபுரம், வீரமாநகரில் குடியேறியிருந்தனர். ஆனால் சுமார் 30 ஆண்டுகளாக கல்விக்கான வசதியற்றிருந்தனர். இங்கிருந்து நல்லூர் பாடசாலைக்கே செல்ல வேண்டியிருந்தது.

பாட்டாளிபுரத்தில் 1986இல் பாலர் பாடசாலை ஆரம்பிபக்கப்பட்டது. இங்கு ஓலைக் கொட்டில் (16 அடி X 40 அடி) அமைக்கப்பட்டது. இதன் ஆசிரியர்களாக திரு. பாக்கியராசா, க. கனகசிங்கம், வீரக்குட்டி ஆகியோர்கள் நியமிக்கப்பட்டு இவர்களுக்கான கொடுப்பனவும் வழங்கப்பட்டது.

இன்று இப்பாலர் பாடசாலையே பாட்டாளிபுரம் மலைமகள் வித்தியாலயமாக 450 மாணவர்களுடன் பல கட்டடங்கள், ஆசிரிர் விடுதிகள், மாடிக்கட்டடங்கள், கணனி வசதிகள், விளையாட்டு மைதானம் என பல பௌதீக வளங்களுடன் சிறப்பாக இயங்கிவருகின்றது.

இப்பாடசாலையை - பாலர் பாடசாலையை அரச பாடசாலையாக மாற்றி அதிபரை நியமித்து முதல் அதிபர் திரு. ஒ. வர்ணகுலநாதன் - 1 தொடக்கம் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையான பாடசாலையாக இருந்து இன்று தரம் II பாடசாலையாக தரம் 1 - 11 வரை தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இப்பாடசாலையை அரச பாடசாலையாக்க அனுமதி பெறச்செய்து இன்றை நல்நிலைக்கு உயர்த்தியவர்கள் திரு. ஆ. குணராஜரெட்ணம் கல்விப்பணிப்பாளர். இப்பகுதிக்கான கொத்தணி அதிபரான திரு.க.துரைரெட்ணசிங்கம் அவர்கள்.

பாட்டாளிபுரத்திற்குச் சென்று எகெட் நிறுவன உதவிகளை வழங்கியும் தற்காலிக கொட்டில் அமைத்து ஆசிரியர்களை நியமித்து அவ் ஆசிரியர்களுக்கு கற்றல் - கற்பித்தல் நுட்பங்களையும் தெரியப்படுத்தி சிறப்பாக இயக்கியதன் பயனை இன்று அம்மக்கள் கல்விப் பேறுகளை அனுபவிக்கின்றனர்.

இங்கு கா.பொ.த (சா/த) சித்தியடைந்த மாணவன் - திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் கற்று பல்கலைக்கழகம் சென்று பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்று இப்பாடசாலையில் ஆசிரியராக பணிபுரிகின்றார்.

மேலும் அண்மையில் இங்கு கணித பாடத்தில் A தர சித்திகளை பெற்றும் சிறப்பான பெறுபேறுகளை பெறமுடிகின்றது.

க.பொ.த (உ/த)க்கு தி/பள்ளிக்குடியிருப்பு கலைமகள் இந்துக்கல்லூரி, தி/சேனையூர் மத்திய கல்லூரியிலும் மாணவர்கள் கற்கின்றனர்.

எதிர்காலத்தில் இங்கு க.பொ.த (உ/த) ஆரம்பிக்க வேண்டும்.

தி/பள்ளிக்குடியிருப்பு கலைமகள் வித்தியாலயத்தின் ஆசிரியர் பற்றாக்குறைக்கு பின்னனேர வகுப்புக்களும், சனி-ஞாயிறு வகுப்புகளுக்கும் நிதி உதவி வழங்கினர்.

சிறந்த பெறுபேற்றை பெறுவதற்கும் - இன்று கல்லூரியாக தரம் உயர்வதற்கும் எகெட் நிறுவன உதவிகள் என்றும் மறக்க முடியாதவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1985ல் கல்வி விழிப்புணர்வுக் கூட்டம் (திரு. ஆ. செல்வநாயகம் அவர்களால் நடாத்தப்பட்டது) முதலாவது கூட்டம். இதில் ஊர் பெரியவர்கள் பலர் கலந்துகொண்டனர். க. மாரிமுத்து (1906). மு. சுப்பிரமணியம். காளிராசா (வைத்தியர்). கோ. நாகேந்திரம். சு. வைரமுத்து முதலான பலரைக் காணலாம். மிகவும் ஒத்துழைக்க ஆசைப்பட்டனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1985ன் மாணவச் செல்வங்கள் அப்போதைய 80 அடி X 20 அடி அளவான மேடையுடன் கூடிய மண்டபத்தில்



பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் - ஆசிரியர்கள், கிராமோதய சபை தலைவர்கள் பாடசாலை அபிவிருத்திக் கலந்துரையாடலின் பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



100 அடி X 20 அடி பாடாசைலக் கட்டடத்திற்கான அடிக்கல் நடும் வைபவத்தில்.



மகிழ்ச்சியான கற்றல் செயற்பாட்டில் விளையாட்டு நிகழ்வில் மாணவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1986ல் கட்டட இடப்பற்றாக்குறையினால் தற்காலிக ஓலைக் கொட்டில் கட்டப்பட்டது.



விளையாட்டு மைதானத்திற்கான சிரமதானமும். பாதுகாப்பு வேலி நிர்மாணமும் இடம்பெற்ற போது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விளையாட்டு மைதானம் திறப்பு விழா.
1990ல் விளையாட்டு மைதானம் வாங்கப்பட்டு மைதானத்தை சுற்றி வேலி புதிதாக அமைக்கப்பட்டு மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. க. நடராஜா அவர்களுடன் திரு. ஆ. குணராஜரெட்ணம். ஜனாப் எஸ்.எம். மக்சீன் - கல்விப் பணிப்பாளர்களால் திறந்துவைக்கப்பட்டது.

## விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







சம்பியன் வெற்றிக்கிண்ணம் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு.க.நடராஜா அவர்களிடம் பெறப்பட்டபோது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இல்ல விளையாட்டுப் போட்டியின் இறுதி நிகழ்வில்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொத்தணி அதிபரிடம் வெற்றிக்கேடயம் பெறுதல்.





மாவட்ட கல்விப் பணிப்பாளர் சி. நடராஜா பிரதம விருந்தினரால் வெற்றிக் கேடயங்கள் வழங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாணிவிழா கலை நிகழ்வுகள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாணி விழா கலைநிகழ்வுகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சுற்றுலா


[illegible]kesari Friday 29th April - 1994

மூதூர், தோப்பூர் பள்ளிக்குடியிருப்பு [illegible] மாணவ மாணவியர்
கல்விச் சுற்றுலாவொன்றை மேற்[illegible] கொழும்பு [illegible]
காரியாலயத்தையும் வந்து பார்[illegible]
[illegible]வர்கள் எடுத்துக் கொண்[illegible]



சுற்றுலாவின் போது சிகிரியாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்விச் சுற்றுலாவில் நுவரெலியா பூங்காவில்


## பாடசாலை நிகழ்வுகள்



கல்வி அபிவிருத்தி சம்பந்தமான கூட்டத்தின்போது திரு. மூ. தேவன் அதிபர் அவர்கள் உரையாற்றியமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



க.பொ.த. (உ/த) ஒன்றுகூடல் நிகழ்வில்
திரு. வி. பாக்கியராசா ஆசிரியரின் பாடல் நிகழ்வு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





விருந்தினர்களாக கலந்து கொண்டவர்கள் மாணவர்களை வாழ்த்திய போது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயர்தர ஒன்றிய நிகழ்வில் ச. சுதாகரன் (மதி) ஓரங்க நாடகத்தின் போது



உயர்தர ஒன்றிய நிகழ்வில் திரு. க. பழனிவேல் ஆசிரியரின் நவரச சிரிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





க.பொ.த உயர்தர ஒன்றிய நிகழ்வுகளில்
ஆசிரியரியர் திரு. நற்குணம் அவர்களின் பாடல்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரியர் தின நிகழ்வில் கலந்து கொண்ட
கொத்தனி அதிபர் திரு. க. துரைரெட்ணசிங்கம். திரு. செ. விபுணசேரம் அதிபர்.
திரு.ஆ. கனகரெட்ணம் பிரதி அதிபர் அவர்களுடன் எமது ஆசிரியர்கள்



கொத்தனி அதிபர் திரு. க. துரைரெட்ணசிங்கம்.
பிரதி அதிபர் திரு. ஆ. கனகரெட்ணம். அதிபர்களான திரு. த. சிதம்பரப்பிள்ளை.
திரு. பொ. இரரத்தினசிங்கம் ஆகியோர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எகெட்டின் சமூக சேவைகளாக...

*சமூகத்தையும் இணைத்து / வளப்படுத்தியே கல்வியை வளர்க்க வேண்டிய தேவை ஏற்பட்டதால் பாடசாலையே சமூகத்தின் பொருளாதார உதவிகளையும் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. சமூகத்தின் தேவைகளை ஓரளவு நிறைவேற்றும்போது மாணவர் வரவும் கூடக்கூடிய வாய்ப்பும் தென்பட்டது. அதனால் பல சமூக சேவைகளும் எகெட் ஊடாக நிறைவு செய்ய முடிந்தது.*

குடிநீர் - பள்ளிக்குடியிருப்பு பூரணமாக உப்பு நீராக இந்தது. குடிநீரைப் பெறுவதற்கு சிறினிவாசபுரத்தில ஒரு கிணறு மட்டும் இருந்தது (பாலர் பாடசாலைக்கு பக்கமாக உள்ளது). அதிலும் கோடை காலத்தில் நீர் வற்றியிருக்கும். நீரைப் பெறுவது மிகப்பெரிய கஸ்டமாக இருந்தது.

இதை நிவர்த்தி செய்ய பாடசாலையிலிருந்து **50 m** *தூரத்தில் வயல் வெளியில் சிரமதானம் மூலம் கிணறைத் தோண்டினோம். கிராமோதய சபைத் தலைவர்கள், கிராம முன்னேற்ற சங்கத்தினர் பொது மக்களை குழுக்களாகப் பிரித்து தினமும் சிரமதானத்தில் கிணறு தோண்டப்பட்டது. நல்ல தண்ணீரும் கிடைக்கப் பெற்றது.*

*எகெட் நிறுவனப் பணிப்பாளர் வணக்கத்துக்குரிய பிதா அன்ரனி வியோ அவர்களிடம் வேண்டுதல் விடுக்கப்பட அவற்றைக் கட்டுவதற்கான சீமெந்து, கல் முதலானவற்றை தந்துதவினார். மணல் கட்டும் பணி என்பன எமது பங்களிப்பில் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையில் செய்து முடித்தோம். கிணறு கட்டும்போது கிடைத்த மீதி சீமெந்து பக்கட்களைக் கொண்டே பாலர் பாடசாலை கட்டினோம். இதன் கூரை ஜன்னல்கள் மட்டும் எகெட்டால் கிடைக்கப்பெற்றது. இவ்வாறு சிரமதானப் பணி மூலமாகவே கிணறுகளும் பாலர் பாடசாலை நூலகமும் கட்டப்பட்டது.*

தொடர்ந்து கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு திரு. சி.நடராஜா மாவட்டக் கல்விப் பணிப்பாளர் (RDE) அவர்களின் உதவியால் தண்ணீர் தாங்கி அமைத்து குழாய் மூலம் பாடசாலைக்கும் நீர் பெறப்பட்டது.

சிறினிவாசபுரம், இத்திக்குளம், சின்னக்குளம், தங்கபுரம், நல்லூர், பாட்டாளிபுரத்திலும் இவ்வாறு கிணறுகள் அமைக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளாதார உதவிகளாக...

யுத்தப் பாதிப்பு ஏற்பட்டோருக்கான...

- வீடமைப்பதற்கான உதவிகள்
- நிவாரணப் பொருட்கள்
- விவசாய உபகரணங்கள்
- ஒரு ஏக்கர் நெற்செய்கைக்கான நிதியுதவி

போன்ற பொருளாதார உதவிகள் இவ்வட்டாரத்தில் உள்ள கிராமங்களுக்கு கிடைக்கப்பெற்றது.

1. பாலர் பாடசாலைக் கட்டடம் மாலை வேளையில் நூலகமாக இயங்கியது.

இந்நிலையத்திற்கு "மனித வள அபிவிருத்தி நிலையம் - Human Resorce Development Center" என பெயரிடப்பட்டிருந்தது. இக்கட்டடமே இக்கிராமத்தின் பொதுக் கட்டடமாகவும் பயன்படுத்தப்பட்டது. இக்கட்டடத்திற்கு பின்னர் "சிவகுமார் நூலகம்" எனவும் பெயரிடப்பட்டது. நூலகமாக தினப்பத்திரிகைகள் சஞ்சிகைகளுடன் தொடர்ந்தும் இயங்கியது.

## றோட்டரிக்கழக உதவிகள் (2017 - 2018)

- மாணவர்களுக்கு 88 துவிச்சக்கர வண்டிகள்
- 6 மாதம் 300 மாணவர்களுக்கான மதிய உணவு.
- 5 கணனித் தொகுதிகள்
- பெற்றாருக்கான வாழ்வாதார உதவிகள்
- ஆங்கிலக் கல்விக்கான உதவிகள் றோட்டரி கழகத்தால் கிடைக்கப்பெற்றன.

**பாராளுமன்ற மாகாணசபை உறுப்பினர்களின் உதவிகள்**

- திரு. க. துரைரெட்ணசிங்கம் (பா.உ) அவர்களால், போட்டோ கொப்பி இயந்திரம் ஒன்றும் 100 கதிரைகளும் வழங்கப்பட்டது.
- திரு. ஜனார்த்தனன் அவர்கள் (மாகாண சபை உறுப்பினர்) உள்ளக மைதான மேடை ஒன்றும் வழங்கினார்.
- 2016இல் இம்மைதானத்திற்கு மேற்குப்பக்கமாக மதில் கட்டுவதற்கு திரு. க.துரைரெட்ணசிங்கம் பா.உ 2,25,000.00 (இரண்டு இலட்சத்து இருபத்தையாயிரம்) ரூபாவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 2017ல் திரு.சி.தண்டாயுதபாணி (கல்வி அமைச்சர் - கி.மா) அவர்களால் 9 றோள் கம்பிகளும், 38 கொங்கிறீட் கட்டைகளும் மைதான வேலிக்காக வழங்கப்பட்டது.
- 2019இல் விளையாட்டு மைதானத்தின் மேற்குப் பகுதி மதிலுக்கும் மைதானத்தில் மண் நிரப்புவதற்கும் 10 (பத்து) இலட்சம் ரூபாயும், விளைாட்டரங்கிற்கு (பெபிலியனுக்கு) 10 (பத்து) இலட்சம் ரூபாயும் திரு.க.துரைரெட்ணசிங்கம் (பா.உ) அவர்களாலும், பெவிலியனுக்கு 10 இலட்சம் ரூபா திரு. இரா. சம்பந்தன் (பா.உ) அவர்களாலும் வழங்கப்பட்டது. மைதானத்தின் சுற்றுமதில் அடித்தளத்திற்காக ஜனாப். அப்துல்லா மஃறூப் (பா.உ) அவர்கள் 20 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளார்.
- 2019 தொடக்கம் ஆங்கிலக் கல்விக்கான உதவிகள் - செ. பிரசாந், நா.யோகிதாஸ் ஆகியோர் வழங்கி வருகின்றனர்.

## பாடசாலை தர உயர்வுகளும் பெயர் மாற்றங்களும்

சுமார் 145 ஆண்டுகால வரலாறைக் கொண்ட எமது கல்லூரி கலைத்திட்ட மாற்றங்களுக்கு அமைவாக கல்வி நடவடிக்கைகளிலும் மாற்றங்களை உள்வாங்கி இயங்கிவந்துள்ளமையை அறியலாம்.

1952 ஆம் ஆண்டுகளின் முன் 1 - 5 தரங்கள் மட்டும் இருந்ததாகவும் பின்னர் தரம் 6, 7, 8 வரை வகுப்புகள் கூடிச்சென்றுள்ளது.

மிகக்குறைவான 2, 3, 4 மாணவர்களே 6, 7, 8ம் தரங்களில் கற்றுள்ளனர்.

1971இல் புதிய கல்விச் சீர்திருத்தத்தில் பாடத்திட்டங்களில் மாற்றம் ஏற்பட்டது. 6ம் தரத்திலிருந்து விஞ்ஞானம், கணிதம், சமூகக்கல்வி ஆகிய பாடங்களில் ஏற்பட்ட மாற்றங்களாலும், 9ம் தரத்தில் NCGE (க.பொ.த சா/த)இற்கு சமனானதாக இருந்தது) இதனால் பாடசாலைகள் தரம் 1 - 5 வரை ஆரம்பக் கல்வியும் 6 - 9 தரமுடைய (NCGE)யும், 10 - 11 தரங்கள் HNCE ஆக இருந்தமையால் 1971இலிருந்து தரம் 1 - 5 வரையான ஆரம்ப பாடசாலையாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடரந்து 6ம் தரம் கற்பதற்கு 1960களிலிருந்து தோப்பூருக்கே க.பொ.த (சா/த) கற்பதற்கு செல்ல வேண்டும். க.பொ.த (உ/த) கலைப்பிரிவு அப்போது மூதூர் பிரதேசத்தில் இல்லாததால் வேறு இடங்களுக்கு செல்ல வேண்டும். 1975களின் பின் சேனையூர் மகா வித்தியாலயத்திறகு எமது ஊர் மாணவர்கள் இடைநிலை, உயர்நிலைக் கல்விக்காக சென்றனர். திரு. ஆ.கனகரெடணம் ஆசிரியர் அவர்களும் அங்கு பணியாற்றினார். பலர் க.பொ.த உயர்தரத்திற்காகவும் பல்கலைக்கழகம் செல்லவும் வாய்ப்பானது.

1986இல் தரம் ஆறு (6) ஆரம்பிக்கப்பட்டு இடைநிலைப் பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டது.

- 1987இல் முதல் முறையாக க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றினர். Type-II பாடசாலை.
- 1992இல் க.பொத (உ/த) கலைப்பிரிவுக்கான அனுமதி பெறப்பட்டது தரம் 1C (Type - 1C) பாடசாலையானது.
- பாடசாலை ஆரம்பித்த காலத்திலிருந்து பாடசாலைப் பெயர் தி/பள்ளிக்குடியிருப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை (தி/பள்ளிக்குடியிருப்பு அ.த.க. பாடசாலை) என நீண்ட காலமாக இயங்கிவந்துள்ளது.
- 1970 இல் பெயர் மாற்றம் - பள்ளிக்குடியிருப்பு கலைமகள் வித்தியாலயம் என்றும்.
- 1995இல் கலைமகள் இந்துக்கல்லூரியாக பெயர்மாற்றம் செய்யப்பட்டது.

1985இல் 125 மாணவர்கள் இருந்தார்கள் படிப்படியாக பாடசாலையின் தரமாற்றமும் - பல வினைத்திறனான செயற்பாடுகளால் நல்ல விளைதிறன் ஏற்பட்டதன் நிமித்தம் - குறிப்பாக பாடசாலையின் பெறுபேறுகள், இணைக்கலைத்திட்ட செயற்பாடுகள், பௌதீக வள மாற்றங்கள் காரணமாக மூதூர் பிரதேசங்களில் பல கிராம மாணவர்கள் இங்கு கற்றனர்.

1995இல் 725 மாணவர்கள் கற்றனர். சுமார் 50இற்கு மேற்பட வெளியூர் பிள்ளைகள் இங்கு வீடுகளில் தங்கியிருந்து கற்றனர். இன்று அவர்கள் தங்களது ஊர்களில் நல்ல நிலையில் சேவையாற்றுகின்றர்.

பாடசாலையை விட்டு விலகியிருந்தோர் - பிற பாடசாலையிலிருந்து இடைவிலகியோர் எல்லோரும் பாடசாலையில் சேர்க்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1987ல் முதல் முறையாக க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றுவதற்காக

1. ச. சுதாகரன்,
2. இ. நளாயினி,
3. ந. காணிகாதேவி,
4. நா. மேகலா

ஆகியோர்கள் முன்வந்தனர். பரீட்சைக்கும் தோற்றினர்.

தொடரந்து க.பொ.த (சா/த) பரீட்சைக்காக பாடசாலையில் கற்று வருபவர்களோடு, பிற பாடசாலைகளில் கற்று சித்தியடையாதோர் அல்லது குறைவான பரீட்சைப் பெறுபேறுகளுடன் இருந்தோரும் இணைக்கப்பட்டு சிறப்பான கற்றல் - கற்பித்தல் - வழிகாட்டல் ஊடாக சிறந்த பெறுபேற்றைப் பெற்றனர்.

இதைத் தொடர்ந்து க.பொ.த (உ/த) ஆரம்பிப்பதற்கு 1992இல் அனுமதி கிடைக்கப்பெற்றது. இதிலிருந்து 1C தர பாடசாலையாக தரம் உயரத்தப்பட்டது.

இவ்வேளையிலேயே க.பொ.த (உ/த) விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கலை, சட்டடத்துறைக்கானவர்களையும் இனம்கண்டு வழிகாட்டல் ஆலோசணையுடன் மேற்படி துறைகளுக்கு அனுப்பப்பட்டு இன்று சிறந்த விஞ்ஞான, கணித ஆசிரியர்களாகி சேவை புரிகின்றனர். குறிப்பாக

- கணிதம் - நா. கருணாநிதி BSc, PGDE, MSc
- விஞ்ஞானம் - ச. அன்பழகன் T.Trd.Science, B.A, PGDE, DSM, MEd
- தகவல் தொழிநுட்பம் (IT) - து. சிவசங்கர் T.Trd., B.Ed, IT. இவர் IT பயிற்றுவிப்பாளராகவும் (Instructor) , இணைப்பாளராகவும் (Cordinator) வலயக்கல்வி அலுவலகத்தில் பணியாற்றுகிறார்.
- திரு. இ. மகாதேவன் T.Trd, BA, PGDE, MEd கற்று கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் SLEAS சித்தியடைந்து உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றுகின்றார்.
- திரு. செ. யூகன் T.Trd, B.A, PGDE, MEd மூதூர் கல்வி வலயத்தில் ஆசிரிய ஆலோசகராக (I.S.A) பணியாற்றுகின்றார்.
- திரு. கி. பரமேஸ்வரன் BA, MA - வெளிவாரி பட்டப்படிப்பு நிலைய விரிவுரையாளராகி பல பட்டதாரிகளை உருவாக்கி வருகிறார்.

கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணித துறைகளில் பலர் பட்டதாரிகளாகவும், முதுமானி பட்டதாரிகளாகவும் சேவையாற்றுவது பெருமைக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1985 களின் முன் கல்வி நிலை

ஆரம்பக் கல்வியின் பின் அல்லது அதற்கு முன்பும் பிற இடங்களில் கல்வி கற்றதை அறிய முடிகின்றது. பள்ளிக்குடியிருப்பின் முதல் அரச ஊழியரான திரு. மு. கனகசபை (1908) இங்கு ஆரம்பக்கல்வியும், திருகோணமலையில் S.S.C யும் கற்றதாக அறியமுடிகிறது. திரு. சி. கந்தையா, (1916) மூதூர் புனித அந்தோனியா மகா வித்தியாலயத்தில் J.S.C (தரம் - 8) வரை கற்றதாக அறிய முடிகின்றது.

திரு. ஆ. கனகரெட்ணம் - 3ம் தரத்திலிருந்து புனித அந்தோனியார் மகா வித்தியாலயத்திலும், பின்னர் 6ம் தரத்திலிருந்து திருகோணமலை இந்துக்கல்லூரியில் ஆங்கில மொழிமூலத்தில் கற்றார்.

அப்போதைய கலைத்திட்டத்தில் J.S.C சித்தியடைந்ததும் (தரம் 8இல்) விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கலை துறைகளுக்கு தெரிவாக வேண்டும். திரு. ஆ. கனகரெட்ணம் அவர்கள் விஞ்ஞானத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டார். அவர் விஞ்ஞானத்துறையை மறுத்து கலைத்துறையில் நாட்டம் கொண்டு கற்று S.S.C (தற்போதைய க.பொ.த (சா/த) சித்தியடைந்து) - H.S.C (க.பொ.த (உ/த) கற்பதற்காக மட்டக்களப்பு - வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்திற்கு சென்று கல்வியை தொடர்ந்தார்.

வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில்
பொ. இரத்தினகசிங்கம் - கலைப்பிரிபு H.S.C (G.C.E (A/L))
ஆ. குணராஜரெட்ணம் - விஞ்ஞான / கணித பிரிவு
த. சிதம்பரப்பிள்ளை - விஞ்ஞான / கணித பிரிவு

க. ஆனந்தஜோதி - மட்டக்களப்பு ஆனைப்பந்தி மகளிர் வித்தியாலயத்திலும், ஆ. தங்கரெட்ணம் - திருகோணமலை மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலையிலும் செ. சரஸ்வதி மட்டக்களப்பிலும், G.C.E (O/L) கலைப்பிரிவில் கற்றனர்.

க. ஜீவரெட்ணம் SSC (G.C.E (O/L)) மட்டக்களப்பில் கற்று பின்னர் தோப்பூர் ம.வி இல் கற்று க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்தார்.

தோப்பூர் அல்-ஹம்றா மகா வித்தியாலயத்தில் திரு. க. சண்முகராசா, திரு. வே. காளிராசா, திரு.ஆ.துரைநாயகம், திரு. க. தவராசா, திரு.ஆ.செல்வநாயகம் ஆகியோர் க.பொ.த (சா/த) கலைப்பிரிவில் கற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் தோப்பூர் அல்-ஹம்றா மகா வித்தியாலயத்தில் க. ஆனந்தராசா (க.பொ.த (சா/த)), க. நவரெட்ணராஜா, ஆ.நேசதுரை, தி. மாணிக்கராசா, த.துரைநாயகம், ச. அருட்சோதி, ஆ. நவநாயகம் ஆகியோர் NCGE பரீட்சையில் சித்தியடைந்தனர். பலர் சேனையூர் மகா வித்தியாலயத்தில் கற்றனர். சேனையூர் மத்திய மகா வித்தியாலயத்தில் கலைப்பிரிவில் பலர் பல்கலைக்கழகமும் சென்றனர். மூதூர் ம.ம.வி இல் திரு. க. நவரெட்ணராஜா, விஞ்ஞான பிரிவிலும், திரு. தி. மாணிக்கராசா வரத்தக பிரிவில் கற்றனர். செல்வி. ஆ. நவநாயகம் மட்/வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்திலும், ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் உயர்தரம் விஞ்ஞானப்பிரிவிலும் கற்றனர்.

இலங்கை ஆட்சியர் 1931ல் டொனமூர் அரசியல் திட்ட மாற்றத்தில் சர்வசன வாக்குரிமையில் தெரிவானவர்களில் 7 குழுக்கள் அமைக்கப்பட்டது. அதில் - கல்விக்குழுத் தலைவரான C.W.W. கன்னங்கரா அவர்களின் (கல்வித் திட்டத்தில் இன்றைய கல்வி அமைச்சர் மாதிரி) மத்திய மகா வித்தியாலயங்களை விடுதி வசதியுடன் அமைத்து கிராமப்புற மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான திட்டத்தில் இடம்பெற்ற பாடாசலை. இதில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்டைசத் திட்டத்தையும் ஏற்படுத்தி சித்தியடைபவர்கள் இலவசமாக கற்கும் வாய்ப்பையும் ஏற்படுத்தியிருந்தார். இத்திட்டத்தில் சரியான பயன் கிடைத்தமையை உணரமுடிகின்றது. எமது மூதூர் பிரதேச கிராமங்களிலிருந்து அங்கு கற்றவர்கள் நல்ல நிலையில் ஆளுமைத் திறனுள்ளவர்களாக உருவாக்ககப்பட்டுள்ளனர்.



1996ல் கட்டப்பட்ட ஆராாதனை மண்டபம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**பெறுபேறுகள்**

## தரம் 5 – பலமைப்பரிசில் பரீட்சை

ஒவ்வொரு ஆண்டும் வெட்டுப்புள்ளியில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆரம்பத்தில் குறிப்பாக 1995களில் 98, 108 – இருந்து படிப்படியாக கூடி 159 வரை கூடியுள்ளது 70க்கு மேல் - இருபாடங்களிலும் சராசரியாக 35 புள்ளிகளுக்கு மேல் பெறும் அனைவரும் சித்தியடைந்தவர்களாக கணிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 1963 | - | க. தவராசா | | |
| 1995 | - | செ. பிரியதர்ஷினி | | |
| 2008 | - | 1. இ. துர்க்கா, | 2. கி. சியாம் சுந்தர் | |
| 2009 | - | 1. கி. தனுசுந்தர் | 2. சு. சஜிரேகா | 3. இ. தர்ஷிகா |
| 2010 | - | 1. சோ. வலிஷாலினி, | 2. சி. அனுசிகா | |
| 2014 | - | சா. கிருவர்த்தனன் | | |
| 2015 | - | 1. பு. சனுஸ்கர், | 2. சோ. ஜனா, | 3. வி. விதுசாயினி |
| 2016 | - | 1. ஆ. ரஜேசன் | 2. க. தணிகா, | 3. சோ. மதுசாந், |
| 2017 | - | 1. வி. ரக்ஷிகா, | 2. மை. ரம்மியா | |
| 2018 | - | சி. துலக்சிகா | | |
| 2019 | - | 1. த. ஜிவேதினி, | 2. அ. அபிஷேக், | 3. ர. அனுசாந்தன் |
| | | 4. சு. பவதர்ஷிகா, | 5. சு. நிவேகா | 6. யா. கரிஷ் |
| 2020 | - | 1. நடேந்திரன் காரத்திகன், | 2. சுதாகரன் அக்சயன் | |
| | | 3. யோகநாதன் டிரோசன், | 4. தேவராசா சாருதன் | |
| | | 5. இராஜேஸ்வரன் தரணீதரன், | 6. பேச்சிமுத்தன் லோஜிதா | |
| | | 7. சோதிலிங்கம் தேனுஜா, | 8. தேவதாஸ் யுரோமிக்கா | |
| | | 9. கிரிதரன் கிருஸ்சிகா, | 10. சாந்தலிங்கம் கர்ணிஷா | |
| | | 11. தேவகுமார் கேமதக்ஷி, | 12. இராமச்சந்திரன் ஜஸ்வியா | |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேற்றியோர் - 30

70 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர் - 30

வெட்டுப்புள்ளிக்கு மேல் (159) - 12 பேர்.

***திருமதி. வசந்தி நிர்மலன் அவர்கள் சங்கீத ஆசிரியையாக இங்கு கடமைபுரிந்த வேளை தமது பாடமூடாக பல மாணவர்கள் பல்கலைக் கழகமும் கல்விக் கல்லூரிக்கும் செல்ல வாய்ப்பு ஏற்பட்டதாக அறிய முடிகின்றது.***

தரம் 5, க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) பரீட்சைகளுக்கான மேலதிக வகுப்புக்கள் - பரிசில்கள் - விழாக்களுக்கான உதவிகள் - திரு நா.சுதாகரன், நா.சசிதரன், நா. வாமதேவன், சி. முரளிதரன் ஆகியோரால் வழங்கப்படுகின்றன.

## பல்கலைக்கழக அனுமதி (சங்கீத பாடமூலமாக)[6]

| வருடம் | பல்கலைக்கழகம் | கல்வியியற் கல்லூரி |
|---|---|---|
| 2008 | த. தனலக்ஷ்மி | |
| | கோ. மதியாழினி | |
| | இ. தனுசியர் | |
| 2009 | ம. சுதர்சினி | |
| | தி. சிவந்தினி | |
| 2011 | சு. கிருஸ்ணவேனி | அ. ஜனா |
| 2012 | கி. கிருபாலினி | நா. ஆனந்தபைரவி |
| 2013 | நா. ஜெயநீதன் | |
| | யோ. சிந்திஜா | |
| 2015 | ந. நிதர்சினி | ஸ்ரீ. சரணிக்கா |
| 2017 | வ. நஜிவினி | |
| 2018 | ப. சுகந்தினி | |
| | ஆ. நிஷாந்தன் | |
| 2019 | பா. ஹர்சினி | |
| | த. தினுஸ்கா | |
| | ச. திலஷ்சனா | |
| | கு. நிஷாந்தன் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளிலும் பல சாதனைகள் வலய, மாவட்ட மாகாண - தேசி மட்ட போட்டிகளுக்கும் தெரிவாகி - பல வெற்றிகளை ஈட்டி - பெருமை சேர்க்கும் நிலை காணப்படுகிறது.

**பல்கலைக்கழக அனுமதி**

| வருடம் | மாணவர் பெயர் | பல்கலைக்கழகம் |
|---|---|---|
| 2001 | க. ஜீவரூபன் | கிழக்கு |
| 2008 | த. தனலெட்சுமி | கிழக்கு |
| | சோ. மதியாழினி | கிழக்கு |
| | இ. தனுசியா | கிழக்கு |
| 2009 | ம. சுதர்சினி | கிழக்கு |
| | தி. சிவத்தினி | கிழக்கு |
| 2010 | த. அதிஸ்பரன் | யாழ்ப்பாணம் |
| 2011 | சூ. கிருஷ்ணவேணி | கிழக்கு |
| | ம. ஜனா | கிழக்கு |
| 2021 | ந. ஆனந்தபைரதி | கிழக்கு |
| 2013 | மு. சுகதாஸ் | யாழ்ப்பாணம் |
| | யோ. சிந்தியா | கிழக்கு |
| | நா. ஜெயநீதன் | யாழ்ப்பாணம் |
| 2014 | யோ. நிஜிதன் | கிழக்கு |
| | ப. டயானந் | கிழக்கு |
| | மோ. நிதர்சினி | யாழ்ப்பாணம் |
| 2015 | சு. தினூசன் | கிழக்கு |
| | தி. ஜனார்த்தனி | கிழக்கு |
| 2016 | இ. ஜிந்திஜன் | கிழக்கு |
| 2017 | து. நஜிவினி | யாழ்ப்பாணம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வருடம் | மாணவர் பெயர் | பல்கலைக்கழகம் |
|---|---|---|
| 2018 | ப. சுகந்தினி | யாழ்ப்பாணம் |
| | ஆ. நிசாந்தன் | யாழ்ப்பாணம் |
| 2019 | ம. லிரிதா | கிழக்கு |
| | பா. ஹர்சினி | கிழக்கு |
| | ச. திலக்சனா | கிழக்கு |
| | த. தினுஸ்கா | கிழக்கு |
| | கு. நிசாந்தன் | யாழ்பாணம் |

## தேசிய கல்வியற் கல்லூரி அனுமதிகள்

| வருடம் | மாணவர் பெயர் | பல்கலைக்கழகம் |
|---|---|---|
| 1999 | கோ. பரமேஸ்வரன் | மட்டக்களப்பு |
| 2004 | க. ஜீவநாதன் | வவுனியா |
| | தெ. சிவசீலன் | வவுனியா |
| 2013 | த. புஸ்பகாந்தி | தர்கா நகர் (களுத்துறை) |
| 2014 | க. கரன் | மட்டக்களப்பு |
| | கி. சுபாஷினி | மட்டக்களப்பு |
| 2015 | ஶ்ரீ. சரணிகா | கோப்பாய் |
| | உ. தர்ஷா | மட்டக்களப்பு |
| 2016 | சி. துஷாந் | மட்டக்களப்பு |
| | தி. சனோஜன் | பேராதனை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைவோருக்கு
திரு. நாகராசா சுதாகரன் அவர்கள் அனுசரணை வழங்கி வருகின்றார்.
அவரது பெற்றார் திரு.திருமதி. நாகராசா தங்கரெட்ணம் அவர்களுடன்



ஜனாப். A.J. ஜபார் கோட்டக்கல்விப் பணிப்பாளர், அதிபர்களுடன்
திரு. திருமதி. நாகராசா தங்கரெட்ணம் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களை வாழ்த்திய வேளை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புலமைப்பரிசில் பரீட்சைக்கு செல்ல முன் ஆசிரியர்களுடன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2019இல் கௌரவ இரா. சம்பந்தன் (பா.உ),
கௌரவ. க. துரைரெட்ணசிங்கம் (பா.உ) அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் கட்டப்பட்டது






தி/மூ/ கலைமகள் இந்துக் கல்லூரி விளையாட்டரங்கு திறந்து வைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூதூர் கல்வி வலயத்திலுள்ள பள்ளிக்குடியிருப்பு கலைமகள் இந்துக்கல்லூரியிலிருந்து இம்முறை நடைபெற்ற கிழக்கு மாகாண மட்ட பாடசாலைகளிடையேயான மெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டியில் வெற்றியீட்டி தேசிய மட்டப்போட்டிகளுக்கு தெரிவாகியுள்ள வீராங்கனைகளை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு சமீபத்தில் கல்லூரி அதிபர் கே.பாக்கியராசா தலைமையில் கல்லூரியில் நடைபெற்றது. இதன்போது வீராங்கனைகள் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களால் வரவேற்பளிக்கப்பட்டனர். இதன் போது வெற்றிபெற்ற வீராங்கனைகளுக்கு சான்றிதழ்களும் வழங்கிகௌரவிக்கப்பட்டனர். (தோப்பூர் நிருபர்)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





2013 க.பொத. (சா/த), 2016 க.பொ.த (உ/த) மாணவர்களின் முயற்சியினால்,
அதிபர், ஆசிரியர்களின், நலன் விரும்பிகளின் ஒத்துழைப்புடன் பாடசாலையில்
நிர்மானிக்கப்பட்ட சரஸ்வதி சிலையானது 25.09.2020ம் திகதியன்று
திறந்து வைக்கப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது பாடசாலைச் சின்னம்.

ஒவ்வொரு பாடசாலைக்கும் பாடசாலை கலாசாரம் என்பதை மிகவும் கவனமாக பேண வேண்டும். இவை கலைத்திட்டத்தில் மறை கலைத்திட்டத்தைச் சேர்ந்தது. கலைத்திட்டம் என்பது கல்வித்திட்டத்தை பாடசாலையூடாக நடைமுறைப்படுத்துவது இதில் மையக்கலைத்திட்டம், இணைக்கலைத்திட்டம், மறைகலைத்திட்டம் என்பன இடம்பெறும்.

இவற்றில் - பாடசாலைக்கொடி, பாடசாலைச் சின்னம், பாடசாலைக்கீதம், ஒழுக்கம், ஒழுங்கு, பாடசாலை மணி, கலாசாரம் முதலான விடயங்கள் உள்ளடங்கும்.



**நெற்கதிரால் சூழப்பட்டிருப்பது**

இவைகள் இக்கிராமம் விவசாயத்தை மையப்படுத்தியது, மக்களது பிரதான பரம்பரை தொழிலும் என்பதை உணர்த்துகின்றது. கதிர் நிறை மணிகள் உடையதாய் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏர்**

நிலத்தை ஆழமாக உழுது பண்படுத்துவதையும் சிறந்த பண்படுத்தல் - சிறந்த விளைவைக் கொடுக்கம் என்பதை உணர்த்துகின்றது.

**அன்னம்**

எப்போதும் நல்லவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பாலையும், நீரையும் கலந்திருந்தால் அன்னம் பாலை மட்டும் பெற்றுக்கொள்ளும் என்பதைக் குறிப்பிடுகின்றது.

இன்றைய 21ம் நூற்றாண்டுக்கு தேவையான அறிவு எனும் 10 வகை அறிவுகளில் "தகவல் அறிவு" (Information Literacy) எனும் தலைப்பில் - எது உண்மை, எது உண்மையற்றது என பிரித்றிய ஒருவரை வழிப்படுத்தும் திறனாகும்.

**புத்தகம்**

நூல் எப்போதும் சரியான, நேரான பாதையில் வாழ்வை அமைத்தக்கொள்ள நூல் அறிவு பயன்படுத்த வேண்டும் என்பதற்காக.

**குத்துவிளக்கு**

ஒளி - வெளிச்சம் கொடுப்பது. இதில் ஐந்து திரிகள் ஒளியூட்டுகின்றது.

1. அறிவு — Knowledge
2. திறன்/ஆற்றல் — Skills
3. மனப்பாங்கு — Attitude
4. பயிற்சி — Practice
5. விழுமியங்கள் — Values

இவை ஐந்தும் ஒவ்வொரு மாணவர்களிடமும் பிரகாசிக்க வேண்டும் - இவற்றில் நல்லொளி பெற்று வழமான வாழ்வுக்கு வழிகாட்டவே. இவ் ஒளி - வழிபாட்டம்சம்.

**விருது வாக்கியம்**

அறிமின், விழிமின், துணிமின்

சுவாமி விவேகானந்தருடைய வாக்கியம். நல்ல அறிவைப் பெறவேண்டும் - அதனூடாக விழிப்புணர்வைப் பெறவேண்டும், அதனூடாக துணிவை உறுதியைப் பெற வேண்டும் என்பது. இவை எக்காலத்திற்கம் பொருத்தமான பாடசாலை விருதுவாக்கியமாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோயில்**

ஆன்மாக்கள் லயப்படும் இடம் ஆலயம். மனிதர்களிடம் உள்ள ஆணவம் நீங்கி முத்திப்பேறடைவதைக் குறிக்கும். நான் என்ற அகங்காரம் நீங்கி மனித நேயத்துடன் வாழ வழிகாட்டுமிடம் என்பவற்றைக் குறிப்பது.

இவ்வாறான பல பண்பாட்டம்சங்களை உள்ளடக்கியதே எமது பாடசாலைச் சின்னம். எனவே இவற்றை சரியாக விளங்கி உணர்ந்து செயற்படும்பொது ஒவ்வொருவரும் நல் ஆளுமை, பண்பாடுடையோராய் வழமான வாழ்வுக்கு வழிகாட்டியாய் அமைகின்றது.

## பாடசாலை கீதம்

சீர்பெறு பள்ளிக் குடியிருப்பூரில்
திழ்ந்திடும் கலைமகளார்
பேர் பெறு வித்தியா சாலையில்
சிறுவர் பீடற வாழியவே
வாழிய வாழியவே வாழிய வாழியவே...

பல்கலை கற்போம் பண்புடன் வாழ்வோம்
பாடறிந் தொழுகிடுவோம்
நல்லன செய்வோம் நானிலம் காக்கும்
நம்பிரான் அடிதொழுவோம்
வல்லவராக வாழ்திட உடலை
வசைத்துமே வாழியவே
வாழிய வாழியவே வாழிய வாழியவே...
மகாவலித் தாயின் வளம்பெறு வயலும்
வான் பயிர் செழித்திடவும்
காவினில் எருமை கருத்துடன் மேய்த்து
காத்திடும் காராளர்
மேவிடும் எம்மூர் மேதினில் மீது
வியப்புற வாழியவே
வாழிய வாழியவே வாழிய வாழியவே...

**1990இல் இலக்கிய கலாநிதி தமிழ் ஒளி - அதிபர் வ.அ. இராசரெட்ணம் அவர்களால் இயற்றப்பட்டது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தி/மூ/ஸ்ரீ கணேசா வித்தியாலயம்

## தங்கபுரம் - பள்ளிக்குடியிருப்பு

தி/பள்ளிக்குடியிருப்பில் இருந்து 1.5 கிலோமீற்றர் தூரத்தில் கட்டைபறிச்சான் - பள்ளிக்குடியிருப்பு பிரதான வீதிக்கருகில் தங்கபுரம் தங்க விநாயகர் ஆலயத்தின் முன்பாக அமைந்துள்ளது.

இப்பிரதேசத்திலுள்ள சிறார்கள் அண்மையில் தமது ஆரம்பக் கல்வியை பெறவேண்டும். அனைவருக்கும் கல்வி வாய்ப்பு கிடைக்க வேண்டுமென்ற எதிர்கால தூரநோக்கு கருதி திரு. ஆ. குணராஜரெட்ணம் கல்விப்பணிப்பாளர், கொத்தணி அதிபர் திரு. க. துரைரெட்ணசிங்கம் அவர்களினால் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

01.05.1990இல் திரு. க. அம்பிகை பாகன் அவர்கள் முதல் அதிபராக நியமிக்கப்பட்டார். ஆரம்பிக்கும்போது இவ்விடம் காட்டுப் பிரதேசமாகவும் போராட்ட காலமும் மிகவும் அச்சம் நிறைந்த காலமாகவும் இருந்தது. முதல் அதிபர் தற்துணிவுடன் பொறுப்பேற்று சிறப்பாக செயற்பட்டார். ஆரம்பித்த முதல் சிலகாலம் மூன்றாம் தரத்துடன் மட்டப்படுத்தி 4ம், 5ம் தரங்களை கலைமகள் இந்துக்கல்லூரிக்கு மாணவர்களை அனுப்பினர். பின்னர் தொடர்ந்து 1 - 5 வரையான வகுப்புகளுள்ள சிறந்த ஆரம்பப் பாடசாலையாக சிறப்பாக இயங்கி வருகின்றது.

இப்பாடசாலைக்கான காணியை திரு.திருமதி கு. கிட்ணபிள்ளை தெய்வானை தம்பதியர்களினால் வழங்கப்பட்டுள்ளது. சுமார் 2 ஏக்கர் காணியை அன்பளிப்பு செய்த இவர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள்.

120 அடி X 20 அடி அளவிலாக ஒரு கட்டடம் தேவையான மலசலகூடங்களும், விளையாட்டு மைதானமும் இங்குள்ளது. வருடா வருடம் இம்மாணவர்களுக்கான இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றுவருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடமையாற்றிய அதிபர்கள்

1. திரு. க. அம்பிகை பாகன் - 01.05.1990 - 01.01.1994
2. திரு. பொ. இரத்தினசிங்கம் - 01.01.1994 - 05.05.2005
3. திரு. நா. கிட்ணதாஸ் - 06.05.2005 - 13.05.2007
4. திரு. பா. தேவராசா - 14.05.2007 - 09.10.2008
5. திரு. வி. பாக்கிராசா - 10.10.2008 - 14.05.2015
6. திரு. வை. தில்லையம்பலம் - 15.05.2015 - இற்றைவரை



திரு. க. அம்பிகை பாலன்
1990 - 1994



திரு. பொ. இரத்தினசிங்கம்
1994 - 2005



திரு. நா. கிட்ணதாஸ்
2005 - 2007



திரு. பா. தேவராசா
2007 - 2008



திரு. வி. பாக்கியராசா
2008 - 2015



திரு. வை. தில்லையம்பலம்
2015 - இற்றைவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண கல்வித் திணைக்களத்தினால் 120 அடி X 100 அடி கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. கல்வித் திணைக்களத்தால் மலசலகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. முன்பள்ளிகளும் பாடசாலை வளவினுள் அமைக்கப்பட்டுள்ளது. 2019ல் திரு. இரா. சம்பந்தன் (பா.உ) அவர்களால் 100,000/- (ஒரு இலட்சம்) ரூபா மலசலகூட திருத்தத்திற்காக வழங்கப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது இங்குள்ள ஆசிரியர்கள்.

திரு. ச. சுதாகரன்
செல்வி. கோ. லலிதாதேவி
திருமதி. ரதி சாந்தலிங்கம்
திரு. சசிகுமார்
ஜனாப். எம். உவைஸ்
ஜனாப். எம். பவாஸ்

**தரம் - 5 புலமைப் பரீட்சைப் பெறுபேறுகள்.**

- 2015 - வசந்தகுமார் பிதுர்ஷா.
- 2018 - சௌந்தரராஜா தர்ஷன்.
- 2019 - யாதவன் - ஹரீஸ்
- 2020 - ஆனந்தன் - அக்ஷயா

63 மாணவர்கள் கற்கின்றனர். ஆரம்பக் கல்வி சிறப்பாக இயங்குகின்றமை பாடசாலை ஆரம்பித்த தூரநோக்கு நிறைவடைவதாகவுள்ளது.

எதிர்காலத்தில் சிறந்த விளைதிறனை வழங்கும் பாடசாலையாக திகழ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/மூ/ சின்னக்குளம் அ.த.க வித்தியாலயம்
# பள்ளிக்குடியிருப்பு

தி/பள்ளிக்குடியிருப்பு கலைமகள் இந்துக் கல்லூரியிலிருந்து சுமார் 2.5 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள சின்னக்குள, இத்திக்குள கிராமங்களின் பிள்ளைகள் தமது கல்வியை அண்மையில் பெற வேண்டும். அனைவருக்கும் கல்வி கிடைக்க வேண்டும் எனும் தொலைநோக்கில் இக்கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆ. குணராஜரெட்ணம் கல்விப் பணிப்பாளர் அவர்கள் இப்பாடசாலையை நிறுவ முயற்சித்தார்.

01.01.1997ல் திரு. வ. தில்லையம்பலம் அவர்கள் முதல் அதிபராக நியமிக்கப்பட்டு முதல் சிலகாலம் தரம் 1 - 3 வகுப்புகளுடன் நிறுத்தி 4,5ம் தரங்கள் கலைமகள் இந்துக் கல்லூரிக்கு அனுப்பப்பட்டனர். பின்னர் படிப்படியாக 1 - 5ம் தரங்கள் உள்ள ஆரம்பப் பாடசாலையாக சிறப்பாக இயங்கி வருகின்றது.

**இப்பாடசாலைக்கான காணியை**

திருமதி. தியாகராசா - நேசமணி

திருமதி. நடராசா - மகேஸ்வரி

திரு. நாகராசா - சுதாரகன்

ஆகியோர் அன்பளிப்புச் செய்தனர். (சுமார் 2 ஏக்கர்) மாகாண கல்வி அமைச்சினால் 100 அடி X 25 அடி - ஒரு கட்டிடமும் 16 அடி X 30 அடியில் ஒரு கட்டிடமும் உள்ளது.

**கடமையாற்றிய அதிபர்கள்.**

1. திரு. வ. தில்லையம்பலம் - 01.01.1997 - 14.05.2015
2. திரு. வி. பாக்கியராசா - 15.05.2015 - இன்று வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. வ. தில்லையம்பலம்
01.01.1997 - 14.05.2015



திரு. வி. பாக்கியராசா
15.05.2015 - இன்று வரை

**புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்.**

- 2010 - மகாதேவன் தனுதாசன்
- 2011 - சுதாகரன் தர்ஷிகா
- 2014 - சிவாகரன் கரனியா
- 2015 - சிறிமுருகன் லக்சா
- 2019 -
    1. சிவகுமார் டிவிசாத்
    2. முதல்வன் அபிசாந்
    3. இலங்கேஸ்வரன் சனுஜன்
    4. சுகுமார் கேதுஸா
    5. முரளிதரன் வினுஸ்கா
    6. தவச்செல்வன் ஜினுசியா
- 2020 - லிங்கமகராசா மேஹனுஜன்

**இங்கு கடமையாற்றும் ஆசிரியர்கள்**

- காளிராஜா குமார் - தரம் 5
- ஜனாப். அ.க. சுபைது - தரம் 4
- திரு. வேலுப்பிள்ளை சிவானந்தம் - தரம் 3
- திருமதி சகுந்தலா பார்த்தீபன் - தரம் 2
- செல்வி. பாக்கியராசா ஜெயந்தினி - தரம் 1
- செல்வி. தர்மலிங்கம் சுபஜனனி - BEd பயிற்சிக்கான இணைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2019ல் இப்பாடசாலைக்கு தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான திரு. க. துரைரெட்ணசிங்கம் அவர்களால் 10 இலட்சம் ரூபா விளையாட்டு மைதானம் புனரமைக்கவும், மதில் கட்டுவதற்காகவும், 1 இலட்சம் ரூபா மலசல கூடங்கள் திருத்தத்திற்காகவும் வழங்கப்பட்டது.

2019ம் ஆண்டு 5ம் தரப் புலமைப் பரீட்சையில் 06 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இப்பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தொடர்ச்சியான சித்திகள் கிடைத்து வருவது பாராட்டிற்குரியது.

எதிர்காலத்தில் பெற்றார் பழைய மாணவர்கள், பாடசாலைச் சமூகம் அக்கறையுடன் செயற்பட்டு மேலும் சிறந்த பெறுபேறுகளும் நல்ல மனப்பாங்குடைய உண்மை, நேர்மையுள்ள சிறந்த தரமான சமூகத்தை உருவாக்க வேண்டும்.

| | |
|---|---|
| **UNESCO** | - **உலக கல்வி நோக்கம்** |
| Learn to Know | - அறிவதற்காக கற்றல் |
| Learn to do | - செய்வதற்காக கற்றல் |
| Learn to Live together | - சேர்ந்து வாழக் கற்றல் |
| Learn to be | - கற்றதன் படி வாழ்தல் |

**அடிக்குறிப்பு**

1. காலணித்துவ திருகோணமலை - பக். 259, கனகசபாபதி சரவணபவன்.
2. பாடசாலை பதிவேடுகள், அதிபர்களின் உறவினர்களிடமிருந்து.
3. பரீட்சைத் திணைக்கள வெளியீடுகள்.
4. பாடசாலை **ARR** அறிக்கை.
5. அதிபர், பாடசாலைப் பதிவேடுகள்.
6. பாடாசாலைப் பதிவேடுகள், திருமதி. வசந்தி நிர்மலன் I.S.A. சங்கீதம் - முன்னாள் ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 5 -

# கலைத்துறை

மகிழ்வான வாழ்வுக்கு உடல் - உள ஆரோக்கியம் மிகவும் முக்கியமானது. இங்கு வரலாற்று ரீதியாக இடம்பெற்ற கலையம்சங்களாக - அண்ணாவியாரினால், நிகழ்த்தப்பட்ட இதிகாச புராணங்களிலான நாட்டுக்கூத்துகள், கோலாட்டம், கும்மி, காவியங்கள், சடங்குகள், கருவறை தொடக்கம் கல்லறை வரையான வாழ்நாள் நீடித்த கலாசார பண்பாட்டம்சங்கள், வாழ்வியல் சம்பிரதாய முறைமைகள் பலவும் இடம்பெற வேண்டும். இருப்பினும் சில விடயங்களை மட்டுமே உள்ளடக்கப்படுகின்றது. கலைத்துறையில் ஆர்வத்துடன் பணியாற்றியோரின் பணிகள் பற்றியும் அவர்களால் இயக்கப்பட்ட கலையம்சங்களையும் குறிப்பிடப்படுகின்றது.

மகிழ்ச்சியாக வாழ்வதற்கும் மற்றவரை மகிழ்வாக வாழ வைப்பதற்கும் கலைகள் மிகவும் அவசியமானவை. கலைஞர்கள் எப்போதும் மற்றவர்களை மகிழ்ச்சிப் படுத்துபவராகவும் - தாமும் எப்போதும் மகிழ்வாகவும் இருப்பார்கள்.

இங்கு மருத நிலத்திற்கான ஒழுக்கம் உள்ளமையை அறியலாம். கலைநிகழ்வுகளை நடாத்தும் பல கலைஞர்கள் இங்கு செயற்பட்டுள்ளனர். அவர்களின் செயற்பாடுகள் பற்றிய பார்வையில்...

### திரு. தம்பாப்பிள்ளை (அண்ணாவியார்)

திரு. தம்பாப்பிள்ளை அவர்கள் ஈச்சிலம்பற்றிலிருந்து இங்கு திருமண பந்தத்தால் இணைக்கப்பட்டவர். நாட்டுக்கூத்து மூலம் - நீதிக்கருத்துக்களை மக்கள் மத்தியில் நிலைநாட்டும் நல்ல கற்பித்தலாக இவை அமைந்திருந்தன. இவரின் பாடும் திறன், ஓசை நயம் அனைவரையும் கவர்ந்தன. பிரதேசத்திலேயே சிறந்த அண்ணாவியாராகத் திகழ்ந்தார்.

இதிகாசபுராண கதைகள் நாட்டுக்கூத்தாக மக்களுக்கு விளங்கும் வகையாக ஆடப்படும். இதற்கான இசைக்கருவிகளாக மத்தளம், சல்லாரி முதலானவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தப்படும். ஒப்பனைகள் வேடம் பூணுதல் சிறப்பானது. 1965களுக்கு முன்பிருந்து நாட்டுக்கூத்துகள் இங்கு நடைபெற்றதாக அறியமுடிகின்றது. இவருக்கு உதவியாக இரு புதல்வர்களும் சிறப்பாக செயற்பட்டனர்.

விவசாயிகளின் ஓய்வு காலங்களில் - நிலாக்காலங்களிலும் நாட்டுக்கூத்துக்கள் இடம்பெறும். இதனூடாக பாரத, இராமாயண கதைகள் மக்களுக்கு இலகுவாக சென்றடைந்தன. பலரும் பயனடையும் வகையில் சிறப்பித்திருந்தன.

## திரு. த. கணபதிப்பிள்ளை

தம்பாப்பிள்ளை அண்ணாவியாரின் மகன் திரு. த. கணபதிப்பிள்ளை அவர்கள் சிறந்த குரல்வளமுள்ளவர். அனைத்து நாட்டுக்கூத்துப் பாடல்களையும் அந்த அந்த ஓசை நயத்துடன் பாடுவார். மற்றும் கோலாட்டம், கும்மி, குளிர்த்தி அம்மன் காவியங்கள் அனைத்தையும் மிகவும் சிறப்பாக பாடவல்லவரும் கோலாட்டம், கும்மி பயிற்றுவிப்பாளராகவம் திகழ்ந்தவர். கோலாட்டங்ளைப் பழக்கி அரங்கேற்றம் செய்தவர். ஆலய திருவிழாவின்போது சுவாமி வீதி உலா வரும்போதும், விழாக்களிலும் இவரது கோலாட்ட நிகழ்வுகள் இடம்பெறும். பார்ப்போரையும் மகிழ வைப்பதாக அமைந்திருந்தமையை அறிவோம். மிகச்சிறந்த மனித நேயமிக்க மனிதராக அன்போடு அனைவருக்கும் சிறந்த பயிற்றுவிற்பனராகத் திகழ்ந்தார்.

## திரு. த. வைரமுத்து

தம்பாப்பிள்ளை அண்ணாவியாரின் மகன். நாட்டுக்கூத்து, கோலாட்டம், கும்மி, அம்மன் காவியங்கள் முதலானவற்றை மிகவும் ஓசை நயத்துடன் பாட வல்லவர். விசேடமாக இதிகாச புராண கதைகளை மிகவும் சுவாரசியமாக கூறும் திறன் வாய்ந்தவர். சுமார் 20 - 30 பேர் கூடியிருக்கும் ஒரு சிறு குழுவினருக்கு இக்கதைகளை கூறுவார். எல்லோருமே மிகக் கவனமாக செவி மடுப்பர். நீதிக்கதைகள் பல கூறுவார். பாரதப்போர் நிகழ்வைக் கூறும்போது நாம் அப்போர்க்களத்தில் நிற்பதைப்போன்ற உணர்வு வரும். பாரதத்தில் தருமனின் கதாபாத்திரத்தைக் கூறும்போது நீதி தவறாது எவ்வளவு பொறுமையுடன் வாழ வேண்டும் என்ற உணர்வை ஊட்டுவனவாக இவரது கதை கூறும் விதம் அமையும். பலரை நல்வழிப்படுத்த இவரது பணி அமைந்தது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திரு. பொ. காளிராசா (பரியாரியார்)

எமது பிரதேசத்திலேயே மிகச்சிறந்த நாட்டு வைத்தியராக திகழ்ந்தவர். இவர் வைத்தியத்தோடு கலைத்துறையிலும் சாணக்கியராக திகழ்ந்தார். கோலாட்டம், கும்மி, காவியப்பாடல்கள் பாடுதல் முதலான விடயங்களை பயிற்றுவிப்பாளராகவும் பாடகராகவும் செயற்பட்ட ஒரு சிறந்த ஆளுமை மிக்கவர். வைத்தியம் செய்யும்பொது உரிய நோய்க்கான குணங்களையும் அதற்கான பரிகாரத்தையும் பாடலுடன் இசையுடன் பாடி வைத்தியம் செய்வார். மந்திரம், மாந்திரீகத்திலும் - பூசாரியாகவும் திகழ்ந்தவர்.

## இசைக்குழு

எமது கிராமத்தின் கலைத்துறை ஆர்வலர்களால் இசைக்குழுவை நடாத்திவந்தனர். வல்லவருக்கு புல்லும் ஆயுதம் என்பதற்கு ஒப்பாக ஒரு சில வாத்தியக்கருவிகளுடன் - டோலக்கி, வீணை, மோசங், தபெலாவுடன் இயங்கியது. 1967 - 1978 காலங்களில் சிறப்பாக இயங்கியது. டோல்கி வாசிப்பதில் - கு. இராமசாமி (சின்னவன்), சி. தெய்வெந்திரம், க.மயில்வாகனம், வீணைப்பெட்டி வாசிப்பதில் - ஆ. கனகரெட்ணம், க. முத்துலிங்கம், ப.அரசரெட்ணம், பாடல்கள் - ஆ. கனகரெட்ணம், ப. கணேசமூர்த்தி, சி.காளிராசா, சி. தெய்வெந்திரம், க. புஸ்பராசா, த. சிதம்பரப்பிள்ளை, க. தவராசா, ஆ துரைநாயகம், க. மயில்வாகனம், க. நவரெட்ணராசா முதலானோர்களுடன் மிகவும் சிறப்பாக இவ் இசைக்குழு செயற்பட்டது. இனிமையான பாடகர்கள் அனைவரையும் மகிழ வைக்கும் அளவிற்கு இவர்கள் செயற்பாடுகள் அமைந்திருந்தன.

நிலாக்காலங்களில் திரு. ப. கணேசமூர்த்தி பிரதமன பாடகராகவும், ஏனைய பாடகர்களுடன் "பைலா" எனும் பாட்டும் ஆட்டமும் இடம்பெறும். திரு.க.சோமசுந்தரம், ப. சோமசுந்தரம் சிறப்பரிட்டக்காரர்களாக இந்நிகழ்வு இடம்பெறும். பெரும் கலகலப்பாகவும் மகிழ்வாகவும் ஆடிப்பாடும் நிகழ்வு இடம்பெற்றமை மறக்கமுடியாத நிகழ்வுகள்.

## நாடக மன்றம்

நாடகமன்றம் என்று உருவாவதற்கு முன் சில நாடகங்கள் மேடை ஏற்றப்பட்டன. பின்னர் தொடர்ச்சியாக கன்னித்தமிழ் கலா மன்றம் எனும் பெயரில் சிறப்பாக இயங்கியது. நகைச்சுவை நிறைந்ததாக சமூக நாடகங்களாக சமய வரலாற்று நாடகங்களும் இடம்பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொ. சரவணமுத்து, க. நவரெட்ணராஜா** ஆகியோர் இயக்குனர்களாக செயற்பட்டனர். கூடுதலாக சமூக நாடகங்களை எழுதி இயக்கினர்.

இவர்களது நாடகங்களில் சில..

- தங்கம் கம்பி நீட்டினாள்.
- மாமிக்கு ஏற்ற மருமகள்
- கொல்லப்பார்த்தான் பூசாரி
- இறைவன் பூமிக்கு வந்தால்
- எமலோகத்தன் தீர்ப்பு
- வாழத் துடித்தவள்
- ஐம்பதிலும் ஆசைவரும்
- ஓரங்க நாடகம் திரு. ச. சுதாகரன் (மதி) போன்றவை.

இந் நாடகங்கள், கலை விழாக்கள், திருவிழாக்கள், ஏனைய கிராமங்களின் விழாக்களிலும் சென்று நடித்து பாராட்டுக்களை பெற்றவை.

தங்கம் கம்பி நீட்டினாள் - நாடக நடிகர்களாக நா. மகேஸ்வரன், க. தவராசா, த. சிதம்பரப்பிள்ளை, ஆ. செல்வநாயகம் ஆகியோர் நடித்தனர். இதில் நகைச்சுவை நடிகர்களா திரு நா. மகேஸ்வரம் திகழ்ந்தமை மறக்க முடியாதது. இந்நாடகம் சிறினிவாசபுரம் பிள்ளையார் கோயில் நவராத்திரி விழாவில் மேடையேற்றப்பட்டது.

ஏனைய நாடக நடிகர்களாக பொ. சரவணமுத்து, க. நவரெட்ணராசா, க. வேலானந்தம், வி. பாக்கியராசா, ச. சுதாகரன் போன்றவர்களைக் குறிப்பிடத்தக்க சிறந்த சிரிப்பூட்டும் நடிகர்களாக திகழ்ந்தார்.

கலை வளர்ப்பதில் பாடசாலையின் பங்கும் சிறப்பாக அமைந்ததை காணலாம். 1962 - 1965 காலப்பகுதியில் ஆசியரியர் திரு. க. இராசதுரை முதலான ஏனைய ஆசிரியர்களும் பல நாடகங்கள், பேச்சுகள், பாடல்கள் முதலான கலைத்துறையை வளர்த்ததை அறியலாம். இவரது ஒரு நாடகம் "சாமி ஆடிகட்டுச் சொல்லுதல்", சாமி ஆடுதல் எனும் நாடகப் பாத்திரங்களாக மாரியர் - வி. பொன்னம்பலம் - தலைமைப்பூசாரி, காளிக்குட்டி - ஆ. செல்வநாயகம் - ஒரு பூசாரி, சாமி ஆடிகட்டு கூறுபவர் - க. தவராசா - அக்காலத்தில் இந்நாடகம் வாணிவிழா கலைநிகழ்வுகளில் நடாத்தப்பட்டது. இதில் சாமி ஆடிகட்டு சொல்லும் பாத்திரம் மிகவும் சிறப்பாக நகைச்சுவையாக அனைவரையும் வயிறு குலுங்கச் சிரிக்க வைத்த காட்சிகள் மறக்க முடியாதவை. (அக்காலத்தில் கிராமத்தில் நடபெறுகின்ற சம்பவம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் - கவிஞர்கள், வில்லுப்பாட்டு, பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், நாடக கலைஞர்கள், கலாபூசணம் முதலான தகைமையுடையோர் இக்கிராமத்திலே வாழ்கின்றனர். வில்லிசைக் கலைஞர், நாடக கலைஞராக, கவிஞராக பல சாதனைகள் படைத்தவர் திரு. கோ. கந்தசாமி அவர்கள்.

கலைத்துறையில் இக்கிராமத்தில் செயற்பட்ட பலர் இருக்கின்றார்கள் மக்கள் மகிழ்வாக வாழவும் நற்சிந்தனைகளை வளர்க்கவும் கலைஞர்கள் உதவவேண்டும். உதாரணமாக மன அழுத்தமுள்ள வேளை - வைகைப்புயல் வடிவேலுடைய நகைச்சுவைக் காட்சிகளைப் பார்த்தால் சிரிப்பும் மன மகிழ்வும் ஏற்படும்.

தந்தை செல்வா உயிர் பிரியம் வேளையில் நாதஸ்வர இசை கேட்டுக்கொண்டிருந்ததால் உயிர் பிரியும் நேரம் தாமதமானதாக அறிய முடிந்தது.

எனவே கலை மனிதனை மகிழ்வாக வாழ வைக்கவும் நீண்ட கால நலமான வாழ்வுக்கும் வழிவகுக்கும்.

மேலும் இக்கிராமத்தில் இயல், இசை, நாடகங்கள் கலை நிகழ்வு தரமுடையதாய் அமைய இத்துறை சார்ந்தோர் ஊக்கப்படுத்த வேண்டும்.

கிராமத்தில் கலைத்திறன் மிக்கவர்கள் பலர் உளர். சிலர் எழுத்தாக்கங்களை வெளியிட்டும். பலர் எழுத்துருவாக்கம் செய்யாமலுமுள்ளனர். பலரது கலையாற்றல் திறன்களை அவதானிக்கையில்...

## எழுத்தாக்கங்களுடனான - கலைத்துறை வெளிப்பாடுகளில்...

எமது கிராமத்தின் கலைத்துறையும் அக்காலத்திற்கேற்ற அண்ணாவி மார்களுடன் தற்காலத்திற்கேற்ற கலைத்துறையும் படிப்படியாக வளர்ந்துள்ளது. அவற்றில் எழுத்தாக்கங்கள் உட்பட கலைத்துறையில் தமது வெளிப்பாடுகளை வெளிக்கொணர்ந்தோரில் சிலர் இங்கு குறிப்பிடப்படுகின்றனர்.

### திரு. ஆ. கனகரெட்ணம்

இசைக்குழு, நாடகமன்றங்களின் இயக்குனரான இவரின் எழுத்தாக்கமாக மரணமடைந்தோரின் 31ம் நாள் நினைவுமலரில் கவிதையாக வெளியிட்டுள்ளார். (இரு கல்வெட்டுக்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- திரு. மா சிவலிங்கம் அவர்களுக்கானது
- செல்வன். சு. இளங்கோ
- வள்ளுவரின் "வாழ்க்கைத் துணைநலன்" எனும் ஆய்வுநூலும் பல கட்டுரைகளையும், ஆக்கங்களையும் வெளியிட்டவர்.

## கலாபூசணம் ந. சிதம்பரப்பிள்ளை

தி/மூ/திருவள்ளுவர் வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு நாட்டுக்கூத்தைப் பயிற்றுவித்து மாகாணமட்ட முதன்மை பரிசிலைப் பெறச்செய்தவர்.

பாஞ்சாலி சபதம் நாட்டுக்கூத்து நூல்
கொம்பு முறி கொம்பு விளையாட்டு
பத்தினியம்மன் காவியம் இறுவெட்டும்
காலக்கீறல்கள் - கவிதைகள்
மற்றும் பல கட்டுரைகள் கவிதைகளையும் எழுதியுள்ளார்.

## திரு. பொ. இரத்தினசிங்கம்

பேச்சாளன், நாடக கலைஞர் ("போடியார்" என்றால் கிழக்கிலங்கைக்கே தெரிந்தவர். நாடகத்தில் போடியார் பாத்திரத்தில் வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் நடித்து பாராட்டைப் பெற்றதோடு அவரது பெயரே போடியார் என்றாலே தெரிவும் அளவுக்கு ஆளானவர்.)

கவிஞர், பாடகர், யுத்த காலத்தில் சுற்றி வளைப்பில் அனைவரையும் கோட்டை ஆமி முகாமில் வைத்திருந்த போது பாடுமாறு கூற "இதையவீணை தூங்கும்போது பாட முடியுமா?.... பாடலை அருமையாக பாடியதாக ஏனையோர் கூற அறிய முடிந்தது.)

சைவ சித்தாந்த, தோத்திர, புராண இதிகாசங்கள் திருமறை ஓதுதல் முதலானவற்றில் தேர்ச்சி பெற்றவர். இளம் சைவப் புலவருக்கான தகைமை பெற்றவர்.

கலைமகள் இந்துக்கல்லூரியில் மாணவர்களை பேச்சு போட்டிக்கு தயார் படுத்தி தமிழ்த்தின போட்டிகளில் வெற்றிபெறச் செய்தவர். ("ஜீவரூபன் - சிறந்த போச்சாளன்" கூறியது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திரு. க. நவராசா

கவிஞர், பேச்சாளர், நடிகர், எழுத்தாளர், கட்டுரையாளர், பல நகைச்சுவை நாடகங்களில் நடித்தவர். சிறந்த அறிவிப்பாளர். பல கவிதை அரங்குகளில் கவிதை பாடியவர்.

### திரு. க. நவரெட்ணராஜா

நாடக இயக்குனர், நடிகர், பாடகர், பேச்சாளன், பல்துறைக் கலைஞர். இளைஞர்களை கன்னித்தமிழ் கலா மன்றத்தினூடாக - கலைத்துறையை வளர்த்தவர். இம்மன்றத்தின் இயக்குனரும் பக்திப்பாடகரும்.

### திரு. கோ. கந்தசாமி

சிறந்த வில்லுப்பாட்டுக் கலைஞர், கவிஞர், நாடக இயக்குனர், எழுத்தாளன், மாணவர்களை கலைத்துறையில் தேசிய மட்ட சாதனைகள் பெறச் செய்தவர்.

### திரு. க. அம்பிகைபாகன்

சிறந்த பேச்சாளன், நாடகம் - சமய விழாக்கள் கலாசார நிகழ்வுகளை திறம்பட நடாத்தும் ஆற்றல் வாய்ந்தவர்.

### திருமதி. ச. கன்னிகாபரமேஸ்வரி

கவிஞர். இந்தியாவில் அகதிகளாக இருந்த வேளை கவிதை நூல் ஒன்றை வெளியிட்டவர். கவிதையாக்கம் செய்யும் ஆற்றலுள்ளவர்.

### திரு. வி. பாக்கியராசா

கந்தபுராண படனம் முதலானவற்றை பாடுவதிலும் பயன் சொல்வதிலும் சிறந்து விளங்குகின்றார். கவிஞர் நாடக இயக்குனர், சிறந்த நடிகர், பேச்சாளர், சமய கலாசார நிகழ்வுகளில் முக்கிய பங்கேற்று செயற்படுபவர்.

### திரு. க. ஜீவரூபன்

பேச்சாளன், கவிஞர், கந்தபுராண படலம் - பயன் சொல்பவர். வைகுந்த அம்மானை - மரண வீடுகளில் பாடுபவர். திருக்கரைசை புராணம் பாடுதல் பயன்கூறுதல். முதலானவற்றை சிறப்புற செயற்படுத்தி வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திரு. யோ. சிவாகரன்

கவிஞர். கந்தபுராண படனம் வைகுந்த அம்மானை, திருக்கரைசை புராணம் முதலானவற்றை பாடுவதும் பயன் சொல்வதிலும் சிறந்து விளங்குகின்றார்.

### கவிஞர்கள்

க. பாக்கியராசா, வி. பாக்கியராசா, கோ. பரமேஸ்வரன், கி. பரமேஸ்வரன், யோ. சிவாகரன், வி.நிர்மலன் போன்றோர் கவித்துவமுடையோராய் பல வெளிப்பாடுகளை "பொலி" சஞ்சிகையிலும் ஏனைய வெளியீடுகளிலும் இவர்களது கவிதைகளை அறிய முடிகின்றது.

### செல்வி. செ. பிரியதர்ஷினி

பேச்சாளர், கவிஞர், தமிழ்த்தின பேச்சுப் போட்டியில் வடக்கு கிழக்கு மாகாண முதலாமிடமும் அகில இலங்கை தேசிய மட்டத்தில் 3ம் பரிசில் பெற்றார். தமிழ் - ஆங்கில இரு மொழி பேச்சுப் போட்டியில் 1ம் இடம் பெற்றவர். விவாதப் போட்டிகளிலும் முதன்மை பரிசில் பெற்றவர்.

### செல்வி. சி. நட்சினி

உலக தமிழ் அழகிப் போட்டியில் 1ம் இடம் பெற்றவர் (கனடா). கலைத்துறை ஆர்வலராக திகழ்கின்றார்.

### திரு. பொ. கோபாலபிள்ளை

கந்தபுராணபடலம், வைகுந்த அம்மானை, பட்டினத்தார் பாடல்கள், காவியங்கள் பாடுபவர். மோராண்டகுள - பத்தினியம்மன் காவியத்தை வாய்மொழியூடாக இருந்துவந்ததை மீள் உருவாக்கம் செய்து புதுப்பித்துள்ளார்.

### செல்வி. கா. லலிதாதேவி

காளிராசா - லலிதா தேவி - இவர் தனது தந்தையிடம் பரியார பாடல்களையும், காவியங்ளையும் முறையாக கற்றுள்ளார்.

வைத்திய - பரியார பாடல்களை பாடி வைத்திய குணம் குறிகளை கூறி மருந்தினை ஓரளவு செய்யும் வல்லமையுடன் அம்மன் காவியங்கள், முருகன், நாராயணர், நாயன்மார் காவியங்களையும் ஓசை நயத்துடன் பாட வல்லவர். அத்துடன் கந்தபுராணம், திருக்கரைசை புராணம், பிள்ளையார் கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பியங்களளோடு வைகுந்த அம்மானை முதலானவற்றையும் மிகவும் சிறப்பாக பாட வல்லவர். கம்பராமாயாணம், மகாபாரதக் கதைகளையும் உணர்வாக கூறும் ஆற்றலுள்ளவர். சிறந்த கலைத்துறை ஆர்வலர்.

**திரு. செ. சபா**

மரணவீடுகளில் பட்டினத்தார் பாடல்கள், தேவாரங்கள் முதலானவற்றை மிகவும் ஓசைநயத்துடன் பக்திபூர்வமாக பாடிவருகின்றார்.

***மேலும் பலர் கலைத்துறை ஆற்றல் மிக்கவர்களாகவும் திகழ்ந்தவர்கள்.***

திருமதி. அழகம்மா கோணலிங்கம், திருமதி சரஸ்வதி அழகுதுரை, திருமதி. இந்திராதேவி காராளசிங்கம், திருமதி. வாலாம்பிகை தாமோதரம், திருமதி. புவனேஸ்வரி குணசேகரம், திருமதி. சந்திரா தங்கவேல், திருமதி. உமா சுதாகரன், கலைமகள் ஆகியோர் கந்தபுராண படனம், சித்திரபுத்திர நாயனார் கதை, பிள்ளையார் கதை முதலானவற்றைப் பக்தியோடு பலர் பாடுபவர்களாக உள்ளனர்.

**திரு. ஜெயநீதன்**

பள்ளிக்குடியிருப்பு பற்றிய கவிதை - பாடலை எழுதி இறுவெட்டாக வெளியிட்டவர். அதன் பின் கலைமகள் இந்துக் கல்லூரியில் இருந்து யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி சங்கீதத்துறையில் வீணையை விசேட பாடமாக தெரிவுசெய்து சிறப்பாக செயற்பட்டவர். புதியகண்டுபிடிப்பாக வீணை ஒன்றை தாமே தயாரித்து இலங்கை - இந்தியக் கலைஞர்களின் பாராட்டைப் பெற்றார்.

இவர் கற்கும் காலத்தில் பல கலை நிகழ்வுகளைப் பயிற்றுவித்து மேடை ஏற்றியுள்ளார். நாட்டிய நாடகம், கும்மி, பல கூத்து வடிவங்களிலான கலைநிகழ்வுகளைத் தயாரித்துள்ளார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**ஜெயநீதனால் இயற்றப்பட்டு இசையமைக்கப்பட்டு இறுவெட்டாய் வெளியிடப்பட்ட பாடல்**

**பல்லவி**

மாவலி பாயும் மனங்கவர் வயலும்
புடை சூழ அமர்ந்ததெங்கள்
குடியிருப்பூராம் பள்ளி குடியிருப்பூராம்

**அனுபல்லவி**

புல்லின இசையும் நாணலின் அசைவும்
இளங்காற்றில் தவழ்ந்துவரும்

**பல்லவி - 1**

கவலைகள் போக்கும் கணநாதன் இங்கு
குணநாதனாக அமர்ந்தருள் புரிவான்
கலைமகள் அருளும் குறைவிலா அறிவும
நெறிமுறை நிறைந்த கல்லூரி அமைந்த
ஆவின நிரையும் புள்ளின வகையும்
பாடித்திரியும் குடியிருப்பாம்
நெல்லினப் புதிரும் நெய்மணம் கமழும்
மருதநிலம் எங்கள் குடியிருப்பாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லவி - 2

வரலாறு கூறும் பள்ளம்-இதைச்
சூழவுள்ள நான்கு குளம்
தாமரை மலரும் இத்திக்குளம்
வயல்களில் தாவும் கீரான் குளம்
மனாங்கவரும் சூழல் மர வெட்டும் குளம்
நரியந்தன் குளமோ நயக்கும் குளம்

நாயகன் நாயகி கொம்பும் இங்கு
மக்களின் மனதில் அன்பும் உண்டு
வாழ்வை செழிக்கும் தெய்வம் இங்கு
குறைவற்ற செல்வம் இங்கே உண்டு
தேன் சிந்தும் மலர்கள் தேடும் வண்டு
சொர்க்கமே இதுவென்று பாடும் என்றும்.

## செல்வி பத்மநாதன் - தேவரஜினி

தேவரஜினி அவர்கள் நடனத்துறையில் கிழக்கு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றுள்ளார்.

பல மாணவியர் சங்கீதத்துறையில் பட்டங்களைப் பெற்றும் கல்வியல் கல்லூரிகளில் சங்கீதத்துறையில் பயிற்சி பெற்றும் ஆசிரியர்களாக திகழ்கின்றனர்.

***இவர்களில் கலாசார உத்தியோகத்தராக திருமதி லலிதா மணாளன் அவரகள் கடமைபுரிகிறார்.***

***பலர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகவும் பணிபுரிகின்றனர். இருப்பினும் கலைத்துறை மேலும் வளர்ச்சியடைய வேண்டும். இது மகிழ்வான வாழ்வுக்கு வழிவகுக்கும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## - 6 -

# விளையாட்டுத்துறை

மருதநில் விவசாய பண்பாட்டம்சங்களுடனான வயல் அறுவடையின் பின் அல்லது வயல் விதைப்பின் பின்னர் மாலை வேளை, நிலாக்காலங்களில் பல்வகை விளையாட்டுக்கள் இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு மனிதருக்கும் உடல், உள விருத்தியுடனான ஆரோக்கிய வாழ்வு அவசியம். ஆதலால் எமது கிராமம் விளையாட்டுத்துறையில் முக்கிய இடம்பெறுகிறது. முற்காலத்திலிருந்தே விளையாடப்படுவது கரப்பந்தாட்டம். மற்றும் சீனடி, சிலம்படி கை விளையாட்டுக்கள், தேசிய, கிராமிய விளையாட்டுக்கள் என பலவற்றிலும் சிறந்து விளங்கி பல சாதனைகளும் படைத்துள்ளனர்.

1970களுக்கு முன்னர் கரப்பந்தாட்டம் 6 பேர் கொண்ட விளையாட்டாகவே இருந்தது. 1970களின் பின்னர் 4 பேர் கொண்ட போட்டியாக மாறியுள்ளது.

இவ்விளையாட்டில் மூதூர் பிரதேசத்தில் சிறந்த விளையாட்டுக்கழகங்களில் ஒன்றாக இருக்கிறது.

1968 - 1970 காலங்களில் "கலைமதி" விளையாட்டுக்கழகம் எனப் பெயர் சூட்டப்பட்டது.

ஆறு (6) பேர் கொண்ட விளையாட்டு நடைபெற்ற காலங்களில் 1975களின் முன்னர் விளையாடியவர்களை குறிப்பிடுகையில்.

- வள்ளிமுத்து
- வே. பத்தினியன்
- மு. பூபாலப்பிள்ளை
- ஆ. கனகரெட்ணம்
- வ. வெற்றிவேல்
- க. சண்முகராசா
- பொன்னுத்துரை
- மு. இராசரெட்ணம்
- கனகசூரியம்
- ப. கணேசமூர்த்தி
- ஆ. குணராசரெட்ணம்
- த. சிதம்பரப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கை. நாகராசா
- இ. சிவபால்
- க. புஸ்பராசா
- ஆ. செல்வநாயகம்
- க. தவராசா
- இ. ரெட்ணசிங்கம்
- க. சச்சிதானந்தம்
- க. வேலானந்தம்
- செ. ரவிக்குமார்
- க. தயானந்தராசா
- த. நவரெட்ணராஜா
- ச. அருட்ஜோதி
- ஆ. துரைநாயகம்
- நா. மகேஸ்வரன்
- பொ. முத்துலிங்கம்
- க. நவரெட்ணராசா
- ஆ. நேசதுரை
- த. துரைநாயகம்
- கோ. கந்தசாமி
- அ. சுரேஸ்குமார்
- ச. சுதாகரன்
- நா. சசிதரன்
- கு. முனீஸ்வரன் (பரா)

தொடர்ச்சியாக மேலும் பலர் உள்ளனர். 1970களுக்கு முன்னர் பிறந்தவர்களே குறிப்பிடப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக பலர் விளையாடி வருகின்றனர். சிறினிவாசபுரத்தில் கரப்பந்தாட்ட விளையாட்டுக்கழகம். (இதில் பலரது பெயர்கள் விடுபட்டிருக்கலாம்)



கலைமதி விளையாட்டுக் கழகத்தின் ஆரம்ப கால உறுப்பினர்களும் முதன் முதல் நான்கு பேர் கொண்ட கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நடுவர்களாக கலந்து கொண்ட விளையாட்டு உத்தியோகத்தர்

திரு. சிங்கார வேலு. ஜனாப் ஜாயா. Dr. அன்ரனி ஆகியோருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கரப்பந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டியவர்கள்.



கிரிகட் சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டிய கலைமதி விளையாட்டுக்கழகத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கிரிகட் சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டிய கலைமதி விளையாட்டுக்கழகத்தினர்.



கரப்பந்தாட்டத்தில் வெற்றியீட்டிய புதுமலர் விளையாட்டுக்கழகத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கரப்பந்தாட்டப் போட்டியில் முதலாம் இடம் பெற்று பரிசில்கள் பெறுதல்.



கரப்பந்தாட்டத்தில் வெற்றியீட்டிய போது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமதி விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் தலைவர்களில் ஒருவரான
திரு. ப. கணேசமூர்த்தி அவர்களின் ஞாபகார்த்தமாக நடைபெற்ற கரப்பந்தாட்ட
சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு
அவரது மனைவி திருமதி கணேசமூர்த்தி, மகன் க. தணிகாசலம் அவர்களினால்
வெற்றிக்கிண்ணங்கள் வழங்கப்படுகின்றன.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கிரிக்கட் சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டியபோது.



பல தடவைகள் சாம்பியனான கரப்பந்தாட்ட அணியினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணா விளையாட்டுக்கழகம்

1975 காலப்பகுதியில் சி.வேலாயுதம் முதலானோர்களின் முயற்சியால் உருவானது. இதில். சி.வேலாயுதம், பூபாலசிங்கம், சிவபாலன், சி.இராமப்பிள்ளை, கு.கணேசன், சி.மயில்வாகனம், இராமலிங்கம் முதலான பலர் விளையாடினர்.

## புதுமலர் விளையாட்டுக்கழகம்

இது 1985ன் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது.

சி. பாக்கியராசா, கா. செல்வன், கா. கந்தசாமி, பொ. யோகேந்திரம், கோ. பாக்கியராசா, வே. கோபாலபிள்ளை, பேரம்பலம், ச.அறிவழகன், பா.ஜெயன் முதலான இன்னும் பல வீரர்கள் இங்கு விளையாடி வருகின்றனர். இவ்விளையாட்டுக் கழகத்தின் இயக்குனராக திரு. வ. தில்லையம்பலம் அவர்கள் 1990களில் இருந்து இயக்கி வருகின்றார்.

பல தேசிய மாகாண, மாவட்டமட்ட கரப்பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றி பல சாதனைகள் பெற்று வருகின்றனர். விளையாட்டுத்துறையில் பல சாதனைகளை புரிவது பெருமைக்கும் பாராட்டுக்குரியதாகும்.

தங்கபுரத்தில் தங்கமலர் விளையாட்டுக் கழகமும், சின்னக்குளத்திலும் கரப்பந்தாட்டக்கழகங்கள் சிறப்பாக இயங்கி வருகின்றன.

ஆறுபேர் கொண்ட கரப்பந்தாட்டப் போட்டியில் கிராமங்களுக்கிடையில் போட்டிகள் கேட்டு அழைப்பின் பேரில் சினேகபூர்வமாக நடைபெறும். அப்போது இருந்த விளையாட்டுக்கழகங்களில்

- தோப்பூர் - வளர்மதி விளையாட்டுக்கழகம்
- சேனையூர் - ஸ்ரீ கணேசா விளையாட்டுக்கழகம்
- கட்டைப்பறிச்சான் - ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகம்
- கிளிவெட்டி - உதயதாரகை விளையாட்டுக்கழகம்
- ஈச்சிலம்பற்று - ஆனந்தா விளையாட்டுக்கழகம்
- சம்பூர் - விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகங்கள் முக்கிய இடம்பெற்றிருந்தன.
- 4 பேர் கொண்ட கரப்பந்தாட்டப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர்
- பட்டித்திடல் - யுபிட்டர் விளையாட்டக்கழகம்
- மல்லிகைத்தீவு - ஜெஸ்மின் விளையாட்டுக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மூதூர் - 11 லைட்ஸ், விக்டர், ஜாயா விளையாட்டுக்கழகங்கள்
- சம்பூர் - விக்கினேஸ்வரா - YMTA
- சாலையூர் - சிவசக்தி

இவ்விளையாட்டுக் கழகங்களுடன் சினேகபூர்வமாகவும், சுற்றுப் போட்டிகளிலும் பங்குபற்றி பல வெற்றிகளை ஈட்டியுள்ளது. ***முதலாவது 4 பேர் கொண்ட போட்டியில் மூதூர் விக்டரி விளையாட்டக்கழகம் நடாத்தியதில் வெற்றி பெற்றவர்கள் - க. சண்முகராசா, ஆ. குணராசரெட்ணம், த.சிதம்பரப்பிள்ளை, ஆ. துரைநாயகம் ஆகியோரால் 1வது கேடயம் பெறப்பட்டது.***

கலைமதி விளையாட்டுக்கழகத்தின் தலைவராக க. கனகசூரியம், செயலாளர் ஆ. குணராசரெட்ணம், பொருளாளராக வ. வெற்றிவேல் அவர்கள் கடமையாற்றினர். கழகத்தின் இயக்குனராக திரு. ஆ. கனகரெட்ணம் அவர்கள் இருந்தார். அங்கத்தவர்கள் அனைவரும் மிகவும் கட்டுக்கோப்பாக ஒற்றுமையாக பண்பாக செயற்பட்டனர்.

கலைமதி விளையாட்டுக்கழகம் - திருகோணமலை, மட்டக்களப்பு பகுதிகளிலும் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகளை ஈட்டியுள்ளது. ஒருமுறை கிழக்கு மாகாண ரீதியிலான போட்டியில் ஏறாவூரில் மின் ஒளியில் நடைபெற்ற போட்டியில் - கலைமதி A அணியும், கலைமதி B அணியும் முதலாம், இரண்டாம் இடங்களையும் பெற்ற வரலாறு உள்ளது.

1968 - 1975 காலப்பகுதியில் கரப்பந்தாட்டத்தில் ஆர்வமுள்ள இளம் சமூகத்தினர் (11 - 14 வயது) - பேப்பர்களைச் சுற்றி சணலால் பந்து கட்டியும், சலோலைட் பந்துகள் வாங்கியும், 2, 3ம் இலக்க காத்தடிக்கும் பந்து வாங்கியும் - சணலால் நெற்கட்டி ஆரம்ப பயிற்சியை பெற்றமையை ஞாபகப்படுத்த வேண்டியுள்ளது. இதில் ஈடுபட்டவர்கள் உணர்வர். தற்போது விளையாடுவது 4ம் இலக்க பந்து.

2ம், 3ம் இலக்க பந்துகள் அளவில் சிறியவை. சிறுவர்களுக்கானது. இங்கு கரப்பந்தாட்டத்தில் ஆரம்பத்தில் சிறுவயதிலேயே ஈடுபட்டிருந்தனர். இதனாலேயே இன்றும் முன்னணியில் இவ்விளையாட்டில் இக்கிராமம் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1975இல் கிழக்கு மாகாண ரீதியான போட்டியில் இலுப்பையடிச்சேனை பண்குடாவெளியில் நடைபெற்ற போட்டியில் 3ம் இடம் பெறப்பட்டது. இதில் விளையாடியவர்கள் - ஆ. குணராசரெட்ணம், த. சிதம்பரப்பிள்ளை,

இ. சிவபால், ஆ. செல்வநாயகம் இவர்களை போட்டிக்கு அழைத்து சென்றவர் திரு.ஆ.கனகரெட்ணம் ஆசிரியர் அவர்கள்.

இவ்வாறு பல கேடயங்களையும் - வெற்றிகளையும் கலைமதி விளையாட்டுக்கழகம் பெற்றது தற்போது பல விளையாட்டுக் கழகங்களும் உருவாகியுள்ளன. தொடர்ச்சியாக இன்றுவரை நல்ல தலைமைத்துவ பண்புகளுடன் மென்பந்து, உதைபந்து, கரப்பந்தாட்டம் வலைப்பந்து முதலானவற்றிலும் சிறந்து விளங்குவது பாராட்டிற்குரியது.

***கலைமதி விளையாட்டுக் கழகம் மிகவும் சக்தி வாய்ந்த உறுதியான தலைமைத்துவப் பண்புகளுடன் இயங்கி வந்தது. தொடர்ந்தும் திரு.இ.ரபீசனன் அவர்களின் தலைமையில் கரப்பந்தாட்டம், மென்பந்து, வலைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் என பல்துறை விளையாட்டுக்களிலும் மகளிர் அணியும் இணைந்து பல போட்டிகளில் சாதனை படைத்து வருகின்றனர்.***

***அத்துடன் கலைமதி விளையாட்டுக் கழகம் - கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகள், ஆலய அன்னதான நிகழ்வுகள் மற்றும் பொதுப் பணிகளில் இன்று அனைத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் மிகவும் சிறப்பாக இயங்கி வருகின்றது. முன்னைய கலைமதி உறுப்பினர்களை மதித்தும் கௌரவித்தும் வருவது பாராட்டிற்குரியது.***

முற்காலத்தில் பலதேசிய விளையாட்டுக்களிலும், வீரவிளையாட்டுக்களிலும் எம்மவர் ஈடுபட்டனர்.

- கிளித்தட்டு
- கபடி
- கிட்டியும் புள்ளும்
- சீனடி சிலம்படி
- கராத்தே
- எல்லே - மட்டைப்பந்து
- கட்டைப்பந்து / சிரட்டைப்பந்து
- வார்கொடுத்தோடுதல்
- கைவிளையாட்டு / யூடோ

மற்றும் புதுவருடப் பிறப்பு காலத்தில் இடம்பெறும் சம்பிரதாய விளையாட்டுக்களாக

- தலையணைச் சமர்
- கயிறு இழுத்தல்
- கண்கட்டி முட்டி உடைத்தல்
- தேங்காய் துருவுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஓலை பின்னுதல் (கிடுகு)
- பணிஸ் உண்ணல்
- பலூன் உடைத்தல்

முதலான பல கிராமிய விளையாட்டுக்களிலும், வீர விளையாட்டுக்களிலும் ஈடுபட்டுள்ளனர். கராத்தே இன்று பாடசாலைகளிலும் பயிற்றுவிக்கப்படும் பயிற்சியும் - தற்காப்புக் கலையாகவும் உள்ளது.

## சீனடி சிலம்படி

கம்பு விளையாட்டான இதில் இருவர் விளையாடுவது, தனிக்கம்பு வீசுவது, பந்தம் வீசுவது முதலானவைகள் நிலாக்காலங்களின் முன்பு இவ்விளையாட்டுக்கள் பயிற்றுவிக்கப்பட்டன.

இக்கம்பு விளையாட்டுக்கள் ஒரு கலையம்சமாக இன்றும் முக்கிய நிகழ்வுகளில் இடம்பெறுகின்றது. திருவிழாக்காலங்களில் சுவாமி வெளி வீதி உலாவரும்போது இடம்பெறும். வரவேற்பு வைபவங்களிலும் சந்தியான இடங்களிலும் இவை இடம்பெறுகின்றன.

இவற்றின் பயிற்றுனர்களாக திரு. நாகேந்திரம் (சூரியர்), க. சிவராஜா, பொ. முத்துலிங்கம் என சிலர் இருந்திருக்கிறார்கள். சில இளைஞர்கள் பயிற்சி பெற்றார்கள். குறிப்பாக ஆலய வீதியில் கம்பு விளையாட்டில் ஈடுபட்டவர்களில் திரு. கோ.நாகேந்திரம், திரு.மா. சிவலிங்கம், வே.மாரிமுத்து, வே. தர்மலிங்கம், க. சிவராஜா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவற்றில் ஈடுபட்டவர்கள் பலர் உள்ளனர்.

திரு. ப. நந்தகுமார், ஆலய வெளிவீதியில் பத்தம் வீசுவதும், கம்பு விளையாட்டில் ஈடுபடுவதும் மிகவும் கவர்ச்சியாகவும், வீர விளையாட்டாகவும் அமைந்திருந்தது. தொடர்ந்து யூடோ, குங்பு, கராத்தே முதலான பல வீர விளையாட்டிலும் பல சாதனைகளும் சான்றிதழ்களும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்விளையாட்டுக்கள் உடல் உறுதியையும் தன்னம்பிக்கைத் துணிவையும் தருபவை. இவைகள் தற்காப்புக்கலைகளே. தற்காலத்தில் இவை அருகிவருகின்றன. இவற்றிற்கான பயிற்சியை எதிர்கால இளைஞர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். இக்கலை தனக்கும் மற்றவர்க்கும் நன்மை பயப்பதாக அமைய வேண்டும்.

திருகோணமலையில் நடைபெறும் சில விழாக்களில் - பொங்கல் விழாக்களில் (கட்டைப்பறிச்சான் - செ. சுகுணசேகரம், சம்பூர் - பத்மநாதன் அவர்களின் மாணவர்களின் சாகசங்களை காணமுடிகின்றது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பிரதேசங்களில் இன்றும் தொடர்ச்சியாக இக்கலை பேணப்படுகின்றது. இவை ஒரு தற்காப்புக்கலையும் - உடல், உள உறுதிக்கான ஒரு விளையாட்டு கலையம்சமுமாகும்.

**கலைமகள் இந்துக்கல்லூரிக்கு விளையாட்டு மைதானத்திற்கு பெவிலியன், மதிலுக்காக தமிழ் தேசியக் கூட்டணியினரால் 30 இலட்சம் ரூபாவும் பேண்ட் வாத்தியத்திற்கு 5 இலட்சம் ரூபாவும் மைதான வேலிக்கான கம்பி மற்றும் தூண்களும் வழங்கப்பட்டன. ஜனாப் மஃறூப் பா.உ அவர்களால் 20 இலட்சம் ரூபாவும் மதிலுக்காக வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.**

கலைமகள் இந்துக்கல்லூரியும் விளையாட்டுத்துறையில் பல சாதனைகளை வலய, மவாட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் புரிந்துள்ளது.

மேலும் கல்லூரி விளையாட்டு மைதானம் புனரமைக்கப்பட்டு பல வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. (கழகங்களுக்கும் பாடசாலைக்கும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டது)

**எதிர்காலத்தல் உடல் - உள - சமூக விருத்தியுடைய சமூகம் உருவாக இவ்விளையாட்டுத்துறை பணிபுரிய வேண்டும்.**



கலைமதி, தங்கமலர், புதுமலர் விளையாட்டுக் கழகங்களுக்கு கரப்பந்து நெற் வழங்கப்பட்டபோது. மூதூர் பிரதேச - த.அ.கட்சியினரால் வழங்கப்பட்டது.



கலைமதி, புதுமலர் விளையாட்டுக் கழகத்திற்கு கிரிக்கட் உபகரணங்கள் த.அ.கட்சியின் மூதூர் கோட்டக் கிளையினரால் வழங்கப்பட்டது.
(தலைவர் திரு. சி. தர்ஷன்,
செயலாளர் - திரு. ஆ. செல்வநாயகம்,
பொருளாளர் - இரா. இரத்தினசிங்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## – 7 –

# வைத்தியத்துறை

நாட்டு வைத்தியத்தில் மூதூர் பிரதேசத்தில் மிகச் சிறந்த சேவையை வழங்கிய இடமாக எமது பள்ளிக்குடியிருப்பே விளங்கியுள்ளது.

- திரு. பொ. காளிராசா பரியாரியார் அவர்களின் வைத்தியத்துறை புலமை இப்பிரதேசத்தில் நம்பிக்கைக்குரிய வைத்தியராக திகழ்ந்தார். ஒவ்வொரு வருத்தத்திற்கும் ஆயுர்வேத - பாடல்களை பாடி விளக்கம் கூறி வைத்தியம் செய்யும் கலை மிகச் சிறப்பானது. பிற கிராம மக்கள் இங்கு வந்து வைத்தியம் செய்து பயனடைந்து செல்வர். வைத்தியத்துடன் மாந்திரீக ஆற்றலும் பெற்றிருந்தார். இவர் சுமார் 14 தலைமுறையாக பாரம்பரியமாக செயற்பட்டு வந்ததாக அறிய முடிந்தது.[1]

  ஆயுர்வேத வைத்தியத்தை தமது மகள் கா. யோகநாயகி மற்றும் செ.சண்முகம், பொ. முத்துலிங்கம், த. சிதம்பரப்பிள்ளை ஆகியோருக்கு கற்பித்ததாக அறிய முடிகின்றது. அவரது மகள்களான கா. லதா, கா.லலிதா ஆகியோரும் கற்று தேர்ந்திருந்தனர். இவர்களில் கா. யோகநாயகி, செ.சண்முகம், கா. லலிதா ஆகியோர் வைத்தியம் செய்யக்கூடியவர்களாகவும் திகழ்ந்தனர்.[2]

- கிராமத்தின் மருத்துவிச்சியாக திருமதி. வே. தங்காள் அவர்கள் மிகச் சிறப்பாகவும் தற்துணிவாகவும் செய்தார். சு. மாரிமுத்து, இ. செம்பாள் தொடர்ந்து திருமதி. நேசம்மா சண்முகராசா, திருமதி. நாகம்மா வைரமுத்து, வேலுப்பிள்ளை - பத்தம்மை போன்றோரும் பணி செய்தனர்.

- உழுக்குப் பார்ப்பவராக திரு. மா. சிவலிங்கம், திருமதி. தெய்வானை கிட்ணபிள்ளை அவர்கள் செற்பட்டார்.

- விஷ வைத்தியர் தங்கபுரம் நாகதம்பிரான் கோயில் பூசகர் திரு. சித்திரவேல் அவர்கள் செயற்பாட்டார். பாம்பு மற்றும் விச ஜந்துக்கள் தீண்டினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரிடம் கொண்டு சென்றால் அவரிடம் விசக்கல்லும் அதற்கான மூலிகை ஊடான வைத்தியமும் செய்வார். ஒருமுறை மட்டத்தேள் கடித்த ஒரு பிள்ளையை அழைத்துச் சென்றேன். கையில் கடித்திருந்தது. கை சுமார் ஒரு அங்குலம் அளவு வீங்கியிருந்தது. பிள்ளையின் கையில் இருந்த காப்பின் இரு பக்கமும் வீங்கி காப்பு தெரியாத அளவு வீங்கி விட்டது. இவர் மூலிகையை வீக்கத்தின் மேல் பூசினார். 5 - 20 நிமிடங்ளில் வீக்கம் வற்றி கடுப்பும் குறைந்து நல்ல சுக நிலையடைந்தார். இச்சம்பவம் வியப்படையச் செய்தது. அவரது விச வைத்தியம் பெரும் மகிமையானது. பலர் இவரது வைத்தியத்தை நாடினர். தற்போதும் இவரது புதல்வர் ஈடுபாட்டுடன் செயற்படுகிறார்.

- முறிவு வைத்தியத்திலும் பெருமைக்குரிய இடமாக எமதூர் திகழ்கின்றது. இத்திக்குளத்திலிருந்து சிறப்பாக இவ்வைத்தியம் இடம்பெறுகின்றது. எலும்புகள் உடைத்து துண்டிக்கப்பட்டதைக் கூட மிக நேர்த்தியாக குணமடையச் செய்கின்றார். தூர இடங்களிலிருந்து வருபவர்கள் வைத்தியசாலையில் வாட் இல் நின்று வைத்தியம் செய்வது போன்றும் நடைபெறுகின்றது.
- பெரிய புண் உடையோர், முறிவுகள் உடையோரும் மூலிகை எண்ணை மூலம் தீர்த்து வைக்கும் வைத்தியராக சாமித்தம்பி கலா அவர்கள் சிறப்பாக செய்து வருகின்றார்.
- தோப்பூரில் உள்ள வைத்திய சாலை பிற்காலத்தில் மக்களின் தேவைகளை நிறைவு செய்து வருகின்றது. ஆரம்பத்தில் சிறிய மருந்தகமாக இருந்தது. தற்போது பிரதேச வைத்திய சாலையாக தரமுயர்த்தப்பட்டு நோயாளிகள் தங்கிநின்று வைத்தியம் செய்யும் வாட்டுகள் உள்ளதாகவும் சிறப்பாக வைத்திய சேவை செய்யும் இடமாகவும் உள்ளது.
- அக்காலத்தில் வைரமுத்து (ஓடலியர்) மருந்தாளர் அவர்களும் 1950ம் ஆண்டுகளில் கடமையாற்றியுள்ளார். இவர் ஈச்சிலம்பற்று வைத்திசாலையில் கடமையாற்றிய பின் பொத்துவில், திரியாய், தோப்பூர் வைத்தியசாலைகளில் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். இவரே முதல் அரச ஓய்வூதியக்காரருமாவார்.
- 1946ம் ஆண்டு பாரிய வாந்திபேதி கொள்ளை நோயினால் அனேகர் உயிரிழந்தனர். ஒரு நாளைக்கு 3, 4 பேர் இறந்ததாக அறியமுடிகின்றது. சுகாதாரத்துறையினர் பாரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாக அறியமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 02.02.2012 இல் தங்கபுரத்தில் சுகாதார நிலையம் அமைக்கப்பட்டு சுகாதார மாதுகளில் PHM பணியூடாக பணிகள் நடைபெறுகின்றது. 20.06.2000 இல் PHI இற்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த கு.சரவணபவன் அவர்கள் கடமையாற்றுகின்றார்.
- PHM ஆக திருமதி. கலைச்செல்வி தவசீலன் குடும்பநல சுகாதார மாதுவாக இங்கு கடமைபுரிகிறார்.
- திரு. குணராஜரெட்ணம் சரவணபவன் அகில இலங்கை சுகாதார பரிசோதகர் சங்கத்தின் உபதலைவராகவும் சேவையாற்றுகின்றார். கொவிட்-19 காலத்தில் பல தொலைக்காட்சி கலந்துரையாடல் மூலமும், வானொலியில் பல அலைவரிசைகளிலும் கொரோனா வைரஸ் பற்றிய விளக்கங்களை மிகத் தெளிவாக விளக்கமளித்து வருவதும் மிகவும் பயன்மிக்க தேசிய சேவையாக அமைகின்றமை பாராட்டிற்குரியது.
- அத்துடன் சுகாதார பணியாளர்களாக... திரு. க. மதிவதனன், திருமதி. அமராதேவி, திரு. சிவாகரன், திரு. இ. செந்தூரன், திரு. து. அமல்ராஜ், செல்வி அ.வைசாலினி, செல்வி. அ. பிரவீனா, திரு. பா. டிலக்சன் ஆகியோர் பணி புரிகின்றர்.
- விஞ்ஞான உயர்தர கல்வி மூலம் யாழ் பல்கலைக்கழகத்தில் சித்த மெடிசின் பட்டம்பெற்று வைத்தியராக செல்வி. விஜயராசா அபிலாஷினி BSMS அவர்கள் கடமையாற்றுகின்றார். மேலும் பல்கலைக்கழகத்தில் சித்த மெடிசின், இயன் மருத்துவத் துறைகளில் கற்கின்றனர்.
- திருகோணமலையின் ஒல்லாந்து ஆளுநர் கொட்டியாபுர பிரதேசத்திற்கு வருகைதந்த வேளை (21.05.1786) பள்ளிக்குடியிருப்புக்கு வந்து மக்களுடன் உரையாடும்போது மக்கள் கூறியதாக "வயிற்றுப்போக்கு, அம்மை நோயினால் பலர் இறந்ததாகவும், பலருடைய உழைப்பு இருந்தால் அதிகளவில் விவசாயம் செய்யலாம்"[3] என அவரது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.
- வைத்தியத்துறை பரியாரியாருடன் ஆரம்பித்து இன்று பல்கலைக்கழக வைத்திய பட்டதாரிகளாக முன்னேற்றம் கண்டுள்ளோம். எதிர்காலத்தில் வைத்திய துறை இப்பிரதேசத்திலும் சிறந்து விளங்கக்கூடிய ஆற்றலுள்ளோர் உருவாக்கப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுகாதார நிலையம் - 02.02.2012ல் கட்டப்பட்டது.



அகில இலங்கை சுகாதாரப் பரிசோதகர்கள் சங்க உப தலைவர் திரு. குணராஜரெட்ணம் சரவணபவன் அவர்கள் கொவிட் - 19 மக்கள் பாதுகாப்பு பற்றிய விளக்கமளிக்கும்போது.

அடிக்குறிப்பு :

1. தகவல் - கா. லலிதாதேவி
2. தகவல் - செ. சண்முகம்
3. காலணித்துவ திருகோணமலை, பக். 79, கனகசபாபதி சரவணபவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 8 -

# போக்குவரத்து

போக்குவரத்து எனும் போது வடக்காக கட்டைப்பறிச்சான்-மூதூர் பகுதிக்கும் தெற்காக தோப்பூருக்கும் கிழக்காக நல்லூர் பகுதிக்குமான தொடர்புகள் பாதைகள் வீதிகள் இருந்துள்ளன. பள்ளிக்குடியிருப்பின் மேற்குப்பகுதி வயல்வெளிகள் என்பதால் அப்பகுதியில் வீதி இருக்கவில்லை.

1930ல் கட்டைப்பறிச்சானிலிருந்து பள்ளிக்குடியிருப்பு ஊடான வீதி அமைக்கப்பட்டுள்ளது.[1] இவ்வீதிக்கு பழைய மட்டக்களப்பு வீதி, இடிமன் துறைவீதி எனப் பெயர்கள் இன்றும் பதிவில் உள்ளது.

கட்டைப்பறிச்சான் இறால் பாலம் இருக்கவில்லை. மூதூருக்கு பிரயாணம் செய்யும் எம்மவர்கள் 'கண்ணுவாப்பு' வின் துறையால் கடந்து செல்ல வேண்டும். இதில் ஆட்களை மறுபக்கம் மூதூர் பக்கம் சேர்ப்பதற்கு பெரிய வள்ளம் - தோணி இருந்தது. பின்னர் பாதை ஒன்றுப் போடப்பட்டிருந்ததாம். இதனால் இத்துறைக்காரருக்கான கூலியாக வயல் அறுவடையின் போது ஒவ்வொரு வயல்காரர்களும் ஒரு கட்டு நெற்கதிர்கள் வழங்கப்பட்டது. இத்துடன் நெல்லும் வழங்கப்பட்டது.

போக்குவரத்திற்காக வண்டில் மாடுகளே பயன்படுத்தப்பட்டது. விழாக்கள் - பக்திப்படங்களுக்கு செல்வதற்கு கூடார வண்டில்கள் ஒத்தக்கரத்தை வண்டில் பயன்படுத்தப்பட்டன. வெருகல்கோயில், தீர்த்தக்கரை, நாகதம்பரான் கோவில்களுக்கு செல்வதற்கெல்லாம் கூடார வண்டில்களே பயன்படுத்தப்பட்டன. வண்டில்களில் கூடாரம் இழைக்கப்பட்ட தென்னை பச்சை மட்டைகளால் கட்டப்படும். வண்டியினுள் வைக்கோல் போடப்பட்டு அதன் மேல் பாய் விரிக்கப்பட்டு அதற்கு மேலேயே பிரயாணம் செய்வோர் அமர்ந்திருப்பர்.

திருமண வீடுகளுக்கு செல்தல் மாப்பிள்ளை பெண் - புதுமண தம்பதியரையும் கூடார வண்டிகளில் அழைத்துச் செல்வர். அதிகமாக 1960 களின் முற்பட்ட காலங்களில் அதிகமாக இவ்வாறே நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1971ன் பின் தோப்பூர் பள்ளிக்குடியிருப்பு வீதி கல்வீதியாக அமைக்கப்பட்டது. தொடர்ந்து பஸ் போக்குவரத்தும் ஏற்படுத்தப்பட்டது.

கட்டைப்பறிச்சானில் 1927ன் முன் பாச்சல்துறை பின்னர் மரப்பாலம் 1960 வரை. 1968இல் கொங்கிறீட் பாலம் போடப்பட்டது. 1978ம் ஆண்டு மூதூர் - சம்பூர் வீதியில் இருந்த பாதை இழுத்து கடந்து செல்லும் முறை மாறி பாலம் போடப்பட்டமையால் போக்குவரத்து ஓரளவு சீரானது.

திருமலைக்குச் செல்வதற்கான தரைவழிப்பாதை 2009க்கு முன் 30 வருட யுத்தகாலத்தில் மூடப்பட்டதால் திருகோணமலைக்கான போக்குவரத்து இயந்திர படகுகள் மூலம் இடம்பெற்று வந்தது. பொருட்கள் ஏற்றி இறக்குதல்கள் பாய்மர படகுகள் மூலம் இடம்பெற்றது.

இவ்வாறான மூதூர் - திருகோணமலை இயந்திரப்படகு 1995 ம் ஆண்டு முழுமையாக நீரில் மூழ்கியதால் பயணித்த 60 பேர் உயிரிழந்தனர். சம்பூரைச் சேர்ந்த ஒரு பெண்மணி மட்டும் நீந்தி உயிர்தப்பினார். 1914ம் ஆண்டிலும் மூதூர் - திருகோணமலை படகு மூழ்கி 11 பேர் உயிரிழந்தனர்.[2]

இப்படகு விபத்தில் எமது கிராமத்தைச் சேரந்த கந்தசாமி - கற்பகம் அவர்களும் உயிர் நீத்த சம்பவமும் சோகமான வரலாறு (இதே லோஞ்சில் இதற்கு முதற் தடவை பிரயாணம் செய்தோம். 2வது தடவை பயணத்தில் இதே படகு மூழ்கியது)

யுத்த காலத்தில் திருமலைக்கு பிரயாணம் செய்கையில் - ஜெற்றியில் தேசிய அடையாள அட்டை பதிந்து பல பரிசோதனைகளுக்கு உள்ளாகி - முகமூடிகளிடம் தப்பியே பயணம் செய்ய வேண்டும். பாடசாலைத் தேவைகளை நிறைவு செய்வதற்காக அடிக்கடி திருமலைக்கே செல்ல வேண்டியிருந்தது. பல துன்பங்களை அனுபவித்த வரலாறுகள் மறக்கமுடியாது.

திருகோணமலைக்கான 2009ன் பின் மூன்று பாலங்களும் அமைந்த பின் போக்குவரத்து இலகுபடுத்தப்பட்டுள்ளமை சிறப்பானது.

பயணம் செய்யும் போது பாதாள மலையடியால் லோஞ் செல்லும் போது இருபக்கமும் பலமாக ஆட்டம் கொடுக்கும். பலர் சத்தி எடுப்பர் எல்லோரும் தமது இஸ்ட தெய்வங்களை வணங்குவர். 1 - 1½ மணித்தியாலத்தில் சென்றடையும்.

பள்ளிக்குடியிருப்பின் கிழக்காக 1975களின் பின்னர் பாட்டாளிபுரம் நல்லூர் பிரதேசங்களுக்கான பாதைகள் அமைக்கப்பட்டதால் போக்குவரத்துகள் வண்டில் - துவிச்சக்கரவண்டிகள் பயன்படுத்தப்பட்டன.

வண்டில் மாட்டு பிரயாணம் படிப்படியாக இரு சில்லு உளவியந்திரம் பின்னர் பெரிய நாலுசில்லு உழவியந்திரங்களின் பெட்டிகளில் பயணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டனர்.

படிப்படியாக நிலைமாறி பள்ளிக்குடியிருப்பு, சிறினிவாசபும், சின்னக்குளம், இந்திக்குளம் ஊடாக பாட்டாளிபுரத்திற்கான பேரூந்து சேவை இடம்பெறுகின்றது.

துவிச்சக்கர வண்டியில் பயணிப்போர் தற்போது 55 வயதுக்கும் மேற்பட்டவர்களும் பள்ளிமாணவர்களுமே பாவிக்கின்றனர். ஏனையோர் பெரும்பாலும் மோட்டார் சைக்கிளிலேயே பயணம் மேற்கொள்கின்றனர். மற்றும் வேன், கார் முதலான வாகனங்களும் ஊரில் பாவனையில் உள்ளமை இங்கு இருந்த போக்குவரத்தின் படிப்படியான வளர்ச்சியை காட்டுகின்றது.

2008ன் பின் ஊரின் மேற்குப்பக்கமாக வயல்வெளியூடாக தோப்பூர் வைத்தியசாலைப் பக்கமாக சென்றடையும் விவசாய வீதி மிகவும் பயனுள்ள வீதியாக அமையப்பெற்றுள்ளது.

**மேலும் மேற்குப் பக்கமாக தங்கபுரத்திலிருந்து ஆறுவரை புதிதாக வீதி அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதியை கௌரவ இரா சம்பந்தன் பா.உ அவர்கள் 30 இலட்சம் ரூபாவை வழங்கினார். இறையாத்துவெளி பாலமும் அமைப்பதற்கான சிபார்சும் செய்யப்பட்டு விரைவாக நடைபெற ஏதுவாக உள்ளது. சின்னக்குள, இத்திக்குள கிராம உள்வீதி அபிவிருத்திக்காக தலா 10 இலட்சம் வீதம் திரு. இரா. சம்பந்தன் (பா.உ) அவர்களால் வழங்கப்பட்டது.**

தோப்பூர் கட்டைப்பறிச்சான் 7.2 Km வீதி மிகவும் பழுதான போக்குவரத்து செய்யமுடியாத நிலையில் காணப்படுகின்றது. இதைத்திருத்தியமைக்க 2019ல் **I Project** ஐ செயற்திட்டம் ஊடாக காபெட் வீதி அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு நடைபெறுகின்றது. அதே போல பாட்டாளிபுரம் வீதி ஏனைய வீதிகளும் இரு வருடங்களில் முடிவுறுத்துவதற்கான ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ஜெய்கா நிறுவனமூடாக தங்கபுரம், சிறினிவாசபுரம், சின்னக்குளம், கிராம உள்வீதிகள் அமைக்கப்படவுள்ளன. பள்ளிக்குடியிருப்பு மற்றும் வயல்வெளி ஊடான பாதையும் செய்யப்படவுள்ளது. பசுமைக்கிராமம் ஊடாக பள்ளிக்குடியிருப்பின் உள்வீதி 200 மீற்றர் செய்யப்படுகிறது.[3]

போக்குவரத்து நிலை முன்பிருந்ததும் இனிவரப்போகும் நிலையையும் அறிந்தோம். நீண்டா காலமாக எமது கிராமத்தின் போக்குவரத்து நிலை மிகவும் கவலைக்கிடமாகவே இருந்தது. கடின முயற்சிகள் காரணமாக வெற்றியடைய முடிந்தது.

**அடிக்குறிப்பு.**

1. காலணித்துவ திருகோணமலை - 2010, கனகசபாபதி சரவணபவன்
2. காலணித்துவ திருகோணமலை - 2010, கனகசபாபதி சரவணபவன் - பக் - 244
3. ஜெய்கா நிறுவன அறிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# – ௯ –

# கொம்பு விளையாட்டு

பள்ளிக்குடியிருப்பின் வரலாற்றியலில் பாரம்பரிய வழிபாட்டு பண்பாட்டம்சமாக திகழ்வது கொம்பு விளையாட்டு. இவை எமது நாட்டின் தமிழர்களும் சிங்களவர்களும் போற்றும் பெருமைக்குரியது. அத்தோடு தமிழர்களின் சுதேச விளையாட்டாகவும், வீர விளையாட்டாகவும், தேசிய விளையாட்டாகவும் குறிப்பிடப்படுகின்றது. எனினும் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய தமிழர் இடங்களில் இவ்விளையாட்டு நிகழ்ந்ததாக சான்றுகள் இல்லை.

சிங்களவர் மத்தியில் வாத்துவ, கொத்துப்பிட்டிய, உடுப்பில், அம்பிட்டிய, அங்கெட்டிகம, அங்கெலி, குருநாகல் முதலிய இடங்களில்தொடரந்து விளையாடப்பட்டதாகவும் "அம்புவத்" எனும் சிங்கள நூல் இவ்விளையாட்டுப் பற்றிக் கூறுகின்றது.[1]

மட்டக்களப்பில் பாணமை, பட்டிமேடு, தம்பிலுவில், காரைதீவு, வீரமுனை, நீலாவணை, எருவில், மண்டூர், களுதாவளை, தேற்றாத்தீவு, முதலைக்குடா, மகிழடித்தீவு கொக்கட்டிச் சோலை, முனைக்காடு, கன்னங்குடா, வந்தாறு மூலை, சித்தாண்டி என பல கிராமங்களில் விளையாடப்பட்டு இன்று மறையும் நிலையில் உள்ளது.

திருகோணமலையில் தி/பள்ளிக்குடியிருப்பு, மல்லிகைத்தீவு கிராமங்களில் நடைபெற்று வந்தது. தற்போது பள்ளிக்குடியிருப்பில் மட்டும் நடைபெறுகின்றது. இங்கும் 1948, 1965, 1971, 1976, 2010, 2015ல் நடைபெற்றவைகள் மட்டும் தற்போது வாழ்பவர்களால் அறிய முடிகின்றது. அதற்கு முன் நடைபெற்ற ஆண்டுகளை சரியாக அறிய முடியவில்லை.1976 இன் பின் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் முப்பது ஆண்டுகளுக்கு மேல் இவ்விளையாட்டு நடைபெறவில்லை. 2010ன் பின் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்துவதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2015ல் சிறப்பாக நடாத்தப்பட்டு, 2020ல் நடாத்த தீர்மானித்திருந்த போது கொரோனா (Covid - 19) வைரஸ் தொற்று நோய் காரணமாக நடாத்தப்படவில்லை.

## கொம்பு விளையாட்டின் தொன்மை

இந்நாட்டில் தொல்குடி மக்களால் பாரம்பரியமாக விளையாடப்பட்டு வந்தமையை அறிய முடிகின்றது. இவர்கள் இந்நாட்டில் ஆரியருக்கும் திராவிடருக்கும் முன்பு வாழ்ந்த ஒஸ்ரலோயிட் இனத்தவரென்பர். இம்மக்களே இந்நாட்டின் பெருங்கல் பண்பாட்டு யுகத்தில் வாழ்ந்தவர்களாவர். இத்தொல்குடிகள் பற்றி வரலாற்று ஆசிரியர்களான பரணவிதாரன, மென்டீஸ் ஆகியோர் இவர்கள் பற்றிய ஆய்வின் அவசியத்தை இற்றைக்கு எழுபது வருடங்களுக்கு முன்னமே வலியுறுத்தி கூறியுள்ளனர். பேராசிரியர் சி.சிற்றம்பலம் போன்ற தொல்லியல் ஆய்வாளர்கள் பலரும் தொல்குடிகளின் பண்பாட்டம்சமே கொம்பு விளையாட்டு எனக்குறிப்பிடுகின்றனர்.

இக்கொம்பு விளையாட்டில் பயன்படுத்தப்படும் கொம்பு, பில்லி, அடை, ஆப்பு, அரிப்பு, வடம் முதலான சொற்களும் மரம், கொடி, நார் முதலானவைகளும் மரத்தாலானவை.

கொம்பு விளையாட்டில் இரும்பைப் பயன்படுத்த பல வாய்ப்புகள் இருந்த போதும் - இரும்பை எவ்விடத்திலும் பயன்படுத்தவில்லை. எனவே இந்நாட்டில் இரும்பு யுகம் தோன்றுவதற்கு முன்பே இவ்விளையாட்டு இடம்பெற்றிருக்கிறது எனலாம். இவ்விளையாட்டில் பயன்படுத்தப்படும் உத்திகளையும், நுட்பங்களையும் உற்றுநோக்கும்போது கல்லாயுதங்களைப் பயன்படுத்திய மனிதன் அதில் இருந்து விடுபட்டு மர ஆயுதங்களை பயன்படுத்திய காலத்தைக் காட்டி நிற்கின்றது.

கொம்பு விளையாட்டின் பண்டைய நிலையை அவதானிக்கையில் இந்நாட்டின் தொல்குடிகளான ஒஸ்ரலோயிட் மக்களின் மரவழிபாடு, தாய்வழிபாடு என்பவற்றோடு ஆடையின்றி ஆடுதல், புணர்ச்சியின் குறியீடாக அமைதல் முதலான அம்சங்களை உற்றுநோக்கும்போது அந்நாட்டில் ஆரியர் வருகைக்கு முற்பட்டது என தீர்மானிக்கலாம்[1].

இவ்விளையாட்டினுடைய வரலாற்று ரீதியாகவும், பண்பாட்டியல் ரீதியாகவும் ஆராயும்போது மிகவும் பழைமையான வழிபாட்டு முறையாக கொள்ளப்படுவதை அவதானிக்க முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகி வழிபாடு பெருங்கற்கால பண்பாட்டிற்குரிய நடுகல் வழிபாட்டை சார்ந்தது என போராசிரியர் க. சிற்றம்பலம் அவர்கள் குறிப்பிடுகின்றார். இந்நாட்டைப் பொறுத்தமட்டில் பெருங்கற்காலம் என்பது கி.மு. 1000 முதல் பௌத்த சமயத்தின் வருகை வரையுள்ள காலப்பகுதி எனலாம்.

## கொம்புவாரம் என்பது...

வாரம் என்பது பிரிவு கிராமத்தை அல்லது கிராமத்தின் உட்பிரிவைக் குறிக்கும். 1ம் கஜபாகு மன்னன் காலத்தில் கிராமத்தின் வடபகுதி வடசேரி எனவும், கிராமத்தின் தென்பகுதி தென்சேரி எனவும் பிரிவுகள் கிராம ரீதியாக பிரிந்திருந்தது. இவ்வாறு புவியியல் அடிப்படையிலும் இப்பிரிவுகள் அமைந்திருந்தது. மேலும் கிராமத்தின் மேற்பகுதி வடசேரி எனவும் கீழ்ப்பகுதி தென்சேரி எனவும் வழக்கிலிருந்தமையும் அறிய முடிகின்றது.

சிங்களப் பகுதிககளில் இரு பிரிவுகளிலும் தந்தை வழியில் உரிய சேரியில் சேர்ந்து அச்சேரிக்குரியவர்களாவர். மட்டக்களப்பிலும் பல விடயங்களிலும் தாய்வழியின் முக்கியம் பேணப்படுகின்றது. சாதியினர் அதன் உட்பிரிவான குடிகள் எல்லாம் தாய்வழியே என முக்குகச் சட்டத்தால் அறிய முடிகின்றது. ஆனால் இதற்கு மாறாக மரணச்சடங்கு, துடக்கு, கொம்பு விளையாட்டு ஆகியவற்றில் தந்தை வழி பேணப்படுவது குறிப்பிடத்தக்கது(2).

பள்ளிக்குடியிருப்பின் கொம்பு விளையாட்டில் பரம்பரையாக குடிவழியாக தாய்வழியே வடசேரி தென்சேரியினர் உளர்.

## கொம்பு விளையாட்டின் ஆரம்பித்தமைக்கான வரலாறுகளாக.

## வழிபாட்டு முக்கியத்துவம்.

நமது நாட்டில் தமிழ் மக்கள் கண்ணகி அம்மனுக்கும், சிங்கள மக்கள் பத்தினித் தெய்வத்திற்கும் படையலாக கொம்பு விளையாடி வருகின்றனர்.

ஐம் பெரும் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம் கூறும் தத்துவாரத்த கருத்துக்கமைவாக - கண்ணகியின் கணவன் கோவலன் கொல்லப்பட்டமைக்கு நீதி வேண்டவும் இறையருளால் மன்னன் தண்டிக்கப்பட்டமையும் - சீற்றம் தணியாத கண்ணகி தமது ஒரு முலையை திருகி எறிந்து மதுரையை எரித்தாள் என்ற வரலாற்றைத் தொடர்ந்து கண்ணகியின் சீற்றத்தால் கொடிய நோய்களையும், வறுமையையும், வரட்சியையும் ஏற்படுத்தும் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்புகின்றர். அவரை குளிர வைப்பதற்கான ஒரு வழிபாட்டம்சமே கொம்பு விளையாட்டு எனக் கூறப்படுகின்றது.

மதுரையை எரித்த கண்ணகியின் சீற்றம் தணியவில்லை. இந்நிலையில் இடையர் சேரிக்கு சென்றாள். அங்கு அவளது சீற்றத்தை தணிக்க இடையர் பல முயற்சியகள் செய்தனர். அவற்றுள் ஒன்று இடைச்சேரி சிறுவர்களால் நிகழ்த்தப்பட்ட கொம்பு விளையாட்டு. அங்கு வாழுந்த சிறுவர்கள் தம்மை இரு பிரிவுகளாகப் பிரித்து மஞ்சள் கொம்பு இரண்டு எடுத்து ஒன்றோடு ஒன்றைக் கொழுவி இழுத்தனர். ஒரு கொம்பு முறிய மறு கொம்பு வென்றது. வென்ற கொம்புக்குரியவர்கள் அது கண்ணகியின் கொம்பென்று அவளுக்கே வெற்றி என்றும் ஆடிப்பாடி ஆர்ப்பரித்தனர். இதைக் கண்ட கண்ணகி கோபம் தணிந்து குளிர்ந்தாள்.

தாய்மையின் குறியீடாக அமைவது முலை அன்னை வழிபாட்டின் அடிப்படையில் அவளது ஒரு முலை செழுமையையும், மறு முலை உணவையும் குறிக்குமென்பர். எனவே கண்ணகி மதுரையை எரித்தமை அன்னையின் ஆற்றலால் சாபமிட்டு செழுமையை குன்றச் செய்தாள் என்பதாகும். இதனையே முலையினை திருகி எறிந்து எரித்தாள் என குறியீடாக குறிப்பிடப்படுகிறதென கேரளப் பேராசிரியர் சசீம்தீன் கூறுகின்றார்[(3)].

***கொடிய நோய்கள், வரட்சி, வறுமையிலிந்து மக்களை காப்பாற்றவே கொம்பு விளையாட்டு வழிகாட்டம்சங்கள் துணை புரிகின்றன. எமது கிராமத்திலும் கொம்பு விளையாட்டின் பின்னர் ஏற்படும் மழை - குளிர்ச்சி, செழிப்பு, மக்களில் மனங்களில் காணப்படும் புத்துணர்வும் மகிழ்ச்சியும் சான்றாகின்றமையை அறியமுடிகின்றது.***

இந் நாட்டில் சிங்களவர் மத்தியிலும் சில இடங்களில் பாரம்பரிய கொம்பு விளையாடப்பட்டு வந்தது. இம்மக்கள் பத்தினித் தெய்வத்தை மகிழவித்து தொற்று நோய்கள் வராது காப்பதற்காகவே கொம்பு விளையாடுவதாக கூறுகின்றனர். இங்கு இடம் பெற்ற வரலாறாக... "ஒரு நாள் பத்தினியும் அவன் காதலன் பாங்கனும் இருந்த இடத்திற்கருகில் நின்ற மரத்தில் விநோதமான ஓர் சம்புமலர் தோன்றியது. அம்மலரை பறித்துத் தருமாறு பத்தினி பாங்கனை வேண்டினாள். அவன் முயன்றும் முடியவில்லை. அருகில் இறந்த சந்தணப் பற்றையில் இரண்டு கொம்புத் தடிகள் காணப்பட்டன. இவ்விரு தடிகளையும் பத்தினியும் பாங்கனும் எடுத்து அச்சம்பு மலரை பறிக்க முயன்றனர். இவ்விருவர் கையில் இருந்த தடிகள் விநோதமாக மேலுயர்ந்து சென்று ஒன்றையொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுவி இழுத்து பாங்கனின் தடி உடைந்தது. இதனால் பத்தினியின் கொம்பு வென்றது. அவள் பெரிதும் மகிழ்ந்தாள். இந்நிகழ்வில் இருந்தே கொம்பு விளையாட்டு தொடங்கியது என்பது சிங்கள மக்களின் நம்பிக்கை.

இவ்வழிபாட்டம்சங்களில் முக்கியமானவை எட்டு நாட்களும் ஆண்கள் மட்டும் இங்கு தங்கியிருந்து தமது கையால் நெல் குற்றி ஒரு வேளை மட்டும் சாப்பிட்டு விரதமிருந்து பூசையின் பின் கொம்பிழுத்து - விளையாடி பக்தி பூர்வமான பாடல்கள் பாடி மகிழ்ந்து வழிபட்டு அம்மனை மகிழ்விக்கும் வழிபாடாகவே இவை அமைகின்றன.

## பள்ளிக்குடியிருப்பின் கொம்பு விளையாட்டு

***இங்கு வாழ்வோர் விவசாயம் - கால்நடை வளர்ப்பில் காலா காலமாக ஈடுபட்டு வருபவர்கள். மழை வீழ்ச்சியும், குளிர்ச்சியும்*** தேவை அதற்கான வழிபாட்டிற்காக ***"சிவசக்தியம்மன் கொம்பு முறி விளையாட்டுச் சங்கம்"*** ஏற்படுத்தி ஐந்தாண்டுக்கு ஒரு முறை இவ்வழிபாட்டை மேற்கொள்வதற்கான ஏற்பாட்டினடிப்படையில் நடைபெற்று வருகின்றது.

கொம்பு முறி விளையாட்டு ஒரு தெய்வீகத் தன்மையானது. விளையாட்டு மூலம் கல்வி என்பது போல விளையாட்டு மூலம் பக்தி பரவசத்தை ஏற்படுத்த ஒரு மனோதத்துவத் தன்மையைக் கொண்டுள்ளது.

வடசேரி சிவனாகவும் - தென்சேரி உமை (அம்மன்) ஆகவும் சித்தரிக்கப்பட்டே இவ்வழிபாடு இடம்பெறுகின்றது. வரட்சி காரணமாக பயிர்ச்செய்கை - விவசாயம் பாதிக்கப்பட்டமையாலும், நோய்கள் பரவுவதாலும் ஏற்படும் பாதிப்பு நிலையைப் போக்குவதற்காக இக் கொம்பு முறி விளையாட்டு முறை தோன்றியதென்பதே எம்மவர் பரம்பரையாக கூறிவரும் விடயமாகும்.

கிழக்கிலங்கையில் - மட்டக்களப்பு பகுதிகளில் நடைபெறும் கொம்பு விளையாட்டுக்கு ஒத்ததாகவே இங்கும் இடம்பெறுகின்றது. இவ்வழிபாட்டின் நோக்கம் நிறைவேறும் வகையில் பக்தி பூர்வமாக நடைபெறுகின்றது.

பல்லாண்டு காலமாக இங்கு நடைபெற்றதற்கான ஆதாரங்கள் உள்ளன. சோழர் ஆட்சிக்காலத்திற்கு முன்பே இங்கு மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. கோணேசர் கோயிலுக்கு நெற்செய்கைக்காக அல்லைக்குளம் கட்டப்பட்டதாகவும் இங்கிருந்து நெல் கோணேசருக்கு அனுப்பப்பட்டதாகவும் பள்ளிக்குடியிருப்பு வரலாறு எனும் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1948, 1965, 1971, 1976, 2010, 2015 களில் நடைபெற்ற கொம்பு விளையாட்டில் பங்குபற்றியவர்களே இன்று வாழ்பவர்களாக உள்ளனர. 2010க்கு முன்னர் முப்பது ஆண்டுகள் நடைபெற்ற யுத்தம் காரணமாக இவ்வழிபாடு இடம்பெறவில்லை. பின்னர் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை என்ற அடிப்படையில் இடம்பெற்று வருகின்றது. 2020ல் நடைபெற ஏற்பாடாகியும் கொரோனா (கொவிட் - 19) நோய் பரவல் காரணமாக நடைபெறவில்லை.

கொம்பு விளையாட்டு முறைமைகள் கிழக்கிலங்கையில் பெரும்பாலும் ஒத்த தன்மையானதாகவே காணப்படுகின்றன. இவற்றை பின்வரும் திட்டமிடல் ஒழுங்கமைப்பில் இடம்பெறுவதைக் காணலாம்.

- பொதுக்கூட்டத்தில் தீர்மானம் எடுத்தல்.
- கொம்புத் தலைவர்களை நியமித்தல்.
- நேர்கடன் செய்தல்.
- தற்காலிக கொட்டில்கள் - வழிபாட்டிடங்களை அமைத்தல் தேவையான - தேர்கள் அமைத்தலும்.
- ஆரம்பிப்பதற்கு முன்பு தாயம்மன் கோயிலுக்கு சென்று தீர்த்தம் எடுத்தல்.
- மோராண்ட குள - பிள்ளையாருக்கு பொங்குதல்.
- ஆரம்ப விழா - பூசை பெட்டி எடுத்து வருதல்.

**பொதுக்கூட்டம்.**

கொம்பு விளையாட்டு ஆரம்பிக்கும் முகமாக பொதுக்கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டு மேற்குறிப்பிட்டவைக்கான செயற்பாட்டுத் தீர்மானங்கள் எடுக்கப்படும்.

1971ல் இருந்து இந்து இளைஞர் மன்றத்தால் நடாத்தப்பட்டது. தலைவர். திரு. ஆ. குணராஜரெட்ணம், செயலாளர் இ. கோபாலபிள்ளை, பொருளாளர மா. சிவலிங்கம் ஆகியோர் சிறப்பாக செயற்பட்டனர். மிகவும் சிறப்பான கலைநிகழ்வுகள் மாவட்டம் முழுவதுமான பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது சிவசக்தி கொம்பு முறி விளையாட்டுச்சங்க தலைவர். திரு. சி. மயில்வாகனம், செயலாளர். திரு. க. விபுலானந்தன் பொருளாளர் க.கோணேஸ்வரன் சங்கம் அமைக்கப்பட்டு அதனூடாக இக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு முக்கிய தீர்மானங்கள் மரபு வழியாகவும் எடுக்கப்படும்.

இணைத் தலைவர்களாக திரு. சி. மயில்வாகனம், திரு. த. அருளானந்தம் அவர்களும் கடமையாற்றினர்.

## கொம்புத் தலைவர்கள் நியமனம்.

வடசேரி தென்சேரி பகுதிகளில் இருந்து ஒருவர் தெரிவு செய்யப்படுவர்.

வடசேரி - இக்கிராமத்திலுள்ள 10ம், 9ம், 8ம் திருவிழாக்காரர்களான குடியிருப்புக் குடியினர், உமண ஹறி குடியினர், தோப்புச்சிக்கிளைக் குடியினரில் இருந்தும் ஒருவரை தெரிவு செய்வர்.

தென்சேரி - 7ம், 6ம், 5ம், 4ம், 3ம், 2ம், 1ம் திருவிழாக்காரர்களான படைத்தார்குடி, வில்வராசன்குடி, ஆளவந்தார்குடி, மாலயன்குடி, ஏகநாதிநாயனார்குடி, ஆசாரிகுடி, வெள்ளைக்குடி என்பவர்களில் இருந்து ஒருவர் தெரிவுசெய்யப்படுவர்.

தெரிவுசெய்யப்படும் கொம்புத் தலைவர்கள் தலைமை தாங்கக்கூடிய ஆளுமைப் பண்புடையவர்களாகவும் - கொம்பு வாழ்த்துதல் தனது அணியை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல் - அவர்களை ஊக்கப்படுத்தி, செயற்படுத்தி, நெறிப்படுத்தும் திறனுள்ளவர்களாகவும் - கொம்பு விளையாட்டு நிகழ்வுகள் பற்றிய பூரண பட்டறிவுடையவராகவும் இருத்தல் வேண்டும். அவ்வாறே இத்தெரிவுகள் இடம்பெறும்.

இதுவரை நடைபெற்ற கொம்பு முறி விளையாட்டின் கொம்புத் தலைவர்கள்

| ஆண்டு | வடசேரி | தென்சேரி |
|---|---|---|
| 1965 | செல்லப்பா | நல்லையா |
| 1971 | செ. விநாயகமூர்த்தி | செல்வராசா |
| 1976 | செ. விநாயகமூர்த்தி | ப. கணேசமூர்த்தி |
| 2010 | க. குணசேகரம் | செ. சபாரெட்ணம் |
| 2015 | க. சின்னத்தம்பி | செ. சபாரெட்ணம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேர்கடன் செய்தல்.

இவ்வழிபாட்டுக்கான பூசகராக சம்பூர் புலவன்குடியினரே வழக்கமாக செய்து வருகின்றனர். இப்புலவன் குடியினர் கோணேசர் திருப்பணிக்காக இந்தியாவின் தமிழ்நாட்டிலுள்ள காஞ்சிபுரத்திலிருந்து அழைத்துவரப்பட்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்களாலேயே இவ்விழாவின் ஆரம்ப நேர்கடன் செய்யப்படும்.

மோராண்டகுள - பத்தினியம்மன் ஆலயத்திலிருந்து நேரத்திவைத்த தேங்காய்களுடன் - ஆட்டுக்கடா சகிதம் இராஜ மேளதாளங்களுடன் கிராமத்தை சூழவுள்ள அனைத்து வயல் வெளிகளினூடாக பூசகருடனும் கொம்புத் தலைவர்கள் சபையினர் ஊர்மக்களுடன் நேர்கடன் செய்யப்படும்.

## வளமையான வழிபாட்டிடத்தில் (கொம்புச்சந்தி) தற்காலிக கொட்டில்கள் அமைத்தல்.

தற்காலிக கொட்டில்கள் அமைத்தே இவ்வழிபாடு இயற்றப்பட்டு வருகின்றது. இதற்கு தேவையான மரம், தடிகள், தென்னை ஓலைகள் முதலானவற்றை பெறுவதற்கு குழுக்களாக இயங்குவர்.

- பிரதானமண்டபம் 20'x20' இலான 12'x15' உயரமாக அமைக்கப்படும். **இவை 2019ல் நிரந்தரக் கட்டடமாக அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதியை திரு. இரா. சம்பந்தன் (பா.உ) அவர்கள் வழங்கினார்.**
- இரு கொம்புகளும் வைப்பதற்கான (வடசேரி, தென்சேரி கொம்புகள்) பிரதான மண்டபத்தின் இரு பக்கத்திலும் கொம்பு மால்கள் அமைக்கப்படும்.
- நோம்பு மால்: சுமார் 12'x 30' நீளமான 8' உயரமாக அமைக்கப்படும்.
- இங்கு நோம்புதாரர்கள் இருப்பார்கள்.
- நெல்லை கையால் குற்றியே சமைக்க வேண்டும். இதற்காக உரல் உலக்கைகள் பயன்படுத்த வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு சாக்கு நெல் குற்றவேண்டும் (50Kg)
- பூசகர்கள், விரதகாரர், வேலை செய்வோர்களுக்கு ஒரு நேர உணவுக்கான சமையல் இடம்பெறும்.
- சுமார் 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் 7 - 9 பேர் வரை இருப்பர்.
- இவர்களுக்கான பால் எல்லாம் இலவசமாக வழங்கப்படும்.
- சைவ உணவுகள் மாத்திரம் இங்கு இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தேர் – ஏடகம் அமைத்தல்.

சுமார் 6' உயரமான இரு தேர்கள் அமைப்பார்கள். ஒவ்வொரு சேரியினரும் போட்டியாக தமது தேரை அழகாக அமைப்பார்கள். இத்தேர்கள் பிரதான வழிபாட்டு மண்டபத்தில் வைக்கப்படும். வடசேரி தேரினுள் சிவன், பிள்ளையாரும் தென்சேரி தேரினுள் அம்மனும் வைக்கப்படுவர். இத்தேர்கள் சுவாமி ஊர்வலங்களுக்காக எடுத்துச் செல்லப்படும்.

### தாயம்மன் கோயிலுக்குச் சென்று தீர்த்தம் எடுத்தல்.

மல்லிகைத்தீவு - கங்குவேலிப்பகுதியில் அமைந்துள்ள பத்தினியம்மன் கோயிலையே தாயம்மன் கோயில் என இங்கு குறிப்பிடப்படுவது. இங்கு சென்று பூசை செய்து அங்கிருந்தே தீர்த்தம் எடுத்துவருதல் வழக்கமாகும்.

இக்கோயில் பூசகரே கொம்புமுறி விளையாட்டுக்கால பூசகராகவும் (பாட்டுவாளிக் குடியினர்) பரம்பரையாக செய்பவர்கள்.

மோராண்டகுள பிள்ளையாருக்கான பொங்கல் வழிபாட்டுடன் ஆரம்பமாகும். இக் கொம்புமுறி விழாவுக்கான பூசை பெட்டி எடுத்தல் நிகழ்வு மோராண்டகுள பத்தினியம்மன் ஆலயத்திலிருந்து கொம்புகள் சகிதம் பூசைத்திரவியங்கள் அடங்கலாக அனைத்தையும் இராஜ மேள தாளங்களுடன் எடுத்துவரப்பட்டு தொடர்ந்து 8 நாட் பூசைகளும் கொம்பு முறி நிகழ்வுகளும் போர்த்தேங்காய் உடைத்தலுடன் ஆரம்பமாகும்.

முதலாம் நாள் வடசேரி பெரிய கொம்புடனும் தென்சேரி சிறிய முறி கொம்புடனும் கொம்பிழுப்பு இடம்பெறும் முடிவுற்றதும் இரவு 7.00 மணியளவில் தேருடன் ஊர்வலம் கொம்பு வாழ்த்துப்பாடல்களுடன் - கும்மிப் பாடல்கள் பக்திப் பாடல்களுடன் வருவர். வாசல்கள் தோறும் கும்பம் வைத்து வழிபடும் அதே வேளை மஞ்சள் - வேப்பிலை கலந்த நீர் ஊற்றுவதும் எதிர் அணியினரே (தென்சேரியினரை) பூரணமாக நனையச் செய்வதும் வழக்கமாக அமையும்.

இவ்வாறு எட்டு நாட்களும் இடம்பெறும் இந்நிகழ்வு ஊர்முழுவதும் பக்திப்பரவசமாகவும் சைவ ஆசாரங்கள் கடைப்பிடிக்கும் காலமாகவும் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காம் நாள் காலை பூசை முடிந்ததும் பத்தினியம்மன் கோயிலுக்கு இரு தேர்களையும் சுமந்துகொண்டு செல்வர். இதில் அம்மன் தேர் (தென்சேரி) மிக வேகமாக செல்லும் - சிவன் தேர் (வடசேரி) மெதுவாக செல்லும். சேனையூர் பக்கம் செல்லும்போது சிவன் தேர் வேகமாக செல்லும். இது உண்மைச் சம்பவம். போகும் வழியில் பாலத்தடிச்சேனை, பட்டித்திடல், மணல்சேனை, பெரியவெளி, மல்லிகைத்தீவு மக்கள் தமது ஊர்களை வாழை, குருத்துக்களால் அலங்கரித்தும் நிறைகுடம் வைத்து வரவேற்று வழிபடுவதும் மிகவும் பக்திப் பிரவாகமாகவும் இக்கிராம மக்களின் பங்கு பற்றுதல்கள் சிறப்பாய் அமையும்.

ஆறாம் நாள் சேனையூர் பிள்ளையார் ஆலையத்திற்கு இரு தேர்களும் செல்லும்போது தங்கபுரம், கணேசபுரம், கட்டைப்பறிச்சான் ஊடாக சேனையூர் பிள்ளையார் கோயிலுக்கு இரு தேர்களும் செல்லும். வழமையாக கும்பம், தோரணம், தாகசாந்தி என்பன இடம்பெறும்.

இப்பயணங்கள் மூதூர் பிரதேசம் முழுவதையும் இணைக்கும் செயற்பாடாகவும் இவ்வழிபாட்டில் அனைவரும் ஈடுபடவைக்கும் செயற்பாடாக முற்காலமிருந்தே இருந்து வந்துள்ளது.

எட்டாம் நாள் இரவு கலை நிகழ்வுகள் இடம்பெறும். 1971ம் ஆண்டு நடைபெற்ற கலைநிகழ்வுகள் விசேட சமய சொற்பொழிவுகள், கவியரங்கு இசைக்கச்சேரி என்பன இடம்பெற்றது. குறிப்பாக கவிதையரங்கில் கவிஞர் தாமரைத்தீவான் தலைமையில் கவிதையரங்கு இடம்பெற்றது. இதில் கேணிப்பித்தன் அருளானந்தம், தமிழ்ப்பித்தன் கனகசிங்கம், ஆலையூரான் தங்கராசா சைவப்புலவர் விபுணசேகரம் முதலானோர் கலந்து சிறப்பித்தனர்.


2010, 2015ல் நடைபெற்ற வேளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் க. அம்பிகைபாகன் கோ. க்நதசாமி அதிபர் அவர்களின் ஒழுங்கமைப்பில் பெரும்பாலான மூதூர் பகுதி பாடசாலைகளின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்களும் கலந்து சிறப்பித்தமை இது தி/மூதூர் பகுதிக்கான ஒரு சிறப்பான விழா என்பதும் தமிழர் பாரம்பரியங்களையும் திருமலை மாவட்டத்தில் இங்கு மட்டும் இடம்பெறும் இவ்விழாவை மெருகூட்டும் செயற்பாடாக அமைந்தது. அன்றிரவு அன்னதான நிகழ்வுகள் கலைமதி விளையாட்டுக் கழகமும் ஊர் மக்களும் இணைந்து வழங்கும் நிகழ்வும் சிறப்பாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வடசேரி - தென்சேரி கொம்புத் தலைவர்களுடன்



இறுதிநாள் கொம்பிழுப்புக்கு தயாராதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இறுதிநாள் கொம்பு இழுக்கும் நிகழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெற்றிக்களிப்பில் வாழ்த்துதல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஏடகத்தை (தேரை) சுமந்து ஊர்வலம் செல்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதிநாள் நிகழ்வு

இரு பெரிய கொம்புகளும் இணைக்கப்பட்டு - வெளுக்கயிறு - பெரியதம்பான் கயிறால் இரு பகுதியினரும் இழுக்கும் காட்சி - இரு கொம்புகளையம் இணைத்துக் கட்டும் தொழில் நுட்பம் மிகவும் நுணுக்கமானது. இதில் தேர்ச்சி பெற்ற சிலரால் மாத்திரம் இது நடாத்தப்படும்.

கொம்பு இழுக்கும்போது முதலில் வடசேரிப்பக்கமே வெற்றி செல்வதாக அமையும் பின்னர் பெண் தெய்வத்திற்கு விட்டுக்கொடுப்புக்காக விடுவதால் பெண் தெய்வப்பக்கம் தென் சேரிக்கு வெற்றி கிடைக்கும்.

வென்றதும் தென்சேரியார் கொம்பை தூக்கி எடுத்து கொம்புத் தலைவர் வாழ்த்துவார். வழக்கமாக நீண்டகாலமாக சேனையூரைச் சேர்ந்த மார்கண்டு அவர்கள் இந்த விடயத்தில் முன்னின்று வாழ்த்தும் காட்சி சிறப்பாக அமையும். பின்னர் தற்காலத்தில் ந. சுந்தரலிங்கம், வர்ணகுலசிங்கம் முதலானோர் தென் சேரியாருடன் இணைந்து கொம்பு வாழ்த்து பாடல்களுடன் வடசேரிக்கு வசை பாடும் நிகழ்வு மிகவும் சிறப்பாக அமையம்.

தொடர்ந்து வட சேரியாரின் பெரிய கொம்பும் தென்சேரியாரின் சிறிய கொம்பும் இழுக்கையில் வடசேரியார் வெற்றியடைந்து அவர்களுக்கும் வெற்றிக்கழிப்பில் வாழ்த்துவார்கள்.

இரவு இரு தேர்களும் இரு கொம்புகளும் தலைவர்களும் இணைந்து ஒன்றாக ஊர்ப்பகுதிக்கு சென்று சேரி வாழ் மக்களும் மனைகளும் செழிக்க மழை பொழிய பயிர் செழிக்க ஒவ்வொரு வீட்டு வாசல்கள் தோறும் கும்பம் வைத்து வரவேற்று வழிபாடு மிகவும் பக்திபூர்வமாக இடம்பெறும். அம்மன் காவியப் பாடல்கள், பஜனைகள், குளிர்த்திப்பாடல்கள், வேற்பிலை நடனங்கள், முதலானவையும் இடம்பெறும். பக்தி பரவசத்தோடு பிரசாதங்களும் ஒவ்வொரு வீடுகளிலும் வழங்கும் காட்சி - மக்கள் குதூகலமாக மகிழ்வடையும் காட்சி கொம்பு முறி விளையாட்டின் பயனை ஒவ்வொரு உள்ளங்களிலும் காண்பது இவ்வழிபாட்டின் வெற்றியை உணர்வதாய் அமையும்.

தொடர்ந்து மூன்றாம் நாள் வைரவர் மடை ஆட்டுக்கடா வெட்டுதல் நிகழ்வுகளும் இடம்பெற்று பூசகர்களின் சிறப்பான செயற்பாட்டால் மீண்டும் ஒற்றுமையாக வாழ்வு தொடரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொம்பு விளையாட்டுப் பாடல்கள்.

***கல்வி அமைச்சால் வெளியிடப்பட்ட சங்கீத பாட ஆசிரியர் கைநூலில் (தரம்-9) கொம்பு விளையாட்டுப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.***

ஆற்றோரம் போற மயில் - அது
ஆண் மயிலோ பெண்மயிலோ
பாரத்து வாடா வடசேரியான்
நாவற்பழம் போல மாலை தாறேன்

ஆற்றோரம் சிறாம்பி கட்டி
அங்கே நின்று வடமிழுத்து
வேர்த்து வாறேன் தென் சேரியான்
வெள்ளி மடல் கொண்டு வீசுங்கடி

வடசேரியார் கொம்பு எங்கே எங்கே
மணமுள்ள தாளை மரத்திலுள்ளே உள்ளே
தென்சேரியான் கொம்பு எங்கே எங்கே
தென்கோடி மூலைக்குள்ளே... உள்ளே
(ஓ ஓ கோ... கோ...)

தென்சேரியான் கொம்பு எங்கே எங்கே
சித்திரத் தேருக்கு மேலே மேலே
வடசேரியன் கொம்பு எங்கே எங்கே
வண்ணாண்ட சாடிக்கு உள்ளே உள்ளே

ஓ ஓ கோ... கோ...
தென்னானே...
மன்றும் மனையும் தளைக்க தளைக்க...
மக்களும் சுற்றமாய் வாளவும் வேண்டும்
என்றும் சுகமாய் இருக்கவும் வேண்டும்
எப்போதும் எம் கொம்பு வெல்லே வெல்லே
நாளைக்கும் எம் கொம்பு வெல்லே வெல்லே
நாளையண்டைக்கும் எம் கொம்பு வெல்லே வெல்லே
(ஓ ஓ கோ... கோ...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் பாடலை இதற்கு உதாரணமாகக் கூறலாம். நாம் முன்பு கூறியது போல தென் சேரியைப் பெண்களாகவும், வடசேரியை ஆண்களாகவும் கொண்டு காதல் முறையில் பாடுவதையும் இப்பாடலில் காணலாம். வடசேரியான் தென்சேரிப் பெண்களை விரும்பிச் செல்வதும் அவள் அதற்கு வசை கூறி மறுத்து உரைப்பதும் ஆன முறையில் இப்பாடல் அமைந்துள்ளது.

பால் போல் நிலவெறிக்கப்
படலை திறந்தவன் ஆர் தோழி
நான்தாண்டி வட சேரியான்
உனக்கு நாழிப்பணம் கொண்டுலாவுகிறேன்

மானே மரகதமே மாணிக்கமே
புவி ஆண்முத்தே
தேனே திரவியமே எந்தன்
செம்பொன் மோதிரத்தை நான் தாறேன்

மோதிரத்தின் மேல் ஆசையில்லை
உன் முகத்தை பார்க்கவும் நேரமில்லை
பெண்பாசம் என்மேல் கொளாதேயடா
பண்பு கெட்ட வடசேரியான்

இக்கொம்பு விளையாட்டுப் பாடல்களில் பல இன்னும் வெளிவராத நிலையில் காணப்படுகின்றன.

மலைப்பாம்பு புள்ளிபோல
மார்பெல்லாம் செம்பட்டைத் தேமல்களாம்
குலைப்பாண்டி வடசேரியான்
குட்டிபோட்ட நாய் போல

வடிச்ச கஞ்சி குடிச்சறியான்
வாயில் தாம் பூலம் போட்டறியான்
இளிச்ச வாயான் வடசேரியான் அவன்
என்ன பொறப்புப் பெறந்தாண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்குப் பல்கலைக்கழக அரங்க நிகழ்வில் பாடப்பட்ட கொம்பு விளையாட்டுப்பாடல்கள்

தந்தானே தனத் தன்னானே
தந்தானே தனத் தன்னானே
தன்னான தன தானித தானித
தந்தானே தனத் தந்தானே

1. கோலாப்பணிச்சேலை கொய்துடுத்துக்
கோம்புவிளையாட்டுக்குப்போகையிலே
வேலப்பர் வந்துமடிபிடித்து
மேத்தவுஞ்சிக்கொண்டார்தோழி.

2. காப்பணிமங்கையார் மன்மதவேள்
கந்தன் குமரன் அருள்வேலன்
சீப்புடன் மல்லிகைப்பூ மாலைதந்து
சேர்வமென்றாடி தோழியரே.

3. தோழியொரு வசனம்
சொல்கிறேன் கேளடிநாற்றோழி
வாளி தந்தென்னையும் மேயிங்கு
வரச்சொன்னாரடி மானாரே.

4. மஞ்சள்குரவிபோல மடிநிறைந்தோர் மல்லிகைப்பூ
சிந்தித் தெருவில்வாற சிறுக்கனல்லோடி தென்சேரியான்.

5. மலைகுறத்திக்கு மையல்கொண்டு
மணிப்பவளம் வளையல்விற்றுத்
தினைப்புணத்திலே கண்டவுடன் கந்தர்
வேங்கைமரமானார் தோழியரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஆற்றோறம் போறமயில்
ஆண்மையிலோ அதுபெண்மயிலோ
பார்த்துவாடா வடசேரியான்
பாவற்பழம்போல மாலைதாறேன்.

7. ஆற்றோரம் சிறாம்பிகட்டி
ஆங்குநின்று படைபொருது
வேர்த்துவாறான் வடசேரியான்- நல்ல
வெள்ளி மடல்கொண்டுவீசுங்கடி

8. ஆற்றோரம் சிறாம்பிகட்டி
ஆங்குநின்று பனைபொருது
தேற்றுவாறான் வடசேரியான்
துடைப்பங்கட்டா லடியுங்கடி.

9. வடசேரியான் கொம்பு எங்கேஎங்கே
மணமுள்ளதாளையின் மேலேமேலே
தென்சேரியான் கொம்பு எங்கேஎங்கே
செம்பரப்பற்றைக்கு உள்ளேஉள்ளே.

10. தென்சேரியான் கொம்பு எங்கேஎங்கே
சித்திரத்தேருக்கு மேலேமேலே
வடசேரியான் கொம்பு எங்கேஎங்கே
வண்ணாண்டசாடிக்கு உள்ளேஉள்ளே

11. தவிட்டங்காயான் தென்சேரியான்
தன்மானம்சற்றும் இல்லாண்டி
அவிட்டுத்தலைப்பாகை கையில்எடுத்து
அஞ்சிஅதோஓடிப்போறாண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. வாழைக்காயான் வடசேரியான்
மானஈனம் கெட்டவண்டி
பெண்பிள்ளைப்பேச்சுக்கு ஆற்றாமலே அவன்
பேரழிந்தே வெட்கிப்போறாண்டி

13. பால்போல் நிலவெறிக்கப்
படலைத்திறந்தவன் ஆர்தோழி
நான் தான்டி வடசேரியான்
உனக்கு நாழிப்பணம் கொண்டுலாவுகின்றேன்

14. மலையோரம் வேட்டைக்குப்போய்
மானடி பார்த்துவருகையிலே
கலையோ கலைமானோ
காடேறிமேய்ந்ததோர் பெண்மானோ

15. புல்லாந்திப் பற்றைக்குள்ளே
புலிகிடந்து உறுமுகுது
ஒக்கமதிப்பாய் புல்லாந்தி
ஒருகுத்தாய்க்குத்தாய் புல்லாந்தி.

16. கப்புகனார்நிதம் அர்ச்சனைசெய்ய
கரிமிசைவாறவர் ஆர்தோழி
செப்புமுலைக்குறத்தி பங்கன்- அந்தச்
செவ்வேல்முரகனடிமானே

பேராசிரியர் பாலசுகுமார்.
கிழக்குப் பல்கலைக் கழகம்

தற்பொழுது இக்கொம்பு விளையாட்டுப் பாடல்கள் பல்வேறு கிராமிய மெட்டுக்களில் மேடை ஏறிவருவதையும் அவை மாணவர்கள் மத்தியில் கூட பிரபல்யம் அடைந்து வருவதையும் அவதானிக்க முடிகிறது. இவற்றுள் இன்னும் வெளியிடப்படாமல் உள்ள இலக்கியத்துக்குச் செய்ய வேண்டிய ஒரு முக்கிய கடமையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொம்பு விளையாட்டின் நிறைவு

தாய்க் கொம்பு முறித்த பின் பிரிவினையே மறந்து ஊர் ஒன்றுபடும். வெற்றி பெற்ற எந்தக் கொம்பு என்று பாராது இரு சேரியாரும் ஒன்றுபட்டு வெற்றிக் கொம்பை ஏடகத்தில் வைத்து கண்ணகியம்மன் குழுத்திப்பாடல்கள் பாடி ஊர்வலம் நடத்துவர். அதை தொடர்ந்து கோயிலின் விசேட பூசை நடாத்தி கண்ணகி அருள் கிடைக்கும் என்ற திருப்தியோடு விழாவை நிறைவு செய்வார்.

இறுதிநாள் குளுத்தி ஆடுதல் அன்று படிக்கப்படும் குளுத்திப் பாடல் மிகவும் சொற்சுவை பொருட்சுவையுடையன.

எச்சேரி வெந்தாலும்
இடைச்சேரி வேகாமல்
உன் முலை குளுந்தாற்போல்
நீயும் குளுந்தருள்வாய் - என வேண்டி நிறைவுறும்.

2000ம் ஆண்டு எமது மஹா கும்பாபிஷேக சிறப்பு மலரில் "தாமரைத்தீவான்" எனும் பெரும் கவிஞர் அவர்களால் எழுதப்பட்ட கவிதையில் குறிப்பிட்டவை.

கொம்பு விளையாட்டைக் குதூகலமாய் கொண்டாடி
அம்புவியில் வாழ்ந்த அடியாரின் - நம்பிக்கை
சீர்கெட்டுப் போகாமல் சித்தி விநாயகனே
நேர்செய்து வைப்பாய் நிலை!

இவர் கொம்பு விளையாட்டுக்காலங்களில் கலை நிகழ்வுகளில் கவிதையரங்கில் தலைமை தாங்கியவர். இவரது கவிதையரங்கம் மிகவும் கருத்தாழமிக்கதாகவும் கலைநயமுடையதாகவும் மக்களை கவரக்கூடியதாயுமிருக்கும்.

கிழக்கிலங்கையில் பல இடங்களில் நீண்டகாலமாக கொம்பு விளையாட்டு முறைமை அருகிவருவதாக அறியமுடிகின்றது. இதற்கு பல காரணங்ள் கூறப்படுகின்றன. தாய்க் கொம்புக்கு மந்திர ஆற்றல் கொடுக்கும் சடங்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல மந்திரவாதிகள் கலந்து கொள்வர். இவர்கள் எல்லாம் ஒன்றுபட்டு தம்மை மறந்து உணர்ச்சிவசப்பட்டு மந்திரங்கள் சொல்லும்போது கொம்புகள் தானே எழுந்தாடும் என்பர். இம் முறை பெரும்பாலும் மட்டக்களப்பு பகுதிகளிலேயே காணப்படுவதாக அறிய முடிகின்றது.

கொம்புவிளையாட்டுதொடங்கிவிட்டால்வடசேரி, தென்சேரியாருக்கிடையில் போட்டித்தன்மை - வசை பாடுதல் முதலானவை இடம்பெறும். சில வீடுகளில் கணவன் மனைவியர் வேறு வேறு சேரியினராக இருந்தால் கேலியும், கிண்டலுமாக போட்டியாக ஒன்பது நாட்களும் இருப்பர். இதுவும் ஒரு வகை ஊடலாகவும், உற்சாகமாகவும் இருக்கும் எனலாம். மாறாக சண்டையில் முடிந்த சம்பவங்களும் ஏற்படலாம். இருந்தாலும் இது ஒரு வழிபாட்டு முறைமை என்று பக்தி பூர்வமாக இடம்பெறுவதால் நல்ல மன ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்தும்.

ஊர் மக்கள் ஒன்று கூடி பல செயற்பாடுகளை செய்வதால் தங்களுக்கிடையே திட்டமிடல் பண்பு அதிகரிக்கிறது. அத்தோடு தம்மையும் பிறரையம் முகாமைத்துவம் செய்யும் பண்பு தலைமைத்துவம், மனித நேயம் என்பனவும் கட்டியெழுப்பப்படுகிறது. மகிழ்வான விளையாட்டினூடாக கல்வி என்பது போல விளையாட்டினூடாக பக்தியை ஏற்படுத்தலாம். நோக்கம் விவசாயத்திற்கான மழைவேண்டுதல். அந்நாளை குளிரச்செய்வதற்கான பக்திபூர்வமான வழிபாடு. பூரணமாக ஈடுபடுவோர் மனநிறைவான மகிழ்வை இந்நிகழ்வினூடாக பெறுவதைக் காணலாம்.

பள்ளிக்குடியிருப்பின் வரலாற்றியலில் சமூகவியல் பண்பாட்டியலுடனான பன்முக தரிசனம் எனும் விடயத்தை மரபு ரீதியானதும் கலை அம்சங்களுடனான பக்தி பூர்வமான இந்நிகழ்வுகளும் புலப்படுத்துகின்றன.



வடசேரி, தென்சேரி கொம்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்பு விளையாட்டு வழிபாட்டின் பிரதான பூசை மண்டபம்.

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் திரு. இரா சம்மந்தன் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் 5 இட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 2019இல் கட்டப்பட்டது.**

அடிக்குறிப்பு

1. மட்டக்களப்பில் மறைந்து வரும் கொம்பு விளையாட்டு - க.மகேஸ்வரலிங்கம். பக்கம் - 95.
2. நாட்டாரியல் ஆய்வு. க. மகேஸ்வரலிங்கம். பக்கம் - 103
3. மேலது பக்கம் - 96.

- நாட்டாரியல் ஆய்வு - பண்பாட்டலுவல்கள் திணைக்கள வெளியீடு மட்டக்களப்பில் மறைந்துவரும் கொம்பு விளையாட்டு - க. மகேஸ்வரலிங்கம்
- செ. எதிர்மன்னசிங்கம் - பணிப்பாளர் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம்.
- வி. பாக்கியராசா - அதிபர் தி/பள்ளிக்குடியிருப்பின் கொம்பு விளையாட்டு, ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் - மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்.
- கொம்புமுறி கொம்பு விளையாட்டு பெருவிழாவும் கிராமிய சிறு தெய்வவழிபாடும் கலாபூசணம் த. சிதம்பரப்பிள்ளை ஓய்வுநிலை அதிபர் தி/பள்ளிக்குடியிருப்பு.
- மட்டக்களப்பு மான்மியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## - 10 -

# தி/பள்ளிக்குடியிருப்பின் ஆலயங்கள்

குளக்கோட்ட மன்னன் கோணேசர் திருப்பணியைத் தொடர்ந்து எமது தி/பள்ளிக்குடியிருப்பு விநாயகர் ஆலயத்திருப்பணியையும் செய்தார்[1] எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. மிகப்பழமையான நீண்டகால பழமையான வரலாறுடையது எமது சித்திவிநாயகர் ஆலயம்.

அண்மையில் புதிதாக மீண்டும் மூலஸ்தானம் அமைப்பதற்கு இருந்த மூலஸ்தானம் உடைக்கப்பட்ட வேளை - அதற்கான அடித்தளம் தோண்டப்பட்ட வேளை - காணப்பட்ட கற்தூண்கள் அவற்றில் காணப்பட்ட பொழிவுகள் - சிற்பங்கள் அனைத்தும் பொலனறுவைக்கால சோளர் கால அங்குள்ள ஆலய அமைப்பில் காணப்பட்டவைகளுடன் ஒத்ததாக உள்ளது.

2000ம் ஆண்டில் வெளியிடப்பட்ட 1வது கும்பாபிசேக மலரில் எமது ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் வரலாற்றுப் பார்வையில்.... எனும் கட்டுரையில் அண்மைக்கால வரலாறுகள் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கும்பாபிஷேகத்திற்கு உதவிய, வருகைதந்த சுவாமி தந்திரதேவா அவர்களையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

2008ம் ஆண்டு கலவரத்தின் இடப்பெயர்வின் பின் வெளியிடப்பட்ட 2வது கும்பாபிசேக மலரில் இருந்தும் சில விடயங்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

எமது கிராமங்களிலுள்ள அனைத்து ஆலயங்களின் வரலாறுகளும் இன்றைய நிலையும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.




2000ம் ஆண்டு ஆலய கும்பாபிஷேக நிகழ்வுக்கு சுவாமி தந்திரதேவா அவர்கள் அழைப்பின் பெயரில் வருகை தந்தபோது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்

## வரலாற்றுப் பார்வையில்

எமது ஆலய வரலாறானது - குளக்கோட்ட மன்னன் திருக்கோணேசர் ஆலயத் திருப்பணியை முடித்த பின் மூதூர் பகுதியில் தி/பள்ளிக்குடியிருப்பு விநாயகர் ஆலயத்தையும்[1] அமைத்தார் என அறியமுடிகின்றது. பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த ஆலயம் என்பதற்கு இங்கு காணப்படும் கருங்கற் தூண்கள், சிற்பங்கள் சான்று பகர்கின்றன.[2]

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர்ப் பிரதேசத்தின் மிகப்பழம்பெரும் கிராமமான தி/பள்ளிக்குடியிருப்பு வயலும் வயல் சார்ந்த மருதநிலைத்தில் அமைந்துள்ளது. மருத நிலத்தின் ஒரு பெயர் பள்ளி என்பதனாலும் பள்ளிக்குடியிருப்பு எனப் பெயர் பெறக்காரணமாய் அமைந்தது.

மகாவலி நீர்வளமும், குளங்களின் நீர் நிலைகளும் கிராமத்தைச் சூழ நெல்வயல்வெளிகளை என்றும் பசுமை குன்றாது, நெல் சிறப்பாக விளைவதனாலும் பிரம்பின் அளவு தடிப்பாக ஒவ்வொரு வேளாண்மையும் வளர்வதால் சூழவுள்ள வயல் வெளிக்கு பிரம்புவெளி எனக் காரணப்பெயர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாயிற்று. இங்குள்ள மக்கள் தொன்றுதொட்டு தமது குலத்தொழிலாக நெற்செய்கையும், கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டிருந்தனர்.

குளக்கோட்டு மன்னனலால் கோணேசர் கோயிலுக்கு நெல் தானியங்கள் வழங்கும் கிராமமாக ஏழு குடி மக்களைக் குடியேற்றியதாகவும் சிந்துநாட்டு வேளாளர்களே இங்கு குடியமர்த்தப் பட்டதாகவும் பழைய வரலாறுகள் உள்ளன. தி/பள்ளிக்குடியிருப்பிலிருந்து 1957களின் பின்னர் தி/சிறினிவாசபுரமும் 1970களின் பின்னர் தங்கபுரம், இத்திக்குளம் முதலான கிராமங்களும் விரிவடைந்துள்ளன.

ஆலய ஆரம்பம் ஊரின் மத்தியில் அமைப்பதற்குத் திரு. சின்னத்தம்பி என்பவர் பிடியரிசி சேர்த்தும் அதை ஏலத்தில் விற்றுப் பணம் சேரத்ததாகவும் அவரது கூடுதலான பங்களிப்போடு நிறுவப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. அன்னாரது முயற்சியின் பயனாகச் சுமார் 150 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்ததும் ஆகம விதிப்படி அமைந்ததுமான இவ் ஆலயம் இப்பிரதேசத்தில் சிறந்த சிற்ப அமைப்புக்களுடன் கூடியதுமாக இருக்கின்றமை அக்காலத்தில வாழ்ந்து இதை அமைத்தமை பெருமைப்படவேண்டிய விடயமாகும்.

நிர்வாக அமைப்பு முறையாக ஏழு குடிமக்களில் இருந்தும் ஒவ்வொருவர் தெரியப்படுவார்கள். இவர்கள் அடப்பன்மார் என அழைக்கப்படுவார்கள். இவர்களுள் முதற்குடி என உடமண ஹறி குடியிலிருந்து தலைமை அடப்பன் தாய்வழியாகத் தெரியப்பட்டு மணியகாரராக (தலைவராக) இருப்பார். ஏனைய பெரிய குடிகளில் இருந்து செயலாளர் பொருளாளராக கடமைக்கு அமர்த்தப்படுவார்கள். அதன் வழியாக திரு. சின்னத்தம்பி, திரு. கோணாமலை, திரு. காளியப்பு, திரு. மு. கணபதிப்பள்ளை அவர்களின் வழி வழியாக 1950 களிலிருந்து திரு. க. மாரிமுத்து என்பவர் தலைமை மணியகாரர் அல்லது முதல் அடப்பனாகத் தெரிவுசெய்யப்பட்டார். 1957 ஏற்பட்ட பெரும் வெள்ளத்தின் பின்னர் 1960கின் போது கும்பாபிஷேகம் நடந்ததாக அறியமுடிகின்றது. அவ்வேளையில் ***தலைவராக திரு. க. மாரிமுத்து அவர்களும் செயலாளராக திரு. சி. கந்தையா (விதானையாளர்)*** அவர்களும் ஏனைய சிறப்பான அங்கத்தவர்களோடு நீண்ட காலம் பணியாற்றி ஆலய வளர்ச்சிக்கு உதவியுள்ளார்கள்.

சிறப்பாக பக்தி மேம்பாட்டிற்காக திரு. சி. கந்தையா (விதானையார்) அவர்கள் கூட்டுப் பிரார்த்தனைகளைத் தினம் நடாத்துவதும் விசேட தினங்களில் சிறப்புச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்தும் விஷேட தினம் திதிகளைச் சிறப்பாகச் செய்து இக்கிராமம் பூரண சைவப் பாரம்பரிய பழக்க வழக்கங்களுடன் மக்கள் வாழ இவர்களது நிர்வாக முறை இருந்தது.

இரண்டாவது தடவையாக 1976களின் போது ஆலய பரிபாலன சபைத் தலைவராகவும், இந்து இளைஞர் மன்றத் தலைவராகவுமிருந்த திரு. ஆ. குணராஜரெட்ணம் அவர்களும், செயலாளராக இரா. கோபாலபிள்ளை, பொருளாளராக மா. சிவலிங்கம் அவர்களும் இருந்து அனைத்து பொதுமக்கள் இளைஞர்களின் முழு முயற்சியால் நடாத்தப்பட்டது.

ஆலய பரிபாலனசபை அமைக்கப்பட்டு திரு. செ. விநாயகமூர்த்தி அவர்களின் தலைமையில் சிறப்பாகப் பணி தொடர்ந்து வளர்ச்சிப்பாதையில் சென்றது. 1985களின் பின்னர் இவ்வாலய நிர்வாக முறையில் 10 திருவிழா அங்கத்தவர்களும் 10 குடியினரிலிருந்தும் குடித்தலைவர் அல்லது அங்கத்தவர் தெரியப்பட்டு எல்லோருக்கும் ஒவ்வொரு வருடம் தலைவராக இருந்து பணியாற்றும் பெரும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இது திருவுளச்சீட்டு எடுக்கும் முறையில் தெரிவுகள் இடம்பெறும். இதேபோல் முக்கிய பதவிகளுக்கும் (செயலாளர், பொருளாளர்) திருவுளச்சீட்டு முறையில் தெரிவு இடம்பெற வழி செய்தமை எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் வழங்கும் செயலாகவும், வீணான போட்டிச் செயற்பாட்டிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதோடு கிடைக்கும் சரந்தர்ப்பத்தில் அவர்கள் சிறப்பாகச் செயற்படவும் வழிவகுத்தது.

குறிப்பாக 1992களில் வன்செயலால் ஆலயம் பாதிக்கப்பட்ட வேளையில் வடகிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டு அமைச்சில் 25,000 ரூபா நிதியைப் பெற்றுத்தர உதவிய தலைவராக இருந்த திரு. க. சண்முகராசா அவர்கள் நினைவுகூர வேண்டியவராவார்.

புதிய மிலேனியத்தில் 2000ம் ஆண்டில் எமது சித்திவிநாயகரின் அருள்பாலிப்பின் நிமித்தம் அப்போதைய நிர்வாக சபையின்ர் பொதுமக்களின் பாரிய ஒத்துழைப்போடு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதற்கு ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா மகராஜ் அவர்களது பங்களிப்பும் காத்திரமாக அமைந்தது.

இங்கு பஞ்சாயத்து அமைப்பிலான ஒரு நிர்வாக முறை இருந்திருக்கிறது. ஒவ்வொரு குடியில் இருந்தும் தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்கள் சேர்ந்து முடிவுகள் எடுப்பர். உதாரணம்: திருமணங்கள், பூப்புநீராட்டுவிழா, வேறு சங்கத்தலைவர், ஊறுப்பினர் தெரிவுகள் முதலிய விடயங்களில் இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடப்பன்மாரின் அனுமதி வேண்டும். இதில் தட்டம் வைத்தல் (வெற்றிலை வைத்தல்) முதல் தட்டம் முதல் தலைமை அடப்பருக்கும் ஏனையவர்களுக்கும் வைத்து அழைத்து அனுமதியைப் பெறுவர். இவர்கள் வீடுகட்டுதல், திருமணங்களைப் பேசி முடித்து வைத்தல் முதலான விடயங்களில் ஊர்மக்கள் கட்டுப்பாட்டுக்குள் நடந்துகொள்வர். இம் மரபு தற்காலத்தில் அருகி வந்தாலும் கிராமத்தின் ஒற்றுமை செயற்பாடுகள் தொடர்கின்றமையை அறியமுடிகிறது. உதாரணமாக மரணவீடு ஒன்று நடைபெற்றால் வேளாண்மை அறுவடை நடைபெற்றாலும் அதை நிறுத்திவிட்டு அனைவரும் கலந்துகொள்வது வழக்கமாக உள்ளதைக் குறிப்பிடலாம்.

## திருவிழாக்கள்

10 திருவிழாக்கள் உள்ளன. முன்பு ஆரம்ப ஏழு குடியினருக்கும் ஏழு திருவிழா போக மீதி 1, 2, 4ம் திருவிழாக்களில் 1ம் திருவிழா பொதுவாகவும், 2ம் இருவிழா உமண குடியினராலும், பின்னர் திரு. பொன்னையா, அதன்பின் அ. கணபதிப்பிள்ளை என்பவராலும், 4ம் திருவிழா சலவைத் தொழிலாளி சின்னத்தம்பி அவர்களாலும் முன்பு நடாத்தப்பட்டது. பின்னர் இவை தற்போது 1ம் திருவிழா வெள்ளக்குடியினருக்கும் 2வது திருவிழா ஆசாரி குடியினருக்கும் 4ம் திருவிழா மாலயன் குடியினருக்கும் வழங்கப்பட்டு சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றன.

1964 களுக்கு முன்பு இங்கு திருவிழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளன. 7ம் திருவிழாவினைத் தொடர்ந்து சுவாமி வெளிவீதியில் சப்பறத்தில் உலாவருவதும், விஷேடமாக யாழ்ப்பாணத்திலிருந்து பிரபல நாதஸ்வர மேளக்காரர்கள் 4, 5 சோடியினர் அழைக்கப்படுவதும், சின்னமேளம் எனும் நாட்டிய நாடகம், வாண வேடிக்கைகள் இடம்பெறுவதும் குறிப்பிடக்கூடிய சிறப்பம்சங்களாகும்.

1985களின் முன்னர் ஆவணியில் நடாத்தப்பட்ட திருவிழாக்கள் 1985களின் பின் பங்குனி உத்தரத்தில் தொடங்கி நடாத்தப்படுகின்றன. இது காலபோக அறுவடையை மையமாக வைத்து மாற்றப்பட்டது. 1980 களின் முன்னர் கோவிலில் ஐயருக்கு வரியாக ஒவ்வொரு குடும்பமும் 10 நாளி நெல் கொடுக்கும் வழக்கம் இருந்தது. ஐயர் வரிப்பணம் ஒவ்வொரு குடியிரும் திருமணம் முடித்த ஆண்கள் அக்குடி அடப்பன் ஊடாக ஐயருக்குச் செலுத்த வேண்டும். பின்னர் அவற்றை பணமாக மாதச் சம்பள அடிப்படையில் வழங்கப்படுகின்றது. (இவ்வாறான நிர்வாக முறை திரு.வ.அ.இராசரெட்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் சிறுகதையிலும் 1966 இல் உள்ளது) பத்துத் திருவிழா முடியில் பூங்காவனத் திருவிழா தீ மிதிப்பு, தீர்த்தம், அன்னதானம் என்பனவும் நடைபெறுகிறது.

நித்திய பூசைகளாகத் தினம் மூவேளை நடைபெறுகிறது. திருவிழாவோடு கந்தசஷ்டி விரதம் சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகிறது. 6 நாட்களும் விஷேட அபிசேகத்துடன் திருவிழாவாக அண்மைக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்படுகின்றது. அத்தோடு திருவெம்பாவை, பிள்ளையார் காப்பு, கேதார கௌரிக்காப்பு விரதம், சிவராத்திரி, புதுவருடப்பிறப்பு முதலான பல தினம் திதிகளும் சிறப்பாக நடைபெறுகின்றன.

பௌதீகவள விருத்தியை நோக்கும் போது ***கோயில் அமைப்பு காணியும், கலாச்சார மேடை அமைந்த புறவீதிப்பகுதியும் திரு. சி. தம்பாப்பிள்ளை சகோதரர்களால் வழங்கப்பட்டிருக்கிறது.*** சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னர் ஆகம முறைப்படியானதும் சிற்ப வேலைப்பாடுகளை உடையதுமான ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. அறியக்கிடைத்த ஆதாரங்களின்படி ***வைரவர் கோயில் திரு. ப. முத்துக்குமார் குடும்பதினரும் மடப்பள்ளி புனருத்தாரணம் திரு. ஆ. கனகரெட்ணம் குடும்பத்தாரும் மதில்கள் 10, 9, 8, 7 ஆம் திருவிழாக்காரர்களாலும் விழா மண்டபம் உமண குடியினராலும் தெற்கு வாசல் மண்டபம் தோப்புச்சி குடியினராலும் முருகன் ஆலயம் திரு. கந்தையா குடும்பத்தினராலும் மணிக்கோபுரம் திரு. பொ. அழகுதுரை குடும்பத்தினராலும் நவக்கிரகக் கோயில் த.ஈ.வி.பு அமைப்பினராலும் காரியாலயம் படைத்தார் குடியினராலும் நிறைவு செய்து கொடுக்கப்பட்ட பாரிய தேவைகளாகும்.***

***எழுந்தருளி பிள்ளையார் விக்கிரகம் திரு. செ. விநாயகமூர்த்தி குடும்பத்தினராலும், முருகன் விக்கிரகம் திரு. சி. கந்தையா குடும்பத்தினராலும் வழங்கப்பட்டன. இன்னும் பல ஆலய பௌதீக வள தேவைகள் பலராலும் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.***

வயல்காணிகளாக ஒவ்வொரு ஏக்கர் நிலத்தை திரு. செ. விநாயகமூர்த்தி குடும்பத்தினரும், திரு. மா. கனகசிங்கம் குடும்பத்தினரும், நா. சசிதரன் 2 ஏக்கரும் வழங்கியதுடன் பலர் மாடுகளையும், நிதியுதவியும், சரீர உதவிகளையும் காலம் காலமாக வழங்கி ஆலய வளர்ச்சிக்கு உதவியுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கிராம ஏனைய வழிபாடுகளாக முக்கியம் பெறுபவை கொம்பு விளையாட்டு, ஐயனார், நாயன்மார், வன்னித்தம்பிரான், அம்மன், நாகதம்பிரான், மோரண்டகுள பிள்ளையார், தங்கபுர தங்கவிநாயகர், சிறினிவாசபுர கற்பகவிநாயகர், கிராண்டகுள, மரவட்டகுள கட்டுகளிலுள்ள அம்மன் பிள்ளையார், இத்திக்குள பிள்ளையார் போன்ற ஆலயங்களும் எம்மவரின் வழிபாடுகளாகவுள்ளன.

தங்கபுரத்தில் 1986களின் பின்னர் நாகம்பாள் ஆலயம் பொதுமக்கள் உதவியுடன் திரு. மா. சிவலிங்கம் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டு ஒவ்வொரு வைகாசி பௌர்ணமியில் விசேட பொங்கல் விழா இடம்பெறுகிறது. பல கிராமத்து மக்களும் இதில் கலந்து வழிபடுவார்கள்.


கிராம ஆலயவழிபாடுகள் சம்பந்தமான வரலாறு பற்றி வெளிவர வேண்டியது அவசியம் என்பதால் கிடைக்கப்பெற்ற ஆதாரங்களைக் கொண்டு ஓரளவு குறிப்பிட முடிந்தது. எழுத்து மூலமான ஆவணங்கள் இல்லை. வாழும் மூத்தோரின் அனுபவ அறிவிலிருந்து கிடைக்கப்பெற்ற ஆதாரங்களேயாகும்.

ஆலய நிர்வாகமுறையாக அக்காலத்திலிருந்து சலவைத் தொழிலாளிக்கும் 1960களில் திருவிழாக்கள் வழங்கப்பட்டிருந்தன. அனைவரையும் ஒரே குடும்பமாக மதிக்கும் பண்பும் கோயில்களின் வண்ணக்கர்கள், கங்காணம் முதல் அடப்பன், மணியகாரன் என்ற முறைகளால் விழாக்காலங்களில் ஏற்படும் சர்ச்சைகளில் இருந்து விடுபட தியாக சிந்தையோடும், விட்டுக் கொடுப்புகளொடும் மூத்தோரின் வழிகாட்டலோடும். 10 குடிகளுக்கும் சமமாக தலைவராகவும் எனைய பொறுப்பான பதவிகளை வழங்கும் வாய்ப்பும் கிடைத்து ஒவ்வொருவரும் சிறப்பாகத் தமது பதவிக்காலத்தில் ஆலயத்தை நிர்வகித்து வருவதும் எல்லா விடயங்களிலும் எல்லோரும் ஒத்துழைத்து ஒரே குடும்பமாகச் செயற்பட்டு வரும் பாங்கு இப்பிரதேசத்திற்கு ஒரு முன்மாதிரியானது எனக் கூறுவதில் பெருமையடைவதோடு எதிர்காலச் சந்ததியினரும் இப்பாரம்பரியத்தை மதித்து மனித நேயம் தொடர்ந்து வாழ கிராமம் ஒற்றுமையில் சிறக்க தியாக, தியான பக்தியுணர்வொடு நீடூழி வாழ சித்திவிநாயகர் அருள்பாலிப்பார்.

***(2000ம் ஆண்டின் கும்பாபிஷேக மலைக்கான முழுச் செலவும் கோயில் மையூச்சுக்கான*** (painting) ***செலவும் சுவாமி ஸ்ரீமத் தந்திர தேவா மகராஜ் அவர்களின் அன்பளிப்பாகும்.)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






***கும்பாபிஷேக தினத்தன்று எண்ணைக் காப்பு வைபவத்தில்***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்... 2வது கும்பாபிஷேக மலர்...

எமது ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் 25.02.2000ல் மஹா கும்பாபிஷேசகம் செய்த பின்னர் பல அபிவிருத்திகள் நடைபெற்றுள்ளது. மூதூர் பகுதியில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் மக்கள் மட்டக்களப்பை நோக்கிய இடப்பெயர்வு ஏற்பட்டது. அங்கு அகதிமுகாம்களில் அகதிவாழ்வு வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இக்காலத்தில் கோயில் கிரியைகள் எவையும் இடம்பெறாமலும் பல சேதத்துள்ளாக்கப்பட்டும் இருந்தது.

***மக்கள் மீள குடியமர்த்தப்பட்ட வேளை கோயில் வளவு காடாக காட்சியளித்தது. மக்களின் பூரண பங்களிப்புடன் 29.11.2008 - 30.12.2008 இல் மஹா கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது.***




2008ல் 3 வருட இடப்பெயர்வின் பின் மீண்டும் ஊருக்கு மீண்டபோது ஊரும் கோயிலும் பெரும் சேதத்திற்குள்ளாகியிருந்தது. மூலஸ்தான பிள்ளையாரும் உடைக்கப்பட்டிருந்தது. புதிய மூலஸ்தான பிள்ளையாரை இந்திய மாமல்லபுரத்திலுந்து 2 அடி அளவிலான பிள்ளையாரை பொதுமக்களின் நிதி உதவியுடன் பெறுவதற்கு இந்தியாவில் இருந்த மல்லிகைத்தீவு திரு.க.நடேசபிள்ளை அவர்கள் கப்பலூடாக அனுப்பிவைத்தார். இவற்றை கொழும்பு துறைமுகத்தில் பெறுவதற்காக திரு. செ. சண்முகராசா தலைவர். ச. சுதாகரன் (மதி) செயலாளர் அவர்களுடன் ஆ. செல்வநாகயம் மூவரும் சென்றோம். மூன்று நாட்களாக கொழும்பில் நின்றும் பெற முடியவில்லை. யுத்த சூழ்நிலையின் காரணமாக தலைவர். செயலாளர் இருவரையும் பள்ளிக்குடியிருப்புக்கு அனுப்பிவிட்டு ஆறாவது நாள் பிள்ளையார் சிலையை துறைமுகத்திலிருந்து பெற்றுக்கொண்டு கோயிலுக்கு கொண்டுவரப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2008ஆம் ஆண்டில் கும்பாபிஷேக வேலைகளை பகிர்ந்து கொண்டோர் விபரம்.**

**மாபிள் வேலை**

| | |
|---|---|
| 01. மூலஸ்தானம் | இ. தியாகு குடும்பம். ஆ. நேசதுரை குடும்பம் |
| 02. அர்த்த மண்டபம் | தம்பிப்பிள்ளை சிவப்பிரகாசம் குடும்பம் |
| 03. மகா மண்டபம் | திரு. திருமதி.கோணலிங்கம் அழகம்மா குடும்பம். |
| 04. பலிபீடத்தை அடுத்துள்ள மண்டபம் | 6ஆம் திருவிழா உபயகாரர்கள் |
| 05. முன் மண்டபம் | 5ஆம் திருவிழா உபயம் |
| 06. பலிபீடம் | பாக்கியராசா தர்சினி (தீபா) குடும்பம் |
| 07. விழா மண்டபம் | 9ஆம் திருவிழா உபயகாரர்கள் |
| 08. தெற்குவாசல் மண்டபம் | 8ஆம் திருவிழா உபயகாரர்கள் |
| 09. வைரவர் ஆலயம் | பத்தக்குட்டி முத்துக்குமார் குடும்பம் |
| 10. முருகன் ஆலயம் | சித்திராவி கந்தையா குடும்பம் |
| 11. நவக்கரக ஆலயம் | கணபதிப்பிள்ளை அம்பிகைபாகன் குடும்பம். |

**ஆலயத்திற்கு வயல் காணிகள் வழங்கியவர்களின் விபரம்.**

| | | |
|---|---|---|
| 01. பிரம்புவெளி கிழக்கு | 01 ஏக்கர் | செல்லப்பா விநாயகமூர்த்தி) |
| 02. ஐயனார் குளம் | 01 ஏக்கர் | மாரிமுத்து கனகசிங்கம் |
| 03. மதவன்பெட்டி | 02 ஏக்கர் | நாகராசா சசிகரன் (லண்டன்) |
| 04. பிரம்புவெளி மேற்கு | 2.25 ஏக்கர் | பொதுமக்கள் (பள்ளிக்குடியிருப்பு கிராம பிரிவுக்குட்பட்வர்கள்) |

**ஆலயத்தில் நிரந்தர கட்டிடங்கள் நிர்மானம் செய்திருப்போர் விபரம்.**

| | |
|---|---|
| 01. முருகன் ஆலயம் | திரு. சித்திராவி - கந்தையா குடும்பம் (10ஆம் திருவிழா உபயகாரர்) |
| 02. வைரவர் ஆலயம் | திரு. பத்தக்குட்டி முத்துக்குமார் குடும்பம் (10ஆம் திருவிழா உபயகாரர்கள்) |
| 03. விழா மண்டபம் | 9ஆம் திருவிழா உபயகாரர்கள் |
| 04. நவக்கிரக ஆலயம் | நலன் விரும்பிகள் |
| 05. தெற்குவாசல் மண்டபம் | 8ஆம் திருவிழா உபயகாரர்கள் |
| 06. வாகன சாலை | 7ஆம் திருவிழா உபயகாரர்கள் |
| 07. மணிக்கோபுரம் | திரு. பொன்னையா அழகுதுரை குடும்பம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 08. மயில்வாகனம் சூரன் அன்பளிப்பு | } | திரு. கணேசமூர்த்தி தணிகாலசம் குடும்பம் (சுவிஸ்) |
| 09. தீர்த்தக் கிணறு | | திரு. சிவக்கொழுந்து மயில்வாகனம் குடும்பம் |
| 10. அம்மன் ஆலயம் | | திரு. க. தணிகாசலம் குடும்பம் |

**அன்பளிப்பு நல்கியோர் விபரம்**

01. எழுந்தருளி பிள்ளையார் விக்கிரகம்

திரு செல்லப்பா விநாயகமூர்த்தி குடும்பம்

02. எழுந்தருளி முருகன் வள்ளி தெய்வானை

திரு. சித்திராவி கந்தையா குடும்பம்

03. எழுந்தருளி நடராஜர் சிலை திரு. கோணலிங்கம் கந்தசாமி

04. தெற்குவாசல் பிள்ளையார் சிலை

திரு. இரா கோபாலபிள்ளை குடும்பம்

05. ஒலிபெருக்கி திரு. செல்லப்பா குடும்பம்

06. காண்டாமணி திரு. பொன்னையா அழகுதுரை குடும்பம்

07. மின் பிறப்பாக்கி (ஜெனி) திரு. தம்பாபிள்ளை நவரெட்ணராசா

08. ஆலய மின் இணைப்புதிரு. தர்மலிங்கம் சசிகரன் குடும்பம்

09. அலங்கார மின் இணைப்பு திருமதி. R. மாங்ளஜோதி குடும்பம்

10. துண்டுப்பிரசுரம் (நோட்டிஸ்) திரு. துரைநாயகம் சிவசங்கர் குடும்பம்

11. தீபம் சார்ந்த பொருட்கள் திரு. மயில்வாகனம் யூகரன்

12. பெரிய குத்துவிளக்குகள் திரு. மாரிமுத்து கனகசிங்கம் குடும்பம்

13. மகாமண்டபம் முன் அலங்கார கதவு

1ஆம் திருவிழா உபயகாரர்கள்

14. வசந்த மண்டப திரைச்சீலை உபயம்

திரு. திருமதி. கந்தசாமி கற்பகம் குடும்பத்தினர்

15. மேளவாத்திய உபயம் தம்பாபிள்ளை நவரெட்ணராசா

16. வர்ண அலங்கார கூலிகளுக்கான உபயம்

திரு. நா. சுதாகரனும்,

சுவிஸ் நாட்டிலுள்ள புலம்பெயர்ந்த உறவுகளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பள்ளிக்குடியிருப்பு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த விசேட தினம், திதி, திருவிழாக்களும் உபயகாரர் விபரமும்.**

தை மாதம்

1. ஆண்டு முதல் திகதி - 1ம் நிருவாகம்
2. தைப்பொங்கல் - 10ம் திருவிழா உபயகாரர் திரு. சுந்தரலிங்கம்
3. தைப்பூசம் - திரு. செ. இராசேந்திரன் குடும்பம்

மாசி மாதம்

1. மாசி மகம் - திரு குணராசரெட்ணம் குடும்பம்
2. மகா சிவராத்திரி - 7ம் விழா உறுப்பினர்கள்

பங்குனி மாதம்

1. **பங்குனி உத்தரம் – மகோற்சவம் – திருவிழாக்கள்**

பத்துப்பகுதி உபயம்

1. வெள்ளக்குடி
2. ஆசாரிக்குடி
3. ஏகநாதி நாயனார் குடி
4. மாலயன்குடி
5. ஆழவந்தார்குடி
6. வில்வராசன் குடி
7. படைத்தார்குடி
8. தோப்பிச்சிக்குடி
9. உமணகுடி
10. குடியிருப்புகுடி

சித்திரை மாதம்

1. சித்திரை வருடப்பிறப்பு - 9ம் விழா உறுப்பினர்கள்
2. சித்திரை கதை - 8ம் விழா உறுப்பினர்கள்

வைகாசி மாதம்

1. வைகாசி விசாகம் - திரு. பொ. இளையதம்பி குடும்பம்

ஆனி மாதம்

1. ஆனி உத்தரம்

ஆடி மாதம்

1. ஆடி அமாவாசை - 5ம் விழா உறுப்பினர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணி மாதம்

1. ஆவணி சதுர்த்தி - திரு. வி. நிர்மலன் குடும்பம்
2. வரலட்சுமி பூசை - திரு. கி. பரமேஸ்வரன் குடும்பம்

புரட்டாதி மாதம்

1. நவராத்திரி விழா -
2. சனீஸ்வரர் விரதம் - இறுதிநாள் - திரு. க. அம்பிகைபாகன்

ஐப்பசி மாதம்

1. கௌரிக்காப்பு - நிருவாகம்
2. கந்தசஷ்டி விரதம்
3. பாரணைப் பூசையும் அன்னதானமும் - திரு. க. நாகராசா குடும்பம்
4. திருக்கல்யாணம் - திரு. செ. சபாரெத்தினம் குடும்பம்

கார்த்திகை மாதம்

1. விளக்கீடு - 3ம் விழா உறுப்பினர்கள்
2. பிள்ளையார் காப்பு - கிராம மக்கள்
3. தீபாவளிப் பண்டிகை - ஆ.ப. சபை

மார்கழி மாதம்

1. திருவெம்பாவை - 10ம் திருவிழா உறுப்பினர்கள்

**கந்தசஷ்டி அபிஷேக உபயகாரர்கள்**

1985ஆம் ஆண்டிலிருந்து இவ் அபிஷேகமும் - விழாவும் நடைபெறுகின்றது.

| | |
|---|---|
| 1ம் பூசை அபிஷேகம் | - க. சின்னத்தம்பி குடும்பம் |
| | பொ. தம்பிராசா குடும்பம் |
| 2ம் பூசை அபிஷேகம் | - ஆ. செல்வநாயகம் குடும்பம் |
| 3ம் பூசை அபிஷேகம் | - ஆ. நேசதுரை குடும்பம் |
| 4ம் பூசை அபிஷேகம் | - பொ. அழகுதுரை குடும்பம் |
| | கு. கிருஸ்ணபிள்ளை குடும்பம் |
| 5ம் பூசை அபிஷேகம் | - த. சிவப்பிரகாசம் குடும்பம் |
| 6ம் பூசை அபிஷேகம் | - சி. கந்தையா குடும்பம் |
| | க. நாகராசா குடும்பம் |
| | (பாரணைப் பூசையும் அன்னதானமும்) |
| | செ. சபாரெட்ணம் குடும்பம் |
| | (திருக்கல்யாணமும் அபிசேகப் பூசையும்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதிதாக உள்வீதி மண்டபம் கொங்கிறீட் கூரையிலானது.**

பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பு - குடும்பத்திற்கு குறைந்தது 10,000.00 (பத்தாயிரம்) ரூபா வரையிலும் - சிலர் பாரிய நிதியுதவியும் செய்து வேலைகள் நடைபெறுகிறது.

***இவ் அபிவிருத்திக்காக புனர்வாழ்வு இந்து கலாசார அமைச்சர் திரு. சுவாமிநாதன் அவர்களை திரு. க. துரைரெட்ணசிங்கம் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களுடன் ஆலய பரிபாலன சபைத் தலைவர் சி. பத்மநாதன், செயலாளர் ச. சுதாகரன், ஆ. செல்வநாயகம் ஆகியோர் அமைச்சுக்கு சென்று கோரிக்கைகள் முன்வைத்த போது 10 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்வதாக உறுதியளித்து இவை திருகோணமலை கச்சேரியூடாக கிடைக்க வழி செய்யப்பட்டது.***

**2019இல் திரு. இரா. சம்பந்தன் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் 5,00,000.00 (ஐந்து இலட்சம்) ரூபா பெறப்பட்டு இம்மண்டப அபிவிருத்திப்பணி நடைபெற்றது.** (மண்டப வேலைக்காக 20 இலட்சம் ரூபா திரு. இரா. சம்பந்தன் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களால் சிபார்சு செய்யப்பட்டு உத்தேச செலவும் அனுப்பப்பட்டது கடைசி நேரம் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதால் அவை தடைப்பட்டுள்ளது)

விரைவில் கும்பாபிசேகம் செய்வதற்காக பாலஸ்தானம் செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து மூலஸ்தானம் - அர்த்த மண்டபம், மகா மண்டபம் கட்டுவதற்காக இருந்த பழைமை வாய்ந்த இம்மண்டபங்கள் இடிக்கப்பட்டன. அதன்போது இம்மண்டபங்களின் - கற்தூண்கள், சந்திரவட்டக்கற்கள் மாதிரியான வரவேற்பு வளைவுடனான கற்கள் என்பவற்றோடு கட்டட நிர்மாணத்தின் உறுதித்தன்மை உடைக்க முடியாததாக உள்ளது. 2 அடி அகலமான அச்சுவர்கள் செங்கற்களோடு சுண்ணாம்புடன் தேன் மற்றும் மூலிகைச் சாறுகள் கலவை சேர்ந்த தன்மை இச்சுவர்களில் காணமுடிந்தது. இவை மிகப்பழைமையானதை உறுதிப்படுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2008இல் மீள் குடியேற்றத்தின் போது கிராமத்தின் நிலை





ஈராண்டு ஊரை விட்டோடி
மீண்டும் அகதியாய் ஊருக்கு வந்தோம்
வானரம் அழித்த இலங்காபுரியை விட
வாரணம் அழித்த எம்மூர் இருந்தது.
அந்த வாரண கூட்டத்திற்கு
வழிகாட்டிகள் யாரோ.[5]

(என - மீளக்குடியேறியபின் மரணமடைந்த திரு. மா. சிவலிங்கம் அவர்களின் 31ம் நாள் வெளியிடப்பட்ட கல்வெட்டில் குறிப்பிடப்பட்டது.)



இதுவரை இருந்த மூலஸ்தானம் உடைக்கப்படுகின்றது. உள்வீதி மண்டபங்ளும் 85% முடிவடைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புதிய மூலஸ்தானத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு
20.10.2020



சிற்பாசாரியாருடன் அடிக்கல் நடும் நிகழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூலஸ்தான கட்டட வேலைகள் இடம்பெறுகின்றது.



கோபுரத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு. 16.07.2021

**அடிக்குறிப்பு:**

1. இராவணதேசம், சி. நவரெட்ணம். பக் - 37 (2017)
2. 2000 - தி/பள்ளிக்குடியிருப்பு அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேக சிறப்புமலர். ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் வரலாற்றுப் பார்வை, ஆ. செல்வநாயகம். பக்கம் 18.
2. 2008 - தி/பள்ளிக்குடியிருப்பு அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேக சிறப்புமலர்.
3. தகவல் வழங்கியோர் - திரு. க. மாரிமுத்து (1906), சி. கந்தையா (1916), மு. பொன்னுத்துரை - திரு. சி. தம்பாப்பிள்ளை (1910), மா. கனகசிங்கம், மா.சிவலிங்கம், பொ. கோபாலபிள்ளை
4. சி. பத்மநாதன் - செயலாளர் ஆலய பரிபாலனசபை. (2019)
5. மா. சிவலிங்கம் நினைவு மலர், ஆ. கனகரெட்ணம் பக் - 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. மோராண்டகுள
## பிள்ளையார் ஆலயம்

மிகவும் சக்தி வாய்ந்ததும் சின்னப்பிள்ளையார் என எம்மூரவர்களால் செல்லமாக அழைக்கப்படும் இவ்வாலயம் தோப்பூர் - கட்டைப்பறிச்சான் பிரதான வீதிக்கு அருகாமையில் பள்ளிக்குடியிருப்பில் மோராண்டகுள வயல் ஓரத்தில் கலைமகள் இந்துக்கல்லூரியின் முன்பாகவும் அமைந்துள்ளது.

1950ஆம் ஆண்டிற்கு முன் பள்ளிக்குடியிருப்பு சரவணமுத்து ஆறுமுகம் அவர்களால் 8' x 8' அளவிலான ஒரு கட்டடம் அமைக்கப்பட்டு 1 3/4 அடி உயரமான பிள்ளையார் சிலை வைக்கப்பட்டு வழிபடப்பட்டது. இவ்வாலயத்தில் அனைவரும் பொங்கல் வழிபாடுகள் செய்கின்றனர். இவ்வாலயத்தின் பொங்கல் பூசைகளை திரு. கணபதிப்பிள்ளை (ஆரியர்) (1965களில்) அவர்கள் மிக பக்திபூர்வமாக நடாத்தி வந்தார்.





இக்கட்டடம் பழைமையடைந்து இடிபாடடைய தொடர்ந்து ஆறுமுகம் அவர்களின் புதல்வர்களால் பராமரிக்கப்பட்டது. அதே இடத்தில் புதிதாக கோயிலை அமைத்தும் - மண்டபம் அமைத்தும் திரு. ஆறுமுகம் செல்வநாயகம் என்பவரால் புதிதாக அதே பிள்ளையார் சிலை பிரதிஸ்டை செய்யப்பட்டு மாபிள் பதிக்கப்பட்டு அபிசேகம் செய்து வைக்கப்பட்டது. ஆலயத்தை சுற்றி புதிதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உறுதியான மதில், கேட் என்பனவும் 2016 இல் அவரால் அமைக்கப்பட்டது.

இவ் அபிவிருத்தி வேலை நடைபெறும் போது சிலர் சரீர உதவிகளையும் செய்துள்ளனர். குறிப்பாக திரு. சிவலிங்கம் தியாகராசா - மின் இணைப்புக்கான உதவிகளையும், மற்றும் திருமதி. வி. சந்திரசோதி பக்கத்து வீட்டாரும் உதவுவதற்கு முன்வந்துள்ளனர். புதிதாக மின் இணைப்பை திரு. த. துரைநாயகம் அவர்கள் வழங்கியுள்ளார்.

29.08.2020 இல் உள்வீதிக்கு மண் நிரப்பப்பட்டும் கோயில் மதில் புதிதாக திருத்த வேலையும், மைப்பூச்சும் செல்வநாயகம் பிரசாந் அவர்களால் பராமரிப்பு செய்யப்பட்டது. அத்துடன் 25.10.2020ல் ஆலய முன் முகப்பு தோற்றத்திலுள்ள பிள்ளையார் சிலை உட்பட மைப்பூச்சுக்களும் செய்யப்பட்டது.

இப்பிள்ளையார் மிகவும் சக்தி மிக்கதாக நம்பியோர்க்கு பல அற்புதங்களை வழங்கி வருபவர். எதிர்காலத்தில் பின்புறத்தில் கலசம் அமைப்பதோடு மண்டப முன்பகுதி சிறியளவிலான கோபுரம் அமைக்கப்ட இருக்கின்றது. இங்கு அனைவரும் பொங்கல் வழிபாடு, படைத்தல் தாங்களாகவே சுயவழிபாடு செய்யலாம்.

- எமது சித்திவிநாயகர் ஆலயத் திருவிழா காலங்களில் காவடி எடுக்கின்ற இடமாகவும்,
- அருகேயுள்ள பத்தினி அம்மன் கோயில் மடையின்போது - இங்கும் சிறுமடை வைத்து வழிபாடு நடைபெறுவதும் வழமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் அம்மன் வழிபாடானகரையல் கொடுக்கின்ற இடமாகவும் இருந்துவருகின்றது.
- நேர்கடன்கள் நிறைவேற்றும் பொங்கலும் இடம்பெறுகின்றது.
- கலைமகள் இந்துக்கல்லூரி மாணவர்களின் பரீட்சைகால பொங்கல் வழிபாடுகளும் இடம்பெறுகின்றது.
- தினமும் காலையில் பலர் நீர் ஊற்றி ஆலயம் சிறப்பாக கழுவப்பட்டு பூமாலைகள் அணிவித்து அவர்களே அலங்கரித்து வழிபடுகின்றனர்.

குறிப்பாக வெள்ளிக்கிழமைகளில் பொங்கல் இடம்பெறும். அவர்களே படையல், பூசைகளையும்செய்வார்கள். குறிப்பாகசி.காளிராசா, ப.அரசரெட்ணம், கு. தங்கவடிவேல், பொ, சரணவணமுத்து பொ.முத்துலிங்கம் போன்றோர் பொங்கல் நிகழ்வுகளை சிறப்பித்து கொடுப்பார்கள். பலர் தாமாகவே பொங்கல் பூசைகளை பக்திபூர்வமாக செய்து வருகின்றர்.

மிகவும் பக்தி - சக்தி வாய்ந்த இவ்வாலயம் இப்பிரதான வீதியால் பயணிப்போர் வணங்கிச் செல்லுமிடமாகவும் - மனதிற்கு சாந்தி வழங்குமிடமாகவும் சிறப்பாக பாதையோரத்தில் அமைந்து அருள் பாலிக்கின்ற விநாயகர் ஆலயமாக உள்ளமை சிறப்பம்சமாகும்.

இவ் ஆலயத்தின் வரலாற்றுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இவ்வழியால் பிரயாணம் செய்த பாவா என்பவர் இவ்விடத்தில் வழிபட்டு வந்த பிள்ளையார் சிலையை பக்கத்திலுள்ள மோராணடார் குள பள்ளத்தில் - தூக்கி தாட்டு விட்டார். இவர் வீடு சென்றதும் கண்பார்வை இழந்து துன்புற்றிருந்தார். பல வைத்தியங்கள் செய்தும் கண்பார்வையோ - வலியோ தீரவில்லை. பின்னர் இவர் நடந்த சம்பவத்தைக் கூற பொதுமக்கள் குளத்தில் பிள்ளையாரை தேடி எடுத்து இவ்விடத்தில் பிரதிஷ்டை செய்து வழிபட்டனர்.

இந்நிகழ்வில் பக்தியுடன் கலந்து கொண்ட அந்த பாவாவுக்கும் கண்பார்வை சரிவந்தது என அறியமுடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. மோராண்டகுள

## பத்தினி அம்மன் ஆலயம்

தோப்பூர், கட்டைப்பறிச்சான் பிரதான வீதி (பழைய மட்டக்களப்பு வீதி/இடிமன்துறை வீதி) ஓரத்தில் மோரணடகுள வயல் கட்டில் கலைமகள் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கு முன்பாக அமைந்துள்ளது. மோராண்ட குளக்கட்டில் அமைந்துள்ளதால் மோராண்டகுள பத்தினியம்மன் என்றாகியது.



1970 களின் ட ர்னர் ஒரு 6' x 6' அளவிலான மேடையும் 4' அகலமும் 5' நீளமும் உடைய ஆசிவழைக்கப்பட்ட ஒரு சிறு மேடையில் திங்கட்கிழமைகளில் மாலை 5.00 - 6.00 மணியளவில் மடை வைத்து வழிபடுவார்கள்.

பாணக்கம், கரும்பு, இளநீர், பாலும் பழமும், முதலான படையற் பொருட்கள் வைத்து அம்மன் காவியம் பாடப்பட்டு பூசை வழிபாடு நடைபெறும்.

இங்கு வைரவர் மடையும், சின்னப் பிள்ளையாருக்கான மடையும் வைத்து வழிபாடு நடைபெறும். ஆரம்பத்தில் இவ்விடம் வதனப் போடியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. கதிர்காமத்தம்பி அவர்களின் குடும்பத்தினராலும் பராமரிக்கப்பட்டது. இவர்களின் வயல் கட்டின் ஓரத்தில் இவ்வாலயம் அமையப்பெற்றுள்ளது.

சி. மயில்வாகனம் - க. செல்லத்தம்பி உள்ளிட்ட குழுவினரால் தொடர்ந்து சில வேலைத்திட்டங்கள் செய்யப்பட்டது. தற்போது நாகராசா - சசிகரன் என்பவரால் மூலஸ்தானமும் மண்டபமும் உடைய கோயிலும் மதில் கேற் என்பனவும் அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கான நீர்விநியோக கிணறை வி. தியாகராசா அவர்கள் அமைத்துக் கொடுத்துள்ளார்.

பெரும்பாலும் திங்கட் கிழமைகளில் நடைபெறும் அம்மன் மடையை திரு. காளிராசா பாரியாரியார் அவர்கள் நடாத்துவார். அம்மன் காவியப் பாடலுடன் வாளியும் பாடுவார்...

திரு. பொ. முத்துலிங்கம் அவர்களும் தற்காலத்தில் இம்மடைகளை - பூசைகளை நடாத்திவருகின்றார். தற்போது நவராத்திரி கால பூசைகள் மடை என்பன சிறப்பான ஒழுங்மைப்பில் விமர்சையாக நடைபெறுகிறது. திரு.ப.அரசரெண்டம் அவர்கள் பிரதம பூசகராக செயற்படுகின்றார்.

**அண்ணாவியார் தம்பாப்பிள்ளை அவர்களின் பாடல் செவி வழியாக அறிந்து அவற்றை காவியமாக திரு.பொ.கோபாலபிள்ளை அவர்களால் தரப்பட்டது.**



இக்கிணறு திரு. வி. தியாகராஜா அவர்களினால் அமைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தி/பள்ளிக்குடியிருப்பு - மோராண்டகுள
## பத்தினியம்மன் காவியம்

*1.* *சீர்பெருகு பள்ளிக்குடியிருப்பில் வடபாகமுறு*
*செப்பரிய மோராண்டார் குளமதனில் வாழும்*
*தார்பெருகு பத்தினித் தாயாரின் மீது*
*தகைமைசெறி காவியம் பாடுதற்கேதான்*
*ஏர்தங்கும் ஐங்கரமும் ஒரு கோடும்*
*இரு செவியும், நுதல்விழியும், குடைவயிறழகும்*
*உடைய மார்பழகும் சீர்தங்கு வெண்மருப்பழகுமுயர்*
*விகடதட பங்கயர்த் தும்பி முகனைப் பணியுவனே.*

*2.* *பணியுவேன் அடியேன் உன் பாதமலர் தன்னை*
*பச்சம்வைத்தடியேனை ரட்சிப்பதரிதோ*
*தரணிதனில் மானிடர்கள் வினைதனை அகற்றி*
*தாபரித்துன்கிருபை அருள்பதுவும் அரிதோ*
*காரணி முலைச்சி திருவுலி அம்பிகையே*
*மக்களைக் காத்து மனம் அருள்வதும் அரிதோ*
*காரணி கடாட்சம் அருள்பரிபூரணாநந்தி*
*கருணை செறி பள்ளி நகர் வாழும் மாதாவே*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மாதாவே என்றும் உனை நினைப்பவர் தமக்கு
வாதமொடு பித்தம் சிலேற்பனம் கண்ணோய்
பகைதோஷம் ஆனதொரு நோய்கிரக தீவினைகள்
பாடுபட்டோடுமுன் நாமங்கள் சொன்னால்
அனைவரதும் உன் கிருபை தந்து ரட்சித்து
அனலெனும் கனல்தனில் தாழநினையம்மா
சகலகலா வல்லியே பள்ளிநகர் வாழும்
தாயே இரக்கமுள்ள தர்ம பத்தினியே

4. பத்தினி பராபரி பரமன் மனோகரி
பாரளந்தாளும் நீ பங்கயக்கன்னி - நீ
அச்சரமதானனி அகிலாண்ட நாயகி
அன்ன பரிபூரணி சொன்ன அருள்பாகரி
சித்தி நீ முத்தி நீ சிவலோக நாரணி
தேவி அம்பிகையும் நீ திகம்பரசியும் நீயே
தும்பிமுகனைத் தந்த சோதியே பள்ளிநகர்
துலங்கவந்தருள் தந்த சுந்தரியே என்னம்மா

5. அம்மா எங்கட்கினிய அம்மா என்
அம்மா அரலோக பரலோக ஆதி நீ அம்மா
செம்மையாய் மக்கள் மனை காக்க நினை அம்மா
தேவியே பத்தினித் தாயே என் அம்மா
வண்மை செறி கோதாரி பேய் பில்லி வஞ்சனை
வராமல் அகற்றியே மருதடியில் அமர்ந்த
சக்தியே மாயவன் தங்கை என வந்த
தரணி புகழ் பள்ளி நகர் வாழும் அம்பிகையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. அம்பிகை எனும் சத்தியான சிவசோதி
ஆதியுடனே நடனமாடுமகமாரி ஒய்யதரு
நற்சுடலை காக்கரண சூலி ஒதரிய
பிணமருப்புத்தண்ட தண்டி செவ்வையுறு
மாகாளி சிவமுத்துமாரி தேவியே பேச்சி
பரநாபி அபிராமி வையமதில் உன்கிருபை
யாரறிவர் அம்மா மகிமை புகழ்
பள்ளி நகர் வாழும் உத்தமியே

7. உத்தமி எனும் சக்தியாய் உதித்தாயே
உம்பர் புகழ் பள்ளி நகர் வாழ்ந்திருந்தாயே
அன்று நீ அமுதமதிலே பிறந்தாயே
அழகான அலரிமலராக வந்தாயே
பேச்சி நீ பெருமாளுடன் பிறந்தாயே
பேரான மீனாட்சி ஆகவந்தாயே
காட்சி தரு பள்ளிநகர் காக்க வந்தாயே
கதிரறிய புகழ் பெருகு பத்தினித்தாயே

8. கதுறு புகழ் மாணாகர் மகளாய திருவே
கைலைதனில் அரனுடன் அமர்ந்த மாமயிலே
பரிபுர பவானந்தி பாவேரி ஆங்காரி
பாருலகம் ஆளவரும் பத்தினித் தாயே
தவம் அருள் சடாதரி சற்குண பராபரி
சங்கரன் பாரியாய் வந்தவதரித்த
காரணி உருத்திரி நவகோணாட்சரி கௌரி
கங்காளி திரிசூலி அம்பிகையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. திரிசூலி ஓங்காரி ஆங்காரி அபிராமி
திரிபுர சிவானந்தி தேவிபத்தினியே
பவமருள் பராசக்தி பரிபூரணானந்தி
பச்சை மால் மருகனின் தங்கையானவளே
தவமருள் சடாதரி சற்குண பராபரி
சங்கரன் பாரியாய் வந்தவதரித்த மாதங்கி
மகிமை பெறு மோராண்டார் குளமதில்
வாழ்ந்திடும் பத்தினியான மாதரசே

10. மாதரசியான குண மானாகர் மகளே
வரிசைபெறு கோவலன் மனைவியானவளே
தீதே நீ கர்த்த முலையாளே நான் சொல்லும்
ஒரு மன்றாட்டம் ஒன்று கேள் அம்மா
ஏதொன்றும் அறியாத எழியோர்கள்
செய்த பிழை எல்லாம் பொறுத்தருள்வீர்
உன்மனமிரங்கி மடமயிலே உனதருளில்
மழையதனை வர அருள் செய்
மகிமை புகழ் பள்ளி நகர் வாழும் மாதாவே

11. மதாவே உன்னுடைய வீரமது பொய்யோ
மருதடி அமர்ந்துலகை ஆண்டது - நீ பொய்யோ
செம்மை செறி அக்கினி தணித்தது நீ பொய்யோ
தேவியே உன்னுடைய வீரமது பொய்யோ
தாவிவரு கோதாரி தீர்த்தது நீ பொய்யோ
தரணிதனில் மக்கள் மனை காத்தது நீ பொய்யோ
வையமதில் மாரன் விழி காத்தது நீ பொய்யோ
மகிமை பெறு பள்ளி நகர் வாழும் மாதாவே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. மாதாவே உன்னுடைய பாதமலர் தன்னை
மனம் மகிழ்ந் தனுதினம் பணிகின்ற பேர்க்கு
ஆதாரமாக அருள் நல்கியே பாருலகில்
ஆனதொரு நோய்பிணிகள் வாராமல்
என்றும் சந்தோசமாகவே நற்கிருபை தந்து
தரணிதனில் மக்கள் மனை காக்கநினை
அம்மா காரணி கடாட்சம் அருள் கருணை
செறி பள்ளிநகர் வாழும் உத்தமியே

13. உத்தமி பத்தினி உனக்கோலம் ஓலம்
ஒன்றுமறியாத சிறியேனோலமோலம்
மோதிவரு பிணிதிருமனக்கோலமோலம்
முன்பகைஞர் தமை வதை செய்
உனக்கோலமோலம் பாரில் மிகு
செந்நெல் விளை வாழ்விக்க வந்த
பத்தினித்தாயே உனக்கோலமம்மா

14. அம்மா உன்மக்களை காக்க மங்களமே
அனுதினமும் உன்புகழ் தழைக்க மங்களமே
இம்மாநிலம் தன்னில் மழை பெய்து விளைசெந் நெல்
ஏகாந்தமாய் புவி தழைக்க மங்களமே
வையமதில் சிவசமயம் வாழ்க மங்களமே
மகிமைபெறு செங்கோல் தழைக்க மங்களமே
பாரில் மிகு செந்நெல் விளைவிக்க வந்த
வந்த பத்தினித் தாயாரும் வாழ்க மங்களமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. சீர் பெருகு செந்நெல் விளை
மோறாண்டார் குளமதில வாழ் சித்தி
விநாயகன் பொற்பாதம் வாழி கார் வாழி
சிவனுமை ஐயனும் வழி
கருணைபுரி கங்காள தேவனும் வாழி
பார்வாழி ஐயனார் பரிகலமும் வாழி
பக்தியுடன் பூசை புரி கட்டாடி வாழி
மங்களம் தங்குபுகழ் பத்தினித் தாயாரின்
மகிமை புகழ் காவியம் பாடினோர் வாழி
பாரின் மிகு செந்நெல் விளை வாழ்விக்க வந்த
பள்ளியூர் பத்தினித் தாயாரும் வாழ்க வாழியவே.

வாய்மொழி மூலமாகவும் மறைந்து போகும் நிலையில் இருந்த பத்தினியம்மன் காவியத்தை மனனம் செய்திருந்தவரும் - சில வரிகளை இணைத்து இயற்ற திரு. பொ. கோபாலப்பிள்ளை அவர்களும் - திரு. வே.கணேசமூர்த்தி அவர்களும் உதவினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. சிறினிவாசபுரம்

## கற்பக விநாயகர் ஆலயம்

சிறினிவாசபுரம் எனும் பெயர் இவ்வூருக்கு 1957ன் பின்பே வைக்கப்பட்டது. 1957ல் ஏற்பட்ட பெரு வெள்ளம் காரணமாக பள்ளிக்குடியிருப்பு மக்கள் உயரமான இடம் நோக்கி சென்று தஞ்சமடைந்தனர். தொடர்ந்து அங்கு படிப்படியாக குடியிருப்புகள் ஏற்பட்டன. அப்போது மூதூர் கொட்டியாபுரப்பற்று DRO (இறைவரி உத்தியோகத்தர்) ஆக இருந்த (தற்போதய D.S. பிரதேச செயலாளர்) சிறினிவாசன் என்பவரது பெயரை இக்குடியேற்றத்திற்கு சூட்டப்பட்டது.



இதற்கு முன்பே இக்கோயிலின் அருகாமையில் வாழ்ந்த இராமப்பிள்ளை (இராமக்குட்டியர்) என்பவர் தனது வளவின் அருகில் இருந்த ஆலமரத்தடியில் ஒரு பிள்ளையாரை வைத்து வணங்கி வந்தார். தற்போதிருக்கின்ற இக்கோயில் காணியும் அவரால் அன்பளிப்பு செய்யப்பட்டது.

கீராண்ட குளம், மரவட்டைக்குள நீர் பாயும் வயல் நிலங்களில் அறுவடை முடிந்ததும் இக்கோயிருக்கு நேர்கடன் பொங்கல்கள் பெரியளவில் இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970களில் இவ்வாலய முன்றலில் மேடை அமைக்கப்பட்டு - சிவராத்திரி - கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. நாடகங்ள் இசைக்குழு என்பனவும் மிக விமர்சையாக இடம்பெற்றமை மறக்கமுடியாதது.

இவ் ஆலயத்தை நிர்வகிப்பதற்காக 1971 களில் சங்கம் அமைக்கப்பட்டது. இதன் தலைவராக க. நாகராசா செயலாளராக த. சிதம்பரப்பிள்ளை, பொருளாளராக திரு. வி. பாக்கியராசா அவர்களுடன் நிர்வாக குழுவும் இயங்கினர்.

தொடர்ந்து தலைவராக சி. தணிகாசலம் (நடேஸ்) செயலாளர் வி. நிர்மலன், பொருளாளர் த. சசிதரன் அவர்களும் நீண்டகாலமாக கடமையாற்றினர். கோயிலுக்கான மண்டபம் மடப்பள்ளி முதலானவற்றையும் வேலிகளையும் அமைத்தனர். கோயில் அபிவிருத்திக்காக கௌரவ இரா. சம்பந்தன் அவர்களிடம் கோரிக்கையும் கையளித்தனர்.

2018ல் புதிய நிர்வாகம் தெரியப்பட்டது. தலைவர் திரு. த. சுதாகரன், செயலாளர் யோகநாதன், பொருளாளர் மு. கந்தசாமி ஆகியோருடன் நிர்வாக குழுவும் இயற்குகின்றது.

***புதிய கோயில் அமைப்பு வேலைகளில் கருவறை - மூலஸ்தான வேலைகள் முடிந்துள்ளன. இதற்கான செலவுகளில் ரூபா 500,000.00 (ஐந்து இலட்சம்) கௌரவ இரா. சம்பந்தன் அவர்களின் நிதி ஒதுக்கீட்டிலும் பொது மக்களின் உதவியுடனும் செய்யப்பட்டுள்ளது.***

தொடர்ந்து அடுத்தடுத்த மண்டபங்களுக்கான தொடர் வேலைத்-திட்டங்களுக்கும் தயாரான நிலையில் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

எதிர்காலத்தில் இவ்வாலயம் பூரணமாக நிறைவடைந்து ஆலயத்தின் பயன் - நோக்கம் இம்மக்களுக்கு கிடைக்க வேண்டும். இதற்கு அனைவரும் உதவ வெண்டியதும் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. தங்கபுரம்

## பள்ளிக்குடியிருப்பு நாகதம்பிரான் ஆலயம்

தி/பள்ளிக்குடியிருப்பின் தங்கபுரத்தில் 1986ம் ஆண்டில் ஆலய பூசகர் திரு. சித்திரவேல் அவர்களின் அருளாட்சியில் இவ் ஆலயம் அமைப்பதற்காக ஏற்பாடாகியிருக்கிறது. இதற்கான ஆலய பரிபாலன சபை அமைக்கப்பட்டது. அதன் ஸ்தாபக தலைவராக திரு. மாரிமுத்து சிவலிங்கம், செயலாளராக ஆறுமுகம் துரைநாயகம், பொருளாளராக இராசையா கோபாலபிள்ளை அவர்களும் தெரிவு செய்யப்பட்டு பொது மக்களின் ஒத்துழைப்புடன் மூலஸ்தானம் உட்பட மண்டபமும் அமைக்கப்பட்டது.



சேனையூர் நாகதம்பிரான் கோயிலுக்கு இப்பிரதேச மக்கள் இவ்வழிபாட்டிற்றாக செல்வது வழக்கமாகவிருந்தது. நாகதம்பிரான் விசாக பொங்கல் விழாவிற்கு குடும்பம் குடும்பமாக மாட்டு வண்டிகளில் பயணிப்பர். இறால் பாலம் அமைக்கப்படாத காலத்திலும் அந்த ஆற்றால் வண்டிலில் ஆற்றினூடாக பாய்ந்து செல்வர். இவ்வேளையில் வண்டில் மாட்டு ஓட்டப்போட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒரு வண்டிலை மற்ற வண்டிலில் விலத்திச் செல்லல், வண்டில் சவாரி முதலான மகிழ்வான நிகழ்வுகள் இடம்பெறும். சில கூடார வண்டிகளிலும் பயணம் செய்து இப்பொங்கல் விழாக்களில் பங்குபற்றி வழிபாடியற்றி வந்தனர்.

தங்கபுரத்தில் கோயில் அமைத்ததும் இக்கிராமத்து மக்கள் அனைவரும் இப்பொங்கல் விழாக்களை இங்கேயே நிகழ்த்தி வருகின்றனர். வைகாசிப் பொங்கல் விழாக்காலத்தில் காவடி ஆட்டம் மிக அழகாகவும் பக்திபூர்வமாகவும் இடம்பெற்று வருகின்றது. தங்கபுரத்து - தங்க விநாயகர் ஆலயத்திலிருந்து காவடி எடுக்கும் விழாக்கள் இடம்பறெும். இவ்வேளை காவடிப்பாடல்கள், குழிரத்திப் பாடல்கள் இசை ஒலியுடன் மேளதாள வாத்தியங்களும் இடம்பெறுவது கண்கொள்ளாக்காட்சியாக அமைகின்றன.

ஆலய அபிவிருத்திக்கான ஆலய பரிபாலன சபை அண்மைக்காலமாக இரு வருடங்களுக்கு ஒரு சபையினர் ஏற்று நடாத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டு இயங்கி வருகின்றது. இவர்கள் தத்தமது காலத்தில் ஆலயத்தின் அபிவிருத்தியில் சிறப்பாக பங்கேற்று வருகின்றனர். அந்த வகையில் அறியக்கிடைத்த தகவல்களின்படி கடமையாற்றியவர்கள்... தலைவராக - வே.சண்முகநாதன், செயலாளர் - திரு. இராமச்சந்திரன், பொருளாளர் - திரு. க. விபுலானந்தன் ஆகியோருடன் நிர்வாகக்குழுவினர்.

பின் தலைவர் - சி. பாக்கியராசா, செயலாளர் - ச. முதல்வன், பொருளாளர் - சி. விசயராசா ஆகியோருடன் ஏனைய நிர்வாக சபையினர்.

பின் தலைவர் - வே. சண்முகநாதன், செயலாளர் - ச. முதல்வன், பொருளாளர் - ச. மேகரன் மற்றும் நிர்வாக குழுவினர்.

2019ல் தலைவர் - திரு. சி. விசயராஜா, செயலாளர் - ச. முதல்வன், பொருளாளர் - திரு. த. கஜன் ஆகியோருடன் நிர்வாக சபையினரும் கடமையில் உள்ளனர்.

இவ் ஆலயம் ஆரம்பித்த காலம் முதல் இன்று வரை பொது மக்களின் பாரிய உதவியுடன் பல அபிவிருத்தி வேலைகள் இடம்பெற்றுள்ளன.

குறிப்பாக குடிநீர் விநியோக நீர்த்தாங்கி திரு. வி. பொன்னம்பலம் அவர்களாலும் மற்றும் பிள்ளையார் கோயில் முன் மண்டபம் மதில் நுழைவாயில் முதலானவைகள் இடம்பெற்றுள்ளன. ஆலய ஒரு பகுதி மதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைக்காக ஜனாப். இம்ரான் மஃறூப் அவர்கள் இரண்டு இலட்சம் ரூபாவை ஒதுக்கீட்டில் இப்பகுதி மதிலுக்கான வேலைகள் இடம்பெற்றுள்ளது.

***2019ல் திரு. இரா. சம்பந்தன் பா.உ. அவர்களால் ஐந்து இலட்சம் ரூபா ஒதுக்கீட்டில் ஆலய மீதி கட்டட வேலைகளும் காவல் தெய்வங்களுக்கான கட்டடங்களும், ஆலய காணியை எல்லைப்படுத்த மதிலும், சீமெந்து தூண்கள் கம்பியிலான வேலியும் அமைக்கப்பட்டுள்ளன.***

இவ்வாலய பூசகர் அவர்களால் இப்பகுதியில் விசம் தீண்டப்பட்டவர்களுக்கான வைத்தியம் செய்யப்படுகின்றது. இவரிடமுள்ள விசக்கல் பாம்பு தீண்டிய இடத்தில் வைத்தால் அவ்விடத்தில் ஒட்டிப்பிடித்துவிடும். கல் அவ்விடத்திலிருந்து கழரும்போது விசமும் இறங்கிவிடுகிறது. இவ்வாறான சக்திவாய்ந்த பக்தியுடனான ஆலயமாக வழிபட்டுவரும் பக்திபூர்வமான இடமாக அமைந்துள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. தங்கபுரம்

# தங்க விநாயகர் ஆலயம்

தி/பள்ளிக்குடியிருப்பின் ஆரம்ப காலத்திலிருந்தே சேனையூருக்கு செல்லும் பாதை ஓரத்தில் கதவு நிலைப் பாலை ஒன்று இருக்கிறது. இம் மரத்தினுடைய கிளையில் கதவு நிலை வடிவத்தில் இருப்பதால் அது பாலைமரம் என்பதாலும் அம்மரத்திற்கு கதவு நிலைப் பாலை என காரணப்பெயர் பெறலாயிற்று.



1970களின் பின் தங்கபுரம் உருவாகிய வேளையில் பலர் காடு வெட்டி சேனைப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டனர். திரு. குமாரசாமி கிட்ணபிள்ளை அவர்களும் - இப்பகுதியில் சேனைப்பயிர்ச்செய்கையில் ஈடுபட்டார்.

கிட்ணபிள்ளை தெய்வானை தம்பதியர் மிகவும் ஊக்கமும் உழைப்பும் உடையவர்களாக திகழ்ந்து பொருளாதாரத்தில் மிக உன்னத நிலையை அடைந்தனர்.

கதவுநிலைப்பாலை மரத்தடியில் பிள்ளையார் சிலை ஒன்றை வைத்து வழிபட்டு வந்தனர். காலப்போக்கியல் அவ்விடத்தில் கோயில் ஒன்றை அமைத்து பிள்ளையார் சிலையும் வைத்து வழிபட்டுவந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிக்கிழமைகளில் பொங்கல் வழிபாடுகள் செய்யப்பட்டு வந்தனர். தங்கபுர மக்களின் வழிபாட்டிடமாகவும் மாறியது. இவற்றைப் பராமரிப்பதற்காக பொதுமக்களும் இணைந்தனர்.

1980களில் இவ் ஆலயத்திற்கான நிர்வாக கட்டமைப்பு ஒன்று உருவானது. தலைவராக - சி. நாகேந்திரம், செயலாளர் - த. கணபதிப்பிள்ளை, பொருளாளர் - இ. யோகராசா ஆகியோர் இயங்கினர்.

கோயிலை அமைத்தும் - கோயிலுக்கான காணியை (சுமார் ஒரு ஏக்கர்) வழங்கிய திரு. கு. கிட்ணபிள்ளை - தெய்வானை தம்பதியர் 2008இல் கும்பாபிஷேகமும் செய்தனர். இதற்கு பொதுமக்களும் உதவி செய்துள்ளனர்.



2016இல் இவ் ஆலயத்திற்கான சுற்றுமதில் அமைக்கப்பட்டது. இதற்கான அமைப்பு நிர்வாகத்திற்காக தலைவர் - நா. யோகராசா, செயலாளர் - யோ.விஜயராசா, பொருளாளர் - வெ. இராமச்சந்திரன் ஆகியோர் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு தரமான சுற்றுமதிலை பொதுமக்களின் உதவியுடன் செய்துள்ளனர்.

கும்பிஷேக நிர்வாகமாக...

தலைவர் - க. குணசேகரம், செயலாளர் - யோ.சிவாகரன், பொருளாளர் - கு. தங்கவடிவேல் என்போர் செயற்பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் ஆலயத்தின் தற்போதய நிர்வாகத்தர்களாக...

தலைவர் - வே. சண்முகநாதன், செயலாளர் - த. ஜீவாகரன், பொருளாளர் - யோ. விஜயகுமார் தெரிவாகி மூலஸ்தான கட்டுமான வேலைகளைத் தொடங்கியுள்ளனர்.

தற்போது தினப்பூசைகளும், வெள்ளிக்கிழமைகளில் பொங்கல் வழிபாடும் இடம்பெறுகின்றது. அத்துடன் திருவெம்பாவை பூசைகள் விசேடமாக இடம்பெறுகின்றது.

தாங்கபுரம் நாக தம்பிரான் - வைகாசி - விசாக விசேட பொங்கல் நிகழ்வுகளின் போது இக்கோயிலிலிருந்து காவடி எடுக்கும் நிகழ்வு மிகவும் விமர்சையாக இடம்பெறுகின்றது.

தி/பள்ளிக்குடியிருப்பு, கட்டைப்பறிச்சான் பிரதான வீதி ஓரமாக அமைந்துள்ள இவ்ஆலயம் மிகவும் பக்தி மிக்கதாகவும் வீதியால் பயணிப்போரின் வழிபாட்டிற்குரியதாய் அமைந்து அருள்பாலித்து வருவது சிறப்பம்சமாகும். எதிர்காலத்தில் இவ்வாலயம் பூரண ஆலய அமைப்புகளுடன் திகழ்ந்து அருள்பாலிக்க பிள்ளையார் அருள்கிடைக்க அனைவரும் உதவ வேண்டும்.



புதிதாக அமைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் மூலஸ்தானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. சின்னக்குளம்

## ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம்

1970ம் ஆண்டில் மூடிய பொருளாதாரக் கொள்கை காரணமாக உள்நாட்டு உற்பத்தியை பெருக்குவதற்காக உருவாக்கப்பட்ட திட்டத்தில் சோளம், மரவள்ளி மற்றும் உப உணவுப்பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வதற்காக சேனைப்பயிர்ச்செய்கைக்காக பள்ளிக்குடியிருப்பு சிறினிவாசபரத்திலிருந்தும் இப்பகுதியில் மக்கள் குடியேறினர்.

1978ன் ஆரம்பத்தில் இம்மக்கள் அவ்விடத்திலுள்ள ஆலமரத்தின் கீழ் சூலம் வைத்து அவ்விடத்தில் தமது உற்பத்தி விளை பொருட்களை படையலாக வைத்து வழிபட்டனர். இவ்வழிபாட்டினை நெறிப்படுத்தி ஒழுங்கமைத்தவராக பொ. காளிராஜா பரியாரியார் அவர்களும் ஈடுபட்டிருந்தமையை அறியமுடிகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இதற்கான இக்காணியை அ. குணசேகரம் அவர்கள் 1/2 ஏக்கரும் 27 பேர்ச் காணியை அன்பளிப்பாக வளங்கினார். இவ்விடத்தின் வழிபாட்டு நம்பிக்கைகள் அதிகரிக்க ஒரு தற்காலிக கொட்டில் அமைக்கப்பட்டும் நிர்வாகமும் அமைக்கப்பட்டது.

இப்பிரதேசத்தில் முதல் குடியியேறிவரும் சேனைப்பயிர்ச்செய்கையில் மிகவும் ஆர்வமுடையவருமான திருவாளர் அ. குணசேகரம் (குணம்) அவர்கள் மிகவும் பண்பாளன், அன்பாக ஆதரவாக அனைவரையும் "மனே" என அழைப்பதுடன் மிகவும் மரியாதைக்குரியவராவார். மிகவும் பலசாலி துப்பாக்கி (அனுமதிக்கப்பட்டது) வைத்திருந்தவர். குறிதவறாத சிறந்த சுடும் ஆற்றலுள்ளவர். தமது காணியை அன்பளிப்பாக வழங்கிமை பெருமைக்குரியது.

முதலாவது நிர்வாக சபையாக தலைவர் - செ. மகேஸ்வரன், செயலாளர் - கு. கணேசன், பொருளாளராக - ச. சிவபாலனும் தெரிவுசெய்யப்பட்டு நிர்வாகம் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைத் தொடர்ந்து தலைவர் - இ. பாக்கியராசா, செயலாளர் - சு.தினேஸ்குமார், பொருளாளர் - ந. திருக்கேதீஸ்வரன் ஆகியோர் இயங்கினர்.

2008ல் இடப்பெயர்வின் பின் மீள் குடியேற்றத்தின் பின் தலைவர் - ப. நவகுமார், செயலாளர் - ச. முதல்வன், பொருளாளர் - மா. காங்கேஸ்வரன் ஆகியோர் இங்கினர்.

இவ்வாலயம் படிப்படியாக பக்திக்குரிய நம்பிக்கைக்குரியதாக மாறி முருகன், வைரவர், காளி முதலிய தெய்வங்கள் வழிபடுமிடமாக மாறியது. வைகாசிமடை, சிவராத்திரி என்பன இங்கு பிரதித்தமாக நடைபெறும் விழாவாக இடம்பெறுகிறது.

தற்போதைய நிர்வாகமாக தலைவர் - கு. சோமசுந்தரம், செயலாளர் - யோ. சிவாகரன், பொருளாளர் - மா. காங்கேஸ்வரன் ஆகியோர் செயற்படுகின்றனர். ஆலய நிர்மானப் பணிகளும் படிப்படியாக முன்னேறி வருகின்றது.

கும்பாபிஷேகம் நடைபெற ஏற்பாடாகி வருகின்றது. ஆகம விதிப்படியான கோயில் அமைக்கப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளது.

இவ்வாலயத்திற்கான கட்டடம், மதில் முதலான அபிவிருத்திக்காக யோ. சிவாகரன் 50150.00 ரூபாவும், தமிழர் தேசியக் கூட்டமைப்பின் திரு. க. துரைரெட்ணசிங்கம் (பா.உ) 710000.00 (ஏழு இலட்சத்து பத்தாயிரம்) ரூபாவும் ஆரியவதி கலப்பதி 100000.00 (ஒரு இலட்சம்) ரூபாவும் வழங்கியுள்ளனர். பொது மக்களின் பங்களிப்பும், சிரமதான பணிகளும், பொருளுதவிகளும் கிடைக்கப்பெறுகின்றன.

விரைவில் கும்பாபிஷேகம் நடைபெற்று ஞானவைரவரின் அருட்கடாட்சம் கிடைக்க அனைவரும் மேலும் பங்களிப்புசெய்து ஆலய வளர்ச்சிக்கு உதவ வேண்டும். வைரவர் அருளாட்சி அனைவருக்கும் கிடைக்க பிரார்த்திப்போம்.



புதிய மூலஸ்த்தானத்திற்கான
வைரவர் சிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. இத்திக்குளம்
## வர்ணகுல விநாயகர் ஆலயம்

1970 களின் பின்னரான காலப்பகுதியில் சேனைப் பயிர்ச்செய்கைக்கு ஊக்கப்படுத்தப்பட்ட அக்காலப் பகுதியிலேயே இவ்வாலயமும் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் முதன்முதல் பயிர்ச்செய்கைக்காக குடியேறிவர்களுள் செல்வராசா - சிவபாலன் அவர்களது இத்திக்குளக்கட்டு ஆரம்பப்பகுதியில் - அவரது காணியில் சுமார் 20 பேர்ச் காணியில் இவ்வாலயம் பொதுமக்களின் அனுசரனையுடன் அமைக்கப்பெற்றது. இதற்கான உதவிகளை அப்போதய தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் அமைப்பினரும் வழங்கியதாக அறியமுடிகின்றது.

இவ்வாயலத்தில் பொங்கல்கள் இடம்பெறுவதோடு விசேடமாக சிவராத்திரி பூசை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.

தற்போதைய நிர்வாக சபையினராக தலைவர் - செ. சபாரெட்ணம், செயலாளர் - ச. சக்கீத், பொருளாளர் - வி. தர்ஷன் ஆகியோர் பணியாற்றிவருகின்றனர்.

இவ்வாலயம் சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருகின்றது. இம்மக்களின் நம்பிக்கைக்குரியதாக இவ்விநாயகர் ஆலயம் திகழ்கின்றது. மக்கள் பக்தியுடன் வழிபட்டுவருகின்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. சின்னக்குளம்

## ஆஞ்சனேயர் கோயில்

சின்னக்குளத்தில் - மரவட்டைக்குளப் பகுதியில் இவ்வாலயம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் முதல் குடியேறிய மக்களான பத்தினியன் - நந்தகுமார் - காங்கேஸ்வரி ஆகியோரின் காணியில் 2018ல் சிறியளவிலான கோயில் அமைத்து வழிபடுகின்றனர்.

பள்ளிக்குடியிருப்பு பிரதேசத்தில் இதுவே முதல் ஆஞ்சனேயர் ஆலயமாகும்.

எதிர்காலத்தில் இவ் ஆலயம் பிரபல்யமடையக்கூடிய வாய்ப்புள்ளது. தற்காலத்தில் ஆஞ்சனேயர் வழிபாடு பிரபல்யமடைந்து வருகின்றது.

அனேக பக்தர்கள் சென்றுவழிபடுமிடமாக அமைந்துள்ளது.

## 10. சின்னக்குளம்

## பேச்சியம்மன் கோயில்

சின்னக்குளத்தில் - திருமதி. நாகராசா - மகேஸ்வரி அவர்களால் குலதெய்வமாக வழிபட்டு வந்து தற்போது 2010ல் சிறிய கோயில் அமைத்து வழிபட்டு வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. சின்னக்குளம்

## மாரியம்மன் கோயில்

சின்னக்குளத்தில் - மாரியம்மன் வழிபாடாக சித்திரவேல் - பூமணி, காளிப்பிள்ளை, காங்கேஸ்வரி ஆகியோர் சிறியளவிலான இடத்தில் குலதெய்வமாக வழிபட்டு வந்தனர்.

2018ல் இவர்களது புதல்வரான சுப்பிரமணியம் - தினேஸ்குமார் அவர்களால் அவர்களது 1/4 ஏக்கர் காணியில் கோயில் அமைத்து அம்மனுக்கான வழிபாடுகள் நடாத்தி வருகின்றனர்.

மிகவும் பக்திபூர்வமாக குளிர்த்திப் பாடல்கள், காவியங்குள் பாடப்பட்டும் மடைகள் - வேள்விகள் நடைபெறுகின்றன. மக்கள் பக்திபூர்வமாக வழிபட்டு வருவது சிறப்பானது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. சிறினிவாசபுரம்
## கும்பத்து - அம்மன் கோயில்

நவராத்திரி தினாங்களில் தற்காலிகமாக கும்பத்துமால் அமைத்து அண்மைக்காலத்தில் வழிபாடு ஆரம்பிக்கப்பட்டது.

2018ல் இவ்வழிபாட்டிற்கான கோயில் அமைக்கப்பட்டது. சிறினிவாசபுரத்தில் அமைந்துள்ள இவ்வழிபாட்டுக்கான கட்டடம் அமைக்க விநாயகமூர்த்தி - நடேசன் அவர்கள் 1/4 ஏக்கர் காணியை வழங்கியுள்ளார்.

பிரதம பூசகராக முத்துலிங்கம் - கந்தசாமி அவர்களும் நிர்வாக சபையினராக தலைவராக - திரு. க. பரமசிவன், செயலாளர் - திரு. த. வசிகரன், பொருளாளர் - திரு. த. கஜன் ஆகியோரும் பணிபுரிக்னறர்.

புதிதாக உருவான இவ்வழிபாட்டு முறையினால் பலர் அம்மன் குளிர்த்திப் பாடல்கள், காவியங்கள், பஜனைகள் அனைத்தும் பக்திபூர்வமாக இடம்பெறுவதை அவதானிக்கலாம்.

மக்கள் இறை சிந்தனை, பக்தியுடன் வாழ்வதற்கு வழியாயுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரியம்மன் பாடல்கள்

ஆயிரங் கண்ணுடையாள் சிவமுத்து மாரி
தாயார் சிறிராமர் தங்கையல்லோ சிவமுத்து மாரி - அம்மா...

நெருப்பிற பிறந்தவளாஞ் சிவமுத்து மாரி
தாயார் நீலவாணன் தங்கையல்லோ சிவமுத்து மாரி - அம்மா...

காச்சல்கண் ணோய்பிணியைச் சிவமுத்து மாரி
தாயர் என்நோயை மாற்றனம்மா சிவமுத்து மாரி - அம்மா...

அரனுடனே மாதாடிச் சிவமுத்து மாரி
தாயர் அரியமுத்துத் தானெடுத்தாய் சிவமுத்து மாரி - அம்மா...

கடுகளவு நீறெடுத்துச் சிவமுத்து மாரி
தாயார் காசனவோ மந்திரிப்பாய் சிவமுத்து மாரி - அம்மா...

மண்ணளவு நீறேடுத்துச் சிவமுத்து மாரி
தாயார் மலையளவு மந்திரிப்பாய் சிவமுத்து மாரி - அம்மா...

மாறாத நோய்ப்பிணியைச் சிவமுத்து மாரி
தாயர் மாற்றிவிட வேணுமம்மா சிவமுத்து மாரி - அம்மா...

தீராத நோய்ப்பிணிகள் சிவமுத்து மாரி
தாயார் தீர்த்தருள வேணுமம்மா சிவமுத்து மாரி - அம்மா...

அறையிலே கும்பமம்மா சிவமுத்து மாரி
தாயார் அம்பலத்தில் வாணவித்தை சிவமுத்து மாரி - அம்மா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாணவித்தைக் காரியென்று சிவமுத்து மாரி
தாயர் வானோர்கள் சொல்லிகினம் சிவமுத்து மாரி - அம்மா...

தாங்கத் தரிக்குதில்லை சிவமுத்து மாரி
தாயர் சற்குருவை நாடலம்மா சிவமுத்து மாரி - அம்மா...

ஓட்டம் நடையுடனே சிவமுத்து மாரி
தாயர் ஓடிவர வேணுமம்மா சிவமுத்து மாரி - அம்மா...

ஆட்டம் நடையுடனே சிவமுத்து மாரி
தாயார் ஆடிவர வேணுமம்மா சிவமுத்து மாரி - அம்மா...

நடுக்கல் கிளம்புதம்மா சிவமுத்து மாரி
தாயார் நாகசினங் கொள்ளுதம்மா சிவமுத்து மாரி - அம்மா...

கோபம் எழும்பாதோ சிவமுத்து மாரி
தாயார் கொள்ளிதண லாகாதோ சிவமுத்து மாரி - அம்மா...

பள்ளயக் காரியல்லோ சிவமுத்து மாரி
தாயார் பார்பதியோ வாருமம்மா சிவமுத்து மாரி - அம்மா...

மாரியம்மன் ஆலயத்தில் பக்திபூர்வமாக ஓசை நயத்துடன் இப்பாடல் பாடப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. கீராண்டகுள

## கருமாரி அம்மனின் வரலாறு

பள்ளிக்குடியிருப்பின் கீராண்டகுளக்கட்டில் 2018.05.05 ஆம் திகதி அம்மன் அருளால் கருமாரி அம்மன் கோயிலுக்கான அடிக்கல் நடப்பட்டு கட்டட வேலைகள் நிறைவடையும் நிலையில் உள்ளது. இவ் ஆலயத்தின் தோற்றம், அற்புதங்களைப் பற்றியும் அறியமுடிகின்றது.

கி.மு. 1ம் நூற்றாண்டு, இராவணன் இலங்காபுரியை ஆட்சி செய்த காலத்தில், தனது தாய்க்காக இலங்காபுரியில் முதன் முதலான தோற்றுவிக்கப்பட்ட சிவன் ஆலயமான கோணேசர் ஆலயத்தினை அமைத்தான். அப்போது ஆதிலோக கருமாரி அம்மன் படுவக்கரை என்னும் ஊரில் பத்திரகாளியாக எழுந்தருளியிருந்தாள். வடதிசையில் அமைந்த குரகொட்டுத்தீவு என்னும் ஊரில் ஏற்பட்ட ஊர் பிரச்சினையின் போது, அவ்வூர் வழக்கப்படி சூலத்தினை நடுநிறுத்தி நாட்டாமை தீர்ப்பு சொல்லும் காலம், தன்னுடைய மகனுக்காக நாட்டாமை தீர்ப்பு பொய்யுரைத்தது. அதனால் கோபம் கொண்ட அம்பாள் அங்கிருந்து குடிபெயர்ந்து தற்போதுள்ள ஆலயத்தில், முதல் இருந்த தில்லைப்பாலை மரத்தில் அமர்ந்தாள். அவ்வேளை ஊரிலிருந்து அவ் வழியாக மீன்பிடிக்கச் சென்று வருமானத்தைப் பெறும் கூட்டத்தினருள் ஒருவரான சின்னத்தம்பி ராசாவின் கனவில் தோன்றி, இவ்வழியால் மீன்பிடிக்கச் செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு கூறினாள். இவரே தாயாரை ஆதரித்தும் வந்தார். அதன் பின் ஏற்பட்ட சூறாவழிளியால் அங்கிருந்த தில்லைப்பாலை மரத்திற்கு சேதம் ஏற்பட்டது. பின்னர் தாயார் பசு ரூபத்தில் தோன்றி அதில் வேப்பமரத்தினை நாட்டினார். இயற்கை அனர்தத்தினால் இவ் ஆலயம் பராமரிப்பு இல்லாமல் போய்விட்டது.

**தற்போது திரு. விநாயகமூர்த்தி நிர்மலனுக்கு உடலில் ஏற்பட்ட நோயின் காரணமாக தாயிடம் வைத்தியம் செய்வதற்கு சென்றபோது, அவ் வேப்பமரத்தின் கீழ் தான் இருப்பதை உணர்த்தினாள். தான் இவ் ஆலயத்தில் குடியிருப்பதை மக்களுக்கு தெரியப்படுத்துமாறு கூறினாள். மீண்டும் இவ் ஆலயம் அம்பாளின் அனுக்கிரகத்தால் வளர்ச்சி அடையத் தொடங்கியது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை கருமாரி அம்பாள் நோய் பிணி தீர்க்கும் வைத்தீஸ்வரியாகவும், கருமாரிக்கு கைகொடுக்கும் காளிகா தேவியாகவும் தாலி வரம் கொடுக்கும் தாயாராகவும், கிரகதோஷங்களை நிவர்த்தி செய்யும் அன்னையாகவும், பிள்ளை இல்லாதவர்களுக்கு பிள்ளைச் செல்வத்தையும் கொடுக்கும் கருமாரி அம்மனாகவும் அநீதியை அழிக்கும் ஆதிசக்தியாகவும், தம் வேண்டுதலை நிறைவேற்ற கோரியவர்களுக்கு கருமமாரி அம்மனாக இருந்து வேண்டுதலை நிறைவேற்றிக் கொடுக்கும் அன்னையாக திகழ்கின்றாள்.

அன்னை கருமாரி தனக்குத் துணையாக கூழாமரத்தின் கீழ் தன்னுடைய மூத்த மகனாக கூழாமரப் பிள்ளையாரையும், ஆதி வைரவரையும், காத்தவராயனையும் காவலாக கொண்டு விளங்குகிறாள்.

2019ல் கௌரி விரத காலத்தில் 21 நாட்களும் அம்பாள் நாகமாக உருவெடுத்து அடியார்களுக்கு காட்சியளித்தாள். இவ்வாறு அன்னையின் அற்புதங்களே சொல்லில் அடங்காது.

இன்று இவ்வாலயத்தில் பக்தர்கள் தங்கள் வேண்டுதலை நிறைவேற்றிக் கொள்ள நெய்விளக்கேற்றி, மாவிளக்கேற்றி, மடிப்பிச்சை எடுத்து பொங்கி, தொட்டில் கட்டி, அபிஷேக நீரினால் தோஷங்களை நிவர்த்தி செய்து, கல்விக்காக சரஸ்வதி தேவியாக அம்பாளை வேண்டி அவளின் அனுகிரகத்தைப் பெறுகின்றனர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகி காவியம் - பள்ளிக்குடியிருப்பு

தந்தனன நானனன நாதந்த னானா
தனனான நாதந்த நாதந்த னானா (2)

1. சீர் தங்கு நிறைமங்கை அருள் மங்கை மறை மங்கை
பெருமங்கை புகழ்மங்கை சேரவே உறையும்
பார்தங்கு தங்கு புகழ் பள்ளி நகர் உறைகின்ற
கண்ணகி தன் மீது தமிழ் காவியம் பாட
ஊர் தங்கும் ஒரு போதும் இரு செவியும் இதழ் வாயும்
புடவயிறும் நுதல் விழியும் உடைய மார்பழகும்
ஏர் தங்கும் அடியவரை ஈடேற்றும் ஐந்துகர
இருகமலம் என நெஞ்சில் என்றும் மறவேனே

தந்தனன.......

2. என்றும் உயர் அண்டர் புகழ் கண்டு கைலாயமதில்
இன்பமுடனே அருள் சுரக்க நினைவாயே
வண்டு போல் என்றும் உலகு உய்ய வருகின்ற - இப்
பாத மலர் தாம் மலர நாவிடம் இருந்தாய்
விண்டுலகை அரசு துதி பாண்டியன் தவத்தால்
வெட்கினேன் எனது உரை விடையருளும் என்ன
உந்து கமலொத்த குழல் மதியமுகி நாளில்
உதித்த கண்ணகையே என் மொழி அகலச் செய்ய

தந்தனன........

3. அம்மா எனக்கினிய அம்மா என் அம்மா
அரலோக பரலோக ஆதி நீ அம்மா
அம்மாலனை எப்படி விளைத்தது நீ அம்மா
அனலிட்டு மதுரையை எரித்த நீ அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்மைதரு அக்கினி தணித்தது நீ அம்மா
வேந்தனிட மார்புருக விட்டது நீ அம்மா
மும்மாரி பொழிய வரு பள்ளி நகர் உறைகின்ற
முத்து விளையாடலை அகற்றியருள் தாயே

தந்தனை........

4. தாயே இவ்வுலகிலுள்ளோர் செய் பிழைகளாலோ
தான் தோன்றும் அப்பர் தன் குறைகள் தன்னாலோ
காவேரி கடவுளைய மால் அருளினாலோ
கதிரை நகர் முருகனிட்ட கட்டளைகளாலோ
பேய்களுடன் ஆடு வைரவர் கொடுமையாகவோ
ஜெயவீர முக்கோடி தேவர் பகையாயோ
மாயமாய் வந்திடும் துயர் துறைகளாலோ
மாதேவியே பள்ளி நகர் வந்த கண்ணகையே

தந்தனை........

5. கண்ணாயிரம் பெற்ற அரசுமுறை தானோ
கையிலை உமை காளி நப சக்தி உரை தானோ
மண்ணாயிரம் பெற்ற வாணி முறை தானோ
பல கலை தெரிந்த பல முனிவர் குறை தானோ
எண்ணாயிரம் சக்தி பூமாது நாமமது
எவர்கள் குறையாயினும் நீ அதனை மாற்றி
மண்ணினோர் புகழ வரு பள்ளி நகர் உறைகின்ற
மாதேவியே எங்கள் பத்தினித் தாயே

தந்தனான..........

6. வினைகளது முதுகுமோ பிணி துயர்கள் முதுகுமோ
வேறு ஒரு துட்டப் பிசாசுகள் அடங்குமோ
கனவிலும் முதுகுமோ வேறு சஞ்சல நோய்கள்
கயரோகம் முதலான பல பிணிகள் முதுகுமோ
திணையளவிலாயினும் உனை நம்பினோர்க்கு
திகழ் முத்து விளையாட கேசத்தில் வருமோ
வளைந்த குழல் அழகு பல காரிகையே பள்ளி நகர்
வாழ்கின்ற கண்ணகையிடம் முறையிடலோ தந்தனான.............


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. முறையான செல்வியே உனக்கோலம் ஓலம்
மோராண்டார் குளமதில் உனக்கோலம் ஓலம்
மறைவான குயிலே உனக்கோலம் ஓலம்
மானாகர் புதல்வியே உனக்கோலம் ஓலம்
மறைவான பொய்கையே உனக்கோலம் ஓலம்
கோவலன் பாரியே உனக்கோலம் ஓலம்
ஐயனார் வைரவர் உறைகின்ற பள்ளி நகர்
கண்ணகைத் தாயெ உனக்கோலம் அம்மா

தந்தனான......

8. அம்மா நீ மாறன் விழி மாற்றினது பொய்யோ
அற்றனருளால் உலகில் உதித்தது நீ பொய்யோ
சிவசக்தி ஆலயத்தில் வந்தது நீ பொய்யோ
சிவகாமியாக கொம்பு விளையாடியது பொய்யோ
வெண்மை தரு அக்கினி தணித்தது நீ பொய்யோ
வேந்தனின் மார்புருக விட்டது நீ பொய்யோ
செம்மையுரு பள்ளி நகர் காத்தது நீ பொய்யோ
தேவியே நீ அருள் கிட்ட பொய்யாமோ

தந்தனான......

9. பொய் எனவே சமயங்கள் வர முறையோ முறையோ
புதிய பல துறைகள் வர முறையோ முறையோ
செய்ய கோதாரி வர முறையோ முறையோ
செய்யவை கூடி வர முறையோ முறையோ
பொய் களவு கொலைகள் வர முறையோ முறையோ
புகழுரிய பிணிகள் வர முறையோ முறையோ
வையமது உய்யாது இருப்பதுவும் முறையோ
மானிடர்கள் கலங்குவதும் முறையே சொல்லம்மா

தந்தனான........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. சொல்லரிய ஓங்கார மானாய் நமோ நம
உய்யதோர் நவகோண முற்றாய் நமோ நம
அயின குல மாநகர் மாதே நமோ நம
அல்லதொரு சிதம்பர முகத்தாய் நமோ நம
ஆதி கைலாய திரிசூலி நமோ நம
தில்லை நடமாடும் சிவ காமி நமோ நம
தேவியே பள்ளி நகர் வாழும் கண்ணகையே

தந்தனான.......

11. சௌந்தரி பருந்தரி மாதங்கியம்மா
சஞ்சலம் அகற்ற வர நாளில்லையோ அம்மா
வரந்தர உனக்கு மனம் வரவில்லையோ அம்மா
மானிடர்கள் செய்பிழை பொறுத்தருள் அம்மா
புரந்தரி உன் மக்கள் மனை காத்தருள் அம்மா
பூசாரி சூட்சமுறு சுந்தரி நீ அம்மா
வரந்தர உன் அருள் இரங்கியருள் அம்மா
தேவி நீ பள்ளி நகர் வாழும் அம்பிகையே

தந்தனான........

12. வாழ்கின்ற பள்ளி நகர் மானிடர் காகவும்
வந்து அடி உனது மலர் பணிவதற்காகவும்
ஆழ்கின்ற தான் தோன்றி அப்பருக்காகவும்
ஜயனார் மால் ஆயன் ஆறுமுகற்காகவும்
நீள்கின்ற உனது புகழ் பாடினோர்காகவும்
உன்னுடைய கட்டாடி மார்களுக்காகவும்
சூழ்கின்ற பள்ளி நகர் வைசூலி மாற்றுவாய்
துணைதாஸன் தொழவந்த தூய கண்ணகையே

தந்தனான..........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– 11 –

# எமது கிராமத்துடன் தொடர்புடைய ஏனைய ஆலயங்கள்

**வெருகல் - ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி தேவஸ்தானம்**

இவ் ஆலயத்தின் யாப்பு விதிகளில் முக்கிய இடம்பெறும் கங்காண (ஆலய முகாமை) முறையில் உதவிக்கங்காணம் பள்ளிக்குடியிருப்புக்குரியது. ஆலயத்தில் நிர்வாக உரிமைகளில் ஏற்பட்ட பல வழக்கு தீர்ப்புகளின் பின் புதிய நிர்வாகம் அமைக்கப்பட்ட போது.

- திரு. க. மாரிமுத்து அவர்கள் 1954ல் உதவிக் கங்காணப் பதவிக்கும் - அங்கத்தவராகவும் நியமிக்கப்பட்டு கடமையாற்றியுள்ளார்.
- திரு. ப. காளிக்குட்டி (க. மாரிமுத்து அவர்களின் மைத்துணர். இலங்கைத்துறைமுகத்துவாரத்தில் திருமண பந்தத்தில் இணைந்திருந்தவர்) 1956ல் உதவி கங்காணமாக தொடர்ந்து பணியாற்றினார்.
- திரு. சி. கந்தையா (விதானையளர் - ஓய்வு) 1975ன் பின்னர் கடமையாற்றினார். ஆலய பரிபாலன சபையின் பொருளாளராகவும் நீண்டகாலம் பணியாற்றியுள்ளார்.
- திரு. செ. விநாயகமூர்த்தி அவர்கள் உதவி கங்காணமாகப் பணியாற்றியுள்ளார்.
- திரு. த. சிதம்பரப்பிள்ளை அவர்கள் 1995ன் பின் ஆலய பரிபாலன சபையின் தலைவராக தொடர்ந்து சுமார் 20 வருடங்கள் கடமையாற்றினார். இக்காலத்திலேயே ஆலய கோபுரம் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றது.
- திரு. க. குணசேகரம் 2001 ஆண்டிலிருந்து உதவிக் கங்காணமாக சுமார் 14 ஆண்டுகள் கடமையாற்றியுள்ளார்.

யாப்பில் ஏற்படுகின்ற மாற்றங்களாலும் அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்க வேண்டுமென்பதற்கான மாற்றத்தால் இங்குள்ள அனைத்து குடியினருக்கும் சந்தர்ப்பம் வழங்குவதற்காக யாப்பின் படி மூன்றாண்டுக்கு ஒரு அங்கத்தவர் எனும் அடிப்படையில் தெரிவுகள் இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்படி.... திரு. நா. கிண்ணதாஸ்
திரு. சி. விசயராசா ஆகியோர் பணியாற்றினர்.

- 2011ல் ஏற்படுத்தப்பட்ட புதிய யாப்பின்படி பள்ளிக்குடியிருப்பிலிருந்து இரு (2) உறுப்பினர்களும் ஒரு உதவிக்கங்காணமும் தெரியப்பட வேண்டும்.

இதன்படி... திரு. ஆ. நேசதுரை (சிறினி) உபதலைவர்.
திரு. யோ. சிவாகரன் உறுப்பினர்
திரு. சி. விசயராசா - உதவிக்கங்காணமாக தெரியசெய்யப்பட்டனர்.

- இவர்களது காலத்தில் பல அபிவிருத்தி வேலைகள் இடம்பெற்றதாக அறிய முடிகிறது. ஊர் மக்களை இணைத்துப் பல சிரமதான பணிகளை மேற்கொண்டனர். திருவிழாக்கள் மற்றும் தினம் திதிகளையும் - பதில் தலைவராகவும் கடமைகளை சிறப்பாக நிறைவேற்றினர்.
- புதிதாக விடுதி ஒன்றும் (மாடிக்கட்டடம்) அமைக்கப்படுகிறது.
- இவர்களது காலம் 3 வருடங்களின் பின் 2021க்கான உறுப்பினர்களாக திரு. திருஞானம், திரு. கி. கணேஷலிங்கம் போன்றோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.
- இத்தெரிவுகள் அண்மைக்காலமாக இதுவரை அங்கத்துவம் பெற்றவர்கள் தவிர ஏனையவர்களுக்கு சந்தர்ப்பம் வழுங்கப்படும்.
- தெரிவுசெய்யப்படும் அங்கத்தவர்கள் சிரமதானம் முதலான ஆலயப்பணிகளில் சிறப்பாக பணியாற்றி வருகின்றனர்.
- வெருகல் ஆலயத்தின் 5ம் திருவிழாவும், கந்தசஷ்டியின் 5ம் நாள் அபிசேகமும் பள்ளிக்குடியிருப்பு மக்களுக்கானது.
- வெருகல் ஆலயத்தின் நிர்வாகத்தில் முக்கிய பதவிகளை வகித்து இவ்வாலய வளர்ச்சிக்கு எமது மக்களின் சிறப்பான பணி இடம்பெற்று வருகிறது.

## பத்தினி அம்மன் கோயில் - கங்குவேலி

கொம்பு விளை யாட்டை நடத்துவதற்கான ஆரம்ப நிகழ்வுக்கு இங்கு பூசை நடாத்தி தீர்த்தம் எடுத்து வருவது வழமை. இங்கு பூசகராக இருக்கும் சம்பூரைச் சேர்ந்த பாட்டுவாழி குடியினரே கொம்பு விளையாட்டு பூசை வழிபாடுகளையும் செய்வது வழமை. கொம்பு விளையாட்டின் 3ம் நாள் இங்கு தாய்யம்மன் கோயிலுக்கு சிவன் - உமை இரு தேர்களும் சென்று பூசை வழிபாடியியற்றி வருவதும் முறைமையாகவுள்ளது. கங்குவேலி தாயம்மன் கோயிலுக்குச் செல்லும்போது பாலத்தடிச்சேனை, பட்டித்திடல், மணற்சேனை, பெரியவெளி, மல்லிகைத்தீவு ஆலயங்களில் வழிபாடு இயற்றுவதும் - மக்கள் தமது வாசல்களில்நிறைகுடம் வைத்து வழிபடுவதும் வழக்கமாக இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளையில் குளிர்பானங்களும், கடலை, அவல், பழம் முதலான பிரசாதங்களும் வழங்குவர். இக்கிராமத்தலைவர்கள் தேரைச் சுமந்து அடுத்த ஊரில் கையளிப்பர்.

**சேனையூர் வர்ணகுலப் பிள்ளையார் கோயில்**

கொம்பு விளையாட்டின் போது, 5ம் நாள் சிவன், உமை இரு தேர்களும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பூசை வழிபாடுகளில் ஈடுபடுவதும் வழமையாக கொள்ளப்படுகின்றது. இங்கு செல்லும்போது தங்கபுரம், கணேசபுரம், அம்மன் நகர், கட்டைப்பறிச்சான் ஆலயங்களில் தரித்து அம்மக்களின் வழிபாட்டுடன் சேனையூரை சென்றடைவர். தாயம்மன் கோயிலுக்கு செல்லும் போது நடைபெறுவது போன்றே இங்கும் இடம்பெறுவது வழமையாக உள்ளது.

**திருக்கோணேசர் ஆலயம்**

குளக்கோட்ட மன்னனால் திருக்கோணேசர் ஆலய நிர்வாகத்தை நடாத்துவதற்காக இந்தியாவின் சிந்துவெளி, காரைக்கால், மருங்கூர் முதலான இடங்களிலிருந்து வரவழைத்து நெற்செய்கை செய்து கோணேசருக்கு நெல் அனுப்புவதற்காக குடியேற்றப்பட்ட ஊரே எமது பள்ளிக்குடியிருப்பு

இவ் ஆலயத்தின் நிர்வாகசபை தெரிவில் கொட்டியாபுர பிரதேசத்திற்கான இரு அங்கத்தவரில் ஒருவராக திரு. ஆ. குணராஜரெட்ணம் அவர்கள் தெரிவு செய்யப்பட்டு உப செயலாளராக - பதில் செயலாளராக கடமையாற்றியவர். இச்சபையின் கல்வி அபிவிருத்திப் பொறுபாளராக நியமிக்கப்பட்டு - மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் உயர்கல்விக்கு உதவியதோடு சமய கல்வி அபிவிருத்திக்கான பல செயற்திட்டங்களையும் செய்தவர். அத்துடன் திருக்கோணேசர் ஆலய கொட்டியாபுரப்பற்றுக்கான திருவிழா சபையின் தலைவராகவும் இருந்து சிறப்பாக செயற்பட்டவர். பள்ளிக்குடியிருப்பு மக்கள் கோணேசர் ஆலய திருவிழாவுக்கு பல வகையிலும் தொடர்ச்சியாக - பொங்கல், அன்னதானம் முதலானவற்றிற்கு உதவிவருகின்றனர்.
திரு. பொ. இரத்தினசிங்கம் அவர்கள் கொட்டிபரப்பற்று திருவிழாவன்று பொங்கல் பொறுப்பேற்று செய்துவருகின்றார்.

திருக்கோணேஸ்வரத்தின் கொட்டியாபுரப்பற்றுக்கான திருவிழா சபை தலைவராக திரு. ஆ. செல்வநாயகம் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டு திருவிழா சபையுடன் இணைந்து சிறப்பாக நடாத்தி வருகின்றார்.

திருக்கோணேசர் ஆலய நிர்வாக சபை உறுப்பினராக திரு.த.சிதம்பரப்பிள்ளை அவர்கள் தெரிவுசெய்யப்பட்டு சிறப்பாக கடமைபுரிகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 12 -

# போராட்ட காலத்தில் கிராமத்தின் நிலை

எமது நாடு வெளிநாட்டார் ஆட்சியின் முன்னர் மூன்று இராச்சியங்களாக பிரிந்திருந்து தமிழ் மன்னராட்சியில் இருந்த தமிழ்ப் பிரதேசங்கள் எல்லாம் இணைக்கப்பட்டு ஒற்றை ஆட்சிக்குட்படுத்திய பிரித்தானியர் ஆட்சியில் 1948இல் சுதந்திரம் அடைந்த பின் ஏற்கனவே இருந்த தமிழர் ஆட்சி முறைமை இன்றி - உரிமைகள் இல்லாத நிலையில் தமிழர் வாழ்வு அமையலாயிற்று.

இக்கட்டத்தில் தமிழர் தரப்பு தலைமைகள் 50 : 50 கோரிக்கை - சமஷ்டி ஆட்சிமுறை கோரி பலவகையான கோரிக்கைகளை அரசிடம் முன்வைத்தாலும் எதுவுமே பலனளிக்கவில்லை.

படிப்படியாக தமிழர் உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில் தமிழ் அரசியல் தலைவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் பல ஒப்பந்தங்கள் எதுவுமே பயனளிக்காத நிலையில் அனைத்து தமிழ் அரசியல் தலைவர்களும் ஒன்றிணைந்து 1976இல் வட்டுக்கோட்டை தீர்மானமாக தனிநாட்டுக் கோரிக்கை ஒன்றை முன்வைத்தனர்.

தமிழருக்கு எதிரான பல தீர்மானங்களில் - பல்கலைக்கழக புகுமுகத்திற்காக தரப்படுத்தலை கொண்டுவந்தமையால் யாழ்ப்பாணப் பகுதியில் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பை இளம் சமூகத்தினர் இழந்தனர். இவ்வாறான பல காரணங்களால் தமிழ் இளைஞர்கள் தனி நாடு கோரிய பல வகை அகிம்சைப் போராட்டங்கள் பயனளிக்காத நிலையில் ஆயுதப் போராட்டத்தை மேற்கொண்டனர். பல இளைஞர்கள் தமது எதிர்காலத்தை தொலைத்தவர்களாக தமிழர் உரிமைக்காக உயிரையும் துச்சமாக மதித்து போராட்டம் ஆரம்பித்தனர்.

இதனைத் தொடர்ந்து தமிழ் பிரதேசங்களில் பல அவல நிலைகள் ஏற்படலாயின. இந்த காலகட்டத்தில் எமது கிராமத்திற்கு ஏற்பட்ட அவலங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் கவலைக்கிடமானவை.

## யுத்த காலத்தில் எமது கிராமத்தின் நிலை

1984களில் இருந்தே மூதூர் பிரதேசங்களின் உக்கிரமான யுத்த சூழல் ஏற்பட்டது. இக்காலத்தில் கல்வி, பொருளாதாரம், மனித வாழ்வு அனைத்தும் பெரும் பாதிப்புக்குள்ளானது.

1984இலிருந்து கிராமம் பல தடவை பூரணமாக எரிக்கப்பட்டும், பொருட்கள் எல்லாம் சூறையாடப்பட்டும் பலர் சுட்டுக்கொல்லப்பட்டும், பலர் காணாமலாக்கப்பட்டு பல அவல நிலையைச் சந்தித்தோம்.

ஊர் எரிக்கப்படுகின்ற வேளைகளில் இத்திக்குளம், தங்கபுரம் பகுதிகளிலுள்ள காடுகளில் ஒழிந்து பல நாட்கள் வாழ்ந்து பின்னர் வந்து படிப்படியாக குடியேறுவோம்.

மூதூர் மேற்குப் பகுதி கிராமங்கள் பாதிக்கப்படும் போது அக்கிராமங்களான கிளிவெட்டி, கங்குவேலி, மேன்காமம், பாரதிபுரம், 58, பாலத்தடிச்சேனை, பட்டித்திடல் முதலான கிராம மக்கள் எமது பள்ளிக்குடியிருப்பில் அகதிகளாக பாடசாலையை அகதி முகாமில் தஞ்சமடைந்திருந்தனர்.

பள்ளிக்குடியிருப்பு கிராமங்கள் எரிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட வேளை சேனையூர் மகா வித்தியாலயத்திலும், கட்டைப்பறிச்சான் வித்தியாலயத்திலும் அகதிகளாக தஞ்சமடைந்தோம்.

இவ்வாறான பிரச்சினையின் போது எமது அண்மைய தோப்பூர் கிராமத்திலும் அகதிகளாக மூதூர் மேற்கு பல கிராம மக்கள் தஞ்சமடைந்து அவர்களாலும் பல உதவிகள் வழங்கப்பட்டன. மனிதாபிமான உதவிகளை தோப்பூர் மக்கள் எம்மவர்களுக்கு வழங்கியமையை மறக்க முடியாது.

இவ்வாறும் தொடர்ந்து 2006 இல் மூதூர் பகுதிக்கிராமங்கள் பலவும் மட்டக்களப்புக்கு இடம்பெயர்ந்து இரு வருடங்களுக்கும் மேலாக அகதிமுகாம்களில் வாழ்ந்தார்கள்.

மட்டக்களப்பு அகதிமுகாம்களில் அருகில் இருந்த மக்கள் எம்மவர்களுக்கு பல உதவிகளை மனிதாபிமானமாக செய்தமையை மறக்க முடியாததென கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகதிமுகாம்கள்

ஊர் மக்கள் அனைவரும் இப்பிரதேசத்தை விட்டு மட்டக்களப்புக்கு செல்லும்போது செல் அடிபட்டு - சீனன்வெளி, கதிரவெளி பகுதியிலும் பலர் உயிரிழந்தனர். கால்நடையாகவும், படகு மூலமும் வாழைச்சேனை - மட்டக்களப்பை அடைந்தனர்.

அனைவரும் ஊர்களை விட்டு மட்டக்ககளப்புக்கு சென்ற வேளை எமது கிராமத்தின் இருவர் மட்டும் தனிமைப்படுத்தப்பட்டு விடுபட்டுவிட்டனர்.

காளிராசா குமரன், இராசதுரை ஜெயகரன் இருவரும் ஒரு வருடத்துக்கும் மேலாக காட்டில் வாழ்ந்துள்ளனர். அவர்களது சோக வரலாறு...

இக்காலங்களில் தமது உடமைகள், கால்நடைகள் முழுவதையும் இழந்த நிலையிலே அகதிகளாக வாழ நேர்ந்தது.

இவ்வாறு பேரிழப்பு ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் மக்களோடு மக்களாக வாழந்து அவர்களது கல்வி வாழ்வை ஓரளவு பாதுகாத்தோம்.

1985 தொடக்கம் எமது பாடசாலையும், கிராமமும் பல்வகையில் பாதிக்கப்பட்டாலும் கல்வி பாதுகாக்கப்பட்டதென்றே கூறலாம். அகதியாக காடுகளில் ஓடும்பொது அங்கெல்லாம் கொட்டில்கள் கட்டி அங்கேயே கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டோம்.

மாணவர்கள் கற்பதில் மிகவும் ஆர்வமாக இருந்தார்கள். மரங்களில் ஏறி இருந்து சூரிய ஒளியில் தமது கற்றலை மேற்கொண்டனர்.

மூதூர் மேற்குப் பகுதி கிராமங்களிலிருந்து வந்து சுமார் 6 மாதங்களாக அகதிகளாக இருந்த ஊர் சிறார்களின் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படாது அவர்கள் கற்ற வகுப்புகளில் சேர்த்து கற்பித்தலை மேற்கொண்டோம். இவர்களுக்கான கற்றல் உபகரணங்களையும் வழங்கினோம்.

சேனையூர் மத்திய கல்லூரி, கட்டைப்பறிச்சான் வித்தியாலய அகதி முகாமில் இருந்த வேளை பிற்பகல் வகுப்புகளை நடாத்தியும் பாடசாலையுடன் இணைத்தும் கற்றல் கற்பித்தல் நடைபெற்றது.

உடமைகளை இழந்தவர்களுக்கான உணவு, உடைகள், பாத்திரங்கள் முதலான நிவாரணப் பொருட்களையும் அரசு, அரச சார்பற்ற நிறுவனங்களூ டாக பெற்றுக்கொடுக்கப்பட்டது. இதனூடாகவும் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் கிராமோதய சபைத் தலைவராக இருந்த திரு.க.சண்முகராசா அவர்கள் மூதூர் ஊடாக திருகோணமலைக்கு செல்லமுடியாத காலம் சமூகத்திற்காக நிவாரணம், உடைகள், பொருட்களை திருகோணமலையிலிருந்து பல கஸ்டத்தின் மத்தியல் கொண்டுவர உதவியவர். உயிரை பணயமாக வைத்து அர்பணிப்பான சேவையாற்றியவர்கள் போராட்ட கால இழப்புகளில் ஈடு செய்யமுடியாத இழப்பாக பல உயிர்களை காவுகொண்ட செல்லடி தாக்குதல், பிடித்துச்சென்று விடாது - காணாமல் ஆக்கப்பட்டவர்கள், சுட்டுக்கொல்லப்பட்டவர்கள் என பல்வகையிலும் உயிரிழந்தனர் பலர்.

தோப்பூரிலிருந்து - பள்ளிக்குடியிருப்பை நோக்கி ஏவப்பட்ட எறிகணைகளால் உயிரிழந்தவர்கள், காயமடைந்தவர்கள் 13 பேர் இவர்களை காயமடைந்தவர்களை வண்டியில் ஏற்றி தோப்பூருக்கு எடுத்துச்சென்று தோப்பூர் இராணுவத்தினரின் உதவியுடன் மூதூர் இயந்திரப்படகு மூலம் திரு. க. சச்சிதானந்தம் ஆசிரியருடன் இருவருமாக அனைவரையும் திருமலை வைத்தியசாலையில் சேர்த்தோம். 8 பேர் மரணமடைய 5 பேர் உயிர் தப்பினர்.

இறந்தவர்கள் 8 பேரது உடலங்களையும் மீண்டும் ஊருக்கு கொண்டுவந்தோம். துடிக்க துடிக்க உயிர் பிரிந்த சம்பவங்கள் என்றும் வேதனையுடன் மறக்க முடியாதவை. இச் செல் தாக்குதலில் பள்ளிக்குடியிருப்பில் ஒரே வீட்டில் 1990ல் கணபதிப்பிள்ளை ஜமுனா, நடேசன் சரஸ்வதி, நடேசன் பவானி, நடேசன் ராஜினி, நடேசன் ரஜினி, புஸ்பராசா சிவகாமி, மாணிக்கராசா மகேந்திரன், மாணிக்கராசா நடேந்திரன், பாலசிங்கம் கவிதா, செல்லத்தம்பி மாரிமுத்து, அருள்நேசராசா சந்திரமோகன் ஆகியோர்.

2006ல் மூதூர் கிழக்கு பிரதேசம் முழுவதும் செல்தாக்குதலால் பலர் உயிரிழந்தார்கள். இடப்பெயர்வின் போது கதிரவெளி முகாமில் பலர் செல்தாக்குதலுக்கு உள்ளானார்கள். இதில் மாரிமுத்து நாகேஸ்வரி, ரதீஸ்வரன் விஜயா, ரதீஸ்வரன் ரதுஷன், இராசேந்திரன் பிரபு, தியாகராசா தர்ஷிகா ஆகியோரும் உள்ளடங்குவர்.

போராட்ட காலத்தில் ஆசிரியர்களின் போக்குவரத்து மிகவும் சிரமத்திற்குள்ளானது. குறிப்பாக சேனையூர் பக்கமிருந்து வரும் ஆசிரியர்களை மீண்டும் சேனையூருக்கு ஏற்றி செல்வதற்கு மாணவர்கள் துடிப்பாக உதவினர். ஆசிரியர்களை மதித்து - உதவும் பண்பு பாராட்டத்தக்கது. ஆசிரியர்களும் மிகவும் அர்ப்பணிப்பாக சேவை செய்வர். குறிப்பாக காலையில் வழிதிறந்ததும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம்பிந்தியே வரவேண்யடிய நிலை ஆனால் பிற்பகள் 5.30 வரை எந்த சலிப்பும் இன்றி கடமையாற்றியவர்களை என்றுமே மறக்க முடியாது.

**போராட்ட கால கல்வி நடவடிக்கைகளாக...**

பாடசாலை நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது ஆர்மி வருகிறார் என தகவல் வந்தால் ஊர்மக்கள் - பாடசாலை மாணவர் ஆசிரியர் அனைவரும் ஓடி ஒளிந்து கொள்வது வழக்கமாகிவிட்டிருந்தது. நிற்பவர்கள் பிடிபட்டால் அவர்கள் மீள முடியாத நிலை பல தடவைகள் இவ்வாறு பிடிபட்டவர்கள் மீளவில்லை. சில மாணவ தலைவர்கள் இறுதி நேரம் வரை நின்று அதிபரை ஏற்றிக்கொண்டு செல்வர்.

பாடசாலைக்கு வருவதற்காக - ஆற்றுக்கு குளிக்கச் சென்ற மாணவர்களும் - ஆசிரியர்களும் இராணுவத்தினரால் பிடிபட்டு திருகோணமலை பிளாண்டன் பொயின்ட் இராணுவ முகாமில் பல தாக்குதல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகினர்.

தொடர்ந்து அவர்கள் எமது மாணவர் - ஆசிரியர்கள் என உறுதிப்படுத்தி மாவட்ட கல்விப் பணிப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் அந்த முகாமிற்கு சென்று இரந்து கேட்டு மீட்ட வரலாறுகள் மறக்கவே முடியாதவைகள்.

இவ்வாறான பல கஸ்டம் ஏற்பட்டாலும் இம்மாணவர்களும் ஆசிரியர்களும் தமது கற்றல் - கற்பித்தல் பணியை தொடர்ந்தனர்.

சந்தேகத்தில் ஒரு ஆசிரியரை திரு. வி. பாக்கியராசா என்பவரை இராணுவ முகாமில் தடுத்து வைத்திருந்த வேளை ஏனைய மாணவர் பெற்றார் முகாமுக்குச் சென்று கோரிக்கை விடுத்தபோது பலர் தாக்குதலுக்குள்ளாகினர். அதை ஆர்ப்பாட்டம் செய்ததாக அதிபருக்கும் பல அச்சுறுத்தலும், எச்சரிக்கையும் விடப்பட்டது. ஆசிரியரையும் விட்டனர்.

திடீர் சுற்றி வளைப்பு என்றாலும் கண்ணிவெடி தாக்குதல் இடம்பெற்றாலும் ஓடித்தப்ப முடியாதவர்கள் பாடசாலைக்கே ஓடிவருவர். வருகின்ற படையினரின் தாக்குதலுக்கு இலக்காவதெல்லாம் சாதாரண விடயமாக இடம்பெறும்.

பள்ளிக்குடியிருப்பு இராணுவ முகாம் அடிபட்ட வேளை பெரிய பேரிடிகளுடன் வெளியேறக்கூடியவர்கள் போக மீதியானவர்கள் எம்மோடு இருக்க இராணுவத்தினர் முகாமுக்கு எல்லோரையும் அழைத்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றனர். பயபீதியில் இருந்த எம்மை அவ் இராணுவத்தினர் விடுவித்து வெளியேறிவர்களையும் அழைக்குமாறு கூறினர். 2, 3 நாட்களின் பின்னர் படிப்படியாக மீளக்குடியேறினர்.

திருகோணமலை மாவட்ட கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட விஞ்ஞான உபகரணங்களை கட்டைப்பறிச்சான் இராணுவ முகாமில் தடுத்து வைத்தனர். பல நாள் அலைந்து கோரியதன் நிமித்தம் மீண்டும் எம்மிடம் ஒப்படைத்தனர்.

மூதூர் - கிளிவெட்டி பிரதான பாதை ஓரமாக உள்ள பூமாலவெட்டை வயலில் - வேளாண்மை அறுவடையின் பின் சூடி அடித்தல் இடம்பெற்ற வேளை அங்கிருந்த திரு. க. நவரெட்ணராசா என்பவர் சூட்டுக்கு இலக்காகி மரணமானார். கல்வியியலாளன், கலைஞன், விளையாட்டு வீரனின் இழப்பு ஈடு செய்ய முடியாதது.

போராட்ட காலத்தில் ஓரளவு கல்வி நிலை பல சவால்களுக்கும் மத்தியில் அர்ப்பணிப்பான செயற்பாடுகளூடாக காப்பாற்றப்பட்டாலும் மிகவும் அரிதான ஈடு இணையற்ற உயிர் இழப்புக்களே ஈடுசெய்ய முடியாத பேரிழப்புகளாகும்.

## பொருளாதார இழப்புக்கள்

பல தடவைகள் கிராமம் எரிக்கப்பட்டதால் தமது வீடு, வீட்டு உடமைகளை இழந்தனர்.

இங்கு பொருளாதாரத்தின் முதுகெலும்பாக திகழும் கால்நடைக்ள - எருமை மாட்டுப்பட்டிகள், பசு மாட்டுப் பட்டிகள் அனைத்தும் இடப்பெயர்வு காலத்தில் காணாமலாக்கப்பட்டு விட்டது. சிலருக்கு 300 - 400 மாடுகள் (வெள்ளை தாவளத்து மாடுகள்) பட்டியுடன் அழிந்துவிட்டது.

நீண்ட காலமாக ஆசையுடன் வளர்க்கப்பட்ட கால்நடைகளை இழந்த வேதனையுடன் இன்றும் வாழ்கின்றனர்.

இடப் பெயர்வுகளின் பின்னரும், மீள் குடியேற்றங்களின் போதும் வழங்கப்படும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புடன் ஒவ்வொருவரினதும் சுய முயற்சியுடனும் தமது வாழ்வாதாரங்களை கட்டியெழுப்பி வாழ்ந்தாலும் யுத்த வடுவான அரிதான உயிர் இழப்புகளே இப்பிரதேசங்களில் ஈடு செய்ய முடியாதவையாக உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னதான் இழப்புகள் ஏற்பட்டாலும் தன்மானத் தமிழனாய் தன்மான உணர்வோடு வாழ்ந்த மறத்தமிழர்களே இங்குள்ளோர். போராட்டத்திலும் மாவட்டத்தில் அதிக மாவீரர்களை போராட்டத்திற்காக ஈந்த கிராமமாகவும் திகழ்ந்தது என்பதும் மறந்துவிட முடியாதது.

போராட்ட கால கிராமத்தின் நிலையை மிகச் சுருக்கமாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சம்பவங்களை அனுபவித்தவர்கள் மேலும் சந்தர்ப்பங்களை விபரிப்பார்கள்.

**பசுமைக்கிராமத் திட்டத்தில் சில...**



பல்வகை தொழிநுட்ப பயிற்சி பெறுவோர். (NVQ)



நடமாடும் வைத்திய சேவையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– 13 –

# நினைவு கூரப்படவேண்டியவர்கள்

இக்கிராமத்தின் 50 வருடங்களுக்கு முன் வாழ்ந்து சேவையாற்றியவர்கள் பற்றி நினைவு கூரப்படவேண்டியதும் சில துறைகளில் சிறப்பான சேவையாற்றியவர்களை - வாழ்பவர்களுக்கும் எதிர்காலத்தினருக்கும் தெரியப்படுத்த வேண்டுமென்பதற்காக.

**திரு. சின்னத்தம்பி**

இவர் 1875 ஆண்டுகளில் வாழ்ந்தவர் சித்தி விநாயகர் கோயிலை கட்டுவித்தவர். இவரே முதல் தலைமை அடப்பனாக இருந்தவர். ஊர் நிர்வாகத்திற்கு குளக்கோட்டன் காலத்தில் வன்னிமைகளோடு அடப்பன்-மார்களே நிர்வாகத்திற்கு பொறுப்பானவர்கள் என கூறப்பட்டமையைக் காணலாம். இவர் பரியாரியார் (நாட்டு வைத்தியம்), வட்ட சேவையாளர் ஆகவும் பணியாற்றினார்.

**திரு. காளியப்பு**

இவரும் 1900ம் ஆண்டிற்கு முன் வாழ்ந்தவர் (அரக்கர் என்றும் அழைக்கப்படுவார்) 2வது முதல் அடப்பனாகவும் வட்டவிதானாகவும் பணியாற்றியுள்ளார். பல சமூக சேவைகளை துணிவாக செயற்பட்டவர் என அறிய முடிந்தது.

**திரு. க. மாரிமுத்து (1904 – 1992)**



1904ம் ஆண்டில் பிறந்தவர். தொடர்ந்து முதல் அடப்பனாக செயற்பட்டவர். ஆலய பரிபாலன சபை ஏற்படுத்தப்பட்டதும் மரபுவழி தலைவராக இருந்து ஆலயப் பணியாற்றியவர். 20 வருடங்களுக்கு மேலாக கிராம முன்னேற்ற சங்கத் தலைவராகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றியிருக்கின்றார். மரபு வழியாக ஆலயத்தை சிறப்பாக வழிநடாத்தியவர். கிராமப்புற ஆலயங்களுள் எமது கிராம ஆலயமே பழமையானது. சிறப்பாக இயக்கப்பட்ட ஆலயமாகவும் திகழ வைத்தவர். சமூக, சமய சம்பிரதாய்ஙகளை மரபுவழி பேணி பாதுகாத்தவர். 1954ம் ஆண்டில் வெருகல் கோயில் முக்கிய உதவி கங்காணப்பதவி - முதன்மை அங்கத்தவராக பணியாற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. கிராம முன்னேற்றத்தில் முக்கிய பங்கு வகித்தார்.

## திரு. சி. கந்தையா (30.04.1916 - 08.04.1997)



1916ம் ஆண்டில் பிறந்தவர். பள்ளிக்குடியிருப்பு, தோப்பூர், மூதூர் அந்தோனியார் மகா வித்தியாலயத்தில் கற்றவர். முதல் அரச ஊழியரும் - விதானையார் ஆலயபரிபாலன சபை செயலாளராக நீண்ட காலம் பணியாற்றியவர். கிராமத்தின் கல்வி, மற்றும் பொது அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டவர். ஆன்மீக செயற்பாடுகளை ஆலயத்தில் கூட்டுப் பிரார்த்தனை, சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்தல் முதலான பணிகளுடன் போக்குவரத்து, நீர்ப்பாசனத்திற்காக பிரம்பு வெளி வாய்க்கால் அமைக்க முயற்சித்தவர். கிராமத்தின் அபிவிருத்தியில் மிக முக்கிய பங்காற்றினார். வெருகல் ஆலயத்தின் பொருளாளராகவும் பணியாற்றியுள்ளார். 1946ம் ஆண்டு கொலறா தொற்றுநோய் காலத்தில் சிறப்பாக பணியாற்றி கட்டுப்படுத்த உதவியவர். இறுதிக்காலம் வரை ஊர் அபிவிருத்தியில் ஈடுபட்டவர்.

## திரு. ச. ஆறுமுகம் (07.05.1920 - 17.11.1963)



1920ம் ஆண்டு பிறந்தவர். மிசனறி பாடசாலைகளில் கற்றவர். 1940-1960களில் வட்டவிதானாகவும், கொட்டியாபுரப்பற்றுக்கான தலைமை வட்டவிதானாகவும் போட்டித்தெரிவில் தெரிவாகி சிறப்பாக கடமையாற்றியவர். DRO (தற்போதைய DS) மாருடன் நெருக்கமான தொடர்புடையவர். சிறினிவாசபுரம் கிராமம் ஆரம்பிப்பதில் முதன்மையாக இருந்தவர். பாடசாலையின் பெற்றார் ஆசிரியர் சங்க செயலாளராக இருந்ததோடு எமது கிராமப் பிள்ளைகளை உயர்கல்விக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்/வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் - மாணவர் விடுதியிலும் சேர்க்க உதவியவர். கிராமத்தின் விவசாய, கால்நடை வளர்ப்பு, கோயில்கள் முதலான சமூக சேவைகளை சிறப்பாக செய்தவர்.

**திரு. பொ. காளிராசா (06.07.1924 – 07.05.2004)**



பரியாரியார் (வைத்தியர்). மாந்திரீகம் முதலானவற்றில் மூதூர் பகுதியில் மிகச் சிறந்தவராக திகழ்ந்தவர். ஆயுர்வேதத்தில் சிறந்து விளங்கியதோடு மற்றவர்களுக்கு கற்பிப்பதிலும் கவனம் செலுத்தியவர். தோப்பூர் கிராமசபையின் அங்கத்தவராகவும் தெரிவாகி சேவை நல்கியவர். கலை நிகழ்வுகள், கும்பி, கோலாட்டம், காவியங்கள் முதலான விடயங்களிலும் சிறப்பாக விளங்கியவர்.

**திரு. தம்பாப்பிள்ளை (அண்ணாவியார்)**

பள்ளிக்குடியிருப்பில் கலை நிகழ்வுக்கு அடிப்படையாக இருந்தவர். இதிகாச புராண விடயங்களை நாட்டுக்கூத்தாகவும், கும்மி கோலாட்டம் முதலான நிகழ்வுகளூடாக வெளிக்கொணர்ந்தவர். இவரது புதல்வர்கள் **கணபதிப்பிள்ளை, வைரமுத்து** என்பவர்களும் இந்நிகழ்வுகளுக்கு துணையாயிருந்ததோடு தொடர்ந்தும் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**திரு. பந்தக்குட்டி – செட்டியார்**
**திரு. சி. தம்பாப்பிள்ளை – வட்டவிதான், தலைமை அடப்பன், போடியார்**
**திரு. ப. கணபதிப்பிள்ளை – (அரிச்சந்திரர்) போடியார்**
**திரு. ந. தம்பிப்பிள்ளை – போடியார்**
**திரு. க. கதிர்காமத்தம்பி – வதனப் போடியார்**
**திரு. ப. முத்துக்குமார் – போடியார்**
**திரு. சி. இராசையா – போடியார் பதில் விதானையாளராகக் கடமையாற்றியவர்.**

இவர்கள் கூடுதலான வேளாண்மை, பூமாலை வெட்டு, பெருவெளி பகுதியில் செய்தவர்கள், மாட்டுப்பட்டி, வயல்களில் வாரக்காரன் அல்லது முல்லைக் காரர்கள் மூலமாக செய்கை பண்ணியவர்கள். பலருக்கு வேலை வாய்ப்பை வழங்கியவர்கள். பண்ணையாளர்களாக திகழ்ந்து ஊருக்கும் பெருமை சேர்த்த முயற்சியாண்மையாளர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. செ. விநாயகமூர்த்தி (01.11.1928 – 18.01.1995)



ஆன்மீக ஆர்வலர், கந்தபுராண படலம், தேவாரங்கள் முதலானவைகளை பாடுதல், ஆ.ப.சபை தலைவர், பா.அ.ச. செயலாளர் என பொது வேலைகளிலும் ஈடுபட்டுழைத்தவர். வெருகல் ஆலயத்தில் உதவிக் கங்காணமாக நீண்ட காலம் பணியாற்றியவர். கோலாட்டம், கும்மி முதலான நிகழ்வுகளின் பாடகராகவும் இயங்கியவர்.

## திரு. ப. தில்லைநாயகம் (வெள்ளையர்)

ஈச்சிலம்பற்றைப் பிறப்பிடமாகவும் பள்ளிக்குடியிருப்பை வாழ்விடமாகவும் கொண்டவர். நாட்டுக்கூத்து இதிகாச புராணங்களான மகாபாரதம், இராமாயணம் கதைகளில் நல்ல பரிட்சையம் உள்ளவராக திகழ்ந்தார்.கலைநிகழ்வுகள் பலவற்றின் பாடகராகவும், கோலாட்டம், கும்மி முதலியவற்றிலும் வைகுந்த அம்மானை கந்தபுராண படலம், தேவாரம், திருமுறைகள் பாடுதல் முதலான பல சமய கலாசார செயற்பாட்டாளராகவும், குரல்வளமுள்ளவராகவும் எல்லோருடனும் அன்புடையவராகவும் திகழ்ந்தவர்.

## திரு. க. சிவராசா



கணபதிப்பிள்ளை - சிவராசா அவர்கள் தந்தையின் மந்திரம் வைத்தியங்களைக் கற்றவர். 1944 - 45 களில் பாடசாலையில் கற்றவர். மந்திரம் - மாந்திரீகத்துறையில் சிறந்த பூசாரியாக விளங்கியவர். அம்மன் காவியங்கள் முதலான பாடல்களை பாட வல்லவர். சிறந்த சீனடி சிலம்படியின் கை விளையாட்டுக்களின் பயிற்றுவிப்பாளராக திகழ்ந்தவர். இவரது மகன்மார் சி. சாம்பசிவம், சி. புவனேஸ்வரன் ஆகியோர் இவரது துறையைப் பின்பற்றி ஓரளவு செயற்படுகின்றர். அனைவருடனும் அன்பாகவும் அமைகதியாகவும் மரியாதையுடனும் வாழ்ந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. கணபதிப்பிள்ளை ஜீவரெட்ணம்




கணபதிப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் இரண்டாவது மகன் தனது ஆரம்பக் கல்வியை தி/பள்ளிக்குடியிருப்பு அ.த.க. பாடசாலைகளில் கற்று இடைநிலைக் கல்வியை மட்டக்களப்பிலும் பின்னர் தோப்பூர் மகா வித்தியாலயத்திலும் கற்று, இப்பாடசாலையிலே முதன் முதல் முறையாக 1962இல் க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த அறுவர்களில் இவரும் ஒருவராவார்.

பின்னர் 1971 இல் இ.போ.சபையில் (C.T.B) பஸ் நடாத்துனராக பதவியேற்று மிகவும் சிறப்பாக பணியாற்றி வாழ்ந்தார். 1977ல் இன வன்முறையின்போது உப்புவெளி பஸ் டிப்போவுக்கு செல்லும்போது வன்முறையாளர்களால் கொடூரமாக கத்தியால் குத்தப்பட்டும் வெட்டப்பட்டும் பரிதாபமாக உயிரிழந்தார். இவருடன் பணியாற்றிய சிலரும் தாக்குதலுக்குள்ளானார்கள்.

மிகவும் நேர்மையும் உண்மையுமான சேவகனாக திகழ்ந்த இவரை இவரது சக பணியாளர்களுக்கும். இலங்கை போக்குவரத்து சபையும் இரங்கல் நிகழ்வுகளை நிகழ்த்தியமையை அறிவோம்.

மனித நேயமிக்க, நகைச்சுவை குடும்ப நண்பர்களுடன் பழகும் விதமே தனியழகு. எப்போதும் கலகலப்பான சிறப்பான வாழ்வை வாழ்ந்தமை மறக்க முடியாதது. அவை அப்படியே சிறப்பான பண்பான பிள்ளைகள் இன்றும் மிக உறவாக வாழ்வது அவரது இயல்பை உணரமுடிகின்றது.

## திரு. கதிர்காமத்தம்பி நவரெட்ணராசா (20.10.1956 – 15.02.1986)



பள்ளிக்குடியிருப்பில் கதிர்காமத்தம்பி - தங்கமுத்து தம்பதியர்களுக்கு 4வது மகனாக பிறந்தவர். ஆரம்பக் கல்வியைப் பள்ளிக்குடியிருப்பில் கற்று இடைநிலைக்கல்வியை NCGE - GCE (O/L) தோப்பூர் அல்-ஹம்றா மகா வித்தியாலயத்தில் கற்று சிறப்பான பெறுபேற்றுடன் உயர்கல்வியை HNCE - GCE (A/L)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரியல் விஞ்ஞானப்பிரிவில் மூதூர் மத்திய மகா வித்தியாலயத்தில் கற்றார். தொடர் கல்வியை யாழ்ப்பாணத்திலும் கற்றார்.

மிகச்சிறந்த நல்லொழுக்க பண்புடையவர். இறைபக்தி சமய சம்பந்தமான நிகழ்வுகளில் பங்கேற்பவர். இளைஞர்களையும் இளையோரையும் பக்தியுடன் ஆலய வழிபாடுகளில் கூட்டுப்பிரார்த்தனை சரியைத் தொண்டுகளில் ஈடுபடுத்துவதோடு கலைத்துறையிலும் ஈடுபடுத்தினார்.

"கன்னித் தமிழ் கலா மன்றத்தின்" முதன்மை இயற்குனராக இருந்து நாடகங்கள் பலவற்றை எழுதியும் - தயாரித்தும் - பழக்கியும் மேடையேற்றியவர். பல சமய விழாக்களிலும் - பொது விழாக்களிலும் பல கிராமங்களின் வேண்டுகோள்களுக்கு அமைவாக நாடகங்களை மேடையேற்றியவர். சிறந்த நடிகர், பாடகர்.

கலைமதி விளையாட்டுக் கழகத்தின் நான்கு பேர் கொண்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் பங்கு கொண்டு பல வெற்றிக் கேடயங்களைப் பெற்றவர். கலைமதியை தொடர்ந்து நிலைநிறுத்த வழிநடாத்தியதில் முக்கிய பங்கு வகித்தவர்.

சிறந்த சமூக சேவையுடனான சமூகப்பற்றாளனாய் சிறந்த கலைத்துறை கலைஞனாய், விளையாட்டுத்துறையின் மிகச் சிறந்த வீரனாய் - ஒரு சகலகலா வல்லவனாய் திகழ்ந்தார். நாட்டின் சூழல் யுத்த அனர்த்தம் காரணமாக 15.02.1986ம் திகதி இராணுவத்தினரால் வயல்வேலை சூடடித்துக் கொண்டிருந்த வேளை சுட்டுக்கொல்லப்பட்டார். (29 வயதில்) இருந்திருப்பின் சிறந்த ஆசிரியராய் - அதிபராய் எமதூர் நல்ல சேவையைப் பெற்றிருக்கும். அன்னாரின் அகால இழப்பு இப்பிரதேசத்திற்கே பேரிழப்பாகும்.

## திரு. மா. சிவலிங்கம் (20.10.1942 – 15.06.2008)



கிராமோதய சபை தலைவர், நாகதம்பிரான் கோயிலை ஆரம்பித்தவர். கி.மு. சங்கம், ஆலய பரிபாலனசபை என்பவைகளில் தலைவராகவும் பாடசாலை அபிவிருத்தி சபை உபதலைவராகவும் இருந்து கிராம வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியவர். குறிப்பாக இளைஞர்களின் தொண்டர் படை அணித்தலைவராக இருந்து மது ஒழிப்பை செய்தார். பாடசாலை கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகளில் மிகவும் முக்கிய பங்காற்றியவர். பாடசாலைத் தர உயர்வு, காணிகள் கொள்வனவு, பாடசாலை உபகரணங்கள் பெறுதல் முதலானவற்றிலும் - கிராமத்தில் பொதுநல விடயங்களில் முன்னின்று பணியாற்றியவர்.

**திரு. இரா. கோபாலபிள்ளை** (14.03.1943 - 12.11.2011)



கிராமோதய சபைத் தலைவர், ஆலய பரிபாலன சபை, பாடசாலை அபிவிருத்தி சபை செயலாளர், கி.மு. சங்கம் முதலானவற்றின் தலைவர், செயலாளராக கடமையாற்றி மூதூர் பிரதேச சபை உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டவர். சமூக சேவையில் ஈடுபட்டவர். அனைவரிடமும் அன்பாக கிளியே என அழைக்கும் பண்புடையவர். பாடசாலை கல்வி நடவடிக்கைகளில் முக்கிய பங்காற்றியவர். பாடசாலை வளர்ச்சியில், காணி கொள்வனவு, அபிவிருத்தி நடவடிக்கைகளில் முக்கிய பங்காற்றியவர்.

**திரு. க. சண்முகராசா** (28.08.1948 - 03.04.1991)



கிராமோதய சபை, ஆலய பரிபாலன சபை, கலைமதி விளையாட்டுக்கழகம், கி.மு. சங்கம், சனசமூக நிலையம் முதலான சங்கங்களின் தலைவராகவும், பாடசாலை அபிவிருத்தி சங்க உபதலைவராகவும் இருந்து பாடசாலை வளர்ச்சிக்கு அர்ப்பணிப்பாக செயற்பட்டவர். அகதி முகாம்களை நடாத்தி மக்களுக்கான நிவாரண உணவு, உடை முதலானவற்றை சீராக வழங்கியவர். பாடசாலையின் கல்வி உயர்வு நடவடிக்கைகளில் மிகவும் முக்கிய பங்காற்றியவர். பொது சேவைக்கே தனது வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்தவர். திரு. அ. தங்கத்துரை (பா.உ) அவர்களுடன் நெருக்கமான உறவைப் பேணி பல அபிவிருத்திக்கு துணையாக இருந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. பந்நக்குட்டி கணேசமூர்த்தி (28.10.1943 – 08.07.2016)



திரு. ப. கணேசமூர்த்தி அவர்கள் 1943ம் ஆண்டில் பள்ளிக்குடியிருப்பில் பிறந்தவர். ஆரம்பக் கல்வியை பள்ளிக்குடியிருப்பு அ.த.க. பாடசாலையில் பயின்றவர். அவரிடம் அவர் கற்ற கால அதிபர் ஆசிரியர்களின் கற்பித்தல் முறைமைகள் - செயற்பாடுகள் பற்றி மிகவும் சுவாரசியமாக கூற கேட்டறிந்து கொண்டோம்.

தொடர் கல்விக்கான வாய்ப்புகள் கிடையாமையால் கல்வியை இழந்தாலும் பல்திறன் மிக்கவராக திகழ்ந்தார். சிறந்த பாடகர் - கவித்துவம் மிக்கவர்.

1965ல் மூதூர் தொகுதியில் தமிழ் அரசுக் கட்சியில் முகம்மது அலி அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு இங்கு வரவேற்பு நடைபெற்ற போது திரு. ஆ. கனகரெட்ணம் ஆசிரியர் அவர்கள் எழுதிய வரவேற்பு பாடலை-வாழ்த்து மடலை இசையோடு பாடி - மூதூர் முதல்வா வருக முகமது அலியே வருக" என அவ்வாழ்த்துப்பாவை பாடி கையளித்தவர். 1970ல் திரு. அ. தங்கத்துரை அவர்களுடன் மிக நெருங்கிய தொடர்புடையவராக நட்பாக செயற்பட்டவர். அரசியலில் அப்போதைய தமிழ் அரசுக் கட்சியின் சிவப்பு, பச்சை, மஞ்சள் கரையுடைய வேட்டிகளை அணிவார்.

போராட்ட காலத்தில் ஆரம்பத்திலேயே பல இன்னல்களுக்கு பல விசாரணைகளுக்கும் உட்பட்டவர். தமிழ் இனப்பற்றுறுதி மிக்கவராகவும் திகழ்ந்தார்.

கலைமதி விளையாட்டுக் கழகத்தின் ஆரம்பகால முக்கிய பிதாமகர். பின்னர் தலைவராகவும் இருந்த சிறந்த விளையாட்டு வீரர். பல போட்டிகளில் வென்று ஊருக்கு பெருமை சேர்ந்தவர் கலைமதி விளையாட்டுக் கழகத்தின் குழுப் போட்டோவை "மச்சான் நீதான் பாதுகாப்பாய் எனக்கூறி இறுதிக்காலத்தில் என்னிடம் கையளித்தார்.

இசைக்குழுவில் முக்கிய பாடகர் நிலாக்காலங்களில் "பைலா" பாட்டு ஆட்ட நிகழ்வுகளில் முதன்மையானவர். நகைச்சுவை மன்னன். எப்போதும் மகிழ்வாக இருக்க வேண்டும் மற்றவர்களையும் மகிழ்வாக பார்க்க வேண்டுமென்ற நல்லெண்ணம் கொண்டவர். இளமைக் காலத்தில் இவருக்கு நடிகர் ஜெமினிகணேசன் எனும் நாமம் சூட்டப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடுகளுக்கு தனது மகனிடம் சென்று வந்த வேளையில் அங்குள்ள நிலைமைகளை ஓர் நேர்முக வர்ணணையாக அழகாக கூறுவார். மகிழ்வாய் இருந்தார். இனி இறந்தாலும் பரவாயில்லை என்றெல்லாம் மகிழ்வாக கூறியவை இன்றும் நினைவுகளில்.. கொம்பு விளையாட்டின் தென்சேரிப் பகுதி தலைவராக (கொம்புத் தலைவர்) இருந்து சிறப்பாக செயற்பட்டவர். பல வகையிலும் பள்ளிக்குடியிருப்பின் பெருமைக்குரியவராகத் திகழ்ந்தார்.

## திரு. ஆ. குணராசரெட்ணம் (15.04.1946 - 02.07.2017)



இந்து இளைஞர் மன்ற தலைவர், கலைமதி விளையாட்டுக் கழகத்தின் செயலாளர், ஆலய பரிபாலன சபைத் தலைவர், கிராம முன்னேற்ற சங்க தலைவர் / செயலாளர், பல்நோக்கு கூட்டுறவு சங்கத் தலைவர் முதலான பதவிகளை வகித்தவர்.

கிளிவெட்டி மகா வித்தியாலய அதிபர், மூதூர் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர், ஈச்சிலம்பற்று மூதூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர், மூதூர் கிண்ணியா இரு வலயங்களுக்குமான் பொறுப்பான கல்விப் பணிப்பாளர், வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளர், கற்குடா வலய கல்விப் பணிப்பாளர், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளராகவும் சிறப்பாகப் பணியாற்றியவர்.

மூதூர் பகுதியில் பல பாடசாலைகளை புதிதாக உருவாக்கியும், தங்கபுரம், சின்னக்குளம் பாடசாலைகளை உருவாக்கியும், பள்ளிக்குடியிருப்பு, கலைமகள் வித்தியாலயத்தை தரம் உயர்த்தி கலைமகள் இந்துக் கல்லூரியாகவும் தரம் உயர்த்தியவர். கோணேஸ்வரத்தின் பிரதி செயலாளராகவும் சமய சமூக கல்விப் பணிகளை ஆற்றியவர்.

ஓய்வின் போது...

கோணேசர்ஆலயத்தின்நிர்வாகசபைத்தெரிவில்கொட்டியாபுரப்பற்றுக்கான இரண்டு அங்கத்தவரில் திரு.ஆ.குணராஜரெட்ணம், திரு.சிவநேசராசா ஆகிய இருவரும் தெரிவுசெய்யப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தக வெளியீட்டு விழாவில்












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புத்தக வெளியீட்டு விழாவின் விருந்தினருக்கான
உரையின்போது, அவரின் இறுதி நிமிடங்கள்

திரு. ஆ. குணராஜரெட்ணம் அவர்கள் உப செயலாளராக தெரிவு செய்யப்பட்டு சிறப்பாக செயற்பட்டார். சில காலம் பதில் செயலாளராகவும் செயற்பட்டார். இக்காலத்தில் வறிய, பாதிக்கப்பட்ட பெற்றோரை இழந்த மாணவர்ளின் உயர்கல்விக்கு கோணேசர் நிதியில் சுமார் 250க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு மாதாந்த நிதி வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து அதற்கு பொறுப்பாளராகவும் செயற்பட்டார். கோணேஸ்வரத்தின் கல்வி அபிவிருத்திக்கான பொறுப்பாளராக சிறப்பாக பணிபுரிந்தார்.

கோணேஸ்வர ஆலயத்தின் கொட்டியாபுரத்திற்கான திருவிழா சபையின் தலைவராக இருந்து திருவிழாவையும் சிறப்பாக நடாத்திவந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டியாபுரப்பற்றின் இலங்கை தமிழாசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராகவும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பள்ளிக்குடியிருப்பு வட்டார தலைவராகவும் - கொட்டியாபுரப்பற்றின் பொருளாளராகவும் செயற்பட்டவர்.

பல சமய, சமூக, அரசியல் செயற்பாட்டாளரான இவருக்கு கிழக்கு மாகாண சபையால் முதலைமைச்சரால் சாமஸ்ரீ தேச கீர்த்தி விருதும், திருகோணமலை நகர முதல்வர் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும், அத்துடன் அகில இலங்கை சமாதான நீதவானாகவும் செயற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இக்கிராமத்தின் அனைத்து வளர்ச்சிக்காக தமது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணிப்பாக செயற்பட்டார்கள்.

திரு. செ. லோகராசா அவர்களின் புத்தகவெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினருக்கான உரையின் நூல்பற்றிய விடயங்கள் கூறியதுடன் தான் ஆசிரியராக பிரதி அதிபராக அதிபராக நீண்ட காலம் கடமையாற்றிய தி/கிளிவெட்டி மகா வித்தியாலயத்தில் தனது மாணவர்கள் உடன் கடமையாற்றிய ஆசிரியர்கள் தான் கல்வி பணிப்பாளராக கடமையாற்றும்பொது பணியில் சந்தித்த அதிபர்கள் அதிகாரிகள், கல்விச் சமூகத்தினர் முன்னிலையில்...

"எனக்கு விசா கிடைத்துவிட்டது எனது பெற்றோர் அழைக்கின்றார்கள். உங்களிடமெல்லாம் கூறி விடைபெற்றுச் செல்வதில் மகிழ்வடைகின்றேன்" என மிகவும் மகிழ்வாகவும் சுவாரசியமாகவும் கூறி இருகரம் கூப்பி அனைவருக்கும் வணக்கம் கூறி மகிழ்வாக மேடையிலிருந்து இறங்கி தமது இருக்கையில் அமர்ந்தார். அமர்ந்ததும்...

இவ்வுலகை விட்டு நீத்தார். எல்லோருக்கும் வணக்கும் கூறி இவ்வுலகத்தை விட்டு நீங்குவதாக கூறிய இவரது இழப்பு இக்கிராமத்திற்கு பேரிழப்பு.

இவரது சேவைகள் பள்ளிக்குடியிருப்புக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாது முழு மாவட்டத்திற்கும் நாட்டிற்கும் பயன்பட்டதை அனைவரும் அறிவர்.

**கிராமத்தில் வாழ்ந்த முன்னோர்களில் இன்னும் பலர் பற்பல சேவைகளை ஆற்றியிருப்பார்கள். மிகவும் ஒற்றுமையாகவும் கூட்டுப்பொறுப்புடனும் பொதுவான விதிகளுக்கு அனைவரும் கட்டுப்பட்டு மிகவும் அன்புடனான பாரம்பரியமாக வாழ்ந்திருக்கிறார்கள். வாழ்கிறார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## – 14 –

# எதிர்கால அபிவிருத்திக்கான செயற்திட்டங்கள் தயாரித்தல்/திட்டமிடல்

கிராமத்தின் அபிவிருத்திக்காக அபிவிருத்திச் சங்கங்கள் செயற்திட்டங்களை தயாரிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய பணிகள்.

1. திட்டம் தயாரிப்பதற்கு முன் அவை சம்பந்தமான வரலாற்றுப் பின்னணி நோக்கப்பட வேண்டும்.

2. திட்டத்தின்போது SWOT சுவோட் சுயபரிசீலனை செய்தல் வேண்டும். திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு.
   SWOT/SWOC -
   Strength, Weakness, Opportunity, Threat /Challenge
   பலம், பலவீனம், சந்தர்ப்பம், அச்சுறுத்தல்/சவால்

இவைகளில் பலத்தைக் கூட்டி, பலவீனங்களைக் குறைத்து, சந்தர்ப்பங்களை சரியாக பயன்படுத்த வேண்டும். ஏற்படும் அச்சுறுத்தல் / சவால்களில் இருந்து விடுபட வெளிப்படைத்தன்மையாக உண்மை, நேர்மை, அர்ப்பணிப்பாக செயற்பட வேண்டும்.

***பலம்* - Strenth**

- சிறந்த மனித வளம் இருக்கிறது. உரிய திட்டத்திதை செயற்படுத்த வேண்டும். மக்களுக்கு பயன்பட வேண்டும் எனும் நல்லெண்ணம்.
- மனித வளம்: கல்வியறிவு மட்டம் உயர்வாக உள்ளது. க.பொ.த (சா/த), (உ/த) பட்டதாரிகள் என சிறந்த மனிதவளம் உள்ளது.
- சமூக ஒத்துழைப்பு கிடைக்கும். பயன்மிக்க நல்ல செயற்பாடுகளுக்கு அனைவரின் ஆதரவு கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- செயற்திட்டம் பற்றிய தெளிவான அறிவும், நிறைவேற்ற வேண்டுமென்ற துணிவு. முதலானவைகள் - பலம் எனலாம்.

*பலவீனம்* - **Weeknes.**

- செயற்பாட்டில் வெளிப்படைத்தன்மை பேணப்படாதவை.
- தொடர்ச்சியாக ஒரே பதவியில் நீடித்திருத்தல்
- ஏனையோருக்கும் சந்தர்ப்பம் வழங்காகமை.
- புத்தாக்கமின்மை, செயற்படாதிருத்தல்.
- சிறந்த தொடர்பாடலின்மை.

*சந்தர்ப்பம்* - **Opportunity**

- மனிதவாழ்வு கிடைத்தது அருமை.
- வாழ்க்கை ஒருமுறை தான்.
- சேவை செய்வதற்கான வாய்ப்பு கிடைத்தமை.
- ஏனையோருக்கு உதவி செய்வதற்கான சந்தர்ப்பம்.
- காலம் போனால் திரும்பப் பெறமுடியாது.
- காற்றுள்ள போதே தூற்ற வேண்டும்.
- சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்த வேண்டும்.

*அச்சுறுத்தல்/சவால்* - **Threat / Challenge**

- பதவியை/திட்டத்தை சரியாக வினைத்திறனாக செய்யாவிட்டால் ஏனையோர் வெறுப்பர்.
- வெளிப்படைத்தன்மை இல்லையாயின் ஏனையோருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தும்.
- காலம் வீணடிக்கப்படுவதை விரும்பமாட்டார்கள்.
- செயற்திட்டம் சரியாக நடைபெறாவிட்டால் திட்டத்தில் உள்ளோர் அச்சுறுத்தலுக்கு உள்ளாவர்.
- வெளிப்படைத்தன்மை இல்லாவிட்டால் முரண்பாடு.
- ஊழல் நடைபெற்றால் - எதிர்ப்பு ஏற்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராம முன்னேற்ற சங்கமாயின் பொதுக்கூட்டம், நிர்வாக சபைக்கூட்டங்களில் என்ன செயற்திட்டம் செய்தல் என தீர்மானிக்க வேண்டும். இச்செயற்திட்டத்தை தயாரிக்கும்போது நோக்கம், குறிக்கோள், நடைமுறைப்படுத்தும் காலம், பொறுப்பாளர்கள், வரவு செலவுத்திட்டம், கால அட்டவணை என்பன திட்ட வரைபில் சிறப்பாக குறிப்பிடப்பட வேண்டும்...

## *மாதிரி செயற்திட்டம்*

தலைப்பு : வீதி ஓரங்களில் நிழல் மரங்கள் நடுதல்.

நோக்கம் : நிழல் மரங்களால் பெறப்படும் பல்வகை நன்மைகளைப் பெறுதல்.

## *குறிக்கோள்*

- கிராமத்தை அழகு படுத்துவதோடு எதிர்காலத்தவர்களும் பயன்பெறக்கூடிய வகையில் சங்கங்களின் மனித உழைப்பை மேம்படுத்தல்.
- இயற்கைச் சமநிலையைப் பேணுதல். (மரங்கள் காபனீரொட்சைட்டை உள்ளெடுத்து ஒட்சிசனை வெளியேற்றுவதால்)
- வீதியால் செல்வோருக்கு நிழல் கிடைக்கும்.
- கிராமத்திற்கான அழகைக் கொடுக்கும்.
- கிராம மக்களின் முயற்சி முன்மாதிரியாக அமையும்.
- பயன் தரும் மரங்களாயின் பழங்கள், காய்கள் பெற முடியும்.
- பறவைகளின் உறைவிடமாகவும் அமையும்.
- பொது ஆக்கச்செயற்பாட்டில் பங்குதாரிகளாதல்.
- அனைவரும் பராமரிக்கும் பக்குவமுடையோராதல்.

## *மாதிரி செயற்திட்டம்*

நாம் தீர்மானிக்கும் வேலைத்திட்டங்களைச் சரியாகவும், நேர்த்தியாகவும் செய்து முடிப்பதற்கு சிறந்த முகாமைத்துவ, தலைமைத்துவ நுட்பங்களை அறிந்து - தெளிவு பெறுதல் வேண்டும். இவை பற்றிய செயற்பாடுகளை பின்வருமாறு செயற்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PODC/POLC - Planing, Organization, Directing / Leadership, Control

திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல்/தலைமைதாங்குதல், கட்டுப்படுத்தல்.

உதாரணமாக மரம் நடுகை எனில்...

***திட்டமிடல்* - Planing**

- பொதுக்கூட்டத்தில் தீர்மானம் எடுத்தல்.
- மரங்களை பெறும் வளிகளை அறிதல்.
- நடும் இடங்களை தெரிதல்.
- குழிகளை வெட்டுதல்.
- பசளைகளைக் கொடுத்தல்.
- மரம் நடுகை விழா செய்தல்.
- பாதுகாப்பு வேலிகள்.
- கூடுகளை அமைத்தல்.
- நீர் ஊற்றுதல்.
- தொடர் பராமரிப்பை கவனித்தல்.
- நோய் - பூச்சி புளுக்களை அவதானித்தல் / கட்டுப்படுத்தல்.
- தொடர் மதிப்பீடும், கண்காணிப்பும்
- பராட்டு வைபவமும்.

***ஒழுங்கமைத்தல்* - Organization**

- பொறுப்புகள் சரியாக உரியவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தல்.
- கிராமிய முன்னேற்ற சங்கம் எனின் பொது அங்கத்தவர்கள் நிர்வாக சபையினர் கலந்து கொள்வர்.
- தலைவர், செயலாளர், பொருளாளர், அங்கத்துவர்.
- பொறுப்பாளர்களை நியமித்தல். ஒரு குழுவிற்கு - 4 மரங்கள், இருவருக்கு ஒரு மரம் என - பெயர் குறிப்பிடப்படல்.
- காண்காணித்தல்.
- பாதுகாத்தல்.
- பராமரித்தல்களை பொறுப்பாளர்கள் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *நெறிப்படுத்தல் / தலைமை வகித்தல்* – Directing / Leadership

- திட்டமிட்ட படி உரிய தினங்களில் நேரங்களில் உரிய வேலைகள் நடைபெற உதவுதல்.
- மேற்பார்வை செய்தல்.
- கண்காணித்தல்.
- ஊக்கப்படுத்தல்.
- தலைவர் - தான் முன்னின்று வேலை செய்தல்.
- உற்சாகப்படுத்தல்.
- தேவையான உதவிகளை வழங்குதல்.

## *கட்டுப்படுத்தல்* – Control

- தலைவர் / பொறுப்பானவர்கள்.
- உரிய நேரத்தில் இடம்பெறவேண்டும்.
- நேர முகாமைத்துவம்.
- செலவுகள், மரம், பாதுகாப்பு வேலி, கூடுகள் உரிய விதிப்படி இடம்பெறுகிறதா? அவதானித்தல்.
- பராமரிப்பு உரியவர்கள் சரியாக நிறைவேற்றுகின்றனரா? என அவதானித்தல்.
- திருத்தம் உடனடியாக மேற்கொள்ளல்.






இவ்வாறான முகாமைத்துவ/தலைமைத்துவ செயற்பாடுகள் உரியபடி இடம்பெற்றால் உரிய செயற்திட்டம் சரியாக நிறைவேற்றி பயன்பெற முடியும். முக்கிய பொறுப்புகளை வகிப்பவர்கள் இவை பற்றிய தெளிவைப் பெற்று நடைமுறைப்படுத்தி எதிர்காலத்தில் மேலும் அழகான ஊர் வளமான இடம் மகிழ்வான சூழல் என மகிழ்ந்திருக்க வழி செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# - 15 -

# எமது கிராமத்தின்

# எதிர்காலத்தில் நிறைவேற்ற வேண்டிய தேவைகள்

### *போக்குவரத்து*

- பிரதான வீதி I Project ஐ செயற்திட்ட மூலம் 2019 தொடக்கம் நடைபெறுகிறது இரண்டாண்டு வேலைத்திட்டம் இவை நடைபெற்று முடியவேண்டும். இவை காபெட் வீதியாகவும் அமையவுள்ளது.
- சிறினிவாசபுரம் ஊடாக சின்னக்குளம், இத்திக்குளம் வீதிகள் JAICA (ஜெய்க்கா) திட்டத்தில் செயற்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது.
- கிராமங்களின் உள்வீதிகள் வடிகான்களுடன் நிறைவேற வேண்டும்.
- பிரம்புவெளி வீதியும் - பள்ளிக்குடியிருப்பு ஊடாக ஜெய்கா நிறுவனத்தினால் நிறைவேற்றப்படவுள்ளது.
- தங்கபுர உள் வீதிகள் JAICA ஜெய்க்கா மூலம் செயற்பட உள்ளது.
- இறையாத்துவெளி வீதி அமைக்கப்பட்டுள்ளது. மேலும் அபிவிருத்தி செய்யப்படவேண்டும்.
- இறையாத்துவெளி வீதி தொடர்பாலம் அமைக்கப்படவேண்டும். இவைக்கான செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது. நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.
- சின்னக்குளத்திலிருந்து இத்திக்குளம் ஊடாக பாட்டாளிபுரத்திற்கான பிரதான வீதியும் முன்மொழிவு இடம்பெற்றுள்ளது.

### *விவசாய விரிவாக்கம்*

- கமநல சேவை நிலையம் இப்பகுதியில் நிறுவப்பட வேண்டும். இவற்றின் பணி அவசியமானது.
- பசளை நிலையம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அவை தொடர் முயற்சியூடாக நிறைவு செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விவசாய சம்மேளனங்கள் நவீன விவசாய, வீட்டுத்தோட்ட ஊக்குவிப்புக்களை மேற்கொள்ள வேண்டும்.
- முருங்கை, தேசி, தோடை போன்ற பல்லாண்டு பல்பயன்மிக்க மரங்களை நடுவதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும்.
- இவை சம்பந்தமான ஊக்குவிப்பு விழிப்புணர்வுகளை மேம்படுத்த வேண்டும்.
- குள நீர் பாச்சலில் இரண்டாவது போகமாக பயறு, உழுந்து செய்ய முயற்சிக்க வேண்டும்.

***கால்நடை பண்ணை அபிவிருத்தி***

- மேச்சல் நிலம் ஒதுக்கப்பட வேண்டும்.
- புதிய அதிக பால் தரும் இனங்கள் வளர்க்க நடவடிக்கை எடுத்தல்.
- பாற்பண்ணை - சிறு உற்பத்தி தொழிலகம் உருவாக்கப்படல்.
- மிருக வைத்திய ஆலோசனை பெறப்பட வேண்டும். அதற்கான நிலையம் அமைக்கப்பட வேண்டும்.
- உரிய சங்கங்கள் மேலும் சிறப்பாக நவீனத்துவத்தை நாடிச் செயற்பட வேண்டும்.

***கல்வி***

- 1992ம் ஆண்டு தொடக்கம் 1C தர க.பொ.த (உ/த) கலைப்பிரிவு மட்டும் உள்ளதாகவே உள்ளது. 1AB பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டு கணித/விஞ்ஞான தொழில்நுட்ப பிரிவுகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.
- ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இணைப்பதற்கு முயற்சி செய்து நிறைவேறக்கூடிய நிலையிலிருந்து. இறுதி நேரத்தில் (தோப்பூரில், சேனையூரிலும் உள்ளதால்) நிறைவேறாது போனது. இதைதொடர்ந்தே "அண்மையில் சிறந்த பாடசாலைத் திட்டத்தில்" சேர்க்க ஏற்பாடானது.
- க.பொ.த (சா/த) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானப் பாடங்களில் கூடுதலான மாணவர்கள் A, B, C தர சித்திகளை பெறவேண்டும். அப்போதுதான் 1AB பாடசாலையாக்க முடியும். முயற்சிக்க வேண்டும்.
- மொழிப்பாடங்கள் தமிழ், ஆங்கிலம், சிங்களம் முதலானவை மேலும் வளர்க்கப்பட வேண்டும். (இப்போது ஆசிரியர் தட்டுப்பாடு இல்லை)
- ஆசிரியர் தட்டுப்பாடு இருந்த காலத்திலும் பல முயற்சிகளினூடாக இவை நிறைவேறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாடசாலையின் நூலகம், விளையாட்டு மைதானம், ஆராதனை மண்டபம் மேலும் பயன்படு நிலையில் வாழ்க்கைப் பயிற்சி நிலையங்களாக இயங்க வேண்டும்.

"தனியாள் விருத்தியூடாக சமூக விருத்தி" என்பதற்கு ஒவ்வொரு தனியாளும் அறிவு, ஆற்றல், மிக நல்ல மனப்பாங்கு உடையவராகி சிறந்த சமூகமாக வாழ கல்வி பயன்பட வேண்டும்.

## *நூலகம்*

1985ம் ஆண்டு தற்போது இருக்கும் நூலகம் சிரமதான மூலம் அமைக்கப்பட்டது. (பள்ளிக்குடியிருப்பு ஊர் உள்பகுதி கிணறுகள் உப்பு நீராக இருந்தது. வயல்வெளியில் சிரமதானமாக - ஒரு நாளைக்கு ஐந்து பேர் கிணறு வெட்ட வேண்டும். (குறைந்தது - ஆழத்தைப் பொறுத்து 2 அடி என) இக்கிணற்றை கட்டுவதற்கு 15 பக்கட் சீமெந்தும் கல், மேசன் கூலி மட்டுமே எகெட் நிறுவனம் தரும் இது ஒப்பந்தம். இதில் 12 பக்கட் சீமெந்து கிணற்றுக்கு போக மீதி 3 பக்கட் சீமெந்து - 5 கிணற்றிலிருந்து 15 பக்கட் சீமெந்தில் இந்நூலகம் அமைக்கப்பட்டது. இதற்கு செங்கல்லும் - கூரை, ஜன்னல் கதவுகள் மட்டும் எகெட் நிறுவனம் தந்தது. இவ்வாறே இந்நூலகம் கட்டப்பட்டது. தகவலுக்காக)

பொது சேவையில் அர்ப்பணிப்பும் வெளிப்படைத் தன்மையும் அனைவரையும் இணைத்து இவற்றைக் கட்டி சிறப்பாக இயங்கியது. இதற்கு "மனிதவள அபிவிருத்தி நிலையம்" (Human Resorce Development Center) என பெயரிட்டிருந்தோம்.

இந்நூலகம் பின்னரும் புனருத்தாரணம் செய்யப்பட்டது. இவற்றை தொடர்ந்து இயக்கலாம், நியாப் கட்டடத்தையும் இயக்கலாம் - இதற்கான அமைப்புகள் செயற்படுத்தலாம்.

2019ல் பெரிய சகல வசதிகளுடனான நூலகமொன்று எமது மைதானத்தின் தங்கபுரப்பகுதியில் நிறுவ ஏற்பாடாகியிருந்தது. இறுதி நேரம் தடங்கலால் முடியவில்லை.

எதிர்காலத்தில் சிறந்த பல வசதிகளுடனான நூலகம் ஒன்று அமையப்பெற வேண்டும். முயற்சிக்க வேண்டும்.

## *குடிநீர்*

இங்கு உப்பு நீராக இருந்தமையால் சிரமதான மூலம் கிணறுகள் வெட்டப்பட்டு எகெட் நிறுவன உதவியுடன் பள்ளிக்குடியிருப்பில் இருந்து கிணறுகளுக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரவட்டைக்குளம், சிறினிவாசபுரம், இத்திக்குளத்திலும் அமைக்கப்பட்டது. குழாய்நீர் விநியோகம் வழுங்கப்பட்டுள்ளது. 2019ல் தங்கபுரத்திற்கு நீர் வழுங்கல் அதிகார சபையும், சின்னக்குளம், இத்திக்குளத்திற்கு ஜெய்க்காகவும் செய்வதாக உறுதியளிக்கப்பட்டது.

## தபாலகம்

மிக நீண்ட காலமாக 1970களிலிருந்து இவற்றிற்காக முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக திரு. சி. கந்தையா - விதானையாளர் அவர்கள் பல முயற்சிகளை தொடர்ச்சியாக எடுத்தவர். எம்மோடும் தபாலகம் சம்பந்தமாக முயற்சிக்க வழிகாட்டியவர்.

கடந்த ஆட்சிக்காலத்திலும் 2017 - 2019 காலங்களில் பல முயற்சிகளை எடுத்தோம். பல காரணங்கள் கூறப்பட்டன. கிடைக்கும் என்றிருந்தோம்...

மேலும் முயற்சிக்க வேண்டும். மூன்று பாடசாலைகள், ஐந்து கி.மு. சங்கம் ஐந்து கிராமம், பல சங்கங்கள், சனத்தொகை - தபாலகத்திற்கான தேவைகள் அதிகரித்த நிலையில் - அமைப்பதற்குத் தேவையான தகமைகள் நிறைய உள்ளதால் - இவற்றை பெற முடியும். முயற்சிக்க வேண்டும்.

## நிர்வாக பிரிவுகள்

ஐந்து கிராமங்கள் புவியியல் அடிப்படையிலும் சனத்தொகை அடிப்படையிலும் இரு கிராம சேவையாளர் பிரிவாக இயங்கின் வளங்களும், வாய்ப்புகளைப் பெறுவதும் பயன்மிக்கதாக அமையும்.

## வட்டாரம்

மூதூர் பிரதேச சபையின் பள்ளிக்குடியிருப்பு வட்டாரத்தில் பத்து கிராமங்கள் உள்ளன. இவை இரு வட்டாரங்களாக புவியியல் அடிப்படையில் பிரிக்கப்பட வேண்டும்.

## வீட்டுத்திட்டம்

2019இல் தங்கபுரம், சிறினிவாசபுரத்தில் தலா 25 வீடுகள் வீதம் கட்டுவதற்கு வீடொன்றிற்கு 20 பேர்ச் காணியும் வழுங்கப்பட்டு முதற்கட்டமாக ரூபா. 20000/- முற்பணமாக வழுங்கப்பட்டு அடித்தளமும் 3 அடி உயரத்திற்கு கட்டப்பட்டுள்ளது. மரவெட்டைக்குளத்திலும் 50 வீடுகளுக்கு காணிகள் ஒதுக்கியும் வீட்டுத்திட்டத்திற்கான அடிக்கல் நடப்பட்டது. பயனாளிகளின் பட்டியல் ஆறு மாதகாலமாக கொடுக்கப்படாத படியால் அவை தொடரப்படவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வீட்டுத்திட்டங்கள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரெட்ணசிங்கம் அவர்களால் வழங்கப்பட்டது. இவையும் நிறைவுசெய்யப்பட வேண்டும்.

மேலும் வங்கிகள், வைத்திய சாலை முதலான மக்களது பல தேவைகளும் நிறைவு பெற வேண்டும்.

பொது சேவையில் ஈடுபடும் சங்கங்கள் அனைத்தும் அடுத்த ஆண்டிற்கான - ஒவ்வொருவரும் ஓராண்டுத் திட்டம் - மூன்றாண்டுத் திட்டங்களை தயாரித்து செயற்பட வேண்டும். சிரமதான அடிப்படையில் நிறைவேற்றக்கூடிய பல விடயங்கள் உள்ளன அவை நிறைவு செய்ய அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும். சங்கங்களில் இருப்போர் தொடர்ந்தும் செயற்படாது ஏனையோருக்கும் பதவிகளை வழங்க வேண்டும் ஒருவர் பல பதவிகளை வகித்து செயற்படாதிருக்கும் நிலையில்லாது செயற்பட வேண்டும்.

சுகாதார நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி கொடிய நோய்த்தொற்றுக்களிலிருந்து பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்ய வேண்டும். (1946ம் ஆண்டு கொளறா நோய், வாந்திபேதி காரணமாக பலர் இறந்ததாக அறியமுடிந்தது.)

எமது வரலாறு - சமூகவியல் பண்பாடுகள் - மனித நேயமுள்ளதாகவும் - பண்பாட்டு பாரம்பரியமுடையதாகவும் - ஒற்றுமையும் உதவும் மனப்பாங்குடையோராகவும் வாழ்ந்த பழம்பெரும் கிராமம். அவை தொடர வேண்டும். எதிர்கால மக்களும் எமது பாரம்பரியங்களை அறிந்து இன்புற்றிருக்க வேண்டி இறைவனைப் பிரார்த்திப்போம்.



பசுமைக்கிராம செயற்திட்டத்தின் முன்னோடிகளாக ... ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


- 16 -

# பசுமைக் கிராமம்
## *Green Village*

- இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட ஆறு மாதிரி கிராமங்களில் கிழக்கு மாகாணத்தில் பள்ளிக்குடியிருப்பும் ஒன்றாகும்.
- சமூகம், பொருளாதாதம், உற்பத்தி மற்றும் சூழலில் குறிப்பிட்ட தக்க மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியினால் தெரிவுசெய்யப்ட்ட மாதிரி கிராமம்.
- அரச, அரச சார்பற்ற நிறுவனங்களை இலங்கை மத்திய வங்கி ஒருங்கிணைப்பதன் மூலம் அபிவிருத்தி ஏற்படுத்துவது தொனிப் பொருளாகும்.
- 6 மாதிரித்திட்டம் (பங்குனி - புரட்டாதி) 2021

**செயற்பாடுகள்.**


- டிஜிட்டல் வங்கியியல் (Digital Banking)
- நிதிசார் நிபுணத்துவம் உடைய கிராமம்.
- வீட்டுத் தோட்டங்கள், மரம் நடுகை.
- சிறிய, நடுத்தர தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தல்.
- விவசாய, கால்நடை வளர்ப்பு தொடர்பான சிறந்த நடைமுறைகளை ஏற்படுத்தல். (வைத்திய, எரு, பசளை)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புதிய பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்பு இனம் காணல்.
- சுகாதார வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தல்.
- விளையாட்டுத்துறை முன்னேற்றம்.
- குறைந்த வட்டி கடன்களுக்கு வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தல்.
- உள்ளூர் உற்பத்திகளை அறிமுகம் செய்தல். (கைத்தறி, யோகட்)
- புதிய சங்கங்களை அமைத்தல்.
- பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களை தொழில் வாய்ப்பு பயிற்சியளித்தல், தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தல்.
- வங்கி நடவடிக்கைகளை இலகுபடுத்தல்.
- உள்ளூர் உற்பத்திக்கான உரிய சந்தை வாயப்ப்பளித்தல்.
- அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இயங்கக்கூடிய இளைஞர்களை உரு வாக்குதல்
- சுற்றுச்சூழல் தொடர்பான சரியான முறைமைக்கான சிபாரிசினை வழங்கல்.
- புதிய பயிற்றுனர்களை உருவாக்குதல்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பசுமைக் கிராமத்தின் முதியோர்கள் அமைப்பு, கிராம சேவை உத்தியோகத்தர், பொருளாதா அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன்

இங்கு கூறப்பட்டுள்ள பல விடயங்கள் தற்போது வாழ்ந்துகொண்டிருக்கும் பலருக்கு தெரியாதவைகள். எனவே எமது வரலாற்றை தற்போதுள்ளவர்களும், எதிர்காலத்தவருக்கும் தெரியப்படுத்தும் நோக்காகவே இவை எழுதப்பட்டது.

எமது சமூகவியல் பண்பாட்டம்சங்கள் ஒவ்வொரு மனிதரையும் மதிக்கும் மனித நேயமுள்ளவர்களாகவும் உதவும் மனப்பாங்குள்ளவர்களாகவும் ஒற்றுமையொடு செயலாற்றும் திறன் மிக்கவர்களாகவும் இருந்துள்ளனர்.

இங்கு கூறப்பட்ட விடயங்கள் அனைத்தும் மிகவும் துல்லியமான ஆதாரங்களோடும் நூல் ஆவண ஆதாரங்களோடுமே கூறப்பட்டுள்ளது. சில விடயங்கள் விடுபட்டிருப்பின் எழுத்து மூலமாகவும் அறிவிக்கப்படின் இரண்டாவது மறு பதிப்பில் விடுபட்டவைகளை இணைத்துக்கொள்ள முடியும். இவ் ஆக்கத்திற்கு பல வழிகளில் பலர் உதவி செய்தனர் அனைவருக்கும் உளமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு இதனைத் தொடர்ந்து மேலும் சிறப்பான ஆக்கங்களை இதனை அடியொற்றியும் ஆக்கமுடியும்.

நீண்ட நாள் கனவான இவ்ஆக்கம் நிறைவுக்கு வந்துள்ளது. இது எதிர்காலவியலுக்கும் தொடர்ந்து ஆய்வை மேற்கொள்வோருக்கும் சிறந்த ஆவணமாக அமையும் - அமைய வேண்டுமென்பதே இந்நூலின் நோக்கமுமாகும்.

ஒவ்வொருதலைப்புகளிலும் ஆரம்பவரலாறு தொடக்கம் இற்றைவரையான நிலமைகள் குறிப்பிடப்பட்டிருப்பதோடு எதிர்காலவியலில் - எதிர்வுகூறலும் இடம்பெற்றுள்ளது. எமது பண்பாடான எதிர்கால சமூகம் அவற்றை நிறைவு செய்வதோடு பொது சொத்துக்களை சமூக நோக்கில் பாதுகாத்து - எதிர்கால சந்ததியினருக்காகவும் கிராமத்தன் நல்ல சூழலை ஏற்படுத்துவதற்காகவும் மரம் வளர்த்தல் மிகவும் அவசியமானது. சமூக நீதி, இறை நீதியை மதித்து ஒற்றுமையாக சிறப்பாக வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக்குடியிருப்பு கிராமத்தின் அரச ஊழியர்கள்

## கல்வித்துறையினர்

| இல | பெயர் | தரம் | முதல் நியமனம் |
|---|---|---|---|
| 1 | மு. கனகசபை | T.Trd ஆசிரியர் | 17.07.1929 |
| 2 | ஆ. கனகரெட்ணம் | T.Trd, SLTS-I ஆசிரியர் | 02.05.1961 |
| 3 | ஆ. குணராஜரெட்ணம் | T.Trd, SLEAS-I – மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர். | 01.09.1971 |
| 4 | ஆ. செல்வநாயகம் | T.Trd, BA., PGDE, PGDEM, M.Ed, SLPS-I, SLEAS-III அதிபர், கல்விப் பணிப்பாளர். | 01.09.1976 |
| 5 | த. சிதம்பரப்பிள்ளை | T.Trd, SLPS-I அதிபர் | 02.06.1977 |
| 6 | பொ. இரத்தினசிங்கம் | T.Trd, SLPS-I அதிபர் | 02.06.1977 |
| 7 | க. ஆனந்தராஜா | BA, PGDE, MA, SLPS-II அதிபர் | 10.03.1985 |
| 8 | கோ. கந்தசாமி | T.Trd, SLPS-II அதிபர் | 10.03.1985 |
| 9 | க. அம்பிகைபாகன் | T.Trd, SLPS-I, DEO கோட்டக் கல்விப் பணிப்பாளர் | 10.03.1985 |
| 10 | க. சச்சிதனந்தம் | T.Trd, BA, PGDE அதிபர் | 10.03.1985 |
| 11 | நா. கிட்ணதாஸ் | T.Trd, BA, SLPS-I அதிபர் | 01.09.1985 |
| 12 | த. துரைநாயகம் | BA, PGDE, DSM, SLPS-I அதிபர் | 27.12.1987 |
| 13 | போ. குமாரலிங்கம் | T.Trd ஆசிரியர் | 07.03.1990 |
| 14 | த. வேலானந்தம் | T.Trd, SLPS-I அதிபர் | 07.03.1990 |
| 15 | வி. பாக்கியராஜா | T.Trd, BA, SLPS-II அதிபர் | 07.03.1990 |
| 16 | ம. சரஸ்வதி | T.Trd ஆசிரியர் | 03.02.1992 |
| 17 | ரே. அம்மணிப்பிள்ளை | T.Trd ஆசிரியர் | 07.03.1990 |
| 18 | க. செங்கமலவல்லி | T.Trd ஆசிரியர் | 07.03.1990 |
| 19 | ஆ. நவநாயகம் | T.Trd ஆசிரியர் | 07.03.1990 |
| 20 | ந. வாசுகி | T.Trd ஆசிரியர் | 20.09.1990 |
| 21 | வை. தில்லையம்பலம் | T.Trd, SLPS-II அதிபர் | 03.02.1992 |
| 22 | சி. கோபாலபிள்ளை | T.Trd ஆசிரியர் | 03.02.1992 |
| 23 | ப. நவஜோதி | T.Trd ஆசிரியர் | 03.02.1992 |
| 24 | க. தயானந்தராஜா | B.Com ஆசிரியர் | 15.07.1994 |
| 25 | கோ. லலிதாதேவி | T.Trd ஆசிரியர் | 16.01.1996 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | பெயர் | தரம் | முதல் நியமனம் |
|---|---|---|---|
| 26 | நா. இராஜலெட்சுமி | T.Trd ஆசிரியர் | 26.01.1998 |
| 27 | கோ. ரவிக்காந்தன் | T.Trd, B.Ed ஆசிரியர் | 28.01.1998 |
| 28 | க. தேன்முகி | BA, PGDE ஆசிரியர் | 03.01.2000 |
| 29 | க. பாக்கியராஜா | T.Trd, B.A, PGDE, M.Ed, DSM அதிபர் | 07.07.2000 |
| 30 | ச. அன்பழகன் | T.Trd, BA, PGDE, M.Ed, DSM ஆசிரியர் | 15.08.2000 |
| 31 | ச. அறிவழகன் | T.Trd, B.Ed ஆசிரியர் | 15.08.2000 |
| 32 | து. சிவசங்கர் | T.Trd, BEd (IT) ஆசிரியர் | 15.08.2000 |
| 33 | அ. சசிகுமார் | T.Trd, BA, PGDE ஆசிரியர் | 15.08.2000 |
| 34 | சி. வரதராஜன் | T.Trd, BA, PGDE, M.Ed ஆசிரியர் | 15.08.2000 |
| 35 | கா. குமார் | T.Trd, BA, B.Ed ஆசிரியர் | 15.08.2000 |
| 36 | ந. புஸ்பராஜா | T.Trd, B.Ed ஆசிரியர் | 15.08.2000 |
| 37 | பு. பாரதியம்மா | T.Trd, B.Ed ஆசிரியர் | 15.08.2000 |
| 38 | இ. மாகதேவன் | T.Trd, BA, PGDE, M.Ed, SLEAS - III உதவிக் கல்விப் பணிப்பாளர் | 20.09.2000 |
| 39 | நா. கருணாநிதி | B.Sc, PGDE, M.Sc ஆசிரியர் | 24.01.2001 |
| 40 | சி. தியாகராஜா | T.Trd அதிபர் | 15.05.2001 |
| 41 | ச.சுதாகரன் | T.Trd ஆசிரியர் | 15.05.2001 |
| 42 | அ. பவாணி | T.Trd, B.Ed ஆசிரியர் | 15.05.2001 |
| 43 | ரா. மங்களஜோதி | T.Trd ஆசிரியர் | 15.05.2001 |
| 44 | ச. சுதாகரன் | T.Trd ஆசிரியர் | 19.09.2002 |
| 45 | கோ. உமாதேவி | T.Trd ஆசிரியர் | 12.05.2003 |
| 46 | ம. சகுந்தலாதேவி | T.Trd, B.Ed ஆசிரியர் | 11.06.2003 |
| 47 | மா. வர்ணகுலசிங்கம் | T.Trd, B.Ed ஆசிரியர் | 19.06.2003 |
| 48 | க. சிவானந்தம் | T.Trd ஆசிரியர் | 19.06.2003 |
| 49 | ச. கீதாஞ்சலி | T.Trd ஆசிரியர் | 07.04.2005 |
| 50 | கோ. பரமேஸ்வரன் | Dip in Teach, BEd அதிபர் | 24.07.2005 |
| 51 | சோ. கற்பககரசி | T.Trd ஆசிரியர் | 06.02.2006 |
| 52 | சா. ரதி | T.Trd, B.Ed | 06.02.2006 |
| 53 | தி. சிவஜோதி | BA, PGDE அசிரியர் | 01.08.2008 |
| 54 | க. ஜீவரூபன் | BA, PGDE, Dip. in Coun ஆசிரியர் | 01.08.2008 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | பெயர் | தரம் | முதல் நியமனம் |
|---|---|---|---|
| 55 | செ. யூகன் | T.Trd, BA, PGDE, M.Ed ஆசிரியர் | 15.08.2008 |
| 56 | நா. திவாகரன் | T.Trd, B.Ed ஆசிரியர் | 01.01.2009 |
| 57 | யோ. சிவாகரன் | T.Trd, B.Ed ஆசிரியர் | 01.01.2009 |
| 58 | க. ஜீவநாதன் | Dip. in Train ஆசிரியர் | 08.10.2010 |
| 59 | சி. கோமகள் | Dip. in Teach ஆசிரியர் | 08.10.2010 |
| 60 | சி. ரேவதி | B.Com (Mgt) ஆசிரியர் | 02.05.2012 |
| 61 | கோ. இலோஜனா | B.A ஆசிரியர் | 20.02.2017 |
| 62 | தெ. சிவசீலன் | Dip. in Teach, BA ஆசிரியர் | 08.10.2017 |
| 63 | ந. ஆனந்தபைரவி | Dip. in Teach ஆசிரியர் | 23.10.2017 |
| 64 | ம. ஜனா | Dip. in Teach ஆசிரியர் | 23.10.2017 |
| 65 | ந. அதீஸ்வரன் | BA ஆசிரியர் | 27.11.2017 |
| 66 | ச. பரணிகா | HNDE ஆசிரியர் | 27.11.2017 |
| 67 | கி. கிருபலோஜினி | B.A ஆசிரியர் | 27.11.2017 |
| 68 | தி. சிவந்தினி | B.A ஆசிரியர் | 08.03.2018 |
| 69 | த. பிரமளா | ஆசிரியர் | 26.06.2019 |
| 70 | க. விபுலானந்தம் | BA ஆசிரியர் | 28.06.2019 |
| 71 | வே. சிவானந்தம் | ஆசிரியர் | 28.06.2019 |
| 72 | தி. சோதிலிங்கம் | ஆசிரியர் | 28.06.2019 |
| 73 | க. பாஸ்கரன் | ஆசிரியர் | 28.06.2019 |
| 74 | ப. வாமதேவன் | ஆசிரியர் | 28.06.2019 |
| 75 | கி. சாந்தலிங்கம் | BA ஆசிரியர் | 28.06.2019 |
| 76 | க. சிதம்பரநாதன் | ஆசிரியர் | 28.06.2019 |
| 77 | தி. வசந்தி | ஆசிரியர் | 28.06.2019 |
| 78 | இ. இராஜேஸ்வரி | ஆசிரியர் | 28.06.2019 |
| 79 | பா. ஜெயந்தினி | B.A ஆசிரியர் | 28.06.2019 |
| 80 | த. புஸ்பகாந்தி | ஆசிரியர் | 09.11.2019 |
| 81 | வை. கோணேஸ்வரன் | OES பணியாளர் | 01.10.2001 |
| 82 | வ. நிர்மலன் | OES பணியாளர் | 01.10.2001 |
| 83 | சி. ஜீவாகரன் | OES பணியாளர் | 01.10.2001 |
| 84 | ப. பிரபாவதி | OES பணியாளர் | 03.01.2013 |
| 85 | ப. கபிலினி | Sports Coach பயிற்றுனர் | 29.07.2019 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச ஊழியர்கள் - பொது

| இல | பெயர் | தரம் | முதல் நியமனம் |
|---|---|---|---|
| 1 | சி. கந்தையா | V.H – G.S கிராம சேவை உத்தியோகத்தர் | 07.11.1943 |
| 2 | க. தவராஜா | B.A – LLB, At. at Law. (Ret. PD Youth Service – Eastern Province) | 05.05.1981 |
| 3 | ஆ. துரைநாயகம் | W.S - வேலைகள் மேற்பார்வையாளர் - நீர்பாசனத் திணைக்களம் | 01.09.1988 |
| 4 | இ. சிவஞானம் | RO – வருமானவரி மேற்பார்வையாளர் | 01.06.1991 |
| 5 | க. இளஞ்செழியன் | சமுர்த்தி உத்தியோகத்தர் | 01.01.1998 |
| 6 | ந. கானிகாதேவி | சமுர்த்தி உத்தியோகத்தர் | 01.01.1998 |
| 7 | ச. சுதாகரன் | சமுர்த்தி உத்தியோகத்தர் | 01.01.1998 |
| 8 | மை. எலிசபத் | சமுர்த்தி உத்தியோகத்தர் | 02.031999 |
| 9 | செ. பிரியதர்ஷினி | B.A (English) Asst. Bank Manager உதவி வங்கி முகாமையாளர் | 01.08.2007 |
| 10 | நா. ரதிகாந்தன் | Dip. in Co-op. CDO கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01.02.2008 |
| 11 | நா. சிறிதரன் | B.Sc (Eng) பொறியியலாளர் | 01.04.2012 |
| 12 | நா. சிவபரன் | Dip. in. Agri., B.Sc., AI விவசாய போதனாசிரியர் | 11.05.2012 |
| 13 | தி. ரவீந்திரன் | B.A சமுர்த்தி முகாமையாளர் | 01.06.2013 |
| 14 | நா. யோகிதாஸ் | B.Com., MBA – (Excise Inspector) மது வரி பரிசோதகர் | 01.06.2014 |
| 15 | கி. பரமேஸ்வரன் | B.A, M.A – DO அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01.06.2013 |
| 16 | ப. சர்மிளா | B.A – DO | 01.06.2013 |
| 17 | க. மேகலன் | B.A – DO | 01.06.2013 |
| 18 | ச. டினோசினா | B.A – DO | 01.06.2013 |
| 19 | யோ. கவிதா | B.A – DO | 01.06.2013 |
| 20 | தா. லலிதாதேவி | B.A - கலாசார உத்தியோகத்தர் | 01.06.2013 |
| 21 | கி. தவசீலன் | B.A – DO | 23.09.2013 |
| 22 | செ. பிரசாந் | Dip. in Stat., B.Bm, M.Sc. இலங்கை மத்திய வங்கி | 14.10.2013 |
| 23 | இ. தியாகு | தபால் ஊழியர் | 01.04.2016 |
| 24 | நா. சதீஸ்வரன் | தபால் ஊழியர் | 08.05.2018 |
| 25 | ம. சுதர்சினி | BFA – DO | 01.08.2019 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | பெயர் | தரம் | முதல் நியமனம் |
|---|---|---|---|
| 26 | த. தனலட்சுமி | BFA – DO | 01.08.2019 |
| 27 | இ. வித்தியா | B.A – DO | 19.09.2019 |
| 28 | சி. டஷ்ஷினி | முகாமைத்துவ உதவியாளர் | 01.03.2020 |
| 29 | அ. குயிலினி | B.Com – முகாமைத்துவ உதவியாளர் | 02.09.2020 |
| 30 | யோ. சிந்தியா | BFA – DO | 02.09.2020 |
| 31 | ப. தேவாஜினி | BFA – DO | 02.09.2020 |
| 32 | சா. வினோதினி | B.A – DO | 02.09.2020 |
| 33 | த. மேகரன் | B.A – DO | 02.09.2020 |
| 34 | கி. கிருபாலினி | B.A – DO | 02.09.2020 |
| 35 | யோ. உமா | B.A – DO | 02.09.2020 |
| 36 | ச. நிரோசா | B.A – DO | 02.09.2020 |
| 37 | வ. கீர்த்தா | B.A – DO | 02.09.2020 |
| 38 | பொ. கஜனா | B.A – DO | 02.09.2020 |

## சுகாதார – வைத்திய துறை

| இல | பெயர் | தரம் | முதல் நியமனம் |
|---|---|---|---|
| 1 | க. மதிவதனன் | சுகாதார ஊழியர் | 21.09.1994 |
| 2 | கு. சரவணபவன் | PHI - சுகாதார பரிசோதகர் | 20.06.2000 |
| 3 | த. கலைச்செல்வி | PHM - மருத்துவ மாது | 01.08.2006 |
| 4 | சி. அமராவதி | சுகாதார ஊழியர் | 20.05.2006 |
| 5 | இ. செந்தூரன் | சுகாதார ஊழியர் | 10.08.2018 |
| 6 | து. அமல்ராஜ் | சுகாதார ஊழியர் | 20.08.2018 |
| 7 | அ. வைசாலினி | சுகாதார ஊழியர் | 20.08.2018 |
| 8 | அ. பிரவீனா | சுகாதார ஊழியர் | 20.08.2018 |
| 9 | சி. கோகுலன் | சுகாதார ஊழியர் | 20.08.2018 |
| 10 | பா. டிலக்ஷன் | சுகாதார ஊழியர் | 20.08.2018 |
| 11 | Dr. வி. அபிலாஷினி | BSMS வைத்தியர் | 2020 |

## தொழிநுட்ப உத்தியோகத்தர்

| இல | பெயர் | தரம் | முதல் நியமனம் |
|---|---|---|---|
| 1 | நா. தேவதாஸ் | TO – தொழிநுட்ப உத்தியோகத்தர் | 2005 |
| 2 | கோ. கிருபாகரன் | TO – தொழிநுட்ப உத்தியோகத்தர் | 2005 |
| 3 | ஆ. யுகேந்திரன் | MT – கட்டுமான தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01.03.2009 |
| 4 | இ. ரதன் | MT – கட்டுமான தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01.03.2009 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல் நோக்கு கூட்டுறவு சங்க ஊழியர்கள்

| இல | பெயர் | தரம் | முதல் நியமனம் |
|---|---|---|---|
| 1 | சு. வைரமுத்து | ப.நோ.கூ.ச – கிளை முகாமையாளர் | 1960 |
| 2 | கணபதிப்பிள்ளை | ப.நோ.கூ.ச – கிளை முகாமையாளர் | 1960 |
| 3 | க. நாகராசா | ப.நோ.கூ.ச – கிளை முகாமையாளர் | 1963 |
| 4 | க. மயில்வாகனம் | ப.நோ.கூ.ச – கிளை முகாமையாளர் | 1974 |
| 5 | தி. மாணிக்கராசா | ப.நோ.கூ.ச – கிளை முகாமையாளர் | 1980 |
| 6 | ஆ. நேசதுரை | ப.நோ.கூ.ச – கிளை முகாமையாளர் | 1982 |

## போக்குவரத்து சபை ஊழியர்கள் (SLTB)

| இல | பெயர் | தரம் | முதல் நியமனம் |
|---|---|---|---|
| 1 | அ. சுரேஸ் | நடத்துனர்/சாரதி | 1964 |
| 2 | க. சீவரெத்தினம் | நடத்துனர் | 1971 |
| 3 | ஆ. மனுராஜலிங்கம் | பணியாளர் | 1977 |
| 4 | வை. கங்காலிங்கம் | பணியாளர் | 01.09.1988 |

## இலங்கை மின்சார சபை ஊழியர்கள்

| இல | பெயர் | தரம் | முதல் நியமனம் |
|---|---|---|---|
| 1 | க. விஜயானந்தம் | CEB - S.T.S மின்சாரசபை ஊழியர்கள் | 17.04.2000 |
| 2 | க. தினேஸ்குமார் | CEB - S.T.S மின்சாரசபை ஊழியர்கள் | 01.09.2005 |
| 3 | சி. சதீஸ்குமார் | CEB - ஊழியர் | 2020 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பள்ளிக்குடியிருப்பு கிராம உத்தியோகத்தர் பிரிவின் - 219

## குடும்ப விபரம்

# FAMILY DATA COLLECTION OF PALLIKUDIYIRUPPU - GN DIVISION - 219

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| No | | | 1 | 2 | 3 | 4 | 5 | | |
| Road / Lane | | | Pallikkudiyiruppu | Thankapuram | Srinivasapuram | Sinnakkulam | Iththikulam | Total | |
| Total Family | | | 147 | 237 | 123 | 149 | 74 | 730 | |
| Members | Male | | 216 | 386 | 188 | 247 | 132 | 1169 | |
| | Female | | 239 | 364 | 206 | 250 | 127 | 1186 | |
| | Total | | 455 | 750 | 394 | 497 | 259 | 2355 | |
| Age Wise Population | Age 0-5 | M | 22 | 52 | 16 | 37 | 16 | 143 | 275 |
| | | F | 26 | 47 | 14 | 30 | 15 | 132 | |
| | Age 6-9 | M | 20 | 31 | 20 | 17 | 14 | 102 | 209 |
| | | F | 18 | 34 | 18 | 30 | 7 | 107 | |
| | Age 10-14 | M | 23 | 44 | 28 | 23 | 14 | 132 | 239 |
| | | F | 22 | 33 | 23 | 16 | 13 | 107 | |
| | Age 15-19 | M | 14 | 34 | 18 | 14 | 14 | 94 | 181 |
| | | F | 16 | 19 | 18 | 26 | 8 | 87 | |
| | Age 20-24 | M | 17 | 41 | 17 | 33 | 12 | 120 | 211 |
| | | F | 15 | 21 | 16 | 23 | 16 | 91 | |
| | Age 25-29 | M | 16 | 28 | 12 | 37 | 11 | 104 | 212 |
| | | F | 16 | 37 | 13 | 28 | 14 | 108 | |
| | Age 30-34 | M | 18 | 34 | 7 | 19 | 14 | 92 | 179 |
| | | F | 17 | 29 | 10 | 20 | 11 | 87 | |
| | Age 35-39 | M | 16 | 24 | 9 | 12 | 5 | 66 | 147 |
| | | F | 21 | 26 | 17 | 11 | 6 | 81 | |
| | Age 40-44 | M | 21 | 28 | 20 | 16 | 11 | 96 | 205 |
| | | F | 21 | 26 | 25 | 25 | 12 | 109 | |
| | Age 45-49 | M | 18 | 20 | 17 | 15 | 5 | 75 | 153 |
| | | F | 16 | 28 | 16 | 9 | 9 | 78 | |
| | Age 50-54 | M | 11 | 8 | 5 | 7 | 5 | 36 | 86 |
| | | F | 7 | 19 | 8 | 11 | 5 | 50 | |
| | Age 55-59 | M | 6 | 15 | 3 | 7 | 7 | 38 | 79 |
| | | F | 10 | 14 | 5 | 8 | 4 | 41 | |
| | Over 60 | M | 20 | 28 | 16 | 11 | 6 | 81 | 179 |
| | | F | 29 | 30 | 23 | 11 | 5 | 98 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| No | | 1 | 2 | 3 | 4 | 5 | Total | |
|---|---|---|---|---|---|---|---|---|
| Road / Lane | | Pallikkudiyiruppu | Thankapuram | Srinivasapuram | Sinnakkulam | Iththikulam | | |
| Women head | | 34 | 53 | 35 | 30 | 10 | 162 | |
| Samurthy | | 89 | 184 | 86 | 110 | 64 | 533 | |
| Samurthy Waiting List | | 14 | 15 | 11 | 18 | 7 | 65 | |
| Elders Payment | | 6 | 6 | 6 | 2 | 2 | 22 | |
| Disable Payment | | 4 | 5 | 4 | 15 | 4 | 32 | |
| PAMA | | 37 | 53 | 36 | 30 | 13 | 169 | |
| Disease | | 3 | 14 | 4 | 8 | 6 | 35 | |
| Differently able person | | 5 | 6 | 4 | 17 | 4 | 36 | |
| Occupation | Government Servent | 44 | 16 | 21 | 10 | 1 | 92 | |
| | Pensioner | 6 | 1 | 0 | 0 | 0 | 7 | |
| | Private Sector | 10 | 5 | 3 | 1 | 0 | 19 | |
| | Farmer | 43 | 23 | 16 | 23 | 22 | 127 | |
| | Business man | 2 | 4 | 5 | 5 | 0 | 16 | |
| | Labour | 45 | 158 | 71 | 102 | 41 | 417 | 2355 |
| | Self Employement | 21 | 48 | 17 | 22 | 11 | 119 | |
| | Foreign | 4 | 8 | 8 | 8 | 1 | 29 | |
| | Mason | 3 | 3 | 0 | 1 | 3 | 10 | |
| | Carpenter | 0 | 2 | 0 | 0 | 0 | 2 | |
| | None | 278 | 482 | 253 | 324 | 180 | 1517 | |
| Education Level | Pre-School | 25 | 39 | 21 | 32 | 14 | 131 | |
| | Grade 1-5 | 88 | 166 | 94 | 92 | 40 | 480 | |
| | Grade 6-9 | 99 | 174 | 87 | 103 | 69 | 532 | |
| | Grade 10 & O/Level | 84 | 181 | 84 | 127 | 67 | 543 | |
| | A/Level | 86 | 93 | 65 | 68 | 30 | 342 | |
| | Diploma Holder | 3 | 1 | 0 | 0 | 0 | 4 | |
| | College of Education | 12 | 7 | 7 | 1 | 1 | 28 | 2363 |
| | Bachelor Degree | 24 | 9 | 12 | 11 | 2 | 58 | |
| | Master Degree | 10 | 0 | 0 | 0 | 0 | 10 | |
| | M.phil | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | |
| | Doctorate | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | |
| | None | 33 | 80 | 24 | 62 | 36 | 235 | |

**பள்ளிக்குடியிருப்பு கிராம உத்தியோகத்தர் பிரிவின் - 219 வாக்காளர் விபரம்**

| ஆண்டு | வாக்காளர் | ஆண்டு | வாக்காளர் | ஆண்டு | வாக்காளர் |
|---|---|---|---|---|---|
| 1996 | 854 | 2004 | 1220 | 2012 | 1357 |
| 1997 | 881 | 2005 | 1266 | 2013 | 1362 |
| 1998 | 906 | 2006 | 1266 | 2014 | 1381 |
| 1999 | 929 | 2007 | 1338 | 2015 | 1380 |
| 2000 | 930 | 2008 | 1350 | 2016 | 1411 |
| 2001 | 1009 | 2009 | 1360 | 2017 | 1401 |
| 2002 | 1095 | 2010 | 1366 | 2018 | 1400 |
| 2003 | 1116 | 2011 | 1361 | 2019 | 1440 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்


1. கோணேசர் கல்வெட்டு, பண்டிதல். இ. வடிவேல்.
2. திருக்கோணேஸ்வரம் (2014) - திருகோணமலை கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை வெளியீடு, தொகுப்பாசிரியர். கணபதிப்பிள்ளை அருள்சுப்பிரமணியம்.
3. கொட்டியாபுரப்பற்று முதசங்கள் (2016) - வைத்திய கலாநிதி அருமைநாதன் சதீஸ்குமார்.
4. வரலாற்று திருகோணமலை (2003) - கனகசபாபதி சரவணபவன், திருகோணமலை வெளியீட்டாளர்.
5. காலணித்துவ திருகோணமலை (2010) - கனகசபாபதி சரவணபவன், திருகோணமலை வெளியீட்டாளர்.
6. மட்டக்களப்பு சிறு தெய்வ வழிபாடு ஓர் அறிமுகம் (1996) - க.மகேஸ்வரலிங்கம், தில்லை வெளியீடு - மகிழடித்தீவு.
7. மட்டக்களப்பு கோயில்களும் தமிழர் பண்பாடும் (2008) - சைவப்புலவர் - தில்லைநாதன், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் (பிரியா பிரசுரம் 45)
8. தென்திருமலை தேசம் (2018) - அருமைநாதன் சதீஸ்குமார், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம்.
9. வெருகலம்பதி ஸ்ரீ சித்தி வேலாயுத சுவாமி தேவஸ்தான மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் - ந. கோணமலை, உபதலைவர், வெருகலம்பதி சித்திவிநாயகர் ஆலயம்.
10. வெருகலம்பதி ஸ்ரீ சித்தி வேலாயுதல் கோயிலும் கிழக்கு மாகாண குடிகளும் - ச. திருத்தணிகாசலம், நிர்வாக உத்தியோகத்தர், மட்/சித்தாண்டி.
11. திருகோணமலை கலை இலக்கிய வரலாறு (2012) - குமரன் புத்தக இல்லம், திருமலை நகரம், சி. நவரெட்ணம்.
12. மட்டக்களப்புமான்மியம் (1993) - திருமதிதனபாக்கியம் குணபாலசிங்கம், மட்டக்களப்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மான்மியம் (1998) - வித்துவான் F.X.C. நடராசா, மட்டக்களப்பு மாவட்ட கலாசார பேரவை.

13. மூதூர் (2010) - கோ. திரவியராச, சண் அச்சகம், மட்டக்களப்பு.

14. நாட்டாரியல் ஆய்வரங்க கட்டுரைகள் (2000) - பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை.

15. சம்பூர் (2012) - கோ. திரவியாசா, மடோனா அச்சகம், செங்கலடி.

16. கல்வியின் வராற்று அடிப்படை - பட்டப்பின் ஆசிரியர் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

17. தி/பள்ளிக்குடியிருப்பு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிசே சிறப்பு மலர் (2000) - ஆலய பரிபாலன சபை.

18. தி/பள்ளிக்குடியிருப்பு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிசே சிறப்பு மலர் (2008) - ஆலய பரிபாலன சபை.

19. அமரர். சித்திராவி கந்தையா அவர்களின் 31ம் நாள் நினைவு மலர் (1997)

20. அமரர். மாரிமுத்து சிவலிங்கம் அவர்களின் 31ம் நாள் நினைவு மலர் (2008)

21. கன்னியா பண்டைய சைவத் தமிழரின் பாரம்பரிய அடையாளம் என். கே.எஸ். திருச்செல்வம், இராவணசேனை - திருக்கோணமலை, அருந்ததி பதிப்பகம் - கொழும்பு.

22. பள்ளிக்குடியிருப்பு கிராமத்தில் அருகிப்போவதும் தற்கால வழக்கிலுள்ளதுமான கிராமியக் கலைகள் - ஆய்வாளர் செல்வி. பத்மநாதன் தேவாஜினி.

23. மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும் - கலாபூசணம். க. மகேஸ்வரலிங்கம், கொழும்பு தமிழ்ச்சங்க வெளியீடு.

24. இலங்கையில் தமிழர் ஒரு முழுமையான வரலாறு - கி.மு. 300 - கி.பி. 2000 - கலாநிதி முருகன் குணசிங்கம்., எம்.வி. வெளியீடு. தென் ஆசியவியல் மையம் - சிட்னி 2016.

25. பள்ளிக்குடியிருப்பு கிராம சேவை உத்தியோகத்தர், மூதூர் பிரதேச செயலகம்.

26. தேர்தல் திணைக்களம், திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் நூல்கள்

1. பாடசாலைத் தலைமைத்துவம் - ***School Leadership***

2. கற்பித்தல் நுட்பங்கள் - ***Teaching Techniques***

## ஆய்வு நூல்கள்

1. தி/மூதூர் கோட்டக் கல்வி அலுவலகப் பிரிவில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆங்கில மொழிப்பாட அடைவினைக் கூட்டுவதில் அதிபர்களின் முகாமைத்துவப் பங்களிப்பு - ஓர் ஆய்வு.

   Management Role of the Principal increasint the Achievement of English Language in G.C.E. (O/L) Examination in Muthur Education Division in Trincomalee District.

2. ஆசிரியர் வாண்மை விருத்தியில் உள்ளக மேற்பார்வையின் வகிபங்கு - செயல்நிலை ஆய்வு.

   Role of Internal Supervision in Professional Development of Teacher. Action Research.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியர் பற்றி



திருகோணமலை மாவட்டத்தின் பழம்பெரும் விவசாயக் கிராமமாக விளங்குவது பள்ளிக்குடியிருப்பு. கிழக்கு மாகாணத்திலே பாரம்பரிய கலை கலாச்சாரத்தின் பண்பாட்டு விழுமியங்களை பிரதிபலிக்கும் வகையில் "கொம்பு விளையாட்டு" என்னும் நிகழ்வை நடாத்திப் பெருமை பெறும் பூமியாகவும் இது அமைந்துள்ளது. இத்தகைய மண்ணின் மைந்தன் இந்நூலாசிரியர் ஆறுமுகம் செல்வநாகயம் அவர்களாவார்.

இவர் பள்ளிக்குடியிருப்பு கலைமகள் வித்தியாலயத்தை கலைமகள் இந்துக்கல்லூரியாக தரமுயர்த்தியதால் பல மாணவர்கள் கற்று மிக நல்நிலையில் உயர்வடைந்துள்ளனர்.

மேலும், அதிபராக தி/விபுலானந்தா கல்லூரி, தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரிகளிலும் கடமையாற்றி சிறந்த பெறுபேறுகள் கிடைக்கச் செய்தவர்.

சிறந்த அதிபருக்கான ஜனாதிபதி விருதும் கிடைக்கப்பெற்றவர். கல்வி அமைச்சின் புலமைப் பரிசில் பெற்று இந்திய தேசிய கல்வி நிறுவனம் (NIEPA) லண்டன் வேமின்ஹாம் பல்கலைக்கழகத்திலும் கல்வி முகாமைத்துவத் துறையில் பயிற்சியும் பெற்றவர். இலங்கை கல்வி நிர்வாக சேவை (SLEAS) பரீட்சையிலும் சித்தியடைந்தவர். பிரதிக் கல்விப் பணிப்பாளராக மூதூர், திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்திலும் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்திலும் சிறப்பாக கடமையாற்றியவர்.

அதிபர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்குகளில் வளவாளராகவும், கல்விமானி, பட்டப்பின் கல்வி டிப்புளோமாவின் விரிவுரையாளராகவும் பணியாற்றிதோடு, பாடசாலைத் தலைமைத்துவம், கற்பித்தல் நுட்பங்கள் போன்ற பயன்மிக்க நூல்களை ஏற்கனவே வெளியீடு செய்து பாராட்டுப் பெற்றதோடு நில்லாது தனது கிராமத்திலும் தன் பாடசாலையிலும் கொண்ட அதீத பற்றுக் காரணமாக "பள்ளிக்குடியிருப்பு வரலாற்றுப் பார்வை" என்ற அழகான வரலாற்று ஆய்வு நூலை ஆக்கி அனைவரதும் கைகளிலே தவள விட்டிருக்கின்றார். இது காலத்தின் தேவையாகும். நடந்தவற்றை எதிர்கால சந்ததியினர் அறிந்து புரிந்து கொள்ளும் வகையில் தெளிவாகவும் விளக்கமாகவும் அள்ளி வழங்கியுள்ளார். எதிர்காலத்திலும் இன்னும் பல நூல்களை இந்த மண்ணுக்கு எனது நட்பிற்கு இலக்கணமான என் நண்பர் தரவேண்டும். அதற்கு அவரது மனையாள் அதிபர் கமலராணியும் உதவுவார் என்பது நம்பிக்கை.



கலாபூசணம், இலக்கிய வித்தகர்
சம்பூர் கதிரவேலுப்பிள்ளை ஜெயநாதன் (காசியப்பித்தன்)
ஓய்வுநிலை அதிபர்
மத்தியஸ்தர் - சமாதான நீதவான்

978 9554281028

SHAHANA GFX - TRINCOMALEE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org